# பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள்

கம்பவாரிதி

## இலங்கை ஜெயராஜ்



நர்மதா வெளியீடு

திரு. சுஜாதா அவர்கள்,
சென்னை.

Roja Muthiah Research Library, Chennai - 50.
WITHDRAWN
62584

KOHA

# பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள்

கடித இலக்கியத்திற்கு
ஒரு புதுப் பரிமாணம்!
பூமி பந்தின் எரியும் பிரச்சினைகள்
ஒரு இலக்கிய சூரியனின் பார்வையில்!

பொதுசன நூலகம்
விசேட சேகரிப்பு பகுதி

கம்பவாரிதி
இலங்கை ஜெயராஜ்

77269 C

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி: 815 0466 தொலை நகல்: 815 3609

894.8116

Pages: 392

**Price: Rs.130-00**

Paper used 11.6 kg. SPB c / w

☐ Pazham Panditharin Pagiranga Kadithangal - The Open Letters from an old Pundit - (On Social, Cultural issues) by kambavaaridhi. Ilangai Jeyaraj © ☐ First Edition : May 2002 ☐ Published by : T.S.Raamalingam, Narmadha Pathipagam, Chennai - 600 017 ☐ D.T.P. Execution at : M/s. Star Graphics, Chennai - 600 017 ☐ Printed at : M/s Malar Printers, Chennai - 600 034 ☐

# உட்பொதிவு


| | | |
|---|---|---|
| 1. | சிநேகமாய் ஒரு முன்னுரை | 5 |
| 2. | ஆதங்கத்தோடு ஓர் அணிந்துரை | 13 |
| 3. | நன்றியுடன் ஒரு முன்னுரை | 21 |
| 4. | அர்ஜுன ரணதுங்க | 39 |
| 5. | முற்போக்கு இலக்கியவாதிகள் | 48 |
| 6. | நடிகர் சிவாஜி கணேசன் | 58 |
| 7. | கப்பலுக்காகக் காத்து நிற்கும் தமிழ் அகதிகள் | 66 |
| 8. | சுதந்திரப் பொன்விழாக் காணும் பாரதத்தாய் | 73 |
| 9. | இடம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தம்பி | 81 |
| 10. | இளவரசி டயானா | 90 |
| 11. | அன்னை தெரேசா அம்மையார் | 99 |
| 12. | அமைச்சர் மங்களசமரவீர | 108 |
| 13. | கல்வித்தாய் கலைவாணி | 116 |
| 14. | இலங்கை அன்னை | 125 |
| 15. | பகிடிவதையால் உயிராபத்திலிருக்கும் வரப்பிரகாஷ் | 133 |
| 16. | பகிடிவதைப் பழியோடு தடுப்புக்காவலில் மாணவர்கள் | 142 |
| 17. | விளையாட்டு வீராங்கனை சுசந்திக்க ஜெயசிங்க | 151 |
| 18. | மாண்புமிகு நீதியரசர் ஜெயின் | 161 |
| 19. | யாழ்மண்ணில் காணாமற் போனவர்கள் | 167 |
| 20. | இலங்கை நீதியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் | 174 |
| 21. | பிறக்கும் புத்தாண்டு | 181 |
| 22. | அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி | 187 |
| 23. | தேர்தலைச் சந்திக்கவிருக்கும் யாழ்மக்கள் | 194 |

24. சிங்கள மதத்தலைவர்கள்,
அறிஞர்கள், அரசியல்வாதிகள் 200
25. பொன் விழாக்காணும் இலங்கைச் சுதந்திரதேவி 208
26. மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் 214
27. திருமதி. சோனியா காந்தி 222
28. ஜனாதிபதி சதாம் ஹுசெய்ன் 229
29. புதுமைப் பெண்கள் 237
30. பாரதப் பிரதமர் வாஜ்பாய் 246
31. தினக்குரல் பத்திரிகை 252
32. பாட்டாளி மக்கள் 261
33. இந்தியப் பிரதமர் வாஜ்பாய் 269
34. பட்டிமண்டப ரசிகர்கள் 275
35. மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா 284
36. பேராசிரியர் கா.சிவத்தம்பி 294
37. பேராசிரியர். கா.சிவத்தம்பியின் பதில் 303
38. பேராசிரியர். கா.சிவத்தம்பியின்
பதிற்கடிதத்திற்குப் பதில் 319
39. யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பர்கள் 324
40. அக்பர் ஜின்னாவின் பதில் 335
41. அக்பர் ஜின்னாவின் கடிதத்திற்குப் பதில் 342
42. நல்லூர்க் கந்தன் 348
43. சுவாமி ஆத்மகணானந்தஜி 357
44. முத்தையா முரளிதரன் 365
45. பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த 374
46. தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா 385



யோகி ராம்சுரத்குமார்

# சிநேகமாய் ஒரு முன்னுரை

இனிய ஸ்நேகிதங்களுக்கு வணக்கம்.

வாழிய நலம்.

கடிதங்களின் வடிவில் எழுதப்பட்ட இந்தக் கட்டுரைத் தொகுப்பைப் படித்து முடித்தபிறகு அளப்பரிய சந்தோஷம் ஏற்பட்டது. படிக்கும்போது விதம்விதமான உணர்ச்சிகள் தோன்றின.

கட்டுரையாளரை ஒட்டியே எனக்குக் கோபமும், வெறுப்பும், நகைச்சுவையும் ஏற்பட்டன. தன் எழுத்து வன்மையினால், திரு கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் வெகு அழகாக நம் தோளைப் பிடித்து அவர் எங்கே போகவேண்டும் என்று நினைக்கிறாரோ அந்த இடத்திற்கு அழைத்துப் போய் விடுகிறார். அவர் உள்ளத்து உணர்ச்சி என்னவாக இருந்ததோ அதை வெகு வேகமாக நம்முள் பரிமாற்றம் செய்து விடுகிறார்.

காட்டருவியான தமிழ்நடை, கூர்மையான பார்வை, திரு கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் ஒரு குதூகலமான மனிதர் என்பதால் அவ்வப்போது குத்தலான ஒரு நகைச்சுவை, சில சமயம் நச்சென்ற தண்டிப்பு, உறுமல், மிரட்டல், அட போங்கய்யா என்கிற சலிப்பு என்று விதம்விதமாக, இன்றைய சூழல்பற்றி மிகத் தெளிவாக, இந்தக் கடிதங்கள் மூலம் எடுத்துரைக்கிறார்.

'ஸ்ரீலங்கா' என்றதும் எனக்கும், எங்கள் வீட்டாருக்கும் திரு. கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களின் நினைவுதான் வரும். இது எங்கள் குறையல்ல. என் நண்பரின் நிறை. அவரின் காந்தப் பேச்சும், நல்ல உபசரிப்பும் எவரையும் கட்டிப்போடும் திறனுடையவை. அதே குணம் இந்த கடிதக் கட்டுரைகளிலும் இருப்பதை நான் தெளிவாகக் காண்கிறேன். எழுத்தும் முகமும் ஒன்றானவர் நம் கம்பவாரிதி. சென்னையிலும், ஸ்ரீலங்காவிலும் இவர் கூட்டத்தில் பேசுகின்ற பாங்கு பார்த்து அட... இவர் எழுதினால் நன்றாக இருக்குமே, குறிப்பாய் புதினம் எழுத வேண்டுமே என்று நான் நினைத்ததுண்டு.

இலங்கைத் தமிழர் பற்றி இவர் நல்லதொரு புதினம் எழுதினால் தமிழ் மக்களிடையே ஈழமக்களின் வேதனை வெகு நிச்சமாய் தெளிவாக்கப்படும் என்று நான் நினைத்ததுண்டு.

கிட்டத்தட்ட என்னுடைய எண்ணத்தை, ஆசையைப் பூர்த்தி செய்வது போலவே இந்தக் கட்டுரைத் தொகுப்பு இருந்தது. அதாவது ஒரு புதினம் என்ன கருத்து சொல்ல வேண்டுமென்று விரும்புகிறதோ அதை கடிதவடிவிலான இந்தக் கட்டுரைத் தொகுப்பில் மிக நேர்த்தியாகப் பரிமாறிவிட்டார்.

அனேகமாய் இவர் கட்டுரைகளின் அடிநாதமாக ஈழமக்களின் பிரச்சினைதான் இருக்கிறது. கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனை நோக்கி எழுதப்பட்ட கடிதமாக இருந்தாலும் சரி, சமூக சேவகி தங்கம்மா அப்பாகுட்டியைப் பற்றி சிலாகித்துச் சொல்வதாக இருந்தாலும் சரி, அர்ஜுன ரணதுங்காவிற்கு கடிதமெழுதினாலும் சரி, அதற்கு அடியில் இழையாக ஈழ மக்களின் சோகம்தான் ஓடுகிறது. இனஉணர்வு என்று வெளியே சொல்லி காட்டுத்தனமாக மற்றவரைச் சாடாது இது நியாயமா என்கிற தொனியில், ஏன் இப்படி இருக்கிறீர்கள் என்ற அங்கலாய்ப்பின் மூலம் எப்படி இருக்க வேண்டும் என்கிற விஷயத்தை மிகத்திடமாக கட்டுரையாளர் பேசுகிறார். இங்கே இவர் இன உணர்வைவிட மனிதநேயம் மிகத்தெளிவாக முன்னணியில் வந்து நிற்கிறது.

கட்டுரையாளர் ஒரு தத்துவவாதி, ஆன்மீகச் சிந்தனையாளர் என்பதால், எழுதிய நடையில் ஒரு அமைதி தெரிகிறது.

எதற்கு பழம் பண்டிதன் என்கிற பெயரில் எழுதுகிறேன் தெரியுமா என்று ஆரம்பித்து அதற்கான காரணத்தை விளக்குகிறார்.

தமிழ்ப் பண்டிதருக்கும் நிகழ்காலத்திற்கும் சம்மந்தமே யில்லை, அவர்கள் கனவுலகில் வாழ்பவர்கள் என்பதாக நிறையப் பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'நான் முறையாக தமிழ் படித்தவன் இல்லை. பண்டிதன் இல்லை. ஆனாலும், தமிழ் மீது மாறாத காதல் கொண்டுள்ளவன். தமிழின் நீள அகலங்களைத்

தெரிந்தவன். மொழியின் வளமை எனக்குண்டு. ஆயினும் எல்லோரும் நினைப்பதுபோல நான் கனவுலகில் வாழ்பவனல்ல. இன்றைய நிகழ்காலத்தினுடைய நடப்புகளை என்னால் சரியாகப் பார்க்க முடியும், விமர்சிக்க முடியும் என்பதற்காகவே இப்பெயரில் இக்கட்டுரைத் தொடர் எழுதும் ஆவல் வந்தது' என்று சொல்கிறார்.

இலக்கியவாதிகளின் கட்டுரைகள் தம் கெட்டிக்காரத் தனத்தை வெளிப்படுத்தலும், அலசி ஆராயும் அறிவை தெரியப் படுத்தலுமாகவே இருக்கும். இங்கிருந்து ஒரு எடுத்துக்காட்டு, அங்கிருந்து ஒரு தகவல் என்று கலவையில் ஈடுபடாமல் மிக இயல்பாக மனதில் தோன்றிய எண்ணங்களை திரு.கம்பவாரிதி ஜெயராஜ் எளிமையான கட்டுரைகளாக்கி யிருக்கிறார். அதனால் சொல்லும் செய்தி நச்சென்று படிப்பவரை வந்து அடைகிறது.

இந்த வரி நன்றாக இருந்தது, அந்தக் கட்டுரை சுவையாக இருந்தது, இந்த எடுத்துக்காட்டு அற்புதம் என்று விமர்சனமாக என் முன்னுரையை எழுத விரும்பவில்லை. தயவுசெய்து தமிழறிந்தோர் அனைவரும் உலகத்தின் எந்தப்பாகத்தில் இருந்தாலும் இந்த கட்டுரைத் தொகுப்பை படிக்க வேண்டும். வெகு நிச்சயமாய் நீங்கள் வாய்விட்டுச் சிரிப்பீர்கள். மனம் நெகிழ்வீர்கள். அலுப்புடன் கண்மூடி செய்தியின் தாக்கத்தில் உறைந்து போவீர்கள். இது நியாயமா என்று கட்டுரை யாளரைப்போல நீங்களும் குமுறுவீர்கள். 'பகிடிவதை' - நன்றாக இருக்கிறதே இந்த வார்த்தை என்று மனதுக்குள் அந்த புதிய வார்த்தையை குறித்துக் கொள்வீர்கள். மிகச்சரியாக அவர் எடுத்தாளும் பழமொழிகளை மனதில் தேக்கிக் கொள்வீர்கள்.

நல்ல புத்தகம் நண்பருக்குக் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் வெகுநிச்சயமாக இந்த புத்தகத்தைத் தேடி

நீங்கள் கடைக்கு ஓடுவீர்கள் அல்லது வாங்கிக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்துவீர்கள்.

திரு. கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களிடம் எனக்குப் பிடித்த விஷயம் எந்தக் கூட்டத்திலும் எதுபற்றிப் பேசும்போதும் அவர் ஆவேசப்படுவதில்லை. ஆவேசப்பட்டு நிலை தப்பி எதுவும், எங்கும் பேசிவிடுவதில்லை. பல பேச்சாளர்கள் உணர்வு வேகத்தில் சறுக்க, இவர் கவனம் கண்டு வியந்திருக்கிறேன்.

சில சமயம் மெல்லிய கோபத்தோடு அவர் வற்புறுத்துவாரே தவிர தலைகால் புரியாத ஆத்திரத்தோடு அவர் செயல் படுவதேயில்லை. அந்தக் குணம் இந்தக்கட்டுரை முழுவதும் விரவிக்கிடக்கிறது.

சமூகசேவகி தங்கம்மா அப்பாக்குட்டியை பாராட்டுகிற பொழுது உங்களை ஈழத்தின் மதர் தெரசா என்று சொல்கிறார்கள். நீங்கள் அவ்விதம் இல்லை. ஏனெனில், மதர் தெரசாவுக்குப் பின்னால் கிறிஸ்தவ மத அமைப்புகள் இருந்தன. ஆனால், தனியொருவரான நீங்கள் ஈழத்தில் அகதியான பல குழந்தை களுக்கு ஆதரவு அளித்தீர்கள். நீங்கள் மதர்தெரசாவைவிட மேம்பட்டவர் என்று நெகிழ்ச்சியாகச் சொல்கிறார்.

கூழ்முட்டை எடுத்து கற்றறிந்தவர் மீது வீசியெறிந்த முற்போக்கு இலக்கியவாதிகளுக்கு கடிதம் எழுதும்போது இதே நெகிழ்ச்சியோடும் நிதானத்தோடும்தான் பேசுகிறார்.

‘முடிந்தால் நல்ல இலக்கியம் படைத்துப் பாருங்கள். இல்லா விட்டால் கூழ்முட்டையைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று எள்ளல் இருக்கிறதே தவிர ஏச்சுப் பேச்சே இல்லை.

கம்பவாரிதி ஒரு கனிவான மனிதர். மனித நாகரிகத்தின் ஒரு எடுத்துக்காட்டு என்று வெகுநிச்சயமாக அவரைப் பாராட்டலாம்.

திரு. கம்பவாரிதி அவர்களோடு எனக்கு நல்ல பரிச்சயம் உண்டு. என் குழந்தைகளும், என் வீட்டாரும் அவரை மிக மரியாதையோடு கௌரவிப்பார்கள். அவர் வருகையை சந்தோஷமாக எதிர்கொள்வார்கள்.

கூப்பிய கரங்களோடும், முகமெல்லாம் சிரிப்போடும் அவர் வீட்டுக்குள் நுழைவது போலவே இந்தக் கட்டுரைத் தொகுப்பும் நமது மனசுக்குள் நுழையும்.

இந்தக் கட்டுரைகளைப் படித்துமுடித்து ஒரு ஊருக்குப் பயணப்பட்டுக் கொண்டிருந்தபோது நான் நண்பர் திரு. கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

ஈழம் பற்றியும், ஈழத்து மக்களின் வேதனை பற்றியும் எழுத சென்னையில் இருக்கின்ற என்னைப்போல எழுத்தாளர்கள் அல்லது தென் தமிழ்நாட்டில் வசிக்கின்ற எழுத்தாளர்கள் முயற்சி செய்வதைவிட யாழ் மண்ணில் பிறந்து, அங்குள்ள வேதனை களை நேரில்கண்டு தமிழ்நாட்டுக்குப் பரிச்சயமான மொழி நடையில் எழுதுகிறபோதுதான். செய்திப் பரிமாற்றம் மிகச் சீராகவும், அற்புதமாகவும் சென்றடையும். நல்ல நடையும், தெளிவான சிந்தனையும் உள்ள தமிழக எழுத்தாளர்களுக்கு யாழ்ப்பாணம் பற்றிய வேதனைகள் முழுமையாகத் தெரிய வில்லை. யாழ்ப்பாணம் தெரிந்த இலங்கை எழுத்தாளர்களுக்கு தமிழக மக்களைச் சென்றடையக்கூடிய மொழிநடை சற்றுக் குறைவு. தமிழகப் பத்திரிகைகளின் தொடர்பாலோ அல்லது அடிக்கடி தமிழகத்திற்கு விஜயம் செய்யும் காரணத்தாலோ திரு.கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ளவர் களுக்கு எளிதில் விளங்கும் தமிழ் நடையைக் கைக்கொண்டி ருக்கிறார்கள்.

எனவே, யாழ்ப்பாணம் பற்றிய ஒரு புதினத்தை திரு.கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் எழுதினால் மிகச்சிறப்பாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம்.

யாழ்ப்பாண மக்களின் துக்கத்தை மேடைப்பேச்சில் சொல்வதைவிட, கட்டுரைகளில் சொல்வதைவிட, பத்திரிகைச் செய்திகள் சொல்வதைவிட ஒரு புதினம் மிக அழகாக விளக்கும் என்பது என்னுடைய எண்ணம். அந்த முயற்சி சரிவர நடைபெறவில்லை என்பதும் என் கருத்து.

இந்தக் கட்டுரையின் சுகத்தை, வீச்சை, நறுவிசை பார்க்கிற பொழுது திரு.கம்பவாரிதி ஜெயராஜ் அந்த முயற்சியில் ஈடுபட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

ஏதோ சில காரணங்களுக்காக பத்திரிகையில் வந்த இந்தக் கட்டுரைத் தொகுப்பு நின்று போய்விட்டதாம். இம்மாதிரியான கடிதக் கட்டுரைகள் பத்திரிகையில் வரவேண்டுமென்று அவசியமில்லை. கட்டாயமாக உட்கார்ந்து எழுதுவதற்கு அது ஒரு சாக்கு. ஆனால், திரு.கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் நினைத்தால் இம்மாதிரியான கடிதங்களை பத்திரிகைக்கு என்று எழுதாமல் விஷயம் விஷயமாக எழுதி மறுபடியும் இன்னொரு தொகுப்பும் கொண்டுவரலாம் என்பது என்னுடைய எண்ணம்.

இன்னும் அவர் பார்வையை உலகளாவிப் பரப்பி பல விஷயங்கள் பற்றியும் அவரது கருத்தை அறிய வேண்டும் என்பது என் ஆவல்.

தமிழ் மன்றத்தில் பேசுகின்ற திரு.கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் பட்டிமன்றத்தையே கடுமையாக தாக்குவதிலிருந்து அவர் நேர்மை எனக்குப் புலனாகிறது. ஒரு இலக்கியவாதிக்கு முதலில் தேவையான நேர்மை திரு.கம்பவாரிதி ஜெயராஜ்

அவர்களிடம் மிகத் திடமாக இருக்கிறது. அதுவே அவரை எழுதவைக்கும்; எழுத்தைச் சிறக்கவும் வைக்கும்.

இந்தக் கடிதக் கட்டுரைகளில் உங்களுக்கு ஏதேனும் மாறு பாடான கருத்து இருந்தால் அதை நான் திருத்திக் கொள்கிறேன் என்று தொலைபேசியில் திரு.கம்பவாரிதி அவர்கள் பேசினார்கள். இது அவரது எழுத்து அடக்கத்தின் எடுத்துக்காட்டு; அன்பின் வெளிப்பாடு. திரு.கம்பவாரிதி ஜெயராஜ் தெளிவுள்ளவர். அறிவுத்திறன் செறிந்தவர். அதனால் பலரும் அவரால் தெளிவு படுவார்கள் என்பதே என்னுடைய எண்ணம். தொடர்ந்து சிந்திக்கவைக்க அவரால் முடியும் என்பது என் அபிப்ராயம்.

இந்தக் கடிதக் கட்டுரைத் தொடர் வெகு நிச்சயமாய் தமிழ் மக்களிடையே பிராபல்யமாகும் என்பதும் என் கருத்து. தொடர்ந்து பல கட்டுரைத் தொகுப்புகள் அவர் கொண்டுவர வேண்டும் என்பது என் அவா.

என் நண்பர் திரு.கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களுக்கு என் பணிவான வணக்கங்களையும், பாராட்டுகளையும் மனமாரத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் தமிழ்மொழி வளமும், அவரது உறவுகளும், உறவு களைப் போன்ற நண்பர் கூட்டமும் சிறந்துவிளங்க என் சத்குருநாதன் திருவண்ணாமலை மகான் யோகிராம் சுரத்குமார் அவர்களை நானும், என் குடும்பத்தினரும் மனமுருகப் பிராத்திக்கிறோம்.

நல்லவர் வல்லமை பெற, நாடு செழிக்கும் என்பது உறுதி.

**'தைபூசம்'**

80/4, வாரன் சாலை, என்றென்றும் அன்புடன்,

மயிலை, சென்னை - 600 004. **பாலகுமாரன்.**

KOHA JPL

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



77265 C

# ஆதங்கத்தோடு ஓர் அணிந்துரை

'பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள்' என்ற இந்நூலிற்கு ஓர் அணிந்துரை எழுத விழையும்போது எனக்கு வியப்பான இரு ஐயப்பாடுகள் எழுகின்றன. ஒன்று, இந்த நூல் எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது? இரண்டு, இது உரைநடை நூலா அல்லது கவிதை நூலா? இவை நியாயமான சந்தேகங்களாகவும் எனக்குப்படுகின்றன. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, காவியம், கட்டுரையியல் என்ற எந்தவொரு இலக்கிய வகைகளுள்ளும் பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள் அமையவில்லை. இந்நூல் புதியதொரு இலக்கிய வகையாக எனக்குப்படுகின்றது. கூறவிரும்பும் சங்கதியை விபரிக்கக்

கைக்கொண்டுள்ள மொழி நடை, வசன கவிதையாக எனக்குப் படுகிறது. எனவே, புதியதொரு மொழி நடையில் புதியதொரு இலக்கியவகையைக் கம்பவாரிதி ஜெயராஜ் தமிழிலக்கியத்திற்குத் தந்துள்ளார் என்பேன். இந்நூலின் சொல்புதிது; பொருளும் புதிது.

கம்பவாரிதி ஜெயராஜ், தமிழ்கூறும் நல்லுலகின் குறிப்பாக ஈழத்தின், கைவிட்டு எண்ணக்கூடிய முக்கியஸ்தர்களில் ஒருவர். அந்த நிலைக்கு உயர்வதற்கு அவரின் இயல்பான ஆற்றலும் பெரியோரைக் கனம்பண்ணி அவர்களூடாகப் பெற்றுக்கொண்ட அறிவுக்கொடையும், எதிலும் மெய்ப்பொருள் காணும் வல்லமையும், நிறையவே வாசிக்குந்திறனும் காரணிகளாயின. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புகழ்பூத்த மாணாக்கன் ஜெயராஜ். யாழ் இந்துக்கல்லூரி தந்த பேராசிரியர் கைலாசபதி, கவிஞர் முருகையன், கவிஞர் சோ.பத்மநாதன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், முனியப்பதாசன், சுதாராஜ் வரிசையில் வருபவர் ஜெயராஜ். ஈழத்தின் படைப்பாளிகள் பலரை வழிநடத்திய ஆசான்கள் மூதறிஞர் க.சிவராமலிங்கம், தேவன் - யாழ்ப்பாணம் போன்றோரின் அரவணைப்பில் வளர்ந்தவர். அகில இலங்கைக் கம்பன் கழகத்தை உருவாக்கித் தனக்கென ஒரு மக்கட் கூட்டத்தையே வசீகரித்து வைத்திருப்பவர். அவர் வழியில் வீறும் ஆற்றலுமுள்ள இளம் தலைமுறை ஒன்று உருவாகி உள்ளது. பேச்சுக்கலைக்குப் புதியதொரு இலக்கணம் வகுத்த ஜெயராஜ் இன்று இந்த நூலின்மூலம் தன்னை ஒரு தரமான படைப்பாளியெனவும் இனங்காட்டிக் கொள்கின்றார்.

ஜெயராஜிற்குக் கம்பராமாயணம் மட்டும்தான் தெரியுமென்ற நபுஞ்சகக் கருத்தை பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள் என்ற இந்த நூல் தவிடுபொடியாக்குகின்றது. சமூகத்தை அதன் பலத்தோடும் பலவீனத்தோடும் தரிசிக்க அவருக்குத் தெரிந் துள்ளது. நலம் காணும்போது பாராட்டவும், குறைகாணும்போது

கண்டிக்கவும் அவரால் முடிகிறது; சமூகம், அதன் அரசியல், அரசியலின் தேசிய சர்வதேசிய விடையங்கள்; இலக்கியம், இலக்கியத்தில் பழம்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள்; விளையாட்டு, கலாச்சாரக் கூறுகள் என பல்துறைஅறிவும் தெளிவும் ஜெயராஜிற்குள்ளமை இந்நூலின்மூலம் புலனாகின்றது. அசாதாரணத் துணிச்சலோடு இப்பகிரங்கக் கடிதங்களை அவர் வரைந்துள்ளார். பேராசிரியர் கா.சிவத்தம்பியும், டொமினிக் ஜீவாவும், ஜனாதிபதி சதாம் ஹுசைனும், பாரதப் பிரதமர் வாஜ்பாயும், இளவரசி டயானாவும், அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியும், அன்னை தெராசா அம்மையாரும், விளையாட்டு வீராங்கனை சுசந்திக்க ஜெயசிங்கவும், அமைச்சர் மங்கள சமரவீரவும், இலங்கை நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரீஸும், நீதி அரசர் ஜெயினும், பகிடிவதையால் உயிரிழந்த மாணவன் வரப்பிரகாஸும், அதனால் தடுப்புக் காவலில் உள்ள மாணவர்களும், அர்ஜுணா ரணதுங்கவும், சோனியா காந்தியும், இலங்கை அன்னையும், பாரதத்தாயும், இலங்கை சுதந்திர தேவியும், கல்வித்தாய் கலைவாணியும், பட்டிமண்டப ரசிகர்களும், முற்போக்கு இலக்கியவாதிகளும், இடம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தம்பியும், கப்பலுக்காகக் காத்து நிற்கும் தமிழ் அகதிகளும், பாட்டாளி மக்களும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களும், பிறக்கும் புத்தாண்டும், யாழ்மண்ணில் காணாமல் போனவர்களும், யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பர்களும், புதுமைப் பெண்களும்... என விரிந்து பரந்த களப்பரப்பில் ஜெயராஜ் தன் பகிரங்கக் கடிதங்களை எழுதியுள்ளார். இவற்றில் ஜெயராஜிற்குள்ள தெளிவான அறிவுப்பின்னணியையும், தவறற்ற தகவற் பின்னணியையும், தன் கருத்தினைத் துணிவாக முன்வைக்கும் திறனையும் காணமுடிகின்றது. இப்பகிரங்கக் கடிதங்கள் அனைத்தையும் ஒருங்கே சரமாக இணைக்கின்ற அடிநாதக் கருவாகத் தமிழ்த் தேசியவாதமும் இனத்துவ முரண்பாடுகள் ஏற்படுத்திய தமிழ்

மக்களது இன்றைய அவல வாழ்வும், தலை நிமிர்ந்து சரிநிகராக ஈழத்தமிழ் மக்கள் வாழவேண்டும் என்ற ஆதங்க எதிர்பார்ப்பும் இழையோடுகின்றது. யாரைப்பற்றியோ எதைப்பற்றியோ எழுதும் போதும் அவற்றிடையே ஈழத்தமிழ் மக்களது அவலம் நிறைந்த வாழ்வின் இடர்பாடுகளைத் தரிசிக்க முடிகிறது. தமிழ் மக்களது துயரத்திற்கான மூல வேர்களைக் காண்பதும், அமைதிக்காக ஏங்குவதும்தாம் இப்பகிரங்கக் கடிதங்களை எழுதத் தூண்டியுள்ளனவோவெனப்படுகின்றது.

இளவரசி டயானாவுக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில் ''யுத்தக் கெடுபிடிகளைத் தாண்டி, மின்சாரமும், தொலைக்காட்சியும்கூட உள்நுழையமுடியாத யாழ்ப்பாணத் தமிழ்மக்களின்...'' என யாழ்ப்பாண இருள்நிலையையும், அன்னை தெரேசா அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில், ''யானை புக்க புலம்போல தேவையற்ற பலப்பரீட்சைகளாலே பாழாய்ப்போய்க் கிடக்கிறது எம்தேசம்... பாரம்பரிய விழுமியங்கள் கொண்ட நம் தமிழினம் கேட்பாரின்றி கீழ்மைப்படுத்தப்படுகிறது'' எனவும், பாரதத் தாய்க்கு எழுதிய கடிதத்தில், ''உன் ஈழமகள் மடியில் இன்று இரத்தவெள்ளம் ஓடுகிறது... நிறுத்து என்று சொல்லும் உரிமையுள்ள உன் மைந்தர்கள் பொறுப்பற்றவர்களாய் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர்'' எனவும்... இவ்வாறு பல உதாரணங்களைக் காட்டியும், இலங்கைத் தமிழ் மக்களது இன்றைய அவலநிலை கண்டு ஜெயராஜின் இதயம் அழுவதை ஒவ்வொரு கடிதத்திலும் காணமுடிகின்றது.

பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள் பலவற்றுள் தனிமனித விமர்சனப்பார்வை காணப்படினும், அவற்றினூடாகச் சமூகத்தின், அரசியலின், இலக்கியத்தின் இன்றைய இழிநிலையை வெகு பண்பாகச் சுட்டிக் காட்டுகின்ற முறைமையும், அதற்காக தேர்ந்தெடுத்திருக்கும் சொல்வளமும் அக்கடிதங்களை

யாழ்ப்பாண ப.
விசேட சேர்க்கைப் பகுதி



இலக்கியமாக்கியுள்ளன. கூறும் விடயங்களில் சமூக இலக்கியத்தைக் காணமுடிகின்றது. எனினும் பேராசிரியர் கா.சிவத்தம்பி பற்றிய கருத்தில் எனக்கு உடன்பாடில்லை. அவர் இன்று நம்மிடையே வாழ்ந்து வரும் பேரறிஞர்; ஆரம்பக் கருத்தியலை அப்படியே கட்டிக் காத்துவராது காலதேசவர்த்தமானங்களுக்கு இணங்கவும் நமது நாட்டின் சமூக அரசியல் அசைவியக்கத்திற்கேற்ப கருத்து நிலையில் மாற்றங்களைத் துணிந்து முன்வைப்பதும் பேராசிரியரின் சிறப்பு; அவர் நமது சொத்து. டொமினிக் ஜீவாவை கணிப்பீடு செய்துவந்த பண்டிதர், யாழ்ப்பாணத்தின் சாதியக் கொடுமைகளைச் சாடும்போது அவரின் மனவேதனை புரிகிறது. ''சாதிப் பிரச்சினையில் முன்னின்று போராடிய ஜீவா இனப்பிரச்சினையில் ஏதும் செய்யவில்லை'' எனப் பண்டிதர் சுட்டிக் காட்டுகிறார். ஜீவா மட்டுமின்றி முற்போக்குத் தமிழ் எழுத்தாளர்கள் பலரும் மார்க்சியத்தை இறுகத் தழுவி தேசிய ஒருமைப்பாட்டினையே பேசி வருகின்றனர். இனப்பிரச்சினை தீர்ந்தாலும் சாதியப் பிரச்சினை தீர்ந்துவிடாது என அவர்கள் நம்புகின்றனர். ஜீவாவை ஏற்றுக்கொண்ட சமூகம் தலித்துக்களை ஏற்றுக் கொண்டதாக மயங்கக் கூடாது என பண்டிதர் கூற்று எவ்வளவு தூரம் சரியானதென்பதில் எனக்கு ஐயப்பாடுண்டு; சமூகத்தில் படிப்படியாக மாற்றங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதைத் தவிர்க்கவோ எவராலாவது தடுக்கவோ முடியாது. யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பனுக்கு எழுதிய கடிதவிடயத்தில் எனக்கு உடன்பாடாகவில்லை. பிறந்த மண்ணைவிட்டு முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவத்தை எவரும் நியாயப்படுத்த முடியாது. அது ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் ஒரு பெரும் கறை.

பழம்பண்டிதருக்குள்ள உலகஞானம் கடலெனப் பரந்ததாக விருப்பதை இந்தப் பகிரங்கக் கடிதங்களில் காணலாம். இளவரசி

டயானா பற்றிய பண்டிதரின் பகிரங்கக் கடிதம், கீழைத்தேச ஒழுக்க நெறியோடு சேர்ந்ததாகவில்லை. டயானாவின் காதல் வாழ்க்கைக்கு நியாயம் கற்பிக்கப் பண்டிதர் முயல்கிறார்போல் படுகின்றது. டயானா தமிழ்ப் பெண்ணாகவிருந்தால் அவளைச் சமூகம் வசைபேசி ஒதுக்கிவிடும் என்பதைப் பண்டிதர் தெரிந்திருக்கிறார். தெரேசா அம்மையார் பற்றியும், அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி பற்றியும் பண்டிதரின் கணிப்பீடும், போற்றுதலும் உள்ளத்தை கவ்வுகின்றன. அர்த்தத்தோடு வாழவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

பழம்பண்டிதரால் பகிரங்கக் கடிதம் எழுதப்படாத முக்கிய மனிதர்களும், முக்கிய விடயங்களும் இல்லைப் போலப்படு கின்றது. இன்றைய கல்விமுறையின் குறைபாடுகளையும், பல்கலைக்கழகப் பகிடிவதைக் கொடுமைகளையும், மலினப்படுத்தப்படும் பட்டிமண்டபங்களையும், கப்பலுக்காகக் காத்திருக்கும் தமிழ் அகதிகளின் அவலங்களையும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் இடர்களையும் மனத்தில் தைக்கும் வண்ணம் சாடுகின்றார். இவற்றை வாசிக்கும்போது ஒரு விடயம் புலனாகிறது. ஜெயராஜ் என்ற கலைஞனின் மனதில் காயம் ஏற்படுத்தியவையும், அழுத்தம் ஏற்படுத்தியவையும் அவரின் பேனாவூடாக இறக்கிவைக்கப்பட்டுள்ளன. இந்த முட்டு, எழுத்து என்ற வடிகால் மூலம் தீர்க்கப்படாதிருந்தால் அவரால் இயல்பாக மேற்கொண்டு தன் 'யாத்திரை'யைத் தொடரமுடியாது போயிருக்கும். இழிநிலைகண்டு கொதிக்கின்ற கலைஞனாக எனக்கு ஜெயராஜ் தெரிகின்றார்.

தமிழிலக்கியத்திற்கு அணிசேர்கின்ற ஒரு படைப்பினை ஜெயராஜ் தந்துள்ளார்; இது தமிழுக்குப் புதிது. ஈழத்து இலக்கியவுலகின் பிரமுகர்களில் இந்நூலின் மூலம் ஜெயராஜும் ஒருவராகிறார். இப்பகிரங்கக் கடிதங்கள் உண்மையில்

''கண்டனங்கள்'' என்ற வகைக்குள் அடங்கக் கூடியனவாயினும், நல்லை ஆறுமுகநாவலரின் கண்டனப் பிரசுரங்கள் போலக் கடுமையான தொனி உடையனவல்ல. சொல்ல வேண்டியவற்றை இதமாகவும் நாகரிகமாகவும் கூறிவிட ஜெயராஜால் முடிந்திருக்கின்றது. போற்ற வேண்டியவற்றை உளநிறைவோடு பாராட்டவும், கண்டிக்க வேண்டியனவற்றை மனம் புன்படாது சுட்டிக்காட்டவும் பழம் பண்டிதரால் முடிந்துள்ளது. நிறைவாக; பழம் பண்டிதர் கம்பவாரிதி ஜெயராஜ் தனக்குத்தானே ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினால் அதில் சிலவரிகள் இவ்வாறு அமையும்.

எம்மைக் கைவிட்டு வெளியேறிய,
நாலரை லட்சம் மக்களில்,
நீயும் ஒருவனாகிவிட்டாய்.
இடர்பாட்டில் கைவிட்டுக் கொழும்பு சென்றாய்.
நீ ஒருபலமாக எங்களுக்கு இருந்தாய்.
உன் பேச்சு வாழ்க்கையில் நம்பிக்கையூட்டியது,
பயத்தைப் போக்கியது.
கம்பனைப் பட்டிதொட்டியெல்லாம் பரவச் செய்தவன் நீ.
அவன் புகழ்பாடச் செய்தவன் நீ.
யாழ்ப்பாண மண்ணில் தரித்த மக்களின் சுவாசத்திலும்,
காற்றிலும் கலந்தவன்.
துயரத்தில் கைவிட்டு ஏன் கொழும்பு சென்றாய்?
இது உன்னை உலகறியவைத்த ஊர்;
தாயின் உதரத்திலிருந்து விழுந்தபோது தாங்கிய மண்.
நீ இங்கில்லாமை ஒவ்வொரு நிகழ்விலும் தெரிகின்றது.
சொற்கள் சுவையிழந்துவிட்டன.
பட்டிமண்டபங்கள் களையிழந்துபோயின.
கொள்வாருமில்லை, கேட்பாருமில்லை.
ஓ! நீ எங்களுக்கு மட்டும் சொந்தமல்ல.
தேசத்துக்கு, தமிழுக்குச் சொந்தம்.

எனினும் உன் குரல், செயற்பாடு.
யாழ்ப்பாண மண்ணிற்கும் இடையிடையே ஒலிக்க, நிகழ்த்த
இங்கு என்ன தடை?
பயமா? பணமா?

எவ்வாறாயினும் ஜெயராஜின் இப்படைப்பு தமிழிலக்கியத்திற்கு அணிசேர்க்கின்றது.

இது தமிழுக்குப் புதிது. வாழ்த்துக்கள்.

**'ஹம்ஸம்'**
75/10A, ஹஷன்வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

**கலாநிதி. க. குணராசா**
(செங்கை ஆழியான்)

# நன்றியுடன் ஒரு முன்னுரை

*'உலகம் பற்றிய கவலை இல்லாதவர்கள்'*
*இது, தமிழ் படித்த பண்டிதர்கள் மேல்*
*நெடுங்காலமாகச் சொல்லப்படும் பழி.*
*இப்பழியை நிஜமாக்கும் வண்ணம்,*
*பண்டிதர்கள் பலர் நடந்துகொள்வதுமுண்டு.*
*தமிழ்ப்பண்டிதர் பலருக்கு,*
*இலக்குப்பிழைத்தாலும் இலக்கணம் பிழைக்கக் கூடாது.*
*வழி பிழைத்தாலும் மொழி பிழைக்கக் கூடாது.*
*உணர்ச்சி பிழைத்தாலும் புணர்ச்சி பிழைக்கக் கூடாது.*
*இங்ஙனமாய்ச் சிலபேர் இருந்ததால்,*
*குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுகிறவர்கள் என்றும்*
*உலகத்தோடு ஒட்டாதவர்கள் என்றும்*
*தமிழ் படித்தவர்கள் கருதப்பட்டார்கள்.*
*ஆனால் இக்கருத்தோடு எனக்கு உடன்பாடு இல்லை.*
*தமிழ் படித்த உயர்ந்த புலவர்கள் எல்லாம்,*
*சமூகத்தைச் செம்மைப்படுத்தவே எழுதியிருக்கிறார்கள்.*
*வள்ளுவனில் இருந்து பாரதிவரை இதற்கான உதாரணர்கள்.*
*உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலே,*
*தமிழின் தலைமைப் புலவன் காட்டும் நெறி.*
*அது தெரியாதாரை, பலகற்றும் கல்லாதவர் என்கிறான் அவன்.*
*மொழி, உணர்வுகளின் வாய்க்கால்தான் என்பது உணராமல்,*
*உணர்வென்னும் நீரைவிட, மொழி என்னும் வரம்பு பற்றியே*

பண்டிதர் பலர் அதிக அக்கறை காட்டினர்.
வரம்பு அவசியமேனும் நீருக்காகவே வரம்பு என்னும்
உண்மை உணராத அவர்தம் அறியாமையால்,
மண்ணிற் கால்பதியாது விண்ணில் வாழ,
அவர்கள் தலைப்பட்டனர்.
இதனால் தமிழ்ப் புலவர்களுக்கு இருக்க வேண்டிய மரியாதை,
நாளடைவில் மக்கள் மத்தியில் மங்கிற்று.
இங்ஙனமாய் மக்களுக்கும் பண்டிதர்களுக்கும்
இடையில் இருந்த இடைவெளியைப் பயன்படுத்தி,
சமூக உணர்வு உள்ளவர்கள் போல,
வேற்று நாட்டுத் தத்துவங்களைத் தோள் சுமந்து,
நாடகத்தாற் பேரறிஞர்போல் நடித்து,
சமூகத்துட் புகுந்த பலர்,
பண்டிதர்களைச் சமூகத்திலிருந்து முற்றாய்த்
தனிமைப்படுத்தினர்.
உலகியல் தெரியாத அப்பண்டிதர்கள்,
பிரம்மிப்பூட்டும் இவர்களின் தாக்குதல்களைச்
சமாளிக்க முடியாமல்,
ஓய்ந்து ஒடுங்கிப் போயினர்.
இதனால் தமிழ் உலகில்,
பண்டிதரும் பண்டிதமும் வழக்கொழிந்து போயின.

□

நான்,
தமிழை முறைப்படி பயின்றவன் அல்லன்.
தமிழ்மேற் கொண்ட விருப்பின் காரணமாய்,

நானாய்த் தேடிய சிலவும்,
வள்ளன்மை மிக்கத் தமிழறிஞர் சிலர் வாரிக்கொடுத்ததுமே
என் கைச்சரக்கு.
பட்டப்படிப்போ பண்டிதப்படிப்போ இல்லாத நான்,
கேள்வி ஞானத்தாற் தமிழ்த்துறையுள் நுழைந்தவன்.
பேரறிஞர் சிலரின் சங்கமத்தால்,
என் தமிழறிவு நெறிப்படுத்தப்பட்டது.
அப்பெரியோரது சங்கமத்தால்,
தமிழினதும் தமிழ்ப் புலவர்களினதும்,
உண்மை நோக்கமறியும் வாய்ப்புப் பெற்றேன்.
படிப்பாளிகள் இட்டிருந்த,
ஆணவத் திரையகற்றி,
தமிழ்த்தாயை நிதர்சனமாய்த் தரிசிக்க முடிந்தது.
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காணும் வாய்ப்புக் கிடைத்தது.
பாட்டையும் பொருளையும் விட,
பொருளாற் பொருந்தும் பயனே முதல் எனும்
ஞானம் உண்டாயிற்று.
எழுத்து, சொல், பொருள் தாண்டி,
உணர்வின் முக்கியத்துவம் உணர்ந்தேன்.
அதனால் உலகை நேசிக்க முடிந்தது.
அந்நேசிப்பு மற்றவர் செயல்களின் பிரதிபலிப்பால்,
அன்பாகவும், கோபமாகவும் வெளிப்பட்டது.
நான், என் இனம், என் தேசம் எனும் எல்லைகள் கடந்து
மானுடம் எனும் விரிவுக்குள்,
என் சிந்தனைகள் பதியத் தலைப்பட்டன.
அதன் விளைவாய்,
அன்றாடம் உலகில் நடக்கும் ஒவ்வொரு செயல்களும்

என் மனத்துள் அதிர்வுகளை உருவாக்கின.
அவ்வதிர்வுகளை வெளிப்படுத்த வழிதெரியாது,
நிறைமாதம் கடந்தும் கர்ப்பம் சுமக்கும் தாயாய்,
திணறித் திகைத்துத் திரிந்தேன்.

□

இந்நிலையில்தான்,
கொழும்பில் 'தினக்குரல்' பத்திரிகை வெளிவரத் தொடங்கியது.
ஏற்கனவே வெளிவந்து கொண்டிருந்த
தினகரன், வீரகேசரி எனும் இரண்டு தமிழ்ப் பத்திரிகைகளில்
ஒன்றான தினகரன்,
அரசப் பத்திரிகையானதால் தமிழ் மக்களின் அன்பை இழந்தது.
வீரகேசரியே நெடுநாளாய்த்
தமிழர்களின் தனிப் பத்திரிகையாய்க் கோலோச்சியது.
தன் தனியாட்சி,
தினக்குரல் பத்திரிகையின் வருகையால் பங்கமுறும்
என நினைத்து,
வீரகேசரி நிர்வாகம் சினம் கொண்டது.
அதனால் அளவுக்கதிகமான அலட்சியத்துடனும் திமிருடனும்
தினக்குரல் பத்திரிகை பற்றி வீரகேசரியில் எழுதப்பட்ட
ஒரு பத்தி வெளியாயிற்று.
அக்கட்டுரையில் இருந்த அலட்சியம் கண்டு கோபமுற்றேன்.
அக்கட்டுரையைக் கண்டித்து ஓர் கடிதம் வரைந்தேன்.
அக்கடிதத்தைத் தினக்குரல் வெளியிட்டது.

□

KOHA
JPL

இலங்கையில் வெளிவரும்,
எல்லாப் பத்திரிகைகளும் என்னை நேசிப்பன;
என் முயற்சிகளுக்குத் துணை நிற்பன.
பத்திரிகை உலகிலும் கட்சி மனப்பான்மை உண்டு.
ஒரு பத்திரிகையில் எழுதியவரை மற்றபத்திரிகை,
பகைவராய்க் கருதும்.
அவர் ஆக்கங்களுக்குத் தக்க இடம் தராமற் தள்ளும்.
எழுதியவர் இன்ன பத்திரிகைக்குரியவர் என்று
முத்திரை குத்தப்படுவார்.
இந்தப் 'பத்திரிகை அரசியல்',
நாட்டு அரசியலைவிடக் கடுமையானது.
இறையருளால் இத்தகு பத்திரிகைக் கட்சி பேதங்களுக்குள்,
நான் என்றும் அகப்பட்டதில்லை.
நல்ல விடயம் எங்கிருந்தாலும் அதை ஆதரிக்கும் என் பண்பு
அனைவரையும் என் நண்பராக்கியிருந்தது.
அந்நட்புக்கருதி என்றுமே நான் உண்மை சொல்லப்
பின்வாங்கியதில்லை.
வீரகேசரி, என்னையும் நான் சார்ந்த கழகத்தையும்
பலதரம் தக்கமுறையில் ஊக்கப்படுத்தியது உண்மை.
தினக்குரலில் தமக்கு எதிராக எழுதிய பின்பும்,
இன்றும் அப்பண்பை அது காத்து வருகிறது.
இது எனக்கு மட்டுமே கிடைக்கும் விதிவிலக்கான சலுகை.
இந்த நட்புத் தொடர்பிருந்தும்,
வீரகேசரியில் வெளிவந்த கட்டுரையைக் கண்டித்து
நான் எழுதினேன்.
அக்கட்டுரையைப் படித்துவிட்டு,
தினக்குரலின் நிர்வாக இயக்குனர் திருவாளர் சாமி அவர்கள்,

வாராவாரம் தினக்குரலில் எழுதவேண்டும் என வற்புறுத்தினார்.
அவர் வற்புறுத்தலும்,
சமூகம் பற்றிய என் உணர்வலைகளை
மக்களோடு பகிர்ந்து கொள்ளும்
என் ஏக்கமும் ஒன்றுசேர,
எழுதினால் என்ன என்று தோன்றிற்று.
எழுதுவதாய் முடிவு செய்தேன்.

□

1980ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எங்களது கம்பன் கழகம்,
இறைக்கருணையினாலும் தமிழ்மக்கள் ஆதரவினாலும்
விரைவிலேயே விரிந்து புகழ்பெற்றது.
அந்தப் புகழின் விரிவு,
நட்பாய் மட்டுமன்றிப் பகையாயும் விளைந்தது.
தெரியாத பலபேர் எங்களை நேசித்தது போலவே,
தெரியாத பலரும் எங்கள் பகைவரும் ஆயினர்.
அழுக்காறே அவர்கள் பகையின் அடிப்படை.
அதனால் எங்கள் செயல்கள் அத்தனையும்,
குறித்த சிலரால் கண்கொத்திப் பாம்பாய்க் கண்காணிக்கப்பட்டன.
எங்கள் சிறு சறுக்கல்களும் பெரு வீழ்ச்சியாய்
விமர்சிக்கப்பட்டன.
இல்லாத பலபழிகள் கற்பனையாய் எங்கள் மேல் ஏற்றப்பட்டன.
இப்பகைக்கடலை,
இறைத்துணை, மக்கள் ஆதரவு எனும் துடுப்புக்கள் கொண்டு
கம்பன்பணியெனும் படகேறிக் கடந்தோம்.
இந்நிலையில் பத்திரிகையில் என் பெயரில் எழுதினால்,

எழுதிய விசயத்தைவிட,
எழுதும் நானே அதிகம் கவனிக்கப்படுவேன்
என்பதை உணர்ந்தேன்.
நல்ல கருத்துக்களும்,
நான் எழுதினேன் என்பதற்காய் மறுக்கப்படும்
எனத் தெரிந்ததால்,
'புனை பெயரில்' எழுதும் எண்ணம் உண்டாயிற்று.
புனை பெயர் தேடும் படலம் தொடங்கிற்று.

□

எழுதப் போவது சமூக விடயம்.
யார் பெயரில் அதை எழுதினாற் பொருத்தம்?
சிந்திக்கத் தொடங்க,
பண்டிதர்கள் மேல் இருந்த பழி நினைவுக்கு வந்தது.
எப்போதும் மறுதலைச் செய்தி மக்கள் மனதிற் பதியும்.
"தமிழ்ப்பண்டிதர்கள் சமூக அக்கறையற்றவர்கள்."
இங்ஙனமாய் இருந்த பதிவை மறுதலையாக்க விரும்பினேன்.
ஒரு பண்டிதரே,
சமூக நிகழ்வுகளை விமர்சிக்குமாற்போல் எழுதினால் என்ன?
எனும், எண்ணம் உதித்தது.
"பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதம்" எனும்
தலைப்பிட்டு எழுதத் தொடங்கினேன்.

□

கடிதப்பாணியில் கருத்துக்கள் சொல்வது இலகுவாய் இருந்தது.
வரிவரியாய் எழுதும் இக்கடிதப்பாணி,

என் குருநாதர் பேராசிரியர் இராதாகிருஷ்ணரிடம் நான் பெற்றது.
நீண்ட பந்திகளை வாசிக்கும் பொறுமை,
இன்றைய இளைஞர்களிடம் இல்லை.
வரிவரியாய் எழுதும் இக்கடிதப்பாணி,
இளைஞர்களையும் வாசிக்கத் தூண்டிற்று.
மற்றவர் கடிதம் படிக்கும் விருப்பம் எவர்க்கும் உரியது.
அத்தூண்டலும்,
இக்கடிதங்களைப் படிக்கும் விருப்பத்தைப்
பலருக்கும் உண்டாக்கிற்று.
மொத்தத்தில் இக்கடிதங்கள் பலராலும் ரசிக்கப்பட்டன.

□

ஆரம்பத்திலேயே,
எழுதுபவர் யார் எனும் கேள்வியும் எழுந்தது.
வெறும் தமிழ்ப்பிரசங்கி என முத்திரை குத்தப்பட்டிருந்த என்மேல்,
யாருக்கும் ஐயம் தோன்றவில்லை.
வாசகர்களைக் குழப்ப வேண்டுமென்று திட்டமிட்டு,
தினக்குரல் ஆசிரியரின் தோற்றத்தினையொத்த
ஓர் ஓவியத்தையும் கட்டுரையுடன் வெளியிடச் செய்தேன்.
அதனால்,
பலரும் இக்கடிதங்களை வரைபவர்,
தினக்குரல் ஆசிரியர் சிவனேசச் செல்வன்
என்றே நினைத்தார்கள்.
பலரும் தன்னைப் பாராட்டுவதாய்த்
தொலைபேசியில் அவர் சொல்ல,
என் மனம் மகிழ்ந்தது.

□

*எழுதுபவன் நான்தான் என்னும் செய்தி,*
*மெல்ல மெல்லக் கசியத் தொடங்கியது.*
*நான் எனத் தெரிந்ததும் கண்டனங்களும் புறப்பட்டன.*
*புனைபெயர்பற்றி, பலவாய் விமர்சிக்கப்பட்டது.*
*'தானும் ஓர் பண்டிதன், எனச் சொல்ல அவருக்கு விருப்பம்.*
*பாவம் தாழ்வுச் சிக்கல்'.*
*இது பண்டிதர்களின் விமர்சனம்.*
*நான் செய்யும் எதையும் பிழையெனச் சொல்லும் ஒரு கூட்டம்,*
*என்னை இனம் கண்டதைக் குறிப்புச் சொற்களால் உணர்த்தி,*
*வேறு பத்திரிகைகளில் விளாசி வாங்கிற்று.*
*மொத்தத்தில், எழுதிய விடயங்களைவிட,*
*நான் அதிகம் விமர்சிக்கப்பட்டேன்.*

□

*இவ்விடத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும்.*
*நம்நாட்டின் பத்திரிகை எழுத்துச் சுதந்திரம்,*
*அரசாங்கத்தால் மட்டுமன்றி,*
*அவரவர் அதிகாரத்தாலும் கட்டுப்படுத்தப்பட்டது உண்மை.*
*உண்மையாக, நேர்மையாக எழுதப்பட்ட விமர்சனங்களும்,*
*தனிமனித, நிறுவன செல்வாக்குகளால்,*
*பிரசுரிக்கப்படாமல் தடை செய்யப்படுவது,*
*இங்கு எழுதப்படாத சட்டமாய் இருந்து வருகிறது.*
*ஒருசில சிறு பத்திரிகைகள் இதற்கு நேர்மாறாய்,*
*எவ்வித உண்மையும் இல்லாத கற்பனைச் செய்திகளால்,*
*பிரசித்த பெற்ற சிலரைத் தாக்கி,*
*தம்மை இனங்காட்ட முயன்றன.*

*இந்நிலைப்பாட்டில்,*
*தேசியப்பத்திரிகையாய் வெளிவந்த தினக்குரல்,*
*சர்ச்சைக்குரியதாய் துணிந்து நான் எழுதிய கடிதங்களை,*
*பிரசுரித்துப் புரட்சி செய்தது.*
*பேராசிரியர் சிவத்தம்பிக்கு நான் எழுதிய கடிதமும்,*
*இஸ்லாமிய நண்பனுக்கு நான் எழுதிய கடிதமும்,*
*பிரசுரிக்கப்பட்டது நம் பத்திரிகை வரலாற்றில் ஒரு புதுமையே.*
*அதை விட,*
*பத்திரிகைத் துறையை விமர்சித்து,*
*தினக்குரலின் ஓராண்டு நிறைவை ஒட்டி,*
*நான் எழுதிய கடிதத்தையும்,*
*துணிந்து தினக்குரல் வெளியிட்டது.*
*துணிந்த இச்செயலுக்குக் காரணமானவர்கள்*
*தினக்குரலின் ஆசிரியர் ஆ. சிவனேசச் செல்வன் அவர்களும்,*
*வாரமலர் ஆசிரியர் தனபாலசிங்கம் அவர்களும் ஆவர்.*
*அவ்விருவர்க்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.*

□

*பேராசிரியர் சிவத்தம்பி, யாழ் இஸ்லாமிய நண்பன்*
*ஆகியோருக்கு,*
*நான் எழுதிய கடிதங்கள் சமூகத்திற் பரபரப்பை ஏற்படுத்தின.*
*பத்திரிகை நிர்வாகமே சிறிது கலங்கிற்று.*
*என் கடிதத்திற்குப் பேராசிரியர் சிவத்தம்பி பதில் வரைந்தார்.*
*தன்மேல் நான் சாட்டிய குற்றங்களுக்கு,*
*சமூக அரங்கில் பதில் உரைத்த அவர் நேர்மை பிடித்ததால்,*
*சர்ச்சையைத் தொடரலாம் என அவர் சவால் விட்டும்,*

சர்ச்சையைத் தொடர முடிந்திருந்தும்,
அதனை நான் தவிர்த்தேன்.
இஸ்லாமிய நண்பருக்கு எழுதப்பட்ட கடிதம்,
இஸ்லாமியர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.
பல பத்திரிகைகளில்,
என்னையும் அக்கட்டுரையையும் தாக்கிப் பலரும் எழுதினார்கள்.
பெயரிட்டு நேர்மையாய்த் தினக்குரலுக்கே எழுதிய,
ஜின்னா அவர்களுக்கு மட்டும் பதில் வரைந்தேன்.
முஸ்லீம் காங்கிரஸ் தலைவராய் இருந்த,
மறைந்த முன்னாள் அமைச்சர் அஸ்:ரப் அவர்கள்,
தொலைபேசியில் கேள்வி எழுப்பினார்.
என் மனக்கருத்துக்களைத் தெளிவுபடுத்தியதும்,
இனபேதமற்ற என் உணர்வு தெரிந்த அவர்,
என் கருத்தினை ஏற்றுக் கொண்டார்.
மொத்தத்தில் இச்சர்ச்சைகளால்
பண்டிதர் கடிதத்தைப் பலரும் வாசிக்கத்தொடங்கினர்.

□

எதையும் நூறுவீதம் சரியாய்ச் செய்ய வேண்டும் எனும்,
என் பிடிவாதப் பண்பால்,
ஆசிரியர் குழுவுக்கும் எனக்கும்
சிறு சிறு முரண்பாடுகள் தோன்ற,
பண்டித்ர் கடிதத்தை நிறுத்த வேண்டியதாயிற்று.
பலரையும் சமாளிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு.
பலரோடு சேர்ந்து வேலை செய்து பழக்கப்படாத நான்,
அவர்களுக்குச் சுமையானேன்.

*முழுமையான அவர்களின் பத்திரிகைப் பணியில்,*
*என் பங்கு சிறிதே.*
*ஆனாலும் என் வேலையில் எனக்கு அதீத அக்கறை.*
*பலவேலைகளையும் சமாளிக்க வேண்டி இருந்த அவர்களுக்கு,*
*என் பிடிவாதம் பாரமாயிற்று.*
*ஆனாலும் அவர்கள் என்னைச் சகித்தார்கள்.*
*அப்பெருந்தன்மையைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.*
*நானாக ஒதுங்கிய பொழுது,*
*வலியுறுத்தி எழுதச் செய்யாத அவர்கள் செயலில்,*
*அச்சலிப்புணர்ந்தேன்.*
*பண்டிதர் கடிதம் நின்று போயிற்று.*

□

*எழுதுவதை நான் நிறுத்திய பின்பும்*
*என்னையும் என் கழக முயற்சிகளையும்*
*தினக்குரல் பத்திரிகை தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.*
*பகைபாராட்டா அவர்தம் பண்பைப் பாராட்டக்*
*கடமைப்பட்டுள்ளேன்.*
*தினக்குரல் பத்திரிகையின் நிர்வாக இயக்குனர்*
*எஸ்.பி.சாமி அவர்கள்,*
*பெரும் பண்பாளர்.*
*இனப்பற்று மிகுந்தவர்.*
*கொடை வள்ளல்.*
*என்றும் என் முயற்சிகளுக்குக் கைகொடுக்கும்,*
*அவர்தமக்கும் என் நன்றி உரியது.*

□

இன்றும்
பண்டிதர் கடிதம் பற்றிய விமர்சனங்கள்
இடையிடை வெளிவருகின்றன.
என்னைத் தாக்கி எழுத நினைப்போர்,
தமக்குச் சார்பாக என் கடிதக்கருத்துக்களை
மேற்கோள் காட்டுகின்றனர்.
காலம் கடந்தும் பண்டிதர் கடிதம் விமர்சிக்கப்படுவது,
என் எழுத்துக்குக் கிடைத்த வெற்றியென்றே கருதுகின்றேன்.
''தொடர்ந்து எழுதுங்களேன்''
என்று கேட்கும் நெஞ்சங்களும் இல்லாமல் இல்லை.
என் தனி எண்ணங்களைக் கம்பன்கழகத்தின் எண்ணங்களாக்கி,
குற்றம் சாட்டும் போக்கு அதிகரித்ததால்,
கம்பன் கழகத்தின் நன்மைகருதி,
இவ்வெழுத்து முயற்சி நின்றதிலும் எனக்குத் திருப்தியே.

□

பண்டிதர் கடிதங்களை நூலாக்கும் எண்ணம்,
எனக்கு இருக்கவில்லை.
என் மாணவர்களும் நண்பர்களும்
'இது நீங்கள் செய்த புது முயற்சி,
இம்முயற்சி பதிவாக வேண்டும்' என வலியுறுத்தினர்.
1995 இன் பின் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து,
கொழும்பு வந்த பிறகே,
என் எழுத்து முயற்சிகள் ஆரம்பமாயின.
கிட்டத்தட்ட ஓர் ஆண்டு
தினக்குரலில் இக்கடிதங்களை வரைந்தேன்.

அந்த ஓர் ஆண்டில்
நம் நாட்டிலும் உலகிலும் நடந்த சம்பவங்களில்,
என் மனதைப் பாதித்தவை கடிதங்களாக்கப்பட்டன.
அது தவிர,
நீண்ட நாட்களாய் என் மனம் பதிந்த பெரியோர் சிலருக்கும்
கடிதங்கள் வரைந்திருந்தேன்.
இக்கடிதங்களுள்,
பிரிட்டிஷ் இளவரசி டயானாவுக்கும்,
அன்னை தெரேசாவுக்கும் எழுதப்பட்ட கடிதங்கள்,
என் மாணவன் பிரசாந்தனால் எழுதப்பட்டவை.
சொற்பொழிவுக்காக லண்டன் சென்றிருந்ததால்,
நான் இல்லாத இருவாரங்களுக்கும்
அவனே கடிதங்களை வரைந்தான்.
என் கருத்தும் பாணியும் அவனுக்கு இயல்பானவை.
ஆதலால் அவ்விரு கடிதங்களும்,
பேதமின்றி எனது கடிதங்களாகவே கருதப்பட்டன.
இக்கடிதங்களைப் படிப்போர் அந்த ஓராண்டு காலத்தில்
உலகிலும் நம் நாட்டிலும் நடந்த செய்திகளின்
உண்மை நிலையை உணர்வர்.
ஓராண்டுச் சம்பவங்களின் உணர்வலைகளைப்
பதிவு செய்ததே,
இக்கடிதங்களூடு நான் செய்த முயற்சி.
வெறுமனே செய்திகளைப் பதிவு செய்யாமல்,
சம்பவங்களை, என் அறிவு கொண்டும் உணர்வு கொண்டும்
விமர்சித்திருக்கிறேன்.
என் விமர்சனங்கள் சரியானவைதானா?
காலம்தான் அதைத் தீர்மானிக்க வேண்டும்.

விசேட சேகரிப்புப் பகுதி



*எவரிலும் பகை பாராட்ட*
*என் எழுத்தை நான் பயன்படுத்தவில்லை.*
*என் நிலை உணர்வோர் இக்கூற்றின் உண்மை உணர்வர்.*
*மொத்தத்தில் இக்கடிதங்கள்,*
*உலகையும் ஓரளவு என்னையும் வெளிப்படுத்தும்.*
*தர்மத்தைச் சுட்டிக்காட்டும்.*
*மானுடத்தை நேசிக்கக் கற்றுத் தரும்.*
*பயன்கொள்ளவேண்டிப் பணிகிறேன்.*

□

*இந்நூலுக்கு இருவர் உரை தந்து*
*என்னை ஊக்குவித்தனர்.*
*முதலாமவர்,*
*தமிழ் இலக்கிய உலகின் இன்றைய பிரபல எழுத்தாளர்,*
*நண்பர் பாலகுமாரன் அவர்கள்.*
*அவர் எழுத்துக்களின் ரசிகன் நான்.*
*அவர் எழுத்தாற்றல் கண்டு ஏங்கி வியந்திருக்கிறேன்.*
*இறைக்கொடையாய் அமைந்த எழுத்து அது.*
*நவீன எழுத்துக்களுக்கு,*
*பெரும் மரபுப் புலவர்களின் வலிமையை ஊட்டியவர்.*
*வெறுமனே உலகியல் மட்டும் பேசிய நவீன ஆக்கங்களில்,*
*ஆத்ம தேடலையும் அறிமுகப்படுத்தியவர்.*
*இவர் நட்பு என் முன்னைத் தவப்பயன்.*
*என் வேண்டுதலைக் கட்டளையாய் ஏற்று,*
*எத்தனையோ வேலைகள் மத்தியில்,*
*அவர் ஆக்கித்தந்த முன்னுரை,*

*எனக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம்.*
*நீள நினைந்திருப்பேன்.*

☐

*இரண்டாமவர்,*
*ஈழத்தின் பிரபல எழுத்தாளர் "செங்கை ஆழியான்" அவர்கள்.*
*இலங்கை எழுத்தாளர்களில் என்னால் பெரிதும் மதிக்கப்படுபவர்.*
*விமர்சகர்களைத் தாண்டாத பல எழுத்தாளர்களின்*
*ஆக்கங்கள்போல் அல்லாது.*
*மக்கள் தேடி வாங்கிப்படித்த பெரும் அங்கீகாரம்*
*இவர் எழுத்துக்களின் தனிச்சிறப்பு.*
*எதையும் துணிந்து சொல்லும் திறன் மிக்கவர்.*
*என்னையும், என் முயற்சிகளையும் என்றும் ஊக்குவிப்பவர்.*
*என்னை எழுதத் தூண்டியவர்களில் ஒருவர்.*
*ஒரு காலத்தில் தன் எழுத்தால் என்னை ஆச்சரியப்படுத்தியவர்.*
*இன்று என்னை அங்கீகரித்திருக்கிறார்.*
*என்னையும் ஒருவனாய் ஏற்று,*
*அன்பினால் அவர் தந்த அறிமுகம்,*
*என்னைப் பெருமைப்படுத்துகிறது.*
*நன்றியால் நெகிழ்கிறேன்.*

☐

*இந்நூலை வெளியிடும்.*
*நர்மதா பதிப்பக உரிமையாளர் திரு. இராமலிங்கம் அவர்கள்,*
*இலங்கை எழுத்தாளர்களுக்கு ஊக்கம் தரும் உத்தமர்.*
*இந்நூல் தமிழகத்தாராலும் படிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி,*

என்னை திரு. இராமலிங்கம் அவர்களுக்கு அறிமுகப்படுத்தியவர்,
நீண்டநாளாய் என்னையும் கழகத்தையும் உறவாய்ப் பேணும்.
இலங்கையின் புகழ்பூத்த,
பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஸ்ரீதரசிங் அவர்கள்.
அவர்தம் அறிமுகத்தை ஏற்று,
நேரில் சந்திக்காத என்னை நெகிழ்விக்கும்வண்ணம்,
தன் அன்பான வார்த்தைகளால் ஊக்கப்படுத்தி,
அற்புதமாய் இவ் ஆக்கத்தை பதிப்பித்துத் தந்த,
நர்மதா உரிமையாளர் அவர்கட்கு
என்றும் என் நன்றி உரித்தாகும்.

□

என்னை, என்னைவிட நேசிக்கும் என் அன்புக்கினியவரான,
நண்பர் மார்க்கண்டு, நூல் வெளியீட்டில் பெரும் துணை புரிந்தார்.
மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள்
இக்கட்டுரைகள் நூலாய் வரவேண்டும் என,
தொடர்ந்து வலியுறுத்தினார்.
நண்பர்களும், மாணவர்களும் ஊக்கம் தந்தனர்.
இவற்றால் இந்நூல் உருப்பெறுகிறது.
அனைவர்க்கும் நன்றியுடையேன்.

□

என்னை இவ் உலகில் தோற்றி,
எல்லோரையும் மதிக்கவும் நேசிக்கவும் கற்றுத்தந்து,
தங்கள் விருப்பங்களை என்மேல் திணிக்காமலும்,
தங்கள் பாரங்களை என்மேல் சுமத்தாமலும்,

*என் விருப்பப்படி,*
*என் வாழ்க்கையை அமைக்க வழி சமைத்துத்தந்த,*
*என் பெற்றோரின் திருவடிகளுக்கு*
*இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.*

□

*முடிவாய் சில வார்த்தைகள்.*
*இது எனது புதிய முயற்சி.*
*கற்றவர் கருத்துரைத்தால் மனம் மகிழும்.*
*கடிந்தோ, கனிந்தோ உங்கள் கருத்தை எழுதுங்கள்.*
*ஊக்கமுறுவேன்.*
*நன்றி.*

□

அன்பன்,
**இ.ஜெயராஜ்**
அகில இலங்கைக் கம்பன் கழகம்

கம்பன் கோட்டம்,
300, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.



1

## அர்ஜுன ரணதுங்க

*இவர் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவராய்,*
*பலகாலம் இருந்தவர்.*
*இலங்கைக் கிரிக்கெட் வரலாற்றில்,*
*இவர் தலைமை தாங்கிய காலம்,*
*பொற்காலமாய்க் கருதப்படுகிறது.*
*1996இல் உலக கிரிக்கெட் கிண்ணத்தினையும்,*

*1997இல்,*
*சார்ஜா வெற்றிக் கிண்ணம்,*
*ஹக்காய் பெப்சிக் கிண்ணம்,*
*இந்திய சுதந்திர வெற்றிக் கிண்ணம்,*
*ஆசிய வெற்றிக் கிண்ணம் ஆகியவற்றையும்*
*இவர் தலைமையிலேயே,*
*இலங்கை அணி வெற்றி கொண்டது.*
*இவர் தலைமை வகித்த அணியில்,*
*தமிழரான முத்தையா முரளிதரன்,*
*பல சாதனைகள் நிகழ்த்தினார்.*
*அவரின் பந்து வீச்சுத் தவறானதென,*
*உலகளாவி ஐயம் எழுந்தபோது,*
*தமிழர், சிங்களவர் என்ற பேதமின்றி,*
*தக்க தலைவராய்,*
*முரளிதரனுக்குச் சார்பாக,*
*துணிந்து உறுதியாய்க் குரல் கொடுத்தவர்.*
*ஆசியக்கிண்ணப் போட்டித் தொடரில் ஈடுபட்டிருந்த,*
*அவரைப் பாராட்டிப்*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(20.10.1997 - தினக்குரல்)

# இலங்கை கிரிக்கட் அணித்தலைவர் அர்ஜுனரணதுங்கவுக்கு...

*மதிப்புக்குரிய அர்ஜுனரணதுங்க அவர்கட்கு,*
*வணக்கம்,*
*நலமுறுக.*
*ஆசியக்கிண்ண விளையாட்டுத் தொடரிற்*
*சிரத்தையாக இருப்பீர்கள்.*
*பெற்ற முதல் வெற்றிக்கு வாழ்த்துக்கள்.*
*இக்கடிதம் கிடைக்கும் போது,*
*மேலும் வெற்றிகள் கிடைத்திருக்க வேண்டும் எனப்*
*பிரார்த்திக்கிறேன்.*
*நீண்ட நாட்களாக எழுத நினைத்திருந்த கடிதத்தை,*
*இன்று எழுதுகிறேன்.*
*பழம் பண்டிதனான எனக்கு,*
*''கிரிக்கெட்'' விளையாட்டில்,*
*அத்துணை ஆர்வம் இருந்ததில்லை.*
*''பதினொரு முட்டாள்கள் விளையாட, பதினொராயிரம்*
*முட்டாள்கள் கூடியிருந்து பார்க்கும் விளையாட்டு'' என,*
*கிரிக்கெட் பற்றி அறிஞர் பெர்னார்ட்ஷா சொன்னதை,*
*ஒரு காலத்தில் உடன்பட்டு இரசித்திருக்கிறேன்.*
*எனது இக் கருத்தை மாற்றி,*
*''கிரிக்கெட்'' விளையாடடின் மீது மட்டுமல்லாமல்,*
*தங்கள் மீதும்,*
*மதிப்பையும் மரியாதையையும் உண்டாக்கியவர் நீங்கள்.*
*உலக அரங்கில்,*
*கிரிக்கெட் களத்துள் இலங்கை இறங்கிய பொழுது,*

இரக்கத்தோடும், நையாண்டியோடும் பார்த்தவர்கள்தாம்
அதிகம்.
இவ்விளையாட்டில் "பழந்தின்று கொட்டை போட்ட",
இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் போன்ற
நாடுகள்,
விளையாடிய களத்தில்,
இலங்கை வீரர்கள் இறங்கியபோது,
"இவர்களுக்கு இது தேவைதானா?" என,
நானே இரக்கப்பட்டிருக்கிறேன்.
அந்நிலையில்,
இடையில் இலங்கை அணிக்குத் தலைமையேற்ற நீங்கள்,
இவ்வெண்ணங்கள் அனைத்தையும்,
மெல்லமெல்லத் தலைகீழாக்கினீர்கள்.
எதுவித சலனமுமில்லாமல்,
நிதானமாக முன்னேறத் தொடங்கினீர்கள்.
தங்கள் சீரான தலைமையினால்,
இலங்கையணியின் முன்னேற்றம் படிப்படியாய் உயர்ந்தது.
உச்சக்கட்டமாக "உலகக்கிண்ணத்தை" நீங்கள்
கைப்பற்றியபோது,
வியந்து மூக்கில் விரல் வைக்காதவர்கள் இல்லையெனலாம்.
முதன் முதலில் இலங்கையை,
உலக அளவிலான சாதனைக்குரிய நாடாக்கியது,
உங்கள் தனித்துவப் பெருமை.
இன்று கிரிக்கெட் உலகில்,
இலங்கையை விட்டு விரல் மடிக்க முடியாது என்ற நிலையை,
உருவாக்கிய உங்கள் தனித்திறமையை,
பாராட்டாமல் இருக்க முடியாது.

எனினும்,
நீங்கள் என் மனதில் உயர்ந்த இடத்தைப் பிடித்ததற்கு,
இவை மட்டுமே காரணங்களல்ல.
விளையாட்டு அணிக்குத் தலைமை ஏற்றிருப்பினும்,
உங்களிடம் அமைந்த,
தனித்துவமான,
மகோன்னதத் தலைமைப் பண்புகளே,
தங்களை என் மனதில் உயர்ந்த நிலைக்குக் கொண்டுபோயின.
உங்களிடம்,
இந்த நாடும், அரசியல்வாதிகளும், நிர்வாகிகளும்
படிக்க வேண்டிய பாடங்கள் ஒன்றிரண்டல்ல.
விளையாட்டரங்கில்,
சிறு சிறு சாதனைகளுக்கும் ஆரவாரிக்கும்,
ஒரு சில வீரர்கள்போல் அல்லாது,
மிக இக்கட்டான நிலையிலும்,
மிக மகிழ்ச்சியான நிலையிலும்,
நிதானந் தவறாமலும், குழுவினரைப் பதற்றப்படுத்தாமலும்,
ஒரே தன்மையுடனிருக்கும் உங்கள் முகபாவம்,
தங்கள் வெற்றியின் தனி இரகசியம்.
கீழ் நிலையிலிருந்த இலங்கையணிக்குத்
தலைமையேற்ற பொழுது,
உங்கள் செயல்களும் முகபாவமும் எப்படி இருந்தனவோ,
அது போலவே,
உலகக்கிண்ணத்தைப் பெறும் போதும்,
நிலை தளம்பாமல் இருந்தமை கண்டு,
வியந்திருக்கிறேன்.
''மெய்த் திருப்பதம் மேவென்ற போதிலும்,

இத் திருத் துறந்து ஏகென்ற போதிலும்,
சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையை ஒத்திருந்த''
கம்பன் பாடிய இராமனைத் தங்களிடம் கண்டு
மகிழ்ந்திருக்கிறேன்.
அவுஸ்திரேலியாவில்,
முத்தையா முரளிதரனின் பந்து வீச்சுப்பற்றி,
பெரும் சர்ச்சை எழுந்தது.
''முரளிதரன்,
கிரிக்கெட் மைதானத்தை விட்டே விலகவேண்டிவருமோ?''
என,
பலரும் நினைத்த அப்பொழுது,
இனபேதம் என்பது சிறிதுமின்றி,
அவரை ஒரு தமிழனாய் நோக்காது,
''என் அணி வீரர்களுள் இவனும் ஒருவன்'' எனும்
உறுதியோடு,
அசையாமல் நீங்கள் காட்டிய ஆதரவு கண்டும்,
கோளாறுகள் பல செய்த அவுஸ்ரேலிய அணி,
உலகக்கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்தில்,
உங்களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது,
''அவர்களைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''
என்று நீங்கள் அளித்த பேட்டியிலிருந்த வீரம் கண்டும்,
சிலிர்த்திருக்கிறேன்.
தமிழரோ, சிங்களவரோ,
''நம் நாட்டு வீரன் மேல் பழிசொன்னவர்களை விடமாட்டேன்'
எனும்,
தங்கள் தேசிய உணர்வு சார்ந்த ''ரோசத்தில்'',
''ஆயிரம் உண்டிங்கு ஜாதி, எனில்

அந்நியர் வந்து புகல் என்னநீதி?"
எனும் பாரதி வாசகங்களின் பதிவு கண்டு,
பரவசப்பட்டது இப்பண்டிதன் உள்ளம்.
அது மட்டுமல்லாமல்,
உலகக் கிண்ணப்போட்டியிற் சாதனை செய்த,
ஓரிரு வீரர்களுக்கு மட்டும் விருதளித்துக் கௌரவிக்க இருந்த ஜனாதிபதியை,
"வீரர்கள் அனைவரதும் கூட்டுமுயற்சியால் வந்த வெற்றியிது" என,
உணரச்செய்து,
அனைத்து வீரர்களுக்கும் விருதளிக்கச் செய்த போதும்,
உலகக் கிண்ணம் கிடைத்தபோது
குவிந்த பரிசுப் பொருட்களை,
அனைவரும் சமமாகப் பகிர்ந்து கொள்வது என்று,
உங்கள் குழு முடிவெடுத்தபோதும்,
தீமையில் மட்டுமல்லாது நன்மையிலும்,
அனைவரையும் அணைத்துக் கொள்ளும்
உங்கள் உயர்ந்த பண்பு கண்டு,
அளவிறந்த ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.
"முப்பது கோடியும் வாழ்வோம் வீழின்,
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்" எனும்,
பாரதி கவிதையை,
நிதர்சனமாக உங்கள் செயல்களிற் கண்டு,
மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.
மொத்தத்தில்,
ஒன்றுபட்டுழைத்தால் நம் தேசத்தை,
உலகப் பார்வைக்குக் கொண்டுவரலாம் எனும்,

தங்கள் மனவுறுதியும்,
இனபேதமற்று,
நாமனைவரும் இலங்கையரே என நினைக்கும்,
உங்கள் தேசிய மனப்பாங்கும்,
வாழ்வோ தாழ்வோ அனைவரும் ஒன்றுபட்டு ஏற்போம் எனும்,
தங்கள் உறுதியும்
உங்களை இந்நாட்டின் தலைமகனாய்,
இனங்காட்டியுள்ளன.
நம் நாட்டில்,
இத்தனை அழிவுகளைக் கண்ட பின்னும்கூட,
பொறுப்புணர்ச்சியோடு செய்யவேண்டிய அரசியலை,
தாம், தமது கட்சி எனும் சுயநலங்களுக்காய்,
எத்தனையோ உயிர்களின் அழிவையும் பொருட்படுத்தாமல்,
விளையாட்டாய்ச் செய்து கொண்டிருக்கும்,
நம் அரசியற் தலைவர்களைக் காணும்போது,
விளையாட்டைப் பொறுப்புணர்ச்சியோடு செய்யும்,
உங்கள் தலைமையை நினைக்க வேண்டியுள்ளது.
அரசியலில் இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சியும், நிதானமும்
விளையாட்டில்.
விளையாட்டுத்தனமோ அரசியலில்!
இதுதான் நம் நாட்டின் தலைவிதி போலும்.
இப் பண்டிதனுக்கு ஒரு சிறு விருப்பம்.
"இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"
என்பான் திருவள்ளுவன்.
அவன் கருத்தைக் கற்றதாற் கேட்கிறேன்.
இன்று இந்த நாட்டின்

அனைத்து மக்கள் மனதிலும் பதிந்த நீங்கள்,
விளையாட்டிற் காட்டிய அதே திறமையுடனும்,
நடுவு நிலையுடனும்,
நிதானத்துடனும்,
ஏன் அரசியற் பக்கம் திரும்பக்கூடாது?
அழிவின் எல்லை நோக்கிச் செல்லும் நம்நாட்டைக் காக்க,
தாங்கள் விளையாட்டிற் காட்டும்
அத்தனை பண்புகளோடும் கூடிய,
ஒரு தலைவன்தான் தேவை.
வருவீர்களா?

அன்புடன்,
பண்டிதன்.





# 2

## முற்போக்கு இலக்கியவாதிகள்

*இவர்கள் ''மார்க்சிஸ'' தத்துவங்களை ஏற்றுக்கொண்டு*
*இலக்கியம் செய்தவர்கள்.*
*ஆரம்ப காலத்தில் நாம் அங்கீகரிக்கப்படுவதற்காய்*
*அப்போதைய மரபிலக்கிய வாதிகளை,*
*கருத்துக்களால் மட்டுமன்றிக் கைகலப்பாலும்,*
*இவர்களுட் சிலர் அச்சுறுத்தினர்.*

*தம் இலக்கியப் பயணத்தில்,*
*இவர்களுள் ஒரு சிலரைத்தவிர மற்றையோர்,*
*காலப்போக்கில்*
*வகுத்துக் கொண்ட பாதையினின்றும் தடம் மாறினர்.*
*சோவியத் யூனியன் வீழ்ச்சியின் பின்*
*இவர்கள் வலிமை குன்றியது.*
*இவை செய்திகள்.*
*கொழும்பில் நடந்த ஓர் இலக்கியவாதியின்,*
*நூல் வெளியீட்டில் நடந்த சம்பவத்தாற் தூண்டப்பட்டு,*
*முற்போக்கு இலக்கியவாதிகளுக்கு,*
*பழம் பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(27.07.1997 - தினக்குரல்)

## ஈழத்தின் முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்களுக்கு...

*மதிப்பிற்குரிய ஈழத்தின் முற்போக்கு இலக்கியவாதிகளுக்கு,*
*வணக்கம்.*
*நலமுறுக.*
*இந்நாட்டின் முதுகெலும்பெனப் பெருமை பேசுவோர் தாங்கள்.*
*அது முறிந்து கிடப்பது வேறு கதை.*
*உங்கள் மேல் நான் கொண்டிருப்பது,*
*மதிப்பெனச் சொல்வதைவிட,*
*பயம் கலந்த மரியாதை எனச்சொல்வது,*
*அதிக பொருத்தம்.*
*அதற்குக் காரணம் உண்டு.*
*அடிப்படை மொழித்தகுதியாய்,*
*இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர்களே,*
*''இலக்கியவாதிகள்'' எனும் தகுதி பெற்று,*
*உலா வந்த காலத்தில்,*
*அவ்வடிப்படைத் தகுதிகள்தானும் இன்றி,*
*மூலை முடுக்கிலிருந்தெல்லாம் வெளிப்பட்ட நீங்கள்,*
*சிறுகதை, நாவல் என்னும் இலக்கிய வடிவங்களை ஆக்கி,*
*''நாங்களும் இலக்கிய வாதிகளே....!''*
*இல்லை இல்லை,*
*''நாங்கள்தான் இலக்கியவாதிகள்'' என,*
*இலக்கிய அந்தஸ்து வேண்டிப் போராடத் தலைப்பட்டீர்கள்.*
*படித்த பண்டிதர்களிடமிருந்து*
*இலக்கிய அந்தஸ்த்தைப் பறிக்க,*
*எழுத்தை மாத்திரம் நம்பாமல்,*

சில அடாவடித்தனங்களிலும் நீங்கள் இறங்கியது.
ஊரறிந்த இரகசியம்.
காலத்தால் அங்கீகரிக்கப்பட்டு நிலைத்த,
மரபிலக்கியங்களைக் கற்கும்,
திறனும், விருப்பமும், தகுதியும் இல்லாத நீங்கள்,
பண்டிதர்களையும்,
அப்பழைய இலக்கியங்களையும்
எதிர்க்கத் தலைப்பட்டீர்கள்.
மரபுக்கருத்துக்கள் இக்காலத்திற்குப் பொருந்தாதவை என்றும்,
பிற்போக்குத் தனமானவையென்றும்
சாதித்தீர்கள்; பொய்யுரைத்தீர்கள்.
பண்டிதர்களோடு கற்றலில் போட்டியிட முடியாத,
''அறிவுச்சோம்பல்'' கொண்ட,
தம்மை ஏதோ ஒரு வகையில் இனங் காட்ட முனைந்த,
நவீன கல்வியாளர் சிலரும்,
உங்கள் பின் அணிதிரண்டனர்.
உங்கள் எண்ணத்தை,
கருத்துக்களால் மட்டும் நிலைநிறுத்த முடியாது
என்பதுணர்ந்து,
உங்கள் ''இயல்பான'' ஆற்றல் கொண்டு,
கைகலப்பிலும் இறங்கத் துணிந்தீர்கள்.
யாழ் இந்துக்கல்லூரியில் நடந்த
மரபறிஞரின் கூட்டமொன்றை,
கூழ்முட்டை அடித்துக் குழப்பி,
நீங்கள் செய்த அடாவடித்தனத்தால்,
நாகரிக உலகமே நடுங்கிப் போனது.
இன்றுவரை என் மனத்தில் இருக்கும் ஒரு கேள்வி.

'மேடையில் பேசும் ஒருவரைத் தாக்க,
கூட்டத்திற்கு கூழ்முட்டையைத் திட்டமிட்டுக்
கொண்டுபோகும் ஒருவர்,
எங்ஙனம் இலக்கியவாதி ஆகலாம்?'
"கோபம் வந்தது கையில் கிடைத்த முட்டையை எறிந்தோம்".
என நீங்கள் சொல்லவும் வாய்ப்பில்லை.
கூட்டம் நடந்ததோ இந்துக் கல்லூரியில்.
முட்டையே கிடைக்காத அவ்விடத்தில்,
கூழ்முட்டை எங்கிருந்து வரும்?
தகுதியுள்ள பண்டிதர்கள்,
உங்கள் சண்டித்தனத்தின் முன் நின்றுபிடிக்க முடியாமல்,
இலக்கிய உலகத்திலிருந்து பயத்துடன் பின்வாங்கினர்.
எப்படியோ நீங்கள் வென்றீர்கள்.
கேட்பாரின்றிப் போனதால்,
ஈழத்து இலக்கிய உலகு உங்கள் வசமாக,
சில காலம் உங்கள்பாடு கொண்டாட்டமாயிற்று.
உங்களைப் போலவே,
குறுக்கு வழியில்,
உயர் கல்விப்பதவிகளைக் கைப்பற்றியிருந்த,
அறிஞர் சிலர் பக்கப்பாட்டுப் பாட,
இக்கூட்டு முயற்சியில்,
உங்கள் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது.
அடிப்படைத் தமிழறிவுதானும் இல்லாத உங்களின்,
சிறுகதைகளையும், நாவல்களையும்,
அவ்வறிஞர்கள் பல்கலைக்கழகப் பாடமாக்கி,
கற்பிக்கத் தலைப்பட்டனர்.
உங்களில் சிலருக்கு அச்செயலாற் பெருமை பிடிபடவில்லை.

கம்பன், வள்ளுவன், இளங்கோ வரிசையில்
நாங்களும் எனக் குளிர்ந்து போனீர்கள்.
நீங்கள் செய்த இலக்கியங்களெல்லாம்,
இப்பல்கலைக்கழகப் போலி விமர்சகர்களை மட்டுமே
அடையும் திறன் கொண்டிருந்தன.
அவர்களைத்தாண்டி,
மக்களிடம் அவை போகவில்லை.
போக வேண்டுமென,
நீங்களும் கவலைப்படவில்லை.
மக்களுக்காக எழுதினால்தானே
நீங்கள் அங்ஙனம் கவலைப்பட.
புகழும், பொருளுமே உங்கள் நோக்கம்.
''சமுதாயத்தில் அக்கறையில்லாதவர்கள்'' என்று,
பண்டிதர்களுக்கு நீங்கள் போட்ட ''தொப்பி'',
உங்களுக்கே அளவாய்ப் போனது அவலம்.
''மனிதருள் பேதங் காண்பதா?'' என,
முற்போக்குச் சிந்தனையாளர்களாய் உங்களை இனங்காட்டி,
ஒருகாலத்தில்,
பேதங்களுக்கெதிராய்ப் போர்க்கொடி தூக்கிய நீங்கள்,
பேரினவாதத்துக்கெதிரான
நம் இன விடுதலைப் போராட்டத்தில்,
இணையவும், அக்கறை காட்டவும் மறுத்தீர்கள்.
கிடைக்கும் ஒரு சில அரச பட்டங்களையும் பதவிகளையும்
இழக்க நீங்கள் தயாராய் இல்லை.
''முதலாளித்துவத்துக்கு எதிரானவர்கள்'' என்று,
ஆரம்பத்தில் உங்களிற் பலர் போட்ட முகமூடி,
பின் இக்கொள்கைகளைக் காட்டிப் பணம் குவித்த

அவர்தம் செய்கைகளால்,
தானே கழன்று வீழ்ந்தது.
''வரையறுக்கப்பட்ட சிந்தனைகளுக்குள் அகப்பட்டவர்கள்''
என,
பண்டிதர்களை நையாண்டி செய்த நீங்கள்,
நாளடைவில் அவ்வண்ணமே ஆனீர்கள்.
பண்டிதர்களாவது,
நம்பாரம்பரிய அறிஞர் தம் சிந்தனைக்குள் அகப்பட்டனர்.
நீங்களோ நம் மண்ணோடு ஒட்டாத,
மற்றைய நாட்டு அறிஞர்களின் வால் பிடித்தபடி.
சமுதாய அங்கீகரிப்பை சிறிதும் பொருட்படுத்தாமல்,
விமர்சகர்கள் சிபார்சு செய்தவற்றையே படிப்பது,
''அவர்கள் சொன்னவை மட்டுமே இலக்கியங்கள்''
எனக் கொள்வது,
அவர்கள் சிந்தனையையே
உங்கள் சிந்தனைகளாய்க் கொண்டு,
பொய்ச் சமுதாய உணர்ச்சி காட்டி,
மேடைகளில் முழங்குவது என,
உங்கள் எழுத்தாள உலகம்,
பழமைவாதிகளை விடச் ''சுருண்டு'' போனது.
இந்நிலையில் சோவியத் யூனியனும் சிதறிப்போக,
பாவம், நீங்கள் மிகவும் பலவீனப்பட்டுப் போனீர்கள்.
உங்களின் இன்றைய பலவீனம் தெரிந்ததாலோ என்னவோ?,
மரபிலக்கிய வாதிகள்,
மீண்டும் உங்களைத் தாக்கத் தொடங்கியுள்ளனர்.
''நாட்டை நிமிர்த்தினோம் என்கிறீர்களே!
நாசமாய்ப் போய்க் கிடக்கும் இன்றைய நாட்டின் நிலைதான்,

நீங்கள் நிமிர்த்திய இலட்சணமா?'' என்றும்,
''பல்கலைக்கழக ஆய்வுகளிற் பதியப்படவே
நீங்கள் எழுதுகிறீர்கள்'' என்றும்,
அண்மையில் நடந்த,
முக்கிய எழுத்தாளர் ஒருவரின் நூல் வெளியீட்டில்,
மரபுப்பேச்சாளர் ஒருவர் உங்களை ஒரு பிடிபிடித்தார்.
நீங்கள் கொதித்தெழுவீர்கள் என எதிர்பார்த்த நான்,
ஏமாந்து போனேன்.
உங்களிற் பலர் உடலாலும் முதிர்ந்து போனதால்,
முன்னைய ''உசார்'' உங்களிடம் இல்லை.
இந் நிலையில்,
அண்மையில் கொழும்பில் நடைபெற்ற
நூல் வெளியீடு ஒன்றில்,
மீண்டும் ஒரு பண்டிதர் உங்களுக்குச் சவால் விட்டிருக்கிறார்.
அண்மையில் கைக்குக் கிடைத்த,
நவீன நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ் ஒன்றில்,
ஒரு பண்டிதர் தலைமை தாங்குவதாய் இருந்தது கண்டு,
ஆச்சரியத்துடன் அக்கூட்டம் காணச் சென்றேன்.
பண்டிதர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
''பண்டிதர்தானே'' எனுந்துணிவிலோ என்னவோ?
எழுத்தாளர் ஒருவர்,
''ஈழத்து இலக்கியங்களே இலக்கியங்கள்.
அவை அனைத்தும் தரமானவை.
கல்கி போன்ற வியாபார எழுத்தாளர்கள் சமுதாயப்
பொறுப்பற்றவர்கள்'' என,
விமர்சகர்களிடமிருந்து உள்வாங்கிய கருத்தை,
முழங்கத் தொடங்க,

வந்ததே கோபம் தலைவருக்கு.
கோபத்துடன் களம் இறங்கிய அவர்.
ஜெயகாந்தன் போன்ற தரமான எழுத்தாளனே.
கல்கியை அங்கீகரித்தமையை
எடுத்துக்காட்டிய தோடல்லாமல்.
உங்கள் மேல் ஓர் அணுகுண்டையே தூக்கிப் போட்டார்.
''உங்கள் இலக்கியம். தரம் தரம் என்கிறீர்களே.
புதுமைப்பித்தன். ஜெயகாந்தன் வரிசையில் விரல் மடிக்க.
ஈழத்தில் ஓர் எழுத்தாளனேனும் உளனா?.
முன்பு ஈழத்திலக்கியம் வளரவில்லை என்று சொன்ன.
பகீரதனை எதிர்த்தீர்களே.
இன்று நான் கேட்கிறேன் பதில் சொல்லுங்கள்''
என்று சவால் விட்டார்.
நான் திகைத்துப்போனேன்.
ஐயன்மீர்!
நவீன எழுத்தாளர்களே!
எனக்கே ரோசம் பொங்குகிறது.
உங்களுக்கு எப்படி இருக்கும்?
அன்றைய கூட்டத்தில் பண்டிதரின் உரையைக் கேட்டவர்கள்.
''பண்டிதர்களின் பழம் அலட்டல்'' என.
நீங்கள் சொல்லப்போகும் பதிலையும் ஏற்கப்போவதில்லை.
நவீன இலக்கியப் பரப்பில்
தனக்குள்ள புலமையை நிரூபித்த பின்பே.
இக் கேள்வியை வீசியிருக்கிறார்.
''இது பொறுப்பதில்லை தம்பி! எரிதழல் கொண்டு வா'' என.
வீரமுடன் நீங்கள் கொதித்தெழ வேண்டாமா?
''கிணற்றுள் வீழ்ந்த யானையை.

தவளையும் ஒரு உதை உதைக்குமாம்.''
அந்தக் கதைதான் இது.
ஒரு பண்டிதனின் கேள்விக்குப் பதில் சொல்லாவிட்டால்,
இதுவரை நீங்கள் எழுதியதில் என்ன பிரயோசனம்.
நாட்டின் முதுகெலும்பைப் பின் நிமிர்த்தலாம்,
முதலில் உங்கள் முதுகெலும்பை நிமிர்த்த முன் வாருங்கள்.
நீங்கள் அடிக்கடி மேடைகளிற் சொல்லும்,
வாளினை விடக் கூர்மையான உங்கள் பேனாக்களை,
உருவியெடுக்கும் தருணம் வந்துவிட்டது.
முடிந்தால் அப்பண்டிதரின் சவாலை,
உங்கள் பேனாக்கள் சந்திக்கட்டும்.
முடியாவிட்டால்?
உங்களுக்கென்ன,
கோழிகளும், கூழ்முட்டைகளும் இப்போதும் கிடையாதா என்ன?
பண்டிதரை எதிர்கொள்ள முடிந்தவரை முயலுங்கள்.

அன்புடன்,
பண்டிதன்.



3

## நடிகர் சிவாஜி கணேசன்

*தமிழ்ச்சினிமா உலகில் போற்றப்படும்,*
*தன்னிகரில்லாத மாபெரும் நடிப்பு மேதை இவர்.*
*நடிப்பின் அனைத்துப் பரிமாணங்களையும்,*
*தன் படங்களில் வெளிப்படுத்தியவர்.*
*“நடிகர் திலகம்” எனப் போற்றப்பட்டவர்.*
*தமிழுலகின் கலைமேதையாய்க் கருதப்பட்ட இவருக்கு,*

*1997ஆம் ஆண்டு,*
*புகழ்பெற்ற "தாதா சாகேப் பால்கே" விருது,*
*வழங்கப்பட்டது.*
*விருது கிடைத்தமையைப் பாராட்டி,*
*அவர் ஆற்றல்களை எடுத்துரைத்ததோடு,*
*அன்றைய தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்கள்,*
*ஈழத்தமிழர்கள் விடயத்திலும்,*
*மற்றைய விடயங்களிலும் காட்டிய*
*இரட்டை வேடத்தன்மையையும் சுட்டி,*
*பழம்பண்டிதரால் எழுதப்பட்ட பகிரங்கக் கடிதம்.*

(03.08.1997 - தினக்குரல்)

## நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதம்.

*மதிப்புக்குரிய நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களுக்கு,*
*வணக்கம்.*
*நலமுறுக.*
*அண்மையில் தாங்கள் பெற்ற,*
*"தாதா சாகேப் பால்கே" விருதுக்காக,*
*பாராட்டுக் கடிதங்கள் குவிந்திருக்கும்.*
*தாமதமாய் வரும் இப்பழம்பண்டிதனின் பாராட்டையும்*
*ஏற்றருள்க.*
*என் மனம் கவர்ந்தவர் தாங்கள்.*
*எடுத்ததற்கெல்லாம் பாட்டுப்பாடிக் கழுத்தறுத்த,*
*இசைநாடகப் பாணியிலான தமிழ்ச் சினிமாப்படங்களால்,*
*சலிப்புற்றிருந்த ரசிகர் உலகம்,*
*"கோயில்களை எதிர்த்தேன்*
*கோயில்கள் கூடாதென்பதற்காக அல்ல,*
*கோயில்கள்,*
*கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாதென்பதற்காக"*
*என்ற உங்கள் சிம்மக்குரல் கேட்டு,*
*திகைப்போடு உங்களை ஒருமித்து நோக்கியது.*
*அன்று தொடங்கிய உங்கள் சரித்திரம்,*
*இன்றுவரை தொடர்வது சாதனைதான்.*
*"என் பிராண நாதா! உங்கள் மேல் கொண்ட பிரேமையால்"...*
*எனத் தொடங்கும்,*
*வடமொழி ஆட்சி கொண்ட அன்றைய தமிழ்ச் சினிமாப்பட*
*வசனங்களும்,*

பத்துக்கு எட்டுச்சொல் ஆங்கிலமாக,
காதை எவ்வளவு தீட்டிக்கொண்டு கேட்டாலும்,
முழுமையாய் விளங்காத வகையில்,
இன்றைய தமிழ்ச்சினிமாக் கதாநாயகர்கள்,
அரையிருட்டில் முணுமுணுக்கும் வசனங்களும்,
தமிழ்த் தாய்க்குக் கிடைத்த சாபங்களெனின்,
நீங்கள் பேசிய அழகான, சுத்தமான தமிழ் வசனங்கள்,
அவளுக்குக் கிடைத்த "வரப்பிரசாதம்" என்பது சர்வ நிச்சயம்.
உங்களின் அவ்வழகுத்தமிழ் கேட்டு இப்பழம்பண்டிதனும்,
தங்கள்பால் மனதைப் பறிகொடுத்தான்.
தமிழில் மட்டுமா?,
நடிப்பில் தாங்கள் காட்டிய பரிமாணங்கள்,
எக்காலத்திலும் யாராலும் அசைக்க முடியாதவை.
"தில்லானா மோகனாம்பாளில்"
ஓர் நாதஸ்வரக் கலைஞனாகவே மாறிய,
உங்கள் நடிப்பை மறக்க முடியுமா?
ஸ்வரம் மாறாமல் உங்கள் விரல்கள் அசைந்ததை,
எங்கள் ஊர் நாதஸ்வர வித்துவான் என்.கே. பத்மநாதன்,
சொல்லிச் சொல்லி மாய்வார்.
அந்த நுட்பம் இனி யாருக்கு வரும்?
"வியட்நாம் வீட்டில்",
உத்தியோக ஓய்வு பெற்று வீடுவந்து,
தாயின் படத்தின் முன்நின்று நீங்கள் பேசிய வசனங்கள்,
திரையரங்கு முழுவதையும் அழச்செய்ததே!
இப்படியொரு காட்சியிலும்,
சோகத்தைக் கொணர வேறு யாரால் முடியும்?
இதே படத்தில்,

காலில் முள் தைத்து,
அதனை மனைவி எடுக்க முயலும் காட்சியில்,
நீங்கள் துடித்த துடிப்பும் பதறிய பதறலும்,
உண்மையாய் முள் குத்தியவனுக்குக்கூட வருவது கடினம்.
அத்தனை தத்ரூபமான நடிப்பைத் தரவல்லவர்
நடிப்புலகில் வேறு யார்?
''ராஜராஜசோழனில்'' முதல் காட்சியில்,
தனித்துக் காட்டப்பட்ட,
வெற்றிலைப் பணிக்கம் ஏந்திய இரு கைகளின்
கம்பீரத்திலேயே,
இவை ராஜராஜ சோழனின் கைகள்தான் என்று,
பார்ப்பவர்க்கு உணர்த்தக் கூடியவர்,
உலகிலேயே நீங்கள் ஒருவராய்த்தான் இருப்பீர்கள்.
''தங்கப்பதக்கத்தில்'' உயரதிகாரியின்முன் நிற்கையில்,
மனைவியின் மரணச்செய்தி வர,
இராணுவ கம்பீரம் குறையாமல் நீங்கள் காட்டிய சோகம்,
எக்காலத்திலும் யாருக்கும் வர நியாயமில்லை.
நவீன ஒப்பனை வசதியில்லாத அக்காலத்திலேயே,
''திருவருட் செல்வரில்'',
முகம் முழுவதும் சுருக்கங்களுடனும்,
இடுங்கிய கண்களுடனும்,
அப்பர் சுவாமிகளாய் நீங்கள் தோன்றியதை
மறக்கத்தான் முடியுமா?
'தெய்வமகன்', 'கர்ணன்', 'நவராத்திரி'.... என,
தங்கள் சினிமாச் சாதனைப் பட்டியல் விரிக்கிற் பெருகும்.
இவ்வளவும் ஏன்?,
சிவபெருமான், வீரவாகுதேவர், கர்ணன், ராஜராஜ சோழன்,

வ.உ.சி., வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற,
புராண, இலக்கிய, வரலாற்றுப் பாத்திரங்களை,
இன்றும் நம்மால் உங்கள் உருவத்தில்தானே
சிந்திக்க முடிகிறது.
தாங்கள் மேலைத்தேயத்தில் பிறந்திருந்தால்,
எத்தனையோ விருதுகள் குவிந்திருக்கும்.
என்ன செய்வது?,
தமிழனாய்ப் பிறந்ததால்,
கிடைக்க வேண்டிய விருதும் தாமதமாய்க் கிடைத்திருக்கிறது.
ஆனால் ஒன்று,
இன்றைய நிலையில்,
சிறந்த நடிகருக்கான ''தாதா சாகேப் பால்கே'' விருதை,
தமிழகத்தில் பெறத் தகுதியானவர் நிச்சயம் நீங்களல்லர்.
உங்களைவிடச் சிறந்த நடிகர் இருக்கிறார்.
கமலஹாசனைச் சொல்லுகிறேனோ என நினைப்பீர்கள்......
அண்மைக்காலமாய்,
மாறுவேடங்கள் போடுவதையே நடிப்பெனக் கருதும்,
அவர் எங்கே? நீங்கள் எங்கே?
பின் யாரைச் சொல்லுகிறேன் என்று கேட்கிறீர்களா?
இன்றைய நிலையில் சந்தேகத்திற்கு இடமின்றி,
உங்கள் முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்கள்தான்,
தமிழகத்தின் தலைசிறந்த நடிகர்.
எப்படியென்று கேட்கிறீர்களா?
ஒரு காலத்தில், தன் பிறந்தநாட் கொண்டாட்டத்தில்,
ஈழத்தமிழ்ப் போராளிக் குழுக்களுக்குப்
பண முடிப்புக் கொடுத்தும்,
ஈழத்திலிருந்து திரும்பிய அமைதிகாக்கும் படையை,

வரவேற்கப் போகாது விட்டும்,
ஈழத்தமிழினத்தின் காவலனாக,
தன்னைக் காட்டிக் கொண்டவர்.
இன்று ஈழத்தமிழர் இன்னல் துடைப்பதற்காய் நடைபெற்ற,
''ஹர்த்தாலில்'' கூடக் கலந்து கொள்ளாததோடு,
ராஜீவ் காந்தி பற்றிய விசாரணைக் கமிஷனின் முன்,
தனக்கும் ஈழப் போராளிகளுக்குமிடையே
எந்தத் தொடர்புமில்லை என,
வசனம் பேசுகிறாரே!
அந்த அப்பாவி நடிப்பு உங்களுக்கு வருமா?
சோதிடர்கள் சொன்னதற்காக,
தோளில் போடும் கறுப்புத் துண்டை
மஞ்சட் துண்டாய் மாற்றியவர்,
இன்றும் மேடைகளில்,
தான் மூடக்கொள்கைகளுக்கு எதிரானவரென
முழங்குகிறாரே...!
இந்த பொய்யான கம்பீர நடிப்பை,
நீங்கள் நினைத்துத்தான் பார்க்க முடியுமா?
தமிழக அரசியலில் ஊழல் எனும் விஷத்தைக் கலந்து,
மக்களால் நிராகரிக்கப்பட்டவர்,
இன்று குற்றமற்றவர்போல்
ஜெயலலிதாவின் ஊழல்கண்டு பதறுகிறாரே.
இந்தப் பொய்த் ''தேசப்பற்றை''
உங்களாற் காட்டத்தான் முடியுமா?
ஜெயலலிதாவின் ஊழலை எதிர்த்த அவர்,
ஊழல் புலி, லல்லுபிரசாத் யாதவை ஆதரிப்பதாய்,
இன்று மீண்டும் அறிக்கை விடுகிறாரே!

இந்த இரட்டை வேடத்தை உங்களாற் போடத்தான் முடியுமா?
தமிழுக்காய் உயிர் வாழ்வதாய்க் காட்டி,
பின் ஒரு தமிழன் இந்தியப் பிரதமராகும் வாய்ப்பை,
சூழ்ச்சி செய்து தடுத்தாரே!
இத்தகு வில்லன் பாத்திரம் என்றாவது உங்களுக்குக்
கைவருமா?
ஆயிரம்தான் சொல்லுங்கள்!
உங்களோடு சினிமாவில் அறிமுகமான கருணாநிதி அவர்கள்,
நடிப்பில் உங்களைவிட எவ்வளவோ மேலே நிற்கிறார்.
அது மறுக்க முடியாத உண்மை.
இந்நிலையில்,
''தாதா சாகேப் பால்கே'' விருதைத் தங்களுக்குத் தருவது,
பொருத்தமில்லை என நான் சொல்லுவது சரிதானே!
அரசியலில், மக்கள் முன் நிஜத்தில் நடிக்கும்
முதலமைச்சர் கருணாநிதியோடு,
நீங்களாவது போட்டி போடுவதாவது.
தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள்.
கலையுலகில் மட்டும் உங்கள் பணி,
கம்பீரமாய்த் தொடரட்டும்.
உயர்க.

அன்புடன்,
பண்டிதன்.



# 4

# கப்பலுக்காகக் காத்து நிற்கும் தமிழ் அகதிகள்

*பல ஆண்டுகளாகப்,*
*புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாணம்,*
*1995இல் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பின்,*
*யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப்பாதை தடைப்பட்டது.*

பாழ்ப்பாண நூலகம்
விசேட சேகரிப்புப் பகுதி



*கடல் வழியாகவும், வான்வழியாகவும் மட்டுமே*
*பயணம் செல்லும் சூழ்நிலை.*
*நிர்வாகப் பிரச்சினைகளைக் காரணங்காட்டி,*
*கப்பற் பயணமும் தடைப்பட,*
*கடல் வழியாக யாழ் செல்லுவதற்கென,*
*வவுனியா அகதி முகாமிலிருந்து,*
*திருகோணமலை வந்த தமிழ் அகதிகள்,*
*ஒரு மாதத்திற்கும் மேலாகத் திருகோணமலையில்,*
*கப்பலுக்குக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.*
*திருகோணமலையில் உணவு, உறைவிட வசதிகள் இன்றி,*
*அகதிகள் அல்லற்பட்டனர்.*
*அரசாங்கம் நிவாரணமாக ஓர் ஆளுக்கு ஒரு நாளைக்கு,*
*மிகச்சிறிய தொகையான முப்பது ரூபா வழங்கி,*
*உதவி செய்வதாய்க் கண்துடைப்புச் செய்தது.*
*இடையில் அகதிகளை ஏற்றவந்த கப்பல்,*
*ஓட்டை எனச் சொல்லப்பட்டது.*
*எப்படியும் தாய்மண்ணை அடைந்து விடலாம்*
*எனப் புறப்பட்ட,*
*தமிழ் அகதிகள் இடைநடுவில் துன்புற்றனர்.*
*அங்ஙனம் கப்பலை எதிர் பார்த்துக் காத்திருந்த*
*அகதிகளுக்கு,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(10.08.1997 - தினக்குரல்)

**வடபகுதி செல்ல, திருகோணமலையில்**
**கப்பலுக்காகக் காத்துநிற்கும்**
**தமிழ் அகதிகளுக்கு...**

*எனது அன்பு உடன்பிறப்புகளுக்கு,*
*வணக்கம்!*
*நலமுற அன்றாடம் பிரார்த்திக்கிறேன்.*
*எல்லையற்ற வேதனையோடு இருப்பீர்கள்.*
*துன்பமோ, இன்பமோ,*
*நம் சொந்த மண்ணில் வாழ்வோம் எனப் புறப்பட்ட நீங்கள்,*
*இன்று ''திரிசங்கு சொர்க்க'' நிலையில்.*
*ஞாயிறு இக்கடிதம் கிடைக்கும் போதும்,*
*பெரும்பாலும்,*
*நீங்கள் கப்பலேறியிருக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன்.*
*உங்களைப்பற்றி யாருக்கும் கவலையில்லை.*
*உங்களைப்பற்றியென்ன?*
*தமிழரைப்பற்றி என்று சொன்னாற்கூடப் பொருத்தம் தானே.*
*'பிள்ளையார் கல்யாணம் போல'*
*''இந்த ஆண்டு முடிவுக்குள் பிரச்சனை தீர்க்கப்படும்'' என்று,*
*மூன்று வருடங்களாய்ச் சொல்லிவருகிறது சந்திரிகா அரசு.*
*அவர்கள் சொல்லும் இந்த ஆண்டு,*
*எந்த ஆண்டு என்பது,*
*அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்.*
*எதிர்க்கட்சியோ,*
*தொடர்ந்தும் ''எதிரிக்கட்சியாகவே'' செயற்படுகின்றது.*
*''எனக்கு மூக்குப்போனாலும்*
*எதிரிக்குச் சகுனப் பிழையானால் சரி''*

என்ற மனநிலையிலேயே தொடர்ந்தும் அவர்கள்.
அரசின் மூன்றாண்டு ஆட்சி நிறைவையொட்டி,
கொடுத்த வாக்குகள் காப்பாற்றப்படாமையை நினைவூட்டி,
கிளர்ச்சி செய்யப் போகிறார்களாம் எதிர்க்கட்சியினர்.
பதினேழு ஆண்டுகளாக,
இவர்கள் ஆட்சியில் நாடு பாதாளத்தில் வீழ்ந்ததை,
மறந்துவிட்டார்கள் போலும்.
அப்போது இவர்கள் பொறுப்புணர்ச்சியெல்லாம்
எங்கு போயிற்றோ?
ஆளும்கட்சி, எதிர்க்கட்சி இரண்டுக்குமே,
சுயநலம்தான் பொதுக்கொள்கை.
தம் இனம்சார்ந்த இளைஞர்களின் உயிர்களையே,
பணயம் வைத்து அரசியல் சூதாட்டம் நடத்தும்,
இப்பெரிய மனிதர்களுக்கு,
உங்களைப்பற்றிச் சிந்திக்க ஏது நேரம்?
தமிழ்த்தலைவர்கள் என்று
தம்மைத்தாமே சொல்லிக் கொள்பவர்கள்,
பாவம் அரசினை ஆதரிக்கும் உரிமையுடன் மட்டுமே.
''விதியே விதியே தமிழச்சாதியை
என் செயக்கருதியிருக்கிறாயடா?'' எனும் பாரதி வரிகள்,
நெஞ்சில் விஸ்வரூபம் எடுக்கின்றன.
விளையாட்டுப் போட்டிகள், தமிழ்த்தின விழா என,
வடக்கிலிருந்து அழைக்கப்பட்டு வந்த மாணவர்களும்,
பரீட்சை எடுக்க வேண்டிய நிலையில்,
பயணம் செய்ய முடியாமற் பரிதவித்தபடி உங்களோடு.
அவர்களுக்கு யார் பொறுப்பு? என்று,
அழைத்துவந்த கல்வியதிகாரிகளிடையே குடுமிச்சண்டை.

பாவம்! தம் ''மேற்தெய்வங்களுக்கு'',
பாசத்தோடு ''பந்தம்'' பிடிக்கவே,
அவர்களுக்கு நேரம் சரியாகவிருக்கும்.
ஆளுமைகாட்டி புகழ்தேடும் ஒரு சில உயர் அதிகாரிகளும்,
பேரினத்தாருக்குக்
கால்வருடும் கடமையில் மட்டுமே திறமைசாலிகளாய்.
''எட்டப்ப ஆளுமை'',
இது எம்மினத்தின் சாபம்.
அழுது நிற்கும் உங்களை நினைக்க,
என் நெஞ்சம் கொதிக்கிறது.
கடந்த இரு வருடங்களாக நடைபெறும் போரினால்,
பலதரம் இடம் பெயர்ந்து,
உண்பதற்கும் உடுப்பதற்கும்கூட வழியற்று,
துன்பப்பட்ட நீங்கள்,
நிம்மதி நோக்கிய பயணம் தொடங்கி,
மீண்டும் இடை வழியில் இடர்ப்படுகிறீர்கள்.
''பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும்'' என,
நம் மூதாதையர்கள் தெரியாமலா சொன்னார்கள்?
தரைப்பாதை திறக்கப் போய்,
கடற்பாதையும் தடைப்பட்டு விட்டது.
''உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன்''
என்ற கதைதான்.
உங்களை ஏற்ற என அனுப்பிய கப்பலும், ஓட்டையாம்.
திருகோணமலை வந்தபின்தான் அதுவும் தெரியவந்ததாம்.
ஏதோ, உங்களை ஏற்றமுன் கண்டு பிடித்தார்களே,
அந்தளவில் சந்தோஷப்படுங்கள்.
உங்கள்மேல் எந்தளவு அக்கறை என்பதற்குச் சான்றாய்,

இந்த ஒரு விடயம் போதாதா?
முற்றாய் உங்களில் அக்கறை இல்லை என்று,
சொல்லவும் முடியாது.
நாளுக்கு முப்பது ரூபா,
உங்களுக்குப் பிச்சையிட முடிவு செய்திருக்கிறார்களே.
உங்களின் பெயர்களைச் சொல்லி,
உலகம் முழுவதும் வாங்கிய பிச்சையில் ஒரு பகுதி,
உங்களுக்கும்.
என்னே கருணை!
முப்பது ரூபாயில் ஒரு மனிதன் வாழக்கூடிய,
இலங்கையின் பொருளாதார நிறைவு கண்டு,
உலகமே பெருமைப்படட்டும்.
தங்குவதற்கும் உண்பதற்குமாய்,
மிகுதிப்பணத்துக்கு,
மற்றவர்கள் கால் பிடித்துப் படும்பாடு,
உங்களைப் பொறுத்தது.
ஏனென்றால் நீங்கள் தமிழர்கள்.
காதலியை விட்டுப்பிரிந்து செல்ல நினைத்த,
ஒரு தலைவனைப் பார்த்து,
காக்க வேண்டிய நீயே இவளை வருத்துவது,
நாட்டை ஆள்பவர்களே தம் மக்களை வருத்துவதற்கு
ஒப்பாகும் என,
("ஆள்பவர் கலக்குற அலைவுற்ற நாடு போல்")
தோழி பேசுவதாய் கலித்தொகையில் ஒரு பாடல் உண்டு.
அந்நிலையில்தான் இன்று தமிழர்கள்....
நம் தமிழினம் செய்த பாவம் என்னவென்று தெரியவில்லை.
மற்றொரு தமிழரசனாகிய பாரியை வீழ்த்த மட்டுமே,

மூவேந்தர்களும் ஒன்று சேர்ந்தார்களாம்.
வரலாறு கூறுகின்றது.
இன்றும் அதுதான் நிலை.
உங்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதை விட,
நான் வேறென்ன செய்ய முடியும்?
அள்ளிக் கொடுத்து வாழ்ந்த தமிழன்,
இன்று பிறரிடம் கையேந்தி நிற்கும் சூழ்நிலை.
பாரம்பரியமான தமிழர்தம் மானம்,
அன்றாடம் கப்பலேறும் இன்றைய நிலையில்,
நீங்கள் கப்பலேறினால் என்ன?
ஏறாவிட்டால் என்ன?
உதயத்திற்காகக் காத்திருப்போம்.
"இடுக்கண் வருங்கால் நகுக"

இங்ஙனம்,
பண்டிதன்.



# 5

# சுதந்திரப் பொன்விழாக் காணும் பாரதத்தாய்

*தன் வீர மைந்தர்களால்*
*அடிமை விலங்கொடிக்கப்பட்டு,*
*வெள்ளையர்களிடமிருந்து,*
*50 ஆண்டுகளின் முன் விடுதலை பெற்றவள் இவள்.*

*1997ஆம் ஆண்டான இவ்வாண்டில்,*
*சுதந்திரப் பொன்விழாக் காண்கிறாள்.*
*பாரதம் முழுவதும் எழுச்சியுடன்,*
*இவளின் சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்கள்.*
*மகிழ்ந்து நிற்கும் பாரத அன்னைக்கு வாழ்த்துரைத்தும்,*
*வாடும் சேய்நாட்டின் வருத்தம் உரைத்தும்,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(17.08.1997 - தினக்குரல்)

## சுதந்திரப் பொன்விழாக் காணும் பாரதத்தாய்க்கு....

போற்றுதற்குரிய பாரத மாதாவிற்கு!
வணக்கம்.
நலமுறுக.
சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்களால் பூரிப்பாய்.
உன் மைந்தர்களும் குதூகலிக்கிறார்கள்.
உன் பெருமையை நினைத்துப் பார்க்கிறேன்.
பாரதப் பண்பாட்டின் காரணமாக,
வந்தவர்களை வாரி அணைத்த நீ,
பின் அவர்களாலேயே கைப்பற்றப்பட்டு அடிமையானாய்.
உனது ஏழ்மையையும், எளிமையையும்,
பலயீனங்களாகக் கணித்து,
உன்னை வெகுசுலபமாய் அடிமைப்படுத்தலாம் என,
எண்ணியிருந்த ஆங்கிலேயர்கள்,
பின் உன் புதல்வர்களின் ஆவேசம் கண்டு அதிர்ந்தது வரலாறு.
தங்களது ஆயுதங்களினதும், செல்வத்தினதும் முன்னால்,
உன் புதல்வர்கள் "சுருண்டு" போவார்கள் என்று எண்ணிய,
ஆங்கிலேய மனக்கோட்டை சரிந்தது.
ஒருவரா இருவரா!
புற்றீசல்கள்போல, பொல பொல எனப் புறப்பட்ட,
சுதந்திரப்போராட்ட வீரர்களின் தொகை கண்டு,
உலகமே திகைத்தது.
ஆங்கிலேயரின் கொலை வெறிக்கு அஞ்சாமல்,
உன் விடுதலைக்காக உன் புதல்வர்கள் செய்த,
வீர சாகசங்களும், உயிர்த்தியாகங்களும்,

*வரலாறாய் உலகெங்கும் பேசப்பட்டன.*
*பாரதத்தாயே!*
*நீ சாதாரணமானவளா?*
*எத்தனையோ தத்துவங்களை உலகிற்குத் தந்தவள் நீ.*
*நாயன்மார்கள், ஆழ்வார்கள் என்றும்,*
*ஆதிசங்கரர், புத்தர், ராமகிருஷ்ணபரமஹம்சர், ரமணர் என்றும்,*
*உன் வயிற்றுதித்த அருளாளர் தொகை எண்ணிலடங்கா.*
*அது தவிர,*
*வள்ளுவன், கம்பன், இளங்கோ, பாரதி, தாகூர் என,*
*ஆயிரக்கணக்கான புலவர்களையும் பெற்றவள் நீ.*
*கலைஞர்கள், அறிஞர்கள், உழைப்பாளிகள் என,*
*புதல்வரர்களால் பொலிந்தவள் நீ.*
*இத்தகு பாக்கியம்,*
*வேறு எந்தத்தேசத் தாய்க்கும் கிடைத்ததில்லை.*
*பாரம்பரியமான உன் வளர்ப்பினால்,*
*பக்குவப்பட்ட உன் மைந்தர்களின் பணிவை,*
*பலவீனமாகக்கருதி அடிமை கொண்டனர் ஆங்கிலேயர்.*
*அவ்வடிமை விலங்கொடிக்கவும்,*
*தக்கதொரு புதல்வனைத் தரணிக்குத் தந்தாய் நீ.*
*உலக விடுதலைப்போராட்ட வரலாற்றிலேயே,*
*பெரும் புதுமை செய்தான் உன் மைந்தன் மோகனதாஸ் காந்தி.*
*வேதந் தந்த விழுமிய பெருமை கொண்ட உனது,*
*அடிமை விலங்கொடிக்க அகிம்சையே ஆயுதம் என,*
*அவன் புறப்பட்டபோது,*
*"பிரித்தானியரின் பீரங்கிகளுக்கு முன் அகிம்சை ஆயுதமா?" என,*
*உலகமே நகைத்தது.*
*ஆனால் உன் மைந்தன் காந்தியோ,*

கத்தியின்றி ரத்தமின்றி
ஆங்கிலேயருக்கு எதிரான யுத்தம் ஒன்றை,
முதல் முதல் உலகுக்குச் செய்து காட்டினான்.
ஞானபூமியான பாரதமண்ணிற்கு,
ஆத்ம பலமே ஆயுதம் என நிரூபித்தான்.
கோவணத்துடன் புறப்பட்ட அப்புனிதப் புதல்வனின் பின்னால்,
இலட்ச இலட்சமாய்ப் பாரத மக்கள் திரள,
சுதந்திரப்போராட்டம் ஒரு வேள்வியாயிற்று.
அவ்வேள்வியில் ஆகுதியாய் வீழ்ந்தோர் அமரர் உலகெய்தினர்.
உலகம் காணப் புதுமை நிகழ்ந்தது.
அடி வாங்கியவன் சிரிக்க அடித்தவன் நொந்தான்.
நெருப்பை மடியில் கட்டிக் கொண்ட உண்மையை
பிரித்தானியர், தாமதமாய் உணர்ந்தனர்.
காந்திமகானின் புனிதப்போராட்டத்திற்கு அடிபணிந்தனர்.
1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி,
நள்ளிரவில் நீ விடுதலை பெற்றாய்.
எதிரிகளும் தலைவணங்கும் வண்ணம்,
உன் புகழ் பொலிந்தது.
உன் மகன் காந்தி,
மகான் காந்தி ஆனான்.
உலகமே அவனைத் தலைவணங்கி ஏற்றுக் கொண்டது.
நீ புகழ் கொண்டாய்.
யார் கண்பட்டதோ தெரியவில்லை,
சுதந்திரத்தின்பின் உன்மைந்தர்கள் மாறிப்போனார்கள்.
மாற்றானிடமிருந்து உன்னை விடுவிக்க,
ஒன்றுபட்ட உன் மைந்தர்கள்,
சுதந்திரம் கிடைத்ததும் துரதிஷ்டவசமாய்,

தம்முள் விலகிப் போனார்கள்.
ஜாதி என்றும் மதம் என்றும் பேதம் கண்டு,
தம்முள்ளே தாம் சண்டையிடத் தலைப்பட்டார்கள்.
உன் புனித மைந்தன் காந்தி,
உன் வயிற்றில் தோன்றிய ஒரு புல்லுருவியாலேயே
சுடப்பட்டு மாண்டான்.
''நாம் இத்தனை ஆண்டுகளாகப் பாதுகாத்த காந்தியை,
இந்தியர்களால் ஓர் ஆண்டுகூடப் பாதுகாக்க முடியவில்லை''
என்று,
அச்செய்தி கேட்ட ஆங்கிலேயன் ஒருவன் சொன்னானாம்.
தக்கோர் தலை குனிந்தனர்.
பாவம் நீ கதறியழுதிருப்பாய்.
அன்று சுடப்பட்டது காந்தி மாத்திரமல்ல.
உன் மடியில் தோன்றிய,
மனிதப்பண்பு, நாகரிகம், தியாகம், பொதுநலம் அத்தனையுமே.
உன் சுதந்திரத்தைப் பேணுவதற்காக,
அரசியல் பொறுப்பேற்ற உன் புதல்வர்கள்,
கடந்த 50 ஆண்டுகளில் சுயநலத்தின் உச்சம் தொட்டார்கள்.
ஆன்றோர் பலர் கண்ணீர்விட்டு வளர்த்த சுதந்திரப் பயிரையும்,
தம் சுயநலத்திற்காய் உன் கண் முன்னேயே கருகச் செய்தனர்.
இன்று,
பொய்யும் களவும் ஊழலுமே அரசியல் என்று,
உன் மைந்தர்களினால் உருவாக்கப்பட்டிருக்கும்
அரசியல் நிலைகண்டு,
நீ மனம் நொந்து போயிருப்பாய்.
மாநிலம் என்றும், கட்சி என்றும்,
அரசியல்வாதிகள் அடிக்கும் கூத்துக்களில்,

''பாரதம்'' எனும் பொதுமை தொலைந்து போகும்
அவலம் கண்டு,
உன் உள்ளம் கொதித்துப்போய் இருக்கும்.
தாயே!
இலட்சக்கணக்கான தியாகிகள்,
தம் உயிர் கொடுத்து வாங்கிய சுதந்திரத்தை,
நல்ல விலை கிடைத்தால்,
விற்றுவிடும் நிலையில் இன்று உன் (அரசியல்) மைந்தர்கள்.
உன்னை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த,
நேரு, சாஸ்திரி, இந்திராகாந்தி போன்ற தலைவர்கள்,
இன்று உன் மண்ணில் இல்லை.
இத்துன்பங்கள் எல்லாம் உனக்கு மட்டும் இல்லை.
தாயே!
உன் சேயாகிய எம் இலங்கை அன்னைக்கும்தான்.
உன் மைந்தர்களின் விடுதலைப் போராட்டத்தால்,
''இலவச இணைப்பாய்'' கிடைத்ததே,
நம் இலங்கை அன்னையின் விடுதலை.
பாடுபட்டுப்பெற்ற சுதந்திரமே பாழாகும் போது,
இலவசமாய்க் கிடைத்த நம் இலங்கையின் சுதந்திரம்,
என்னாகும் என்று சொல்லவும் வேண்டுமா?
தாயே!
உன் ஈழ மகள் மடியில் இன்று இரத்த வெள்ளம் ஓடுகிறது.
'நிறுத்து' என்று சொல்லும் உரிமையுள்ள,
உன் மைந்தர்கள்,
பொறுப்பற்றவர்களாய் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர்.
கதறி அழும் சேய்நாட்டுக் குழந்தையின் ஓலம்,
உன் காதில் விழுந்தபடியிருக்கும்.

''சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்,
சிந்தை இரங்காது'' நிற்கும் உன் சிறார்களின் நிலை கண்டு,
உன் நெஞ்சம் கொதிக்கும் என்பது நிச்சயம்.
நீ வாடிவதங்குவாய்.
அருகில் தன் சேயின் மரண ஓலம் கேட்க,
தாய்க்கு மகிழ்ச்சிக் கொண்டாட்டமா?
பொன்விழாக் கொண்டாட்டங்களால்,
நீ மகிழப்போவதில்லை என்பது நிச்சயம்.
எனினும்,
வேதனையோடு இப் பேரன் வாழ்த்துரைக்கிறான்.
இப்பொன்விழா மகிழ்ச்சியில்,
உன் மடியில் தோன்றிய மா கவிஞனின் கேள்வியை,
உன் அடியில் சமர்ப்பிக்கிறேன்.
''தஞ்சமடைந்தபின் கைவிடலாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப்போமோ?
என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்?''
பதிலுரைப்பாயா?

அன்புடன்,
பண்டிதன்.



# 6

## இடம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தம்பி

*ஈழத்தமிழர் பிரச்சினையால்,*
*யாழ்ப்பாணம் போர்க்களமாக மாற,*
*உயிர்க்குப் பயந்து,*
*உயர்வு தேடி,*
*பல தமிழ்க் குடும்பங்கள் கொழும்பு வந்தன.*

*பல ஆண்டுகளாகப்*
*புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்தை,*
*புதிதாய் ஆட்சிக்கு வந்த,*
*சந்திரிகா அரசின் இராணுவம் கைப்பற்ற,*
*1995இல் அனைத்துத் தமிழர்களும்,*
*யாழ்ப்பாணம் விட்டு வெளியேற வேண்டிய*
*கட்டாயம் ஏற்பட்டது.*
*அங்ஙனமாய்க் கொழும்பு வந்த,*
*சில யாழ்ப்பாணத் தம்பியர்,*
*தம் நிலை மறந்து,*
*பாரம்பரியம் மிக்க தம் பண்பாடிழந்து,*
*மேலைத்தேய மோகத்தால் நெறிபிறழ்ந்து,*
*தறிகெட்டு நடக்க முயன்றது கண்டு,*
*மனம் நொந்து,*
*பழம் பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(24.08.1997 - தினக்குரல்)

## இடம் பெயர்ந்து கொழும்பு வந்த யாழ்ப்பாணத் தம்பிக்கு...

*என் அன்புக்குரிய தம்பிக்கு,*
*வணக்கம்!*
*நலமுறுக.*
*"பண்டிதர் ஐயாவிடமிருந்து எனக்குக் கடிதமா?" என*
*ஆச்சரியப்படுவாய்.*
*உன் நலம் கருதியே இக்கடிதம் வரைகின்றேன்.*
*அதிர்ஷ்டம் இல்லாப் பிள்ளை நீ!*
*உன்னை நினைக்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.*
*1983இன் பின்,*
*உலகத் தொடர்புகளற்று,*
*மின்சாரவசதி போன்ற அடிப்படை வசதிகள்கூட இல்லாத,*
*யாழ்ப்பாணத்தில்,*
*மகிழ்ச்சி மிக்கதாய் இருந்திருக்க வேண்டிய,*
*உன் பாலப் பருவம்,*
*வீணாய்க் கழிந்தது.*
*கோயில், திருவிழா, கொண்டாட்டம்,*
*கருணை, அன்பு, உறவு என*
*ஒரு காலத்தில் குதூகலித்திருந்த,*
*நாங்கள் பார்த்த யாழ்ப்பாணத்தை,*
*பாவம் நீ அறியமாட்டாய்!*
*பொங்கல், தீபாவளி என,*
*பட்டாசு கொளுத்திப் பரவசப்பட்டவர்கள் நாங்கள்.*
*பாவம் நீ*
*விளையாட்டு வெடிச் சத்தங்களைக் கேட்டதே இல்லை.*

*உயிர் பறிக்கும்*
*துப்பாக்கிக் குண்டுச் சத்தங்களுக்கிடையே வளர்ந்தாய்.*
*மாமன், மச்சான், அயலவர்கள் என,*
*உறவு சூழ வாழ்ந்தோம் நாம்.*
*இனப்பிரச்சினையில் உயிர் தப்புவதற்காய்,*
*உறவெல்லாம் ஒவ்வொன்றாய்ப் பிறநாடுகளுக்கு ஓடிவிட,*
*கடிதங்களில் மட்டும் உறவு கண்டு,*
*அநாதையாய் வளர்ந்தவன் நீ!*
*இரவைப் பகலாக்கும் கோலாகலத் திருவிழாக்களில்,*
*நாதஸ்வரம், சின்னமேளம், வில்லுப்பாட்டு என,*
*குதூகலித்துக் கொண்டாடி மகிழ்ந்தோம் நாம்.*
*பாவம் படிப்பதற்குக்கூட,*
*குப்பி விளக்கைத் தேட வேண்டிய நிலையில்,*
*உன் வாழ்வு.*
*விஞ்ஞான வளர்ச்சியால் விரிந்த உலகை,*
*நம் அருகில் அழைத்துவரும்,*
*தொலைக்காட்சி, தொலைபேசி, சினிமா, சஞ்சிகைகள்*
*போன்றவைகூட,*
*உன் பார்வைக்கு வராமற் போயின.*
*அதனால் யாழ்ப்பாணமே உலகமென,*
*கிணற்றுத் தவளையாய்,*
*உன் பாலப்பருவத்தைக் கழித்துவிட்டாய்.*
*அன்றாடம்,*
*துப்பாக்கிவேட்டு, விமானக் குண்டுவீச்சு,*
*எறிகணைத் தாக்குதல்கள் என்று,*
*மரண விளிம்பிலேயே உன் வாழ்வு நடந்தது.*
*''நேற்றிருந்தவன் இன்றில்லை'' என,*

அனர்த்தங்களால் அன்றாடம் உறவுகள் அழிய,
'நிலையாமையே' உன் வாழ்வின் நிலையாய்ப் போனது.
மரணமும், அவலச் சத்தங்களும், கொடுங்காட்சிகளுமே....,
உன் அன்றாடப் புதினங்களாயின.
பாவம்! உன் இளமை இங்ஙனம் வீணே கழிந்தது.
அதனாற்தானோ என்னவோ?....,
யாழ்ப்பாணத்தின் பெருமைகளை நீ விளங்கத் தவறிவிட்டாய்.
தம்பி! உனக்கொன்று தெரியுமா?
இலங்கை முழுவதும்,
''அறிவாளி என்றால் யாழ்ப்பாணத்தவன் தான்'',
என்ற அபிப்பிராயம் இன்றும் இருக்கிறது.
கல்வி, பண்பாடு, ஒழுக்கம், கட்டுப்பாடு, குடும்ப ஒற்றுமை,
இவை எல்லாம்,
யாழ்ப்பாணத்தவனின் பாரம்பரியச் சொத்துக்கள்.
அதனாற்தான்,
நம் நாட்டு அரசாங்கமே நம் மீது படையெடுத்தும்,
அயல்நாட்டு இராணுவம் புகுந்து ஆட்டிப்படைத்தும்,
நம் வாழ்வை யாராலும் அசைக்க முடியவில்லை.
ஊர் எல்லைகள் அடைக்கப்பட்ட நிலையில்,
பதினான்கு ஆண்டுகள் போரைத்தாங்கி,
தம் விழுமியங்கள் குறையாமல் வாழ வேறுயாரால் முடியும்?
ஏன் நீகூட இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்தாலும்,
இன்றும் கல்வியிற் கொடிகட்டித்தானே பறக்கிறாய்.
இவையெல்லாம் நம் தனித்த வெற்றிகள் அல்ல.
யாழ்ப்பாணப் பாரம்பரியம் தந்த வெற்றிகள்.
இதையெல்லாம் நான் ஏன் நினைவு கூருகின்றேன்? என,
நீ நினைக்கலாம்.

காரணம் இருக்கிறது.
இரு வருடங்களுக்கு முன்,
நாட்டுச் சூழ்நிலையால்,
நம் தாய்மண் இழந்து,
வாழ்வு தேடி,
நீ கொழும்புக்கு வந்தாய்.
உன் பெற்றோர்கள்,
உன்னை எப்படியும் உயர்த்திவிட வேண்டும் என்ற உறுதியுடன்,
உன் கல்வியைப் பேணுதற்காய்,
யாழ்ப்பாணத்திலிருக்கும்,
மாளிகைபோன்ற தம்வீட்டு வசதிகளைத் துறந்து,
கொழும்பில், அநியாய வாடகையில்,
'எலிவளை' போன்ற வீடுகளுக்குள்,
தம்மை ஒடுக்கிக்கொண்டு,
எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில்
உனக்காக வாழத்துணிந்தனர்.
உன் சகோதர, சகோதரிகள்,
வெளிநாடுகளில் நாயாய்ப் பாடுபட்டு,
இராப்பகலாக உழைத்து அனுப்பும் பணமெல்லாம்,
உன் வளர்ச்சிக்காகக் கொழும்பில் வீணாய்ச் செலவழிந்தது.
ஆனால் நீயோ!,
இந்தத் தியாகங்களை உணர்ந்ததாகத் தெரியவில்லை.
ஆரம்பத்தில் ஆமிக்கும், பொலிசுக்கும் பயந்து,
அடையாள அட்டையுடன்,
அம்மாவின் முந்தானை பிடித்து நடந்த உனக்கு...
இன்று 'குளிர்விட்டுப் போய்விட்டது'.

கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்ந்ததாலோ என்னவோ?
வசதிகள் நிறைந்த கொழும்பு
உன் சமநிலையைத் தகர்த்துவிட்டது.
புதிய சொர்க்கம் கண்ட மகிழ்ச்சியில் இன்று நீ.
மது குடித்த மந்தியாய்த் துள்ளுகிறாய்.
உன் ஒழுக்கநிலையிற் தளர்ச்சி தெரிகிறது.
உன் தோற்றமே மாறிப் போய்விட்டது.
எங்களூர் 'வெள்ளடியன் சேவல்' போலவும்,
ஓலை வெட்டிய எம்மூர் 'வடலி' போலவும்,
ஒரு புதுவிதமான தலைவெட்டு!
ஒற்றைத் 'தோடுடைய செவியனாய்' உலாவுகிறாய்!
அழுக்கு 'டெனிம் ரவுசருடன்' நீ திரிவதைக்காண,
எரிச்சலாய் இருக்கிறது.
காரணமின்றி மேலைத்தேயக் 'காவாலிகள்' சிலர்,
நாகரிகம் என்ற பெயரில் ஆடும் கூத்தை,
பெருமையாகக் கருதி நீ பின்பற்ற முயலுகிறாய்.
கல்வியைப் போற்றிய நம் யாழ்ப்பாணம்,
பாடசாலைகளைக் கோவில்களாகவும்,
ஆசிரியர்களைக் கடவுளாகவும் தொழுததை,
நீ அறியாதவனல்லன்.
ஆனால் இன்று நீயோ,
கொழும்பின் 'கலப்புக் கலாசாரத்திற்குட்பட்டு',
கல்விக் கூடங்களில் 'குரூப்ஸ்' அமைப்பதும்,
கல்லூரிகளின் உள்ளே மட்டுமன்றி வெளியேயும்,
பகை வளர்ப்பதும், மோதிக்கொள்வதுமாய்,
பொழுது போக்குகிறாய்.
சில இடங்களில்  ஆசிரியர்களையே நீங்கள் மிரட்டுவதாயும்,

செய்திகள் காதில் விழுகின்றன.
அது மட்டுமா?,
கடற்கரையிலும், சினிமாக் கொட்டகைகளிலும்,
காதல் என்னும் பெயரில்,
மற்றவர்கள் அருகிருக்கும் உணர்வேயின்றி,
கொஞ்சிக்குலாவும்,
கொழும்பின் ‘வக்கிர வஸ்துக்களை’க் கண்டோ என்னவோ?
நீயும் உன் பெண் தோழியின்,
கழுத்திற் கைபோட்டும்,
கை பிடித்தும்,
பொது இடங்களில் திரியத் தலைப்படுகிறாய்.
தம்பி!,
உனக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன்.
யாழ்ப்பாணக் கோவில் திருவிழாக்களில்,
புதுமணத் தம்பதியினர்கூட,
ஆண், ஆண்கள் பக்கமாகவும்,
பெண், பெண்கள் பக்கமாகவும்,
பிரிந்துதான் உலாவருவர்.
கைகோர்த்தும் கட்டிப் பிடித்தும்,
உலாவரத் தெரியாமல் அவர்கள் அப்படி வந்ததில்லை.
திருமணமாகாத இளம் பிள்ளைகள் மனதில்,
தம் நடத்தை,
விகாரத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என்ற,
உயர்ந்த நோக்கம் அவர்களுக்கு.
அது யாழ்ப்பாணப் பாரம்பரியம் தந்த,
பண்பாட்டு விழுமம்.
இவையனைத்தையும் மறந்து,
இன்று உன்னை நீயே கேவலப்படுத்த நினைப்பது தகுமா?

நினைக்கவே வேதனையாக இருக்கிறது.
ஒன்றை நீ மறந்து விடாதே!
கொழும்பு உன் நிரந்திர வாழ்விடம் அல்ல.
சொந்த மண்ணிலேயே வாழவிடாதவர்கள்,
இங்கா உன்னை நிரந்தரமாக வாழவிடப் போகிறார்கள்?.
முன்பு நடந்த கலவரங்களும்,
கப்பலேறித் தமிழர்கள் தாய்மண் நோக்கி ஓடியதும்,
நீ அறியாத செய்திகளல்ல.
என்றோ நீ யாழ்ப்பாணம் போகத்தான் வேண்டும்.
அது நிச்சயம்!
அதுவே நித்தியமுமாம்.
மேற்சொன்ன,
சில்லறைத்தனமான 'கொழும்புச் சேட்டைகளை',
யாழ்ப்பாணம் ஒருகாலும் ஏற்றுக்கொள்ளாது.
யாழ்ப்பாணப் பாரம்பரியம்,
ஈவிரக்கமின்றி உன்னை ஒதுக்கி வைத்துவிடும்.
தனித்துப்போவாய்.
பின் கஷ்ரப்படுவாய் எனும் அக்கறையாற் சொல்கிறேன்.
உடனடியாக உன்னை மாற்றிக்கொண்டு,
நம் பாரம்பரியப் பெருமை பேணும் வகையில்,
நீ வாழத் தலைப்பட வேண்டும்.
இது இப்பழம் பண்டிதனின் ஆசை.
செய்வாயா?
செய்யத்தான் வேண்டும்!
வாழ்க, வளர்க!

இங்ஙனம்,
பண்டிதன்.



7

# இளவரசி டயானா

*இவர் பிரித்தானிய முடிக்குரிய இளவரசர் சாள்சின் மனைவியாவார்.*
*1981 யூலை 29 இல் உலகம் வியக்க,*
*இவர்களின் காதற் திருமணம் நடந்தது.*
*தன் அழகால் உலகைக் கவர்ந்த இவரால்,*
*தன் கணவனின் மனதைக் கவர முடியவில்லை.*

*இவர்கள் இல்லறம் பெரும் தோல்வியில் முடிந்தது.*
*கணவன் மனைவி இருவருக்கும்,*
*மாற்றாருடன் தொடர்பு இருப்பதாய்*
*வந்த செய்திகளால்,*
*உலகம் அடிக்கடி பரபரப்பானது.*
*தனிவாழ்க்கையில் அடைந்த தோல்வியை,*
*சமூகத் தொண்டால் ஈடுசெய்தவர் இளவரசி டயானா.*
*உலகம் முழுவதும் சென்று,*
*துன்பப்பட்டவர்களுக்காய்ப் பாடுபட்டு,*
*மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.*
*"ரொடி அல்பாயிட்" எனும் பெரும் கோடீஸ்வரரை,*
*இரண்டாம் திருமணம் செய்யப்போகிறார் என்ற செய்தி,*
*பரபரப்பாய்ப் பேசப்பட்ட வேளையில்,*
*31.08.97இல் பிரான்ஸ் விஜயம் செய்தபோது,*
*கார்விபத்தில் தன் காதலருடன் தனது 36ஆம் வயதில்,*
*அகாலமரணமானார்.*
*அம்மரணத்தால் உலகு அதிர்ந்தது.*
*அவர் மறைந்ததை ஒட்டி,*
*பழம்பண்டிதரால் வரையப்பட்ட கடிதம்.*

(07.09.1997 - தினக்குரல்)

## இளவரசி டயானாவுக்கு....

*மறைந்த இளவரசி டயானாவுக்கு,*
*வணக்கம்.*
*ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.*
*உனக்குத் தெரியுமா?.*
*உன்னால் இன்று முழு உலகமுமே,*
*ஸ்தம்பித்துக் கிடக்கிறது.*
*தங்களது நெருங்கிய உறவு இல்லாமற் போய்விட்டதாய்,*
*உலகின் ஒவ்வொரு குடும்பமும் உணர்கின்றன.*
*எல்லா இதயங்களும் அழுகின்றன.*
*பத்திரிகையில் அதிகளவு படங்களிற் பிரசுரமானவர் என்கின்ற,*
*உன் ''கின்னஸ்'' சாதனையை விட,*
*இது பெரிய சாதனை.*
*மிகப்பெரிய சாதனை.*
*யுத்தக் கெடுபிடிகளைத் தாண்டி,*
*மின்சாரமும், தொலைக்காட்சியும்கூட உள் நுழைய முடியாத,*
*யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் மனங்களிற்கூட,*
*உன்னால் நுழைய முடிந்ததென்றால்,*
*உன் புகழ் வியாபகத்திற்கு*
*இதைவிட வேறு சான்று வேண்டுமா?*
*நம்மூர்த் தமிழ்ப் பரீட்சை ஒன்றில்,*
*''ஒத்த சொற்களைத்தருக'' என்ற வினாவுக்கு,*
*''அழகு'' எனும் சொல்லுக்கருகே,*
*''டயானா'' என்று ஒரு மாணவன் எழுதியிருந்தானாம்.*
*அப்படிப்பட்ட உன் அழகை,*
*வியப்போடு பார்த்து இரசிக்காத கண்கள்,*

உலகில் விலங்குகளுக்கு மட்டுமே இருக்க முடியும்.
அவ் அற்புத அழகு,
பிரித்தானிய இளவரசரையும் கவர்ந்ததில் வியப்பில்லை.
அவர் உன்னைக் கண்டதும்,
காதல் கொண்டதும்,
பின் திருமணம் செய்ததும்,
இப்பண்டிதனைப் பரவசப்படுத்திய செய்திகள்.
ஒரு கிராமத்துக் கிளி பறந்து சென்று,
நகரத்தில்,
அதுவும் அரச மாளிகையில்,
உட்காரப்போவதை அறிந்து உவகையடைந்த உள்ளங்களில்,
என்னுடையதும் ஒன்று.
ஆனால் அப்போது,
நீ தங்கக்கூட்டுக்குள்ளே
தடுத்துவைக்கப்படப் போகிறாய் என்ற உண்மை,
யாருக்கும் தெரியவில்லை.
நீயோ அதையும் மீறி வெளியே வந்தாய்.
சாதாரண மக்களை நோக்கிக் கைகளை நீட்டினாய்.
ஏழைகளோடு உறவாடினாய்.
உனது அவ் உண்மை அன்பை,
போலிவேசத்துடன் பொய்ப்பெருமை பேசி
உயர் நிலையிலேயிருந்த,
அரசவர்க்கத்தினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.
அது மட்டுமா?,
இச் செயல்களால் விரிந்த,
உன் புகழ்வெளிச்சத்தைத் தாங்க முடியாமல்,
அவர்களின் அகங்காரக் கண்கள் கூசிப் போயின.

*எங்கள் நாட்டில்,*
*"தார்ப்" பாதைகளையும், புகையிரதப் பாதைகளையும்,*
*அமைத்துத் தந்தவர்கள்,*
*"பிரிட்டிஷ்" அரச வர்க்கத்தினர்தான்.*
*அப்படியான அரச வர்க்கத்தில் வந்த,*
*உன் கணவருக்கோ!*
*வாழ்க்கைப் பாதையைக்கூட,*
*வளமாக அமைக்கத்தெரியவில்லை.*
*அதனால் அல்லற்பட்டதெல்லாம் பேதை நீ தான்.*
*உன் அல்லல் கண்ட ஆத்திரத்தில்,*
*அவர்களுக்கான கடமைப்பாட்டையெல்லாம்*
*ஒருபுறம் ஒதுக்கிவிட்டு,*
*நம் நாட்டவரும் உன்னை நேசித்தனர்.*
*இப்படியேதான் எல்லா நாட்டவர்களும்.*
*உனக்கு உலகம் தந்த மதிப்பு,*
*உன் புகுந்த வீட்டார்க்கு மகிழ்ச்சி தரவில்லை.*
*அதனால் உன்னை நாவினால் சுட்டு,*
*வடுச்செய்து வக்கிரம் தீர்த்தனர்.*
*உன் கணவரோ,*
*தன் பழைய காதலியின்,*
*தொடர்பைத் துண்டிக்க முடியாத நிலையில்.*
*இவற்றோடு போராடி,*
*வயிற்றில் கருவோடு மாடியிலிருந்து உருண்டு மயங்கினாய்.*
*என் செய்ய?*
*திருமணம் செய்தும்,*
*"தாவிப் படரக் கொழுகொம்பில்லாத*
*தனிக்கொடியாய் உன் வாழ்வு".*

அதனால்,
அயல் மரத்தைத் தேட வேண்டிய அபாக்கியம் உனக்கு.
அந்த அயல் மரங்களும் உன் அன்புணராமல்,
உன் செயலைச் செய்தியாக்கிக் கீழ்மை செய்தன.
அழகிய பூங்கொடியே!
விவாகரத்தின் பின்னரேனும்,
நிம்மதி தரக்கூடிய மரமொன்றில் நீ படருவாய் என
எதிர்பார்த்தேன்.
அங்கும் முரண்பாடு.
நீ படரும் மரங்கள் பலவாய்ப் பேசப்பட்டன.
குதிரையேற்றப் பயிற்றுநர்,
பாகிஸ்தானிய வைத்தியர்,
கோடீஸ்வரனின் மகன் என,
அவ்வரிசை நீண்டது.
அவற்றை அறிதொறும், அறிதொறும்,
இப்பண்டிதன் அகம்நொந்தது உண்மை.
அப்போதெல்லாம்,
''காதலொருவனைக் கைப்பிடித்து,
அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து,
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்,
மாண்புறச் செய்து வாழ்வமடி'' என்ற,
பாரதியின் புதுமைப் பெண்ணை,
உனக்கு அறிமுகம் செய்ய,
இப் பண்டிதனின் நெஞ்சம் பரிதவிக்கும்.
போதிய ஆங்கில அறிவின்மையால்,
அது முடியாமற் போயிற்று.
இந்நிலையில்,

''டொடி அல்பாய்ட் நட்பு உண்மை மகிழ்ச்சி தருகிறது.
அவரையே மணம் செய்யப் போகின்றேன்.''
என்று அறிவித்தாய்.
உன் வாழ்க்கைப் புயல் ஓய்ந்தது என நினைந்தேன்.
அந்நினைப்பில் இடி வீழ,
நீ கனவானாய்.
பலதரம் தற்கொலைக்காய் முயற்சித்தும் தப்பிய உன்னை,
விருப்பமானவரோடு வாழச்சென்றபோது,
மரண தேவதை அழைத்துக் கொண்டாளாம்!
மகளே!
விதியைப் பார்த்தாயா?
புதிய காதற் புத்தகத்தை நீங்கள் எழுதத் தொடங்கியபோது,
வாழ்க்கைப் புத்தகத்தை அது மூடிவிட்டது.
சிதைந்த வாழ்வைச் செம்மைப்படுத்த விரும்பியவள் நீ!
பொது வாழ்வில் உயர்ந்து,
தனிவாழ்வுத் தடைகளைத் தாண்ட முயன்றாய்.
உன் வாழ்விலும் தவறுகளும்,
குற்றங்களும் இல்லாமலில்லை.
ஆனால், அவை உன் தூய பொது வாழ்வின் முன்,
ஒரு பொருட்டாய்த் தோன்றவில்லை.
ஆடம்பர உடைகளை விற்று,
அநாதைகளுக்குக் கொடுத்தாய்.
கண்ணிவெடிகளை அகற்றக் கடும் முயற்சி செய்தாய்.
புற்றுநோயாளிக்குப் புத்துயிர்ப்பூட்டினாய்.
மற்றவர்கள் அருகிற் செல்லவும்அஞ்சிய,
எயிட்ஸ் நோயாளிகளைத் தீண்டிய செயலின்போது.
நீ,

அவர்களது உடல்களை மட்டுமல்ல,
உலகத்தோரின் உள்ளங்களையுமல்லவா தொட்டுவிட்டாய்.
அதனாற்தான்,
''பிரித்தானிய இளவரசியாய்'' இருக்க முடியாவிட்டாலும்,
''மக்கள் இளவரசியாகவும்'',
''இதயங்களின் இளவரசியாகவும்'',
உன்னால் இருக்க முடிந்தது.
உன் தவறுகளையும் தாண்டி,
உலகம் உன்னை நேசித்தது.
தறிகெட்டுப் போய்க்கொண்டிருந்த உன் வாழ்க்கைத் தடம்,
நெறிபட்டு நேராகும் வேளையில்,
பாதை முடிந்த பரிதாபம் நேர்ந்திருக்கின்றது.
விதிக்குரங்கின் கைபட்டு வீணான வெள்ளை மலரே!,
உன் கதி நினைந்து கலங்குகின்றோம்.
தன் துன்பம் தாழாத வேளையிலும்,
உலகின் துன்பம் துடைக்க உயர்ந்த உன் கைககள்,
மக்கள் மனங்களில் மாறாது பதிந்திருக்கும்.
''பிரட்டிஷ்'' அரச வம்சம்,
தம் அரசியாய் உன்னை ஏற்க மறுக்க,
நீ, மக்கள் மனம் பதிந்து,
உலகின் அரசியாய் உன்னை உறுதி செய்து கொண்டாய்.
வெற்றியைக் கொண்டாடும் வேளையில்,
கனவாய் உன் வாழ்வு கரைந்து போயிற்று.
புயலில் அகப்பட்ட பூவாய்,
உன் வாழ்வு முடிந்த வருத்தத்தில்,
கண்ணீரோடு உலகம்.
பனித்த கண்ணோடு இப்பண்டிதனும்.

*மகளே!!,*
*மறுபடி நீ பிறக்க வேண்டும்.*
*மகாராணியாய் அல்ல.*
*மனத்துக்கினிய கணவனின் மனராணியாய்.*
*அப்போது,*
*அன்பால் உன்னை முழ்கடித்து அணைத்துக்கொள்ளும்.*
*ஆண் மகன் ஒருவன் உன் அருகிருப்பான்.*
*துன்பத்தின்நிழல்தானும் உன்னைத் தீண்டாமல்,*
*அவன் துணை இருப்பான்.*
*அஞ்சாதே. ஆறுதல் அடைவாய்.*
*இது என் விருப்பும், வேண்டுதலுமாம்.*
*மலர்ந்தும், மலராத பாதி மலராய் மாண்டவளே!,*
*உலகப் பூவாக உதித்தவளே!,*
*உன்னை அமைதியாக வாழவைக்க முடியாத,*
*குற்ற உணர்ச்சியில்,*
*உலகத்தார் உள்ளமெலாம் ஒடுங்கிக் கிடக்கிறது.*
*அவ்வலி தீர மீண்டும் வருவாய்.*
*மலர்வாய்.*
*மலர்விப்பாய்.*
*மலர்கள் மலையாய்க் குவிந்து கிடக்கும்,*
*உன் சமாதியில்,*
*இப் பண்டிதனின் கண்ணீரப் பூக்களும் சமர்ப்பணம்.*

*இங்ஙனம்,*
*பண்டிதன்.*



8

# அன்னை தெரேசா அம்மையார்

*இவர் அல்பேனியாவில் பிறந்தவர்.*
*தனது பத்தொன்பதாம் வயதிற் கன்னியாஸ்திரியாகி,*
*1949ஆம் ஆண்டு இந்தியா வந்து,*
*அல்லலுற்ற மக்களுக்கு அருந்தொண்டாற்றியவர்.*

*தன் அரிய பணிக்காக*
*1979இல் நோபல் பரிசு பெற்றவர்.*
*இவர் தொண்டு உலகம் முழுவதும் பேசப்பட்டது.*
*உலகின் சமாதானச் சின்னமாய்த் திகழ்ந்த இவர்,*
*05.09.97இல்,*
*தனது 87ஆம் வயதில் இறையடி சேர்ந்தார்.*
*அவ்வன்னையின் மறைவை ஒட்டி,*
*பழம்பண்டிதரால் எழுதப்பட்ட பகிரங்கக் கடிதம்:*

(28.09.1997 - தினக்குரல்)

## அமரராகிவிட்ட அன்னை தெரேசாவுக்கு...

போற்றுதற்குரிய அன்னை தெரேசா அவர்கட்கு!
தெய்வமாகிவிட்ட தங்கள் திருவடிகளை,
பணிந்து வணங்குகிறேன்.
இந்த ஏழைப்பண்டிதனையும்,
என் தமிழ் இனத்தையும்,
எங்கிருந்தாலும் தாங்கள் வாழ்த்த வேண்டு[illegible]
பிரார்த்தித்து நிற்கிறேன்.
இப்பொழுதெல்லாம்,
ஞாயிற்றுக்கிழமை வருகிறதென்றால்,
இப்பண்டிதனின் கைகள் நடுங்கத் தொடங்குகின்றன.
என்னவோ தெரியவில்லை!,
கடந்த இரு வாரங்களாக நான் எழுதும் கடிதங்களுக்கு,
வேற்றுலக முகவரி இடவேண்டிய,
துர்ப்பாக்கிய நிலை!
முதலில் டயானாவுக்கு,
இப்பொழுது தங்களுக்கு.
''அழகிய மலரே! உன்னை ஆறுதல் செய்ய,
இவ் அன்னை சீக்கிரம் வருவாள்'' என,
டயானாவுக்குத் தாங்கள் வழங்கிய அஞ்சலிச் செய்தியை,
நடைமுறைப்படுத்துவதில் இவ்வளவு அவசரமா?.
மனதிலிருந்து பிறந்த தங்கள் நிறை மொழிகள்,
மந்திரமாய்ச் செயற்பட்டதில் மாயமொன்றும் இல்லைத்தான்!
அடுத்தடுத்து வந்த இரு மாபெரும் இழப்புகளால்,
உலகமே அதிர்ந்து போயிருக்கின்றது.
அழகின் தோல்வியில் அன்பைக் கண்டவருக்கும்,

பொதுசன நூல

அன்பின் வெற்றியால் அழகாய் நின்றவருக்கும்,
அடுத்தடுத்து,
அஞ்சலி கலந்த அஞ்சல் அனுப்ப வேண்டிய,
அவல நிலையில் நான்.
சேக்கிழார் சொன்ன "வடிவுறு மூப்பினை",
அன்னையே!,
உங்கள் திருக்கோலத்திற்தான் நான் முதன் முதலில்
தரிசித்தேன்.
அம்மா!,
இருபதாம் நூற்றாண்டின்,
இணையற்ற இதயங்களை வரிசைப்படுத்தப் புகுந்தால்,
உங்கள் பெயரைச் சொல்லித்தான்,
முதல் விரலை மடிக்க வேண்டியிருக்கின்றது!
உங்கள் உள்ளம் உண்மையானது.
வாக்கு இனிமையானது.
செயல் தூய்மையானது.
சொந்த நாட்டில் இருந்த சுகங்கள் அனைத்தையும்,
துறந்து விட்டு,
நீங்கள் இந்தியா வந்ததும்,
ஏழைகளின் இதயம் புகுந்து,
அரும் பணிகள் ஆற்றியதும்,
மெல்ல மெல்ல வெளிப்பட,
தங்கள் தொண்டின் தூய்மை,
உலகத்தின் செவியில்,
ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது.
நோபல் பரிசு உங்களுக்காகி,
தன்னைப்பெருமைப் படுத்திக் கொண்டது!

*அதன் பின்பு,*
*ஒரு நாளைக்கு ஒரு தரமாவது,*
*உங்களைப்பற்றிப் பேசாமல்,*
*இந்த உலகம் உறங்கப் போனதில்லை.*
*சேவை என்ற பெயரில்,*
*நம் கீழைத்தேய நாடுகளுட் புகுந்த,*
*அனைத்துக் கிறிஸ்தவ அமைப்புக்களினதும்,*
*தொண்டின் ஊடுபொருளாக,*
*'மதமாற்றம்' என்னும்,*
*விஷக்கொடி படர்ந்து கிடந்ததால்,*
*அன்னையே!*
*உங்கள் வருகையும்,*
*ஆரம்பத்தில் ஐயத்துடனேயே நோக்கப்பட்டது.*
*நீங்கள் அவமதிக்கப்பட்டீர்கள்!,*
*ஏழைகளுக்காக நிதி தேடப்போன இடத்தில்,*
*உங்கள் மேல் காறித்துப்பிய செல்வந்தனிடம்,*
*''எனக்குரியதைத் தந்து விட்டாய்,*
*இனி ஏழைகளுக்குரியதைக் கொடு'' எனக் கேட்கும்,*
*துணிவும், கம்பீரமும், தெளிவும் இருந்ததால்,*
*நீங்கள் புதிய இயேசுவாகக் காட்சிகொடுக்கத் தொடங்கினீர்கள்.*
*மதத்தைப் பின்பற்றும் மக்கள்தொகையிலேயே,*
*கிறிஸ்தவத்தின் வெற்றி தங்கியிருப்பதாக,*
*மற்றவர்கள் நினைக்க,*
*மனங்களைக் கைப்பற்றும் அன்பு நிலையிலேயே,*
*அதன் வெற்றி இருப்பதாய்,*
*நீங்கள் நிறுவத் தலைப்பட்டீர்கள்.*
*மலைகளையும், கடல்களையும் தாண்டிவந்தும்,*

*மதம் என்னும் சிறிய வட்டத்தைத் தாண்ட முடியாத,*
*மற்றவர் மத்தியில்,*
*அவ்வட்டத்தை உடைத்து,*
*"கிறிஸ்தவம்" என்ற சொல்லுக்கு,*
*நீங்கள் புதிய பரிமாணத்தைக் கொடுத்தீர்கள்.*
*"உலகில் ஒரேயொரு கிறிஸ்தவர் இருந்தார்.*
*அவரையும் சிலுவையில் அறைந்து விட்டார்கள்."*
*என்று "பெர்னாட்ஷோ" சொல்லிவிட்ட பின்பு,*
*உலகமே ஓர் உண்மைக் கிறிஸ்தவரைக்காண,*
*ஏங்கிக் கொண்டிருந்தது.*
*அம்மா!,*
*இந்த நேரத்தில்தான் உங்கள் வரவு நிகழ்ந்தது.*
*"சமயவாதிகள் தத்தம் மதங்களே*
*அமைவதாக அரற்றி மலைக்க"*
*நீங்களோ!,*
*ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டீர்கள்.*
*கண்டு காட்டினீர்கள்.*
*அதன் பின்,*
*இந்த உலகம் உங்கள் வடிவில் இறைவனைக் கண்டது.*
*பேதமற்ற சேவை உங்கள் வேதமாயிற்று.*
*அதனால் அன்பெனும் உங்கள் "கிறிஸ்தவகங்கை",*
*சைவப்பாத்திகள் நோக்கியும் பாய்ந்தது.*
*வைணவ வயல்களையும் வளப்படுத்தியது.*
*இதைக்கண்ட பின்தான்,*
*இந்தியா உங்களைத் தனது மகள் என,*
*தலை நிமிர்த்திச் சொல்லத் தொடங்கியது.*
*நீங்கள் வந்த நாடு உங்கள் சொந்த நாடாயிற்று.*

*அன்னையே!*
*உங்கள் அன்புக்கரங்கள்,*
*அவலமுற்ற இந்தியாவிற்கு அவசியம் என்பதையும்,*
*இந்திய மண்ணின் ஞானக்காற்று,*
*உங்கள் ஆத்மாவிற்கு அவசியம் என்பதையும்,*
*நான் நன்றாக அறிந்து கொண்டேன்.*
*கொண்டும், கொடுத்தும்,*
*இந்திய மண்ணும், நீங்களும் ஒன்றாகினீர்கள்.*
*இந்த நெருக்கத்தினால்,*
*இந்தியா மீண்டும் ஒரு முறை,*
*நோபல் பரிசினைப் பெற்றுக் கொண்டது.*
*அதன் பின் உங்களை நோக்கி விருதுகள் குவிந்தன.*
*அவ்விருதுகள் எவையும்,*
*ஆணவப்படுத்தி உங்களை விழவைக்கவில்லை.*
*மென்மேலும் எழ வைத்தன -*
*கூடவே ஏழைகளையும்.*
*தாயே!,*
*நீங்கள் ஏழைகளின் துன்பச்சிலுவை சுமந்த,*
*ஒரு "பெண்இயேசு".*
*இன்று உங்கள் கருணைக் கண்களைக் காணாமல்,*
*உலகத்தின் கண்கள் கலங்கிக்கிடக்கின்றன.*
*நோயும், வறுமையும் மலிந்த, நலிந்தவர்களுக்காய்,*
*ஒளி கொடுத்து உருகிய மெழுகுவர்த்தியே!,*
*நீங்கள் சொர்க்க சுகத்திற்காய்,*
*சும்மா இருக்க மாட்டீர்கள் என,*
*என் அறிவு சொல்கின்றது.*
*அடுத்த "அவதாரத்திற்கு" ஆயத்தமாகி இருப்பீர்கள்.*

அப்படியே ஆயின்,
விண்ணப்பால் இருக்கும் உங்கள் திருவடிக்கு,
ஒரு விண்ணப்பம்!
உங்கள் அவதாரத்திற்காய்,
ஏன் இவ் இலங்கைத் தீவை நீங்கள் தேர்ந்தெடுத்தலாகாது?
அது நிகழாதா? என ஏங்கி நிற்கிறேன்.
யானைபுக்க புலம்போல,
தேவையற்ற பலப்பரீட்சைகளாலே,
பாழாய்ப்போய்க் கிடக்கிறது எம் தேசம்.
தற்போது நான்கு பக்கம் கடலும்,
எட்டுப்பக்கம் கடனும் சூழ்ந்தநிலையில் அது.
இந்தக் குட்டித்தேசத்துள்,
எட்டிப் பார்த்த வறுமையும், கொடுமையும்,
நாட்டையே ஏப்பம்விடும் அளவிற்கு,
இப்போ வளர்ந்துவிட்டன.
பாரம்பரிய விழுமியங்கள் கொண்ட நம் தமிழினம்,
கேட்பாரின்றிக் கீழ்மைப்படுத்தப்படுகின்றது.
இன்றும் நாம் தமிழர்கள் என்ற பெயரோடு,
இங்குதான் வாழ்ந்து கொண்டிக்கிறோம்.
உலகில் ஏழு அதிசயங்கள் இருக்கின்றனவாம்.
எட்டாவது அதிசயமாய்.....,
இலங்கையில் தமிழர்கள் இன்னும் உயிரோடு வாழ்வதையும்,
எழுதிக்கொள்ளலாம்.
குண்டுவீச்சுக்கள், கைதுகள், கற்பழிப்புக்கள் எனும்,
துயர இருளுக்குள்ளேயே,
இன்று எங்கள் இருப்பு.
ஆதலால்,

எங்கிருந்தேனும் ஒளியின் ஆதரவு தேடி,
மாநிலம் அனைத்தையும் அளக்கின்ற கண்களோடு நாம்.
இத்தனை அழிவுகளின் பின்னும்,
நம் தேசத்தில்,
''தலைவர்கள்'' என்று சொல்லிக் கொள்பவர்களின் போக்கு,
அடுத்த நூற்றாண்டிலும்,
இத் தேசத்தின் அழிவுத்தொடர்ச்சியை,
கட்டியம் கூறுகின்றது.
அன்னையே!,
நலிவுற்றிருக்கும் நம் தமிழரைக் காக்க,
ஏன் தங்கள் ஆத்மா,
ஒரு ''தமிழ்ச்சட்டையை'' அணியக்கூடாது?
எப்போ வருவீர்கள்? என,
ஏங்குகிறது நெஞ்சம்.
''துயர இருள் நீக்கும் சூரியன்,
எங்கள் நாட்டில் உதித்துவிட்டது'' என்ற செய்தியை,
என் பேனா எழுதுவது எப்போது?
இக் கேள்வியே,
தற்போது என் நெஞ்சம் நிறைந்து கிடக்கிறது.
எங்கள் இதயப்பூக்களாற் பாதை அமைத்து,
காத்துக் கிடக்கிறோம்.
கருணைக்கடலே!,
கால்பதித்து எம் மண்ணில் வருக.
மகிழ்வு தருக.

இப்படிக்கு,
பண்டிதன்.



௭

## அமைச்சர் மங்களசமரவீர

*இவர் ஜனாதிபதி சந்திரிக்காவின் தலைமையில் அமைந்த,*
*பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில்,*
*தபால் தொலைத் தொடர்பு,*
*வெகுஜனத் தொடர்புசாதன அமைச்சராய்,*
*பதவி வகித்தவர்.*
*இனப்பிரச்சினைக்கு முடிவுகாண,*

*தீர்வுத் திட்டம் ஒன்றைக் கொண்டு வரும்,*
*இவ்வரசின் முயற்சியை மறைமுகமாய்த் தடுக்க,*
*சிங்களத் தீவிரவாதிகள்,*
*“சிங்கள கொமிசன்” ஒன்றை அமைத்து,*
*சிங்களவர்கள் இந்நாட்டில் துன்புறுத்தப்படுவதாய்,*
*அறிக்கை தயாரித்து அமைச்சரிடம் கொடுக்க,*
*ஆத்திரமுற்ற அமைச்சர்,*
*“அவ்வறிக்கையைக் குப்பைக்கூடையில் போடுவேன்” என*
*அறிவித்தார்.*
*அதனால் ஆத்திரமுற்ற சிங்களத் தீவிரவாதிகள்,*
*கொதித்தெழுந்தனர்.*
*அவர்கள் பின்னணியில் நின்ற பௌத்த மகாசங்கத் துறவிகளும்,*
*அமைச்சரைக் கடுமையாய்க் கண்டித்து,*
*அறிக்கை வெளியிட்டனர்.*
*மகா சங்கத்தினரின் எதிர்ப்புக் கண்டு,*
*அரசும், அமைச்சரும் சற்றுப் பின்வாங்க,*
*காலாகாலமாய் இந்நாட்டு அரசியலிற் தலையிட்டு,*
*பிரச்சினைகளை உருவாக்கும்,*
*பௌத்த துறவிகளின் செயலால் மனம் நொந்து,*
*பிரச்சினைக்கு ஆளான மங்கள சமரவீரவுக்கு,*
*பழம் பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(05.10.1997 - தினக்குரல்)

## இலங்கை அமைச்சர், மாண்புமிகு மங்களசமரவீர அவர்கட்கு...

கௌரவ அமைச்சர் மங்களசமரவீர அவர்கட்கு,
வணக்கம்.
நலம் வேண்டி ''வன்மையாய்ப்'' பிரார்த்திக்கிறேன்.
மிகச்சங்கடமான மன நிலையில் இருப்பீர்கள்.
முதலில்,
துணிந்து உண்மை பேசிய தங்களுக்கு,
என் மனப்பூர்வமான பாராட்டுக்கள்!
தங்களை நினைக்கும்போது,
''யதார்த்தவாதி வெகுசன விரோதி'',
எனும் பழமொழிதான் ஞாபகத்துக்கு வருகிறது.
உண்மையைப் பேசத்துணிந்ததால்,
தங்கள் பாடு சங்கடமாகி இருக்கிறது.
இந் நாட்டை நிர்வகிக்கும்,
அமைச்சர் அவையுள் அங்கம் வகிப்பதால்,
நாட்டின் பொருளாதாரம்
பாதாளம் நோக்கிப் போகும் கதி கண்டும்...,
அண்மைக்காலமாக,
''எப்படியும் தீர்வுத்திட்டம் நிறைவேற்றப்படும்'',
என உறுதிபடப் பேசும் ஜனாதிபதியின் உரை கண்டும்....,
''தமிழர்க்குப் பிரச்சினை உண்டு,
அதைத்தீர்க்க அனுமதி தாருங்கள்'',
எனும் கருத்தை முன்வைத்து,
தேர்தலில் தாங்கள் பெற்ற,
பெரு வெற்றியின் நிலை கண்டும்....,

*தீர்வுத்திட்டம் வரப்போவதும்,*
*அங்கீகரிக்கப்படப்போவதும்,*
*நடைமுறைப் படுத்தப்படப்போவதும்,*
*உண்மை என நம்பி,*
*அப்பாவித்தனமாக,*
*அரசியல் அனுபவமின்றிப் பேசி விட்டீர்கள்!*
*இந்த நாட்டின்,*
*''இறுதி அரசியல் முடிவுகள்''*
*யார் கையில் என்பது,*
*உங்களுக்குத் தெரியாமல் போனது ஆச்சரியமே!.*
*கிடைத்த அரசைத் துறந்து நிர்வாணம் எய்திய,*
*புத்தபிரானைப் பின் பற்றுவதாய்க் கூறும்,*
*''துறவிகள்'' (?) கையிலேயே,*
*இன்று நம் நாட்டின் அரசு.*
*இன்று என்பதுகூடத் தவறு.*
*''என்றும்'' அது அவர்கள் கையிலேதான்.*
*''உங்களால் முடியாவிட்டால்*
*ஆட்சிப் பொறுப்பை எங்களிடம் தாருங்கள்'',*
*என அண்மையில் ஒரு பௌத்தபிக்கு,*
*வெளிப்படையாகவே கோரியிருந்தார்.*
*யதார்த்தத்தைப் பேசிய உண்மைத் துறவி.*
*தர்மத்தைத் தம் மனதிலிருந்து,*
*''நீத்தார்பெருமையை'' நீங்கள் உணராததால்,*
*இன்று அவர்கள் உங்கள் எதிரணியில்.*
*இந் நாட்டில் நடந்த பல இனக்கலவரங்களிலும்,*
*அண்மைக்காலப் போரிலும்,*
*இறந்தாரை எண்ணிக் கொண்டிருந்தால்,*

KOHA-JPL


துறந்தார் தம் பெருமை தங்கட்கு சொல்லாமலே புரிந்திருக்கும்
இந்நாட்டில்,
இரண்டு தேசிய இனங்கள் இருக்கின்றன என்பதும்,
அவ்விரு இனங்களுக்கும்,
இந்நாட்டில் சம உரிமை உண்டென்பதும்,
இவை சரித்திர நிரூபணம் பெற்ற உண்மைகள் என்பதும்,
கடந்த ஐம்பது ஆண்டுகளாக,
இந்நாட்டை ஆண்ட தலைவர்களுக்கு,
தெரியாமற் போயிற்று.
அத்தலைவர்களில் ஒரு சிலர்,
தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கையை விளங்கினர்.
ஆனால் பாவம்,
நல்லெண்ணம் கொண்ட,
உங்களைப்போன்ற ஒரு சில சிங்களத் தலைவர்களும்,
"இன்று போலவே" துறந்தாரால் முடக்கப்பட்டனர்.
அரசியலில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு,
மகாசங்கத்திடம் "ஆசி" கோரச் செல்கிறோம் என,
இந் நாட்டுத் தலைவர்கள் சொல்வது,
"அனுமதி கோரச் செல்கின்றோம்" என்ற பொருளில்தான்.
இது கூட உங்களுக்குத் தெரியாதா?
ஆனால் தற்போதைய பிரச்சினையில்,
தங்களை முழுமையாய்க் குற்றம் சொல்ல முடியாதுதான்.
காரணம்,
யாரோ ஒரு சிலரால் அமைக்கப்பட்டதாய்க் கருதப்படும்,
"சிங்களக்கமிசனின்" பின்னால்,
மகா சங்கத்தினரின் பலமும் இருக்கின்றது என்பது,
யாருக்குத்தான் தெரியும்.

பொதுவானவர்களின் முடிவென நினைத்து,
''சிங்களக்கமிசனின்'' தீர்ப்பை,
''குப்பைக்கூடையுள் போடுங்கள்'' என,
நீங்கள் சொல்லப்போக,
மகாசங்கத்தினர் கொதித்தெழுந்துள்ளனர்.
''பத்தைக்குள் எறிய முயல் வெளிவந்த கதைதான்''.
முதலில் ''சிங்களக்கமிசன்'' அறிக்கையை,
வன்மையாய்க் கண்டித்த தங்கள் குரல்,
மகாசங்கத்தினரின் எதிர்ப்பிற்குப் பின்,
மெலிந்தொலிக்கத் தொடங்கியிருக்கிறது.
ஜனாதிபதியும்,
உங்கள் அமைச்சரவைச் சகாக்களும்,
இவ்விடயத்தில் தங்களைக் கைவிட்டு,
வேடிக்கை பார்ப்பதுதான் வேதனை.
ஆனால் மகாசங்கத்தினரின் எதிர்ப்பிற்குப் பிறகு,
தாங்கள் விட்டிருக்கும் அறிக்கை மூலம்,
உலகத்திற்குப் பல உண்மைகளைச் சொல்லிவிட்டீர்கள்.
அதற்காகத் தமிழர்கள் சார்பாக உங்களுக்கு நன்றி.
ஏதோ ஈழத்தமிழர்கள் அனைவரும்,
வன்முறையாளர்கள் என்பது போலவும்...,
சிங்களர்கள், தமிழர்களோடு உரிமையைப் பகிர்ந்து,
ஒற்றுமையாய் இருக்க விரும்புபவர்கள் போலவும்,
தேவையில்லாமல் வன்முறை விருப்பத்தால்,
தமிழ் இளைஞர்கள்,
ஒரு போரை நடத்திக் கொண்டிருப்பது போலவும்,
அண்மைக்காலமாக,
உலகளவில் உருவாக்கப்பட்டிருந்த,

ஒரு கற்பனைக்கோட்டை.
தங்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இச் சர்ச்சையினாலும்,
தங்கள் அறிக்கையினாலும்,
தகர்க்கப்பட்டுள்ளது.
''தீர்மானமாக முடிவாகாத'' ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்திற்கே,
இந்நிலை என்றால்.....?,
நீதியான ஒரு தீர்வுத்திட்டம்,
இந்நாட்டில் நிலைநிறுத்தப்படல் எத்துணை கடினம் என்பது,
உலகிற்குப் புரிந்திருக்கின்றது.
முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட,
ஓர் அரசாங்கம் நினைத்தும்,
தேர்தல் மூலம்,
பெரும்பான்மை சிங்கள மக்கள் ஆதரவு அளித்தும்,
அமுலாக்கப்படும் முன்னமேயே
தீர்வுத் திட்டத்திற்கு இந்த நிலை என்றால்,
இலங்கை ஒரு ஜனநாயக நாடுதானா?
என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது.
''பச்சைக்கொடியாரும்'' பச்சோந்தியாய் மாறி,
அறிக்கை விடுகிறார்.
ஒன்று நிச்சயம்!
உங்களையும், உங்கள் அரசையும்,
இனப்பிரச்சினை விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர,
இங்கு யாரும் விடப் போவதில்லை.
உங்களையென்ன? யாரையும்தான்.
''ஒரு பக்கம் போர் மறுபக்கம் சமாதானம்'' என்ற,
தங்கள் அரசின் கொள்கை...
இரு பக்கமும் நிறைவேறாமலேயே போகப்போகின்றது.
தொடரப்போகும் போர்களில்,

அநியாயமாகப் பலியாகப்போகும்,
இரண்டு இன இளைஞர்களின் இரத்தத்தினாலும்,
தங்கள் அங்கியின் ''செம்மை'',
இந்நாட்டின் மண் முழுவதும் பரவ வேண்டுமென்பதே,
மகா சங்கத்தினரின் விருப்பம் போலும்.
உண்மை, அமைதி, தர்மம், அன்பு, நீதி,
இவை அனைத்தையும் துறந்து,
இவ் ஈழமணித் திருநாடும்,
துறவியாகப் போகின்றது.
''இரத்தச் செம்மையெனும்'' போர்வையால்,
தன்னை மூடிக் கொள்ளப் போகின்றது!
இதுவே தங்கள் மூலம் கிளப்பப்பட்டிருக்கும்,
சர்ச்சை எடுத்துக்காட்டும் உண்மை.
நாட்டின் பாதுகாப்பு ஒருபக்கம் கிடக்கட்டும்,
முதலில் உங்கள் பாதுகாப்பை,
நீங்கள் உறுதி செய்து கொள்வது நல்லது.
''கூப்பிய கையுள்ளும் படை ஒடுங்கும்''
வள்ளுவர் வாக்கினை நினைவூட்ட விரும்புகிறேன்.
தங்களையும் நாட்டையும்,
புத்தபிரான் காப்பாராக.

புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
பண்டிதன்.



# 10

## கல்வித்தாய் கலைவாணி

*இவள் கல்வியின் அதிபதியாய்,*
*இந்துக்களால் போற்றப்படுபவள்.*
*இவளின் அருள்பெற்றவர்கள் என்ற பெருமை,*
*வடக்குத் தமிழர்களுக்கு உண்டு.*
*இன்றைய உலகில் கல்வி அறிவுக்காக அல்லாது,*
*பொருளுக்காக ஆகியதுபற்றி வருந்தியும்,*

*கல்வியாளர்களின் சுயநலத்தால்,*
*கல்வி, மதிப்பிழந்தது கண்டு கோபப்பட்டும்,*
*தமிழர் மத்தியில்,*
*உயர்நிலையில் இருந்த கல்வித்தாயின் மதிப்பு,*
*பொருளின் பின்னதாகப் படியிறங்கியது கண்டு கலங்கியும்,*
*மீண்டும் தமிழர் மத்தியில் கல்வித்தாயின் மதிப்பு வேண்டி,*
*சரஸ்வதி பூஜையை முன்னிட்டு,*
*அக்கலைத்தாய்க்குப்*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(12.10.1997 - தினக்குரல்)

## சரஸ்வதி பூஜையை முன்னிட்டு கல்வித்தாய் கலைவாணிக்கு...

கல்வித் தாய் கலைவாணியின் திருவடிகளுக்கு,
வணக்கம்.
நலமறிய ஆவல்.
தெய்வமாகிய உன்னிடமே நலம் விசாரிப்பதுபற்றி,
வியப்புறுவாய்.
என் செய்ய? காலம் அப்படி இருக்கிறது.
இன்று உன்னை யார் மதிக்கிறார்கள்.
மதிப்பெல்லாம் உன் மாமியார் இலட்சுமிக்குத்தான்.
உன் மாமியார் அருள் பெற,
இன்று நீ ஒரு கருவியே தவிர,
உண்மையில் உன் அருள் வேண்டி நிற்பார் எவருமிலர்.
"எனக்கு மதிப்பில்லாமலா,
சரஸ்வதி பூசை ஊரெல்லாம் சிறப்பாய் நடந்தது?",
எனக் கேட்பாய்.
இதெல்லாம் வெறும் சம்பிரதாயம்தான்.
பழக்க தோஷத்தால் செய்து கொண்டிருக்கிறார்கள்.
அதற்காக நீயொன்றும் பெரிதாய்ப் பெருமைப்படாதே.
அறிவுக்காய் கல்வி என்ற நிலையை,
இன்று அரசாங்கமே மாற்றிவிட்டது.
தொழிலுக்கே கல்வியாம்.
இது கற்றவர்களின் ஆலோசனைப்படி,
அரசு எடுத்த முடிவு.
இந் நிலையில்,
பாவம் உன்னை யார்தான் மதிக்கப் போகிறார்கள்?

கல்வியைத் தெய்வமாக நினைத்ததால்,
குருவைத் தெய்வமாய் நினைத்த காலம்,
இன்று மலையேறி விட்டது.
மாணவர்களால் மிரட்டப்படும் நிலையில் ஆசிரியர்கள்.
இன்றைய பாடசாலைகளின் யதார்த்த நிலை இது.
''குருவணக்கம்'' என்ற சொல்லுக்கு,
இன்று மாணவர்கள் மத்தியில் அர்த்தம் வேறு.
கல்வித் தகுதி கொண்டல்ல காசுத்தகுதி கொண்டே,
இன்றைய கல்விச் சாலைகளும் கண் திறக்கின்றன.
இந்த யதார்த்தம் புரிந்ததால்,
ஆசிரியர்களும் முன்புபோலில்லை.
இன்று கோயில்களிலும் சரி,
பாடசாலைகளிலும் சரி,
''குரு'' என்ற சொல்லுக்கு,
'அறியாமை இருள் நீக்குபவர்' என்று பொருளில்லை.
மாணவர்களை உயர்த்தப் பாடுபட்ட,
ஆசிரியர்களின் காலம் மலைஏறிவிட்டது.
ஆனால் ஒன்று,
''உயர்த்தும்'' முயற்சியிலேயே,
இன்றும் ஆசிரியர்கள்.
அவர்கள் உயர்த்த நினைப்பது,
மாணவர்களையல்ல, தம்மை.
பத்திரிகைகளில் ''ரியூட்டறி'' விளம்பரங்கள் கண்டு,
உனக்கு மதிப்பிருப்பதாய் மயங்கிவிடாதே.
பொருள் சம்பாதிக்க ஆசிரியர்கள் விளம்பரம் தருகிறார்கள்.
பொருள் சம்பாதிக்கலாமென மாணவர்கள் போகிறார்கள்.
அவ்வளவே.

*மொத்தத்தில் மாணவர்கள் மத்தியிலும்,*
*உன் மாமியாருக்குத்தான் மதிப்பு.*
*''நுண்பொருள் காண்பது அறிவு''*
*என்பது பழங்கதை.*
*''பொன்பொருள் காண்பது அறிவு''*
*இதுவே இன்று அனைவருக்கும் பொதுவான,*
*''பொன்'' மொழி.*
*பல்கலைக் கழகங்களிற்கூட,*
*''பந்தம்'' பிடிப்போர்க்கே பாடத்தில் சிறப்புச் சித்தி.*
*ஆசிரியரிடம் இன்று,*
*விழி விரியப் பாடம் கேட்க வேண்டாம்,*
*வழி மொழியத் தெரிந்து விட்டால் போதும்,*
*உருப்பட்டு விடலாம்.*
*''பின் எப்படி, படித்தவர்களால் நாடு முன்னேறும்?'',*
*எனக் கேட்கிறாயா!*
*நாடாவது முன்னேற்றமாவது.....*
*ஒரு மண்ணுமில்லை.*
*அதெல்லாம் யாருக்கு வேண்டும்.*
*''நான் முன்னேற வேண்டும்'',*
*அதுவே கல்வியாளர்களின்,*
*இன்றைய ''தனி''ப் பெருங்கொள்கை.*
*படித்தவர்கள் உனக்குப் பாமாலை சூட்டிய காலம் போய்,*
*இன்று ''பட்ட'' மாலை சூட்டும் காலம் வந்திருக்கின்றது.*
*மாளிகை போன்ற வீடு,*
*படகுக்கார்கள்,*
*பகட்டுகள்,*
*''பார்டிகள்'', (parties)*

*''பாட்டில்கள்'', (bottles)*
*போன்றவை கொண்டே,*
*தம் அறிவுத் திறமையை நிரூபிக்கிறார்கள்,*
*இன்றைய கல்வியாளர்கள்.*
*''முற்போக்கான'' வேறு சிலருக்கோ,*
*அறிவாளி எனக்காட்ட,*
*தாடியே தடயமாம்.*
*இன்று அரசியல், ஆன்மீகம், அறிவுலகு,*
*இவை மூன்றுக்கும்,*
*தாடியே தகுதியாகிவிட்டபடியால்,*
*ஒரு கவிஞர் சொன்னதுபோல்,*
*இத்துறைகளில் இணைய,*
*இனி ''வெள்ளாடுகளும் விண்ணப்பம் செய்யலாம்.''*
*கல்வித்துறைகளில்,*
*இன்று பிழைதிருத்தும் பதவிகளிலேயே,*
*பிழையானவர்கள் வந்துவிட்டபடியால்,*
*உன்பாடு அதோ கதிதான்.*
*உற்ற கலைமடந்தையாகிய,*
*உனது ''கற்றது கை மண்ணளவு'' எனும் கொள்கை,*
*இன்று நிராகரிக்கப்பட்டுவிட்டது.*
*தற்பெருமை பேசும் ''தற்குறிகளாய்'',*
*இன்று பல கல்வியாளர்கள்.*
*''ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்'',*
*இவ்வடி,*
*ஆசிரியர், மாணவர்களால்,*
*தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட நிலையில் உள்ளது.*
*''ஊதாமல் (சிகரெட்) ஒரு நாளும் இருக்க வேண்டாம்''*

*என்பதாக,*
*அவ் அடிக்கு அவர்கள் விளக்கம் கொள்கிறார்கள்.*
*மாணவன் ஆசிரியரிடம் தீப்பெட்டி கடன் கேட்கிறான்.*
*அறிவொளியை ஏற்றவல்ல.*
*அதுதான் சமத்துவமாம்.*
*நீ உருப்பட்ட மாதிரித்தான்.*
*அம்மா!,*
*சிவசங்கர் எனும் இன்றைய இளங்கவிஞன்,*
*கல்விபற்றிச் சொன்ன கவிதையை உன் பார்வைக்கு,*
*சமர்ப்பிக்கின்றேன்.*
*படித்துப் பார் நிலைமை தெரியும்.*
*இதோ அக்கவிதை.*

''இன்றைய கல்வி என்பது,
செல்விகளைக்கூடச் சூல்கொள்ள வைக்கும் சுமை.
சுரத்தேயில்லாமல் மாணவர்களால் மீட்கப்படும் சுரம்.
அன்று கல்வியைக் கண் என்றார்கள்.
ஆனால் இன்று....?
கண்தான்,
ஆனால் ''கற்றாக்ற'' உள்ள கண்.
கல்விக் கண்ணும் கருமமாற்ற,
காசுக்கண்ணாடி தேவை.
விளைவு....,
கண்ணில்லாதவர்களும்,
கண்ணாடி அணிந்து கொள்கிறார்கள்.
இன்று கற்றவர்களின் கவலையெல்லாம்,
கல்யாணச் சந்தையில்,
தம் பட்டங்கள்,

நஷ்ட விலைக்குப் போவது பற்றித்தான்.
கல்வியை,
தேடி உண்ணவேண்டிய அருமருந்தென்றார்கள்.
ஆனால் இன்று அது,
பணத்தை நாடி ஓடி வரும் பெருவிருந்து.
ஆம் ''சரியாசனம் வைத்த தாய்'',
சரியாய், சனம் வைக்கத்தவறியதால்,
கல்வியால்,
சரியா(த) ஆசனமாய்,
நிலைக்க முடியவில்லை.
அலைமகளின் அணை கடந்த ஓட்டத்தில்,
கலைமகள் காணாமல் போய்விட்டாள்.
செந்தாமரையின் செழிப்பில்,
வெண்டாமரைகள் வெளிறிப் போயின.
''ஆயகலைகள் அறுபத்தி நான்கும்'',
இன்று சகாய விலையிற் சந்தையிற் கிடைக்கும்.
தவிர,
கறுப்புச் சந்தையில் கழிவு விலையிலும்,
பதுக்கல் வியாபாரிகளிடம் ஒதுக்கல் முறையிலும்,
இலகுவாய்ப் பெறலாம்.
இன்று கடைச் சரக்காகிவிட்ட கல்வியை,
கொள்வோரைவிடக் கொடுப்போரே அதிகம்.
பரீட்சை என்பது,
அறிவை விடுத்து,
அறியாமையைத்தான் அளந்து கொண்டிருக்கிறது.
எதிர்கால வாழ்விற்கு,
படித்த பாடம் உதவாவிட்டாலும்,

பட்ட கஸ்ரம் உதவுமாம்.
இன்று கல்வியின் சாதனை....,
மனிதர்களை மரங்களாக்கியதே.
''கற்றதனாலாய பயனென்கொல்?''
'கடைசிவரை பெற்றவரைப் பிழிவதுவே காண்.'

*தாயே!,*
*எப்படி இருக்கிறது இன்றைய கவிஞனின் கவிதை.*
*சரஸ்வதி பூசைக்காக,*
*உன் திருவடிகளுக்கு,*
*இவ் ஏழைப் பண்டிதனின் சமர்ப்பணம் இது.*
*ஏற்றருள்க...!*
*உன் எதிர்காலம்பற்றிய ஏக்கத்துடன் நான்.*
*நலம் விசாரித்த நயம் புரிகின்றதா?.*
*தயை கூர்ந்து,*
*உன் வீணையைச் சற்று வேகமாக மீட்டு.*
*அதில் எழும் அறிவோசையை,*
*எம்மண்ணை மண்ணாக்கும்,*
*கற்றோர் காதில் விழச் செய்.*
*புலவர்களைப் பின் பார்த்துக் கொள்ளலாம்.*
*முதலில் உன்னை,*
*அரசரோடு சரியாசனத்து அமர்த்து.*
*உன் எழுச்சிக்காய்க் காத்திருப்பேன்.*
*வெல்வாயா?*

*இப்படிக்கு,*
*உன் அன்புமகன்,*
*பண்டிதன்.*



# 11

# இலங்கை அன்னை

*இவள் ''இந்து சமுத்திரத்தின் முத்து'' எனப்பட்டவள்.*
*ஒருகாலத்தில் இயற்கையழகு கொழித்து நின்றவள்.*
*சிங்களவர், தமிழருக்கிடையில் ஏற்பட்ட*
*இனப்பிரச்சினையால்,*
*இன்று வளம் குன்றிப் போனவள்.*
*''தமிழர்க்குப் பிரச்சினை உண்டு,*

அதைத் தீர்ப்போம்'' எனக் கூறி
1994ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற,
ஜனாதிபதி சந்திரிக்காவின் தலைமையிலான,
பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு,
புலிகளுடன் பேசத் தொடங்கி,
சில காலத்திலேயே அப்பேச்சுவார்த்தை முறிந்துபோக,
மீண்டும் போர் தொடங்கியது.
இந்நிலையில்,
சிங்களத் தீவிரவாதிகளால் அமைக்கப்பட்ட
''சிங்களக்கொமிசன்''
இனவாதம் மிக்க தம் அறிக்கையை அரசிடம் ஒப்படைக்க,
''அவ் அறிக்கையைக் குப்பைக் கூடையிற் போடுவேன்''
என்றார்,
முன்னணி அமைச்சர் மங்கள சமரவீர.
அதனாற் கொதித்தெழுந்த மதகுருமார்,
அவர் அழிவு வேண்டி,
ஒரு லட்சம் தேங்காய் உடைத்துப்
பிரார்த்தனை செய்தனர்.
இந்திய அரசின் விருப்பம் இன்றி அழைக்கப்பட்ட அமெரிக்கக்
கொமாண்டோக்கள் தங்கியிருந்த,
''கலதாரி'' ஹோட்டலில் குண்டு வெடித்தது.
அமெரிக்கக் கொமாண்டோக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.
இச்சூழலில் இலங்கை அன்னைக்கு,
பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.

(19.10.1997 - தினக்குரல்)

## இலங்கை அன்னைக்கு...

இலங்கை அன்னையின் திருவடிகளுக்கு,
வணக்கம்.
நலமுறுக!
என் தாய் நீ!
என் அறிவு, ஆற்றல், அனுபவம் அத்தனைக்கும்,
இடம் தந்து என்னை வளர்த்து விட்டாய்.
உன் மடியிற் சேயாய்த் தவழும் வாய்ப்புப் பெற்றதில்,
எனக்குப் பிடிபடாத பெருமை.
எனினும், இங்கு தமிழனாய்ப் பிறந்ததால்,
நான்பட்ட இன்னல்கள் ஏராளம்...
ஏதுதான் நேரினும்....
உன்னை என்னால் நேசிக்காமல் இருக்க முடியவில்லை.
ஆக்கத்துக்கன்றி, அழிவுக்காய்ப் பயன்படும்,
மனிதமன வக்கிரங்களின் வெளிப்பாடுகளுக்கு,
பாவம் நீ என்ன செய்வாய்?
உலகமே ஒரு காலத்தில் உன்னை,
''இந்து சமுத்திரத்தின் முத்து'' என்று போற்றியது.
இன்றோ இந்து சமுத்திரத்தின் 'இரத்தக்கறையாய்',
இழிவுபட்டுக் கிடக்கின்றாய்.
நினைக்க நெஞ்சம் கொதிக்கிறது!
வளம்மிக்க மேற்கு நாடுகளுடனான ஒப்பீட்டிற்கூட....
இயற்கையன்னையின் ஆசீர்வாதத்தினால்,
உயர்ந்து நிற்பவள் நீ!
அதனாற்தானே,
ஆயிரமாய்க் கொட்டிக்கிடந்தும்,

அந்நாட்டு மக்களெல்லாம் உன்னைத்தேடி ஓடி வருகின்றனர்.
மேற்கு நாட்டவர்தம் வாழ்வில் ஒழுங்கீனம்.
மேற்கு நாடுகளின் இயற்கையில் ஒழுங்கீனம்....
கட்டுக்கோப்பான நம் தமிழ்ப் பண்பாட்டைப்போல,
நீ கொண்டிருக்கும் இயற்கை ஒழுங்கு எத்துணை இனியது!
வருடம் முழுவதும் இரவும் பகலும்
பெரும்பாலும் சம நேரமாய்,
பனியோ, மழையோ, வெய்யிலோ எதிலும் மிகையில்லாமல்,
ஆறு, கடல், அருவி, மலை, காடு, வயல் என,
அத்தனை இயற்கைச் சிறப்புக்களையும் உள்ளடக்கி,
பொலிந்து கிடக்கும் உன் அழகு கண்டு,
உலகே வியந்து நின்றது!
உன் அழகை,
அனுமனூடும் இராமனூடும் வியந்து வியந்து,
கம்பன் அன்றே பாடிவைத்தான்.
நேற்றுவரை, அவன் பாடியவை அத்தனையும்,
கற்பனையல்ல உண்மையென்று,
அனைத்துலகுமே ஒப்பும் வகையில்,
அழகுறக் கிடந்தவள் நீ!
அன்று,
நாற்புறமும் கடல் சூழக் களித்துக் கிடந்தவள்,
இன்றோ,
கண்ணீர் சூழக் கவன்று கிடக்கிறாய்.
பஞ்ச சீலத்தினை உலகிற்கு ஓதிய,
பௌத்தத்தினையும்,
''ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தையும் காட்டு'' என்று சொன்ன,

கிறிஸ்தவத்தையும்,
உலக நெறியாகச் சகோதரத்துவத்தைப் போதித்த,
இஸ்லாத்தையும்,
''அன்பே சிவம்'' என்றுரைத்த,
இந்து மதத்தையும்,
உன் அகத்திருத்தி அனைவருக்கும் வழிகாட்டியவள் நீ!
தொட்ட இடமெல்லாம் பொன் விளைத்து,
அனைவருக்கும் மகிழ்ச்சி தந்தவள் நீ!
சொந்தக் குழந்தைகளை மட்டுமன்றி,
வந்தாரையும் வளமுற வாழவைத்தவள் நீ!
இன்றோ... சீண்டுவாரின்றிச் சீரழிந்து கிடக்கின்றாய்!
தொட்டதெல்லாம் துலங்கச் செய்யும்,
உன் மண்ணின் வளத்தாலோ என்னவோ...
இங்கு விதைக்கப்பட்ட 'இனவாதம்' என்னும் வித்தும்,
வீறுடன் விருட்சமாய் வளர்ந்துவிட்டது.
உன் மடியிற் சகோதரர்களாய் வாழ்ந்த,
தமிழரும், சிங்களவரும், இஸ்லாமியரும்,
இன்று,
பாசமிழந்து,
பகை முற்றிய நிலையில் எதிரிகளாய் ஆனார்கள்.
தம்முட்தாம் அடித்துக்கொண்டு தாழ்வுறும்,
உன் புதல்வர்கள் நிலை கண்டு கண்ணீர் வடிப்பாய்!
அதைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்?
பகையால் 'பாகப்பிரிவினை' என்றும்,
'பாகப்பிரிவினையால்' பகை என்றும்,
மாறி மாறித் துன்பம் தொடர்கின்றது.
அனைவரும் ஆச்சரியப்படும் வகையில்,

'சிறுபான்மையினருக்கும் பிரச்சினைகள் உண்டு' எனும்
உண்மையை ஒப்பி,
புதுத்தலைமையோடு அரசுக்கட்டிலேறிய,
இன்றைய ஆளுங்கட்சி,
இனப்பிரச்சினையை ஒழித்து,
உன்னை மீண்டும் உயிர்ப்பிக்கும் என நம்பினேன்!
சொற்ப காலத்திலேயே பொறுமை இழந்த அவர்கள்,
'ஒருபக்கம் போர், மறுபக்கம் சமாதானம்' என்று குரலெழுப்ப,
முளையாய்த் துளிர்விட்ட அச்சிறு நம்பிக்கையும்,
கருகிப் போயிற்று.
ஆனாலும் விடாப்பிடியாய்,
ஒரு தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வருவதில்,
அவர்கள் காட்டிய உறுதியும்,
கிளர்ந்தெழுந்த பேரினவாதக் குரல்களைக்,
'குப்பைக் கூடைக்குள் போடுவோம்'
என்ற அவர்கள் துணிவும்,
''தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றிப் பின் மீண்டும் பேசுவோம்''
என்ற அறிவிப்பும்,
கருகிய நம்பிக்கையை,
மீண்டும் துளிர்க்கச் செய்யும்போல் இருந்தது.
இந்நிலையில்,
மீண்டும் தலைநகரத்தில் குண்டு வெடித்திருக்கிறது!
எங்கு குண்டு வெடித்தாலும்,
உடனே 'புலிகள்' எனக் கூவும் நிலைமாறி,
''சமாதானத்திற்கு எதிரான தீய சக்திகளின் செயல் இது'' என
ஜனாதிபதி 'பொதுப்படப்' பேசியிருக்கிறார்.
உன்னைச் சீரழிக்கும் அத்தீயசக்திகள் எவை?,

தெளிவுபடத் தெரியாமல்,
அனைவரும் குழம்பி நிற்கிறோம்.
வெளிநாட்டு அமைச்சரின் அமெரிக்க விஜயம்,
அதைத் தொடர்ந்து,
அமெரிக்காவினால்,
பயங்கரவாதிகள் பட்டியலில் புலிகள் சேர்க்கப்பட்டமை,
அடுத்தடுத்த தினங்களிலேயே,
அமெரிக்கக் 'கமாண்டோக்களின்' இலங்கை வருகை,
தொடர்ந்து, அமெரிக்கக் 'கமாண்டோக்கள்' தங்கியிருந்த,
'கலதாரிக் ஹோட்டலில்' குண்டு வெடிப்பு,
மறுநாளே எதிர்க்கட்சித் தலைவருக்கான,
இந்திய அழைப்பு என,
தொடர்ந்து,
சிதறிவரும் செய்திகளைத் தொகுத்துப் பார்க்க,
மனம் பதறுகிறது.
இனப் பிரச்சினை இன்று இந்நாட்டைக் கடந்து,
'வேறு கைகளுக்குப்' போய் விட்டதோ? என,
அச்சம் உண்டாவது தவிர்க்க முடியாததாகிறது.
இந்நிலையில்,
உண்மை உணராது,
அமைச்சரின் அழிவுக்காய்,
ஒரு லட்சம் தேங்காய்கள் உடைக்கும் உத்தமர்கள் ஒரு பக்கம்!
அரசுடன் சேர்ந்து ஆட்சியமைக்கும்,
'அன்றைய கனவை', நனவாக்கும் முயற்சியில்
அயராது 'அறிக்கை அரசியல்' நடத்தும்
நம் 'அறிவாளிகள்' ஒரு பக்கம்!
இவர்கள் மத்தியில் நீ என்னாவாயோ? என ஏங்குகிறேன்.

அவதானிகளாலும், அறுதியிட முடியாத நிலையில்,
இன்று உன் எதிர்காலம்.
'விதியே விதியே இலங்கைத் தாயை
என் செயக் கருதியிருக்கிறாயடா?'
பாரதி போல் கேட்கத் தோன்றுகிறது.
உனக்காகப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை
வேறென்ன?
''உய்வாய்'' - ''உயர்வாய்'' எனும் நம்பிக்கையோடு,
விடை கொள்கிறேன்.

இங்ஙனம்,
பண்டிதன்.



# 12

## பகிடிவதையால் (RAKKING) உயிராபத்திலிருக்கும் பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷ்

*இவன் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன்.*
*ஆற்றல்மிகு மாணவன்.*
*இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகப்*

*பொறியியற் பீடத்திற்கு,*
*தேர்ந்தெடுக்கப்பட்ட இவன்,*
*அங்குள்ள சிரேஷ்ட மாணவர்களால்,*
*கடுமையான பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டான்.*
*அதனால் சிறுநீரகம் பாதிப்புற்று,*
*வைத்தியசாலையில் உயிர்க்கு ஆபத்தான நிலையில்,*
*அனுமதிக்கப்பட்டான்.*
*அறிவுலகம் மட்டுமின்றி சமூகமும் அதிர்ச்சியுற்றது.*
*உயிர்க்குப் போராடியபடி,*
*வைத்தியசாலையில் இருந்த வரப்பிரகாஷிற்கு,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(26.10.1997 - தினக்குரல்)

(பின் பல்கலைக்கழக வரலாற்றில்.
மாறாப்பெரும் சோகத்தை ஏற்படுத்தி.
மாண்டுபோனான் வரப்பிரகாஷ்.)

**பகிடி வதையால் உயிராபத்திலிருக்கும்**
**பல்கலைக்கழக மாணவன்**
**வரப்பிரகாஷிற்கு...**

*அன்புக்குரிய தம்பி!*
*வணக்கம்.*
*உன் நலத்திற்காய்,*
*ஒவ்வொரு நிமிடமும் பிரார்த்தித்தபடி இருக்கிறேன்.*
*உனக்கு ஏற்றுவதற்கு இரத்தம் தேவையென,*
*இன்றைய பத்திரிகைளில் விளம்பரம் கண்டேன்.*
*என் நெஞ்சம் கொதிக்கிறது.*
*துள்ளித்திரிய வேண்டிய நீ,*
*இன்று கசங்கிய மலராய்க் கட்டிலிற் கிடக்கிறாய்.*
*பல்கலைக்கழகம்பற்றி*
*எத்தனை கனவுகளோடு இருந்திருப்பாய்.*
*உன்னைப் பெற்றவர்கள்,*
*நிமிர்ந்தான் மைந்தன் என எத்தனை மகிழ்வு கொண்டிருப்பர்.*
*அத்தனையிலும்,*
*சில கயவர்கள் மண் அள்ளிப்போட்டு விட்டார்களே!*
*இன்று வாடிக்கிடக்கும் உன்னைக்கண்டு,*
*பெற்றவர் மனம் எத்தனை துடிதுடிக்கும்.*
*நினைத்துப்பார்க்கப் பொங்குகிறது மனம்.*
*ஒரு பகைவனோ, கொலையாளியோ,*
*உன்னை இக்கதிக்கு ஆளாக்கியிருந்தால்,*
*விதியென விட்டிருக்கலாம்.*
*கற்பதற்காய், கூடவந்த கயவர்களே,*

உன்னை வீழ்த்தியது அறிந்து விம்முகிறது நெஞ்சம்.
நினைக்க நினைக்க,
நெஞ்சு பொறுக்குதில்லையடா!
''விஷவித்துக்கள்''.
''அத்தனைபேரையும் சுட்டுப்பொசுக்க வேண்டும்.''
வன்முறையை என்றும் ஏற்காத,
என் மனமே இப்படி எண்ணுகிறது.
அவர்களை மட்டும் குற்றம் சொல்லிப் பயனில்லை.
காலாகாலமாகப் ''பகிடிவதை'' எனும் இப்பாவச் செயலை,
அங்கீகரித்த அசட்டுத்தனமான நம்
அறிவுலகைச் சொல்ல வேண்டும்.
''பகிடிவதை'' எனும் சொல்லை,
தமிழகராதிக்குப் பரிசளித்ததாய் அவர்களுக்குள் ஒரு பெருமை.
''அசடர்கள்''.
பகிடி எப்படி வதையாகும்?
வதை எங்ஙனம் பகிடியாகும்?
அவர்களுக்கே வெளிச்சம்!
இது ''பல்கலைக்கழக மரபாம்''.
மரபென்பதற்காகவே
பல உன்னத விழுமியங்களைத் தூக்கியெறிந்த,
அந்த அறிவிலிகள்,
இம் மடத்தனத்தில் மரபு பேணுகிறார்களாம்.
''வீரமிலா நாய்கள்''.
பாரதிபோல் பேசத் தோன்றுகின்றது.
கல்வியால் அறிவு,
அறிவினால் ஒழுக்கம்,

ஒழுக்கத்தினால் அன்பு என,
விளைவுகளை வரைவுசெய்து கற்ற நம் பாரம்பரியத்தை,
நாசம் செய்து விட்டார்கள்.
உயர்கல்வியின் ஆரம்பத்துக்கு ஒழுக்கயீனமே அத்திவாரமாம்!
போராடி,
அரசாங்கத்திடம் சுளை சுளையாய்ச் சம்பளம் வாங்கும்,
துணைவேந்தர்களும், பீடாதிபதிகளும்,
துறைத் தலைவர்களும், பேராசிரியர்களும்,
என்ன செய்துக் கொண்டிருக்கிறார்கள்?
நிச்சயம் இப் பாவத்தில் இவர்களுக்கும் பங்குண்டு.
கேட்டால்,
''வளர்ந்த பிள்ளைகள், நாம் என்ன செய்ய?''
எனப்புலம்புவார்கள்.
''பிறர்க்குத் துணையாகாப் பெட்டைப்புலம்பல்!''
கல்வியால் பெற்ற,
நிமிர்வும், ஆளுமையும், வீரமும் எங்கே போய்விட்டன?
இத் தேசத்தையும்,
இத்தேசத்தின் இளைய தலைமுறையினரையும்,
இவர்களா எழுச்சியுறச் செய்யப் போகிறார்கள்?
''மந்தர்பால் பொருள் போக்கிப் பயின்றதாம்
மடமைக் கல்வியில் மண்ணும் பயனிலை''
வெகு சீக்கிரம்,
இளையதலைமுறை இங்ஙனமாய் முடிவுசெய்யப் போகிறது.
குடும்பத்தில் பரம்பரை சொன்னாற்போல,
கல்வியிற் பரம்பரை சொன்ன தமிழர்கள் நாம்!
மாதா, பிதா, குரு, தெய்வம் என,

ஆசிரியனையும் தெய்வத்தையும்கூட உறவாக்கி,
வரிசைப்படுத்திய தமிழர்கள் நாம்!
ஆசிரியன் என்ற சொல்லுக்கு,
''மாணவனால் கற்கப்படுபவன்'' என,
உரை எழுதி மகிழ்ந்த தமிழர்கள் நாம்!
இன்று மேலைத்தேய மோகத்தால்,
சுயமிழந்து, நெறிபிறழ்ந்து,
வகுப்பறையில் சந்தித்துப் பிரிவதாய் மட்டுமே,
ஆசிரிய - மாணவ உறவை ஆக்கி வைத்திருக்கின்றோம்.
ஒரு தமிழ் மாணவனைத் தமிழ் மாணவரே,
மரணவாசல்வரை தள்ளிச் சென்று விட்டிருக்கிறார்கள்.
என்னே கொடுமை!
உயிரோடு போராடும் உனக்குப் பதில்சொல்லப்போவது யார்?
''கற்ற கயவரோடு என்ன கூட்டு இனியே?''
என்று கொதிக்கின்றது நெஞ்சம்.
''கற்றாரை யான்வேண்டேன்''
என்று சலிக்கின்றது மனம்.
''கூச்சம் தெளிவிக்கும் முயற்சி''
பகிடிவதைக்கான சில பேரின் பதிலிது.
மாணவர்கள் மட்டுமல்ல, பேராசிரியர்களும் சொல்கிறார்கள்.
கூச்சம் தெளிவிக்க அது என்ன படுக்கையறையா?
அறிவீனத்தை நீக்குவதே,
அறிவாளியாக்கும் முயற்சியில் கூச்சம் தெளிவித்தல்.
அந்தக் கூச்சம் இன்றும் தீர்ந்தபாடில்லை.
மற்ற அனைத்துக் கூச்சங்களையும் நீக்குகிறார்களாம்.
வெட்கக்கேடு!

*முதலிரவுச் செய்கைக் காட்சி,*
*கெட்டவார்த்தை பேசுதல்,*
*அழுக்குநீர் அபிஷேகம்,*
*இங்ஙனமாய்,*
*இவர்கள் அடிக்கும் கொட்டங்கள் பலப்பல.*
*கல்விக்கும் இவற்றுக்கும் என்ன தொடர்பு?*
*சத்தியமாய்ப் புரியவில்லை.*
*முழங்கை ஊன்றி, முதுகுப்புறமாய்ச் சுவரில் சாயவிட்டு,*
*கால்தட்டி, முழங்கை சிரட்டை உடைப்பது,*
*ஒரு முக்கிய மரபாம்!*
*கன்னி கழிக்கிறார்கள் கயவர்கள்!*
*இத்தனை வன்முறை கொண்ட நெஞ்சங்களா,*
*நாளை இந்நாட்டின் உயர் பதவிகளில் உட்கார வேண்டும்?*
*உருப்பட்டமாதிரிதான்!*
*நன்மை தீமை கலந்ததுதான் மனித மனம்.*
*எனினும் தீமை பால் நாட்டம் இயல்பானது.*
*இளமையும் சேர்ந்தால் கேட்கவே வேண்டாம்!*
*அந்நாட்டம் தடுத்து,*
*நன்மைபால் வழிநடத்தவே கல்வியும் கட்டுப்பாடுகளும்,*
*இவற்றைக் கடைப்பிடிக்க செய்வது,*
*மூத்தோர், அறிஞர் தம் தலைக்கடன்.*
*அவர்களே இப் பலவீனத்திற்கு பாதை அமைத்தால்...*
*கேட்கவும் வேண்டுமோ?*
*இளமை எல்லை மீறியிருக்கின்றது.*
*மீறும் என்பது என்றோ தெரிந்திருக்க வேண்டியது.*
*காலம் கடந்த பின்,*

*"யார் குற்றம்?" என ஆராய்ந்து என்ன பயன்?*
*தமிழகத்தில்,*
*ஒரு துணைவேந்தரின் மைந்தனே,*
*இப்பாதகச் செயலுக்குப் பலியாகி இருக்கிறான்.*
*இன்று இங்கு நீ.*
*இன்னும் எத்தனை பேர் வாழ்வு அழியவேண்டும்?*
*கல்வியுலகம் கண் விழிக்காதா?*
*"கொலை வாளினை எடடா!*
*மிகு கொடியோர் செயல் கெடவே"*
*பாரதிதாசன் மனதில் வருகிறான்.*
*உன்னை இக்கதிக்கு ஆளாக்கியோருக்கு மட்டுமல்ல,*
*இனி இச்செயலைச் செய்யப்போகும் அத்தனை பேருக்கும்,*
*உயர் கல்வி உடனடியாய் இரத்துச் செய்யப்படல் வேண்டும்.*
*ஓரிரு புள்ளிகளால் (Marks).....,*
*பல்கலைக்கழகம் புகமுடியாமல்,*
*ஏங்கியபடி எத்தனை நெஞ்சங்கள் வெளியே.*
*இக்கயவர்களைத் துரத்திவிட்டு*
*அவர்களுக்கு இடங்கொடுங்கள்.*
*தீயவனிடம் சேரும் கல்வி,*
*அவனை மேலும் தீயவனாக்கவே வழி செய்யும்.*
*அத்தகையோரைக் கல்வித்துறையை விட்டு,*
*அடித்துத்துரத்துவோம்.*
*"இனியொரு விதி செய்வோம் - அதை*
*எந்நாளுங் காப்போம்!"*
*நான் கொதித்து என்ன பயன்?*
*கொதிக்க வேண்டியவர்கள் கொதிக்கட்டும்!*

*தம்பி! நீ நலமுற வேண்டும்.*
*நலமுற்றபின்....*
*நாளை நீயும் இச்செயலில் இறங்கமாட்டாய் தானே?*
*என் போன்று பலரும் உனக்காய்ப் பிரார்த்தித்தபடி....*
*இடர் நீங்கி எழுக.*

*இங்ஙனம்,*
*பண்டிதன்.*



# 13

## பகிடிவதைப் பழியோடு தடுப்புக்காவலில் உள்ள மாணவர்கள்

*பேராதனைப் பல்கலைக்கழகத்தில்*
*பகிடிவதையால்* (Rakking)
*இறந்துபோன வரப்பிரகாஷ் என்கின்ற மாணவனின்,*
*மரணத்துக்குக் காரணமாகனவர்கள் என்ற பழியுடன்,*

KOHA JPL

*ஏழு மாணவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.*
*கல்வி உலகும், சமுகமும்,*
*கொலையாளிகளாய், அவர்களைக் குற்றம் சாட்டின.*
*அந்நிலையில்,*
*அவர்தம் குற்றம் கடிந்தும்,*
*அவர்கள் குற்றத்திற்கு வழிவகுத்த,*
*அறிவுலகினதும், சமுதாயத்தினதும் பிழை கடிந்தும்,*
*தடுப்புக் காவலில் இருக்கும் அம்மாணவர்களை,*
*விடுவித்து மன்னிக்க வேண்டும் எனக்கோரி,*
*அவர்களுக்கு ஆறுதல் கூறி,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(09.11.1997 - தினக்குரல்)

**பகிடிவதைப் பழியோடு தடுப்புக்காவலில் இருக்கும் ஏழுமாணவர்களுக்கும்....**

*என் இளம் நண்பர்களே,*
*வணக்கம்.*
*உங்கள் நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.*
*அனுதாபம், வேதனை, பயம், அவமானம் என,*
*அத்தனை உணர்வுகளும் ஒருங்கே தாக்க,*
*சோர்ந்து போயிருப்பீர்கள்.*
*"வினைவிதைத்தவன் வினை அறுப்பான்*
*தினை விதைத்தவன் தினை அறுப்பான்"*
*பழமொழி தெரியாததால் வந்த பழி!*
*விஞ்ஞான மாணவர்களாகிய நீங்கள்,*
*தமிழ்ப்பழமொழியைத் தெரிந்து கொள்ளாததில்,*
*ஆச்சரியமில்லை.*
*ஆனால்....*
*"எந்தவொரு தாக்கத்திற்கும்,*
*எதிரானதும் சமனானதுமான மறுதாக்கம் உண்டு"*
*எனும் நியூட்டனின் கொள்கையைத்தானும்,*
*நீங்கள் விளங்காதது விதியின் பிழை அன்றி வேறென்ன?*
*விளங்கியிருந்தால் இன்று இந்நிலை உங்களுக்கில்லை!*
*தத்துவங்களையும், கொள்கைகளையும்,*
*யார் தான் முற்றாய் விளங்கினார்கள்?*
*தனியே உங்களைக் குறை சொல்லி என்ன பயன்?*
*பல்கலைக்கழக மாணவர்கள்,*
*துணைவேந்தர்கள்,*

பேராசிரியர்கள்,
அமைச்சர்கள்,
பத்திரிகைகள், என......
அனைவர் கைகளும் இன்று,
''கொலையாளிகளாய்'' உங்களைச் சுட்டியபடி....
வரப்பிரகாசின் பெற்றோர் மகனிழந்த கவலையுடன்.
உங்கள் பெற்றோரோ மானமிழந்த கவலையுடன்.
உங்கள் கல்விகூட இரத்துச் செய்யப்படலாம் என்று கேள்வி.
உங்கள் செயலின் கொடூரத்தால் பாதிப்புற்று,
அங்ஙனமாய் உங்களைத் தண்டிக்க வேண்டுமென,
நானும் முன்பு எழுதினேன்.
உணர்ச்சிகளைத்தவிர்த்து நிதானமாய்ச் சிந்தித்ததில்....
தனியே உங்களை குற்றம் சொல்ல,
அறிவு மறுக்கிறது.
அதனால்தான் இக்கடிதம்.
நீங்கள் செய்தது தவறு என்பதில்,
இப்போதும் எனக்கு மாற்றுக்கருத்தில்லை.
பல காரணங்களாலும்,
தளர்வுற்றுச்சரியச் தலைப்படும் நம் ஈழத்தமிழ் இனத்தை,
விழுதுகளாய் வேரோடிக்காக்க வேண்டிய நீங்கள்,
விஷமிகளாகி ஓர் உயிர் பறித்ததில்,
எனக்கு இப்போதும் கடுங் கோபம்.
அந்த இளைஞனின் முகக் குறிப்பிலிருந்தாவது,
அவன் மரண வேதனையை நீங்கள் உணராது போனது ஏன்?
சலிக்கிறது மனம்.
உயர் கல்வி மாணவர்களாகிய நீங்கள்,
''குறிப்பறியமாட்டா நன்மரங்கள்'' ஆனதில்,

அவமானப்படுகிறேன்.
இக்கொலைப்பழிக்குக் காரணமான,
உங்களில் ஒருவன்,
உங்களை மட்டுமல்ல, ஊரைவிட்டும் ஓடி விட்டானாமே?
''நகுதற் பொருட்டான நட்பு''.
அழிவைத் தூண்டியவன் ஆபத்தில் கைவிட்டான்,
நம் நாட்டு அரசியல்வாதிகள்போல.
ஒன்று நிச்சயம்...
வரப்பிரகாசினைக் கொல்லும் நோக்கம்,
உங்களுக்கு இருக்கவில்லை.
யார் நம்புகிறார்களோ இல்லையோ,
நான் இதை உறுதியாய் நம்புகிறேன்.
விளையாட்டு வினையாகிவிட்டது.
கூடவே விதியும் விளையாடிவிட்டது.
இன்று கொலையாளிகளாய் கூண்டுக்குள் நீங்கள்.
''நடிப்பாவேசத்தோடு'' அறிவுலகத்தின் அனைத்துக்கைகளும்,
உங்களைத் தண்டிக்கத் தயாரான நிலையில்.
பாவம் நீங்கள்.
ஒரு கதை ஞாபகம் வருகிறது.
கல்லாலடித்துக் கொல்லும்படியான தீர்ப்பைப் பெற்ற,
ஒரு விபச்சாரி,
இயேசுநாதரிடம் சரணடைந்தாளாம்.
''உங்களில் குற்றமில்லாதவர் முதற்கல்லை எறியுங்கள்''
இயேசுநாதரிடமிருந்து கட்டளை பிறக்க,
தலை குனிந்து கூட்டம் கலைந்ததாம்.
தம்குற்றம் உணர்ந்த,
பண்பான பழங்கால மக்கள்.

பாராட்டுகிறது மனம்.
இன்றானால்,
நம் குற்றத்தை மறைக்கவேனும்,
நிச்சயம் ஆளுக்கொரு கல்லெறிந்திருப்போம்.
வளர்ச்சியுற்ற (?) சமுதாயமாம்.
நகைப்புத்தான் வருகிறது.
நீங்கள் செய்தது குற்றம்தான்.
ஆனால்,
உங்களை குற்றம் சாட்டும் அருகதை,
இங்கு, ''அறிக்கைமழை'' பொழிந்துகொண்டிருக்கும்,
யாருக்குமில்லை.
இது என் திண்ணமான எண்ணம்.
பல்கலைக்கழகங்களில் பகிடிவதை நடந்ததையும்,
மற்றவர்களைக் காயப்படுத்தும் அளவுக்கு,
அது வக்கிரப்பட்டதையும்,
கட்டுப்படுத்துவாரின்றி அன்றாடம் அது உக்கிரமடைந்ததையும்,
அறியாதிருந்தவர்போல் அலறுகிறார்கள்.
இதுவரை நடந்தவை தெரியாது என்றாலும்,
நிர்வாகத்தில் பிழை!
தெரியும் என்றாலும் நிர்வாகத்தில் பிழை!
பாவம்!
ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று சொல்லத்தெரியாதவர்கள்.
காரணங்களை வளரவிட்டு,
காரியங்களை ஒழிக்க நினைக்கிறார்கள்.
இப்பிரச்சினையில் மட்டுமல்ல,
இனப்பிரச்சினையிலும் இதுவே கதை.
அரசியலில்தான் அங்ஙனமாயின்,

*அறிவுலகிலும் அங்ஙனமா?*
*நம் தவக்குறைவு.*
*இப்போதும் பகிடிவதையை ஒழிப்பதை விட,*
*உங்களை ஒழிப்பதில்தான் அதிக பேரின் அக்கறை.*
*பகிடிவதை என்னும் நரகாசுரனை,*
*வதைக்கும் வலிமையற்ற ''பலவீனப்பரந்தாமர்களாய்'',*
*இன்னும் பேராசிரியர்கள்!*
*வரப்பிரகாசின் மரணவீட்டிலேயே,*
*ஒரு சிலர் பகிடிவதைக்குள்ளானதாய்க் கேள்வி!*
*பகிடிவதைக்கெதிரான போர்க்குரல்களை,*
*தன்மானப்பிரச்சினையாய்க் கொண்டு,*
*பேராதனையில் பகிடிவதை தொடர்கிறதாம்!*
*வருடத்தில் ஒரு தினத்தை பகிடிவதைக்கெதிரான தினமாய்,*
*பிரகடனப்படுத்தப்போவதாய் ஓர் அறிக்கை.*
*வருடத்தில் ஒரு முறையல்ல,*
*வாரத்தில் ஒரு முறை ''வரப்பிரகாஷ் தினம்'' அனுட்டித்தாலும்,*
*இத்தகையோர் திருந்தப்போவதில்லை.*
*பல்கலைக்கழகப் பண்பென்று,*
*இன்று போராடி நிற்கிறார்கள்!*
*வேரோடு களைதல் கடினம்தான்.*
*இத்தீமையை,*
*வளர்த்தவர்களே இன்று வழக்குத்தொடுக்கின்றார்கள்!*
*நல்லது,*
*மனமாற்றம் எனக் கொள்வோம்.*
*இப்போதாவது அறிவு வந்ததே எனமகிழ்வோம்.*
*விஷவிருட்சத்தை வேரோடு சாய்க்க வேண்டும்.*
*இலேசான காரியமில்லை.*

''அறிவிலே தெளிவு,
நெஞ்சிலே உறுதி,
அகத்திலே அன்பு''....
இவை போராடுவோரின் தகுதியாகட்டும்.
வரப்பிரகாஷ் இறந்ததல்ல,
இனியும் வரப்பிரகாஷ்'கள்,
இறக்காமல் இருக்க வேண்டும் என்பதே,
சிந்திக்க வேண்டிய பிரச்சினை.
தடுக்கும் கரங்கள் உறுதியுடன் நீளட்டும்.
சென்றவை போக வருபவை சிந்திப்போம்.
பகிடிவதைக்காய் தண்டனை வழங்க வேண்டுமெனின்,
இன்று பல்கலைக்கழகத்தில் இருக்கும்,
தொண்ணூறு சதவீத மாணவர்கள்,
தண்டனைக்குரியவர்களே!
நீங்கள் மட்டுமே அகப்பட்டுக்கொண்டீர்கள்.
தனியே உங்களை தண்டிப்பதில்.....
எனக்கு உடன்பாடு இல்லை.
உங்களை உங்கள் மனச்சாட்சியை விடவா,
மற்றவர்கள் தண்டிக்க முடியும்?
உங்கள் பிழையில் சமுதாயத்தின் பங்கும் உண்டு.
பகிடிவதையைப் பாதகச் செயலென,
ஒருமித்த குரலோடு,
சமுதாயம் இப்போதுதான் இனங்காட்டியுள்ளது.
குற்றம் எனத்தெரிந்த பின்பும் பிழை செய்பவன்தான்,
தண்டனைக்குரியவன்.
உங்களுக்கு வழங்கப்படும் மன்னிப்பே,
கடைசி மன்னிப்பாகட்டும்.

*திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால்,*
*திருட்டை ஒழித்தல் கூடுமோ?*
*மாணவர்கள்,*
*தன்மானத்தை,*
*பகிடிவதையிலல்ல படிப்பில் காட்டுங்கள்.*
*சக மாணவனின் மரணத்திலாவது,*
*மற்றையோருக்குத் தெளிவு பிறக்கட்டும்.*
*பிறக்கத்தவறினால்?*
*கேள்வி பிறக்கலாம்.*
*''அடி உதவுமாற்போல அண்ணன் தம்பி உதவான்''*
*பைந்தமிழ் சொல்லும் பழமொழி.*
*பதிலும் இதுவே!*
*திருந்துங்கள்!*
*அல்லது திருத்தப்படுவீர்கள்!*
*மாணவர் மனதில் இது மந்திரமாய்ப் பதியட்டும்.*
*நண்பர்களே உங்கள் பிழையை,*
*முதலும் கடைசியுமாய்ச் சமூகம் மன்னிக்கட்டும்.*
*நீங்கள் திருந்திய மனதுடன் கல்வியைத் தொடர,*
*வாழ்த்துக்கள்.*
*வெளிவருக! ஒளி பெறுக!!*

*இங்ஙனம்,*
*பண்டிதன்.*



# 14

## விளையாட்டு வீராங்கனை சுசந்திக்க ஜெயசிங்க

*இவள் இலங்கையின் புகழை,*
*உலக விளையாட்டரங்கில் ஏற்றியவள்.*
*ஏழைப் பெண்ணான இவள்,*
*எத்தனையோ இடர் கடந்து,*

*சாதனைகள் செய்து புகழ் கொண்டாள்.*
*இவள் சார்க்கிலும், யப்பானிலும் சாதனைகள் புரிந்தபோது,*
*உலகமே வியந்தது.*
*ஆரம்பத்திலிருந்து சர்ச்சைகளுக்கு ஆளாவது,*
*இவள் விதியாயிற்று.*
*இலங்கை இராணுவத்திலிருந்து*
*தப்பி ஓடி வந்தவள் என்றும்,*
*போதைவஸ்தின் அடிமை என்றும்,*
*இவள் பற்றி, பலப்பல செய்திகள்,*
*பத்திரிகைகளில் அலசப்பட்டன.*
*பயிற்சியாளர்கள்,*
*தன்னைப் பாலியல் ரீதியாகவும் இழிவு செய்வதாய்,*
*இவள் வெளியிட்ட அறிக்கை,*
*விளையாட்டு உலகை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.*
*இலங்கை அமைச்சர் மங்கள சமரவீர,*
*"கறுப்பின ஆண்மகன் போலிருக்கும் இவளையா?" என,*
*நையாண்டி பேச,*
*அதனால் மனம் வருந்தி,*
*இவளுக்கு ஆறுதலும், தெம்பும், அறிவுரையும் சொல்லி,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(23.11.1997 - தினக்குரல்)

(2000-ஆம் ஆண்டில் சிட்னியில் இடம்பெற்ற,
ஒலிம்பிக் போட்டியில் இவள் வெண்கலப் பதக்கம் பெற்று,
புகழ் சூடினாள் என்பது குறிப்பிடப்பட வேண்டிய செய்தி)

## விளையாட்டு வீராங்கனை சுசந்திகா ஜயசிங்கவுக்கு...

அன்புத் தங்கை சுசந்திகா ஜயசிங்கவுக்கு,
வணக்கம்.
நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.
உலக அரங்கில் நம் தேசத்தின் புகழை நிலைநிறுத்திய,
உன் பெயர்,
இன்று சர்ச்சைக்குள்ளாகிய நிலையில்.
மனவருத்தத்துடன் இருப்பாய்.
''பெண் என்று பூமிதனில் பிறந்து விட்டால்
பெரும் பீழை இருக்குதடி தங்கமே தங்கம்''.
பாரதி சும்மாவா பாடினான்?
இவ்வார்த்தைகளின் நிதர்சனத்தை,
ஏழைப் பெண்ணான நீ எப்போதோ உணர்ந்திருப்பாய்.
நீ கொடுத்த பேட்டிகளில் இருந்து,
உன் மன வருத்தத்தைப் புரிந்து கொண்டேன்.
''போட்டிகளில் கலந்து கொள்வதற்கான உடைகளைக்கூட,
ஆரம்பத்தில் இரவல் வாங்கினேன்'' என்ற,
உன் வார்த்தைகள் வருத்தம் செய்தன.
சகோதரி!
ஏதோ வகையில் உன் ஆற்றல் வெளிப்பட்டு விட்டதால்,
இதைச் சொல்லும் வாய்ப்பாவது உனக்குக் கிட்டியது.
தமிழராய்ப் பிறந்த குற்றத்திற்காக,
தம் ஆற்றல்களை வெளிப்படுத்தும்,
அனைத்து வாய்ப்புக்களையும் இழந்து,
பல ஆண்டுகளாய்த் தனிமைப் படுத்தப்பட்டிருக்கும்,

உன் தமிழ்ச் சகோதர, சகோதரிகளை எண்ணிப்பார்.
அவர்கள் வருத்தம் எத்துணை பெரிது.
அரசியல் அசிங்கத்தால்,
ஏற்றமுற வழியின்றி,
எல்லை அற்ற இளைஞர் சக்தி,
விழலுக்கு இறைத்த நீராய் வீணாவது,
இத்தேசத்தின் தலைவிதியாய் ஆகிவிட்டது.
ஏதோ இறைக்கருணை உன்மேல் இருந்ததால்,
இன்று நீ இந்நிலைக்கு உயர்த்தப்பட்டாய்.
ஒரு போர்க்களத்தில்,
அங்கம் இழந்தோ,
உயிர் இழந்தோ,
போயிருக்க வேண்டிய நீ,
காலம் தாழ்த்தியேனும் இனங் காணப்பட்டது,
பெரிய காரியம்.
முதன் முதல் "சார்க்" விளையாட்டு அரங்கில்,
உன் ஆற்றல் வெளிப்பட்ட போதுதான்,
பலர் கண்களும் உன் மேல் பதிந்தன.
தொடர்ந்து ஜப்பானில் நீ நாட்டிய புகழ்க் கொடியால்,
விரிந்த அக்கண்கள்,
உலக அரங்கில் திறமை காட்டி,
நீ வெள்ளிப்பதக்கத்தோடு வீறு நடை போட,
வியப்பால் பிதுங்கின.
இத்தேசத்தின் புதல்வியாகிய உன்னால்,
"ஒலிம்பிக்" பதக்கம் நம் நாட்டையும் நாடி வரலாம் என,
எல்லோர் மனதிலும் எதிர்பார்ப்பு.
வெள்ளிப் பதக்கத்தோடு மீண்ட உன்னை,

இத்தேசமே திரண்டு வரவேற்றது.
அரசின் சார்பாய்,
அமைச்சர்களும் உன்னை முத்தமிட்டு வரவேற்றனர்.
ஒரு தேசத்தலைவருக்கு நிகராய் விளம்பரம் தந்து,
செய்தி ஸ்தாபனங்கள் உன்னைக் குறிவைத்தன.
நீ திடீர்த் தாரகையானாய்.
மண்மேல் நடக்கவே வருந்திய நீ,
திடீரென, விண் மேல் வீறுநடை போட்டாய்.
உலக விளையாட்டரங்கில்,
ஓர் இடத்தையேனும் பிடித்துவிட வேண்டும் என்பதற்காக,
எத்தனையோ செல்வந்த நாடுகள் பாடுபட,
அரச உதவியின்றி தனி ஆற்றலால் வளர்ந்த நீ,
இவ் ஏழை நாட்டுக்கு,
அவ்வரங்கில் ஓர் இடம் பெற்றுத் தந்தாய்.
''உண்ண உணவுக்கும் வசதியின்றித் தவித்தேன்'' என,
உருக்கமாய்ப் பேசியிருக்கிறாய்.
ஒருவர் துணையுமின்றி உயர்ந்த,
உன் ஆற்றல் கண்டு வியக்கிறேன்.
காலம் தாழ்த்தியேனும்
உன் ஆற்றல் கணிக்கப்படுகின்றதே என,
நிறைவு உண்டாயிற்று.
ஓர் ஏழைப் பெண்ணின் எழுச்சி கண்டு,
இதயம் பூரித்தது.
அவை அனைத்தும் சிதையும் வண்ணம்,
அண்மையில் உன் அறிக்கை வெளிவந்தது.
''கணவனைக் கைவிடச் சொல்கிறார்கள்'' என்றும்,
''கற்பை விலை பேசுகிறார்கள்'' என்றும்,

பொதுசன நூல
விசேட சேர்க்கைப்

ஒரு கிராமப் பெண்ணாய்க் கொதித்திருந்தாய்.
''அமைதியான வாழ்வுக்காக, அனைத்தையும் துறப்பேன்'' என,
சவால் விட்டிருந்தாய்.
சோதரி!
உன் அறிக்கை கண்டு அதிர்ந்து போனேன்.
மறுநாளே,
துன்பம் துடைக்க,
அரசின் கை உன்னை நோக்கி நீளும் என எதிர்பார்த்தேன்.
பதிலாக,
பொறுப்புள்ள அமைச்சரிடமிருந்து,
நையாண்டி வார்த்தைகள் தெறித்து வீழ்ந்திருக்கின்றன.
கறுப்பின ஆண்மகனாய் நீ வர்ணிக்கப்பட்டதாய்ச் செய்தி.
செய்தியில் தவறு இருக்கும்,
மறுநாளே மறுப்பு வரும்,
என எதிர்பார்த்தேன்.
தென்னாபிரிக்கக் கறுப்பனா?
தென்னமெரிக்கக் கறுப்பனா?
என்பது பற்றித்தான் சர்ச்சை தொடர்கிறது.
''பெருமக்களுக்கு'' உன் ஆற்றல் பற்றியல்ல,
அழகு பற்றித்தான் பிரச்சினை.
பழம் புலவர்களில் பிழை கண்டு மகிழும்,
''விடுதலைப் பெண்மணிகள்'',
உனக்காக வீறுகொண்டு எழுவார்கள் என எதிர்பார்த்தேன்.
ஒரு நாள் அறிக்கையுடன்,
அவர்தம் எதிர்ப்புக்கள் ஓய்வுபெற்றன.
பொழுது போக்காய்ப் பெண் விடுதலைபற்றிப் பேசும்,
அம் மேற்தட்டுப் பெண்மணிகளின் குரலை அடக்க,

உயர் மட்டத்தின்,
ஒரு தொலைபேசி அழைப்புப் போதாதா?
எனினும் அஞ்சாமல்,
தனித்தே போராடும் உன் "ஓர்மத்தை",
மெச்சுகிறேன்.
உலக வீராங்கனையாகிய நீ,
ஒரு குடும்பப் பெண்ணாகவும்,
உன்னை நிலைநிறுத்தக் காட்டும் உறுதிகண்டு,
பழமையில் ஊறிய இப்பண்டிதனின் மனம்,
பரவசப்படுகின்றது.
நியாயமான உன் கேள்விகளுக்கு,
உனது தவறுகளைப் பதிலாய்க் காட்டி,
"பெரியவர்கள்" தப்பப்பார்க்கின்றார்கள்.
எதிர்க் கட்சியோ,
அரசை மட்டம்தட்ட ஒரு வாய்ப்புக் கிடைத்ததாய் எண்ணி,
உனக்கு "வால் முறுக்குகிறது."
உன்னாற்றலை,
இத்தேசத்தின் புகழுக்காய்ப் பயன்படுத்தும் அக்கறையை,
யாரிடமும் காணோம்.
எதில் எதில் அரசியலைக் கலப்பது என்னும்,
விவஸ்த்தையே இல்லாமல் இந்நாட்டுத் தலைவர்கள்.
இந்நிலையில்,
உன் ஆற்றலால்,
நம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய புகழ்,
கானல்நீராய்க் கலைந்து போய் விடுமோ? எனக்
கவலை உறுகிறேன்.
இப் பிரச்சினைகளில் இருந்து மீண்டு,

நீ எழுச்சி கொள்ள வேண்டுமெனவும்.
உன்னாற்றலால்,
இத்தேசத்தின் புகழ் உயர வேண்டுமெனவும்,
பிரார்த்திக்கின்றேன்.
சோதரி!,
அதே நேரம் உனக்கும் சில அறிவுரைகள்.
என்ன காரணமோ தெரியவில்லை,
சமுதாயப் பார்வையில் வந்த நாள் தொடக்கம்,
உன்னைச் சுற்றிச் சர்ச்சைகள்.
இராணுவத்தால் தப்பி ஓடியவள் என்றும்,
போதைவஸ்த்துப் பாவித்து வெற்றி பெற்றவள் என்றும்,
ஒழுக்க விதிகளை மீறினாள் என்றும்,
தொடர்ந்து உன்மேற் பழிகள்.
இரகசியத் திருமணம்,
மேலதிகாரியின் சேட்டை என,
செய்திகள் தொடருகின்றன.
குற்றச்சாட்டுகளின்,
உண்மை பொய் ஒரு புறம் இருக்கட்டும்.
உலக அரங்கில்,
இன்று நீ நம் தேசப்பிரதிநிதி.
சர்ச்சைகளைத் தவிர்த்து நடப்பது,
உன் எதிர்காலத்திற்கு நல்லது.
கறை எல்லா இடத்திலும்தான் இருக்கிறது.
எனினும்,
நிலவின் கறை பரவலாய்ப் பேசப்படுதல் தவிர்க்க முடியாதது.
அது பிரகாசத்தின் பிரதிபலிப்பு.
ஒளியைப் பாராட்டுபவர்களுக்கு,

கறைபற்றிக் கவலைப்படவும் உரிமை உண்டு.
இரண்டையும் ஏற்பது நிலவின் கடமை.
எனவே இயன்றளவு விமர்சனத்துக்கு அப்பால்,
வாழப்பழகு.
கீழே இருந்து திடீரென மேலே வந்தவள் நீ.
சமநிலையில் தடுமாற்றம் வருதல் இயற்கையே.
விளையாட்டு வீராங்கனையான உனக்கு,
நான் சொல்லத் தேவையில்லை.
On Your Mark, Get Set, Ready Go.
விளையாட்டரங்கில் இதை எத்தனையோ தரம் கேட்டிருப்பாய்,
வாழ்க்கையிலும் இவ்வார்த்தைகளை நினைவுகொள்.
உடனடியாக உன் சமநிலையை உறுதிப்படுத்து.
முன்னுதாரணம் தேவையெனில்....,
கிரிக்கட் உலகின் வீறு நடை போடும்,
ஜயசூரியா அண்ணனைப் பார்த்துப் பழகு.
இலங்கையின் புகழை,
உலக அரங்கில்,
இரண்டு S.J. க்கள் தான்,
நிலை நிறுத்துவதாய் விமர்சகர்கள் வியக்கிறார்கள்.
அவர்கள் வாக்கு உண்மையாகட்டும்.
''சனத் ஜயசூரியா'' என்ற பெயர் போல்,
''சுசந்திகா ஜயசிங்க'' என்ற பெயரும்,
இத்தேச மக்களால்,
புனிதத்துடன் போற்றப்பட வேண்டும்.
இதுவே எனது ஆசை.
தடைகளைத் தாண்டு.
புரட்சிப் பெண்ணாய்ப் புதுமை செய்.

*விளையாட்டரங்கில் மட்டுமல்ல,*
*வாழ்விலும் உன் ஓட்டம் வெற்றி பெறட்டும்.*
*வாழ்த்துக்கள்.*
*"ஒலிம்பிக்" பதக்கத்தோடு நீ திரும்பும்போது,*
*மீண்டும் எழுதுவேன்.*
*வெல்க.*

*இங்ஙனம்,*
*பண்டிதன்.*



# 15

## மாண்புமிகு நீதியரசர் ஜெயின்

*ராஜீவ் காந்தி கொலைபற்றி ஆராயவென அமைக்கப்பட்ட,*
*விசாரணைக் கொமிசனுக்குத் தலைமையேற்ற நீதியரசர் இவர்.*
*20.11.1997இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட,*
*இவரது இடைக்கால அறிக்கை,*
*முன்னாள் பிரதமர் சந்திரசேகர், நீதியமைச்சர் சிதம்பரம்,*

*முன்னாட் அமைச்சரவைச் செயலர் பாண்டே,*
*திராவிட முன்னேற்றக் கழகம்,*
*தமிழ்நாட்டு மக்கள் ஆகியோரை,*
*ராஜீவ் கொலை சம்மந்தமாகக் குற்றம் சாட்டி,*
*பல சர்ச்சைகளைக் கிளப்பிற்று.*
*அப்போது ஆட்சியிலிருந்த குஜரால் தமையிலான,*
*ஐக்கிய முன்னணி அரசுக்கு,*
*ஆதரவு அளித்த சீத்தாராம கேசரி தலைமையிலான,*
*இந்திரா காங்கிரஸ் கட்சி,*
*ஆதரவு அளித்த மற்றொரு கட்சியான,*
*தி.மு.க.வை வெளியேற்ற வலியுறுத்தியது.*
*இச்சர்ச்சையில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள்,*
*இலங்கைத் தீவிரவாத அமைப்புக்களுடன்,*
*தமிழகக் காங்கிரஸுக்கும், இந்திரா காங்கிரஸுக்கும்,*
*ஆரம்பம் தொட்டு இருந்த தொடர்புகளை வெளிப்படுத்தி,*
*தி.மு.க. வெளியேற்றப்பட வேண்டும் எனும் கருத்தைக் கண்டித்தார்.*
*இங்ஙனமாய்ப் பல சர்ச்சைகளைக் கிளப்பிய,*
*அறிக்கையைச் சமர்ப்பித்த நீதிபதி ஜெயின் அவர்களுக்கு,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(30.11.1997 - தினக்குரல்)

(இப்பிரச்சினைகளின் பின் கேசரி தலைமையிலான,
இந்திரா காங்கிரஸ் கட்சி ஐக்கிய முன்னணி அரசுக்கான,
தனது ஆதரவினை விலக்க அரசு கலைக்கப்பட்டு,
இடைக்காலத் தேர்தல் அறிவிக்கப்பட,
அத்தேர்தலில் பாரதியஜனதா கூட்டணி அரசு வெற்றி பெற்றது.)

## நீதியரசர் ஜெயின் அவர்களுக்கு...

மாண்புமிகு நீதியரசர் ஜெயின் அவர்கட்கு,
வணக்கம்.
நலம்வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.
தங்கள் அறிக்கையால் தாய்நாட்டு அரசியல்,
இன்று கலங்கிக் கொண்டிருக்கின்றது.
இடைக்கால அறிக்கைக்கே இத்தனை பலமா?
கடந்த சில ஆண்டுகளாகத் தாங்கள் ஆராய்ந்தறிந்த,
நிஜங்களை வெளியிட்டுள்ளீர்கள்.
மலையைக் கிண்டி எலியைப் பிடித்த கதையாய்,
திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும்,
விடுதலைப் புலிகளுக்கும்,
தொடர்பிருந்ததாய்க் கண்டுபிடித்திருக்கிறீர்கள்.
சிரிப்புத்தான் வருகிறது.
ஈழப் போராளிக் குழுக்களை
இந்தியா தத்தெடுத்து வளர்த்ததும்,
மோத விட்டதும்,
பின் தானே மோதியதும் உலகறிந்த இரகசியம்.
இதைக் கண்டுபிடிக்க நீங்கள் இவ்வளவு
சிரமப்பட்டிருக்கிறீர்கள்.
கமிஷன் அமைத்துக் கண்டுபிடிக்க வேண்டிய விடயமா இது?
''கைப்புண்ணுக்குக் கண்ணாடி''.
உங்கள் அறிக்கை கண்டு,
இந்திராகாங்கிரஸ் கட்சி கொதித்தெழுந்துள்ளது.
கேசரித்தாத்தா ''கேசரியாய்'' (சிங்கம்) கர்ச்சிக்கின்றார்.
புலிகள் உட்பட்ட போராளிக் குழுக்களை அழைப்பித்து,

முகாம்களை அமைத்து,
பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கிக் கைதூக்கி விட்டவர்,
அவர்கள் கட்சியின் ஸ்தாபகர்
இந்திரா அம்மையார்தான் என்பதை,
ஏனோ அவர்கள் மறந்து விட்டார்கள்.
அது மட்டுமா?
ராஜீவ் காலத்திலும்,
புலிகளுடனான மத்திய அரசின் தொடர்பு தொடர்ந்தது.
முன்னாள் பிரதமர் வி.பி.சிங்,
தற்போது அதுபற்றிய செய்திகளை வெளியிட்டுள்ளார்.
அது தவிர,
கருணாநிதியினதும், எம்.ஜி.ஆர். இனதும்,
புலிகளுடனான தொடர்பையும்,
புலிகளுக்கான ஜெயலலிதாவின் ஆதரவையும்
பகிரங்கப் படுத்தியுள்ளார்.
இதைவிட முக்கியமாக...
"நரசிம்மராவின் அரசு ராஜீவ் கொலையைப்பற்றிய,
முக்கிய கோப்புக்களை என்னிடம் தர மறுத்தது" என்று,
நீங்களே ஒரு சஞ்சிகைக்குப் பேட்டி அளித்துள்ளீர்கள்.
இக்கொலைபற்றிய முழு விபரங்களையும் வெளிக் கொணர,
இந்திரா காங்கிரஸ்காரர்களே விரும்பவில்லை என்பது,
தங்களால் வெட்ட வெளிச்சமாயிருக்கிறது.
இவ்வளவும் தங்கள் அறிக்கை கலக்கிய கலக்கலால்,
வெளிவந்த அழுக்குகள்.
மொத்தத்தில் தங்கள் ஆராய்வால்,
இரண்டு "பேருண்மைகள்" உலகுக்குத்
தெரியவந்திருக்கின்றன.

ராஜீவ் கொலைப் பழியைப் புலிகள்மேல் "சுமத்துவதோடு",
அவ்வழக்கு முடிந்துவிட வேண்டும் எனக்,
காங்கிரஸ் கட்சி விரும்புகிறது என்பது ஒன்று.
கொலை ஆராய்ச்சி,
"அம்பு" அளவில் நின்றுவிட வேண்டும்,
"எய்தவனைத்" தேடவேண்டாம் என்பது,
இந்திராகாங்கிரஸின் முடிந்த முடிவெனத் தெளிவாகிறது.
மற்றையது,
இந்தியத் தலைவர்களின் வாய்வழியாகவே,
ஈழத்தமிழர்கள் பிரச்சினையிலும்,
இலங்கையின் உள்விவகாரத்திலும்,
இந்தியா எத்தனை தூரம் தலையிட்டிருக்கிறது,
என்பதுபற்றி வெளிவந்திருக்கும் உண்மைகள்.
இவ்விரு பேருண்மைகளையும்,
உலகுக்கு எடுத்துக் காட்டியமைக்காக,
ஈழத்தமிழர்கள் தங்கட்கு பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.
அந்நன்றியுரைக்கவே இக்கடிதம்.
பாரதம் தன் தேவை முடிந்ததும்,
"சட்டி சுட்டதடா கை விட்டதடா"
எனும் பாணியில்,
இனப்பிரச்சினை,
இலங்கையின் உள்விவகாரம் எனப் பேசிவருகிறது.
இன்றைய இந்திய அரசின் இந்த "போலித்துறவை",
வெளிச்சம் போட்டுக் காட்டிய உங்கள் அறிக்கையை
என்றும் மறவோம்.
"யானை தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்ட"
கதையாய்,

தாய்நாடு தான் அமைத்த விசாரணைக் கமிஷன் மூலம்,
தன்னையே வெளிப்படுத்தி விட்டது.
உண்மைகள் நீண்ட நாட்கள் உறங்குவதில்லை.
தட்டி எழுப்பிய,
தங்களை நன்றியோடு வணங்குகிறேன்.

பணிவுடன்,
பண்டிதன்.



# 16

# யாழ்மண்ணில் காணாமற் போனவர்கள்

*1983இன் பின்,*
*இலங்கை, இனப்பிரச்சினையால் எரியத் தொடங்கியது.*
*தமிழர் உரிமைக்காகத் தமிழ் இளைஞர் சிலர்,*
*ஆயுதம் ஏந்திப் போராடத் தலைப்பட்டனர்.*

*அரசுப்படைகளுக்கும் அவர்களுக்கும் இடையில்,*
*நடந்த மோதல்களால்,*
*யாழ்மண் போர்க்களமானது.*
*வெற்றி தோல்வி மாறி மாறி இருவர்க்குமாக,*
*போர் தொடர்ந்தது.*
*யாழ் தமிழ்மக்கள் எல்லையற்ற அல்லலுற்றனர்.*
*இந்திய இராணுவம் வெறியேறிய பின்,*
*ஆறாண்டுகளுக்கு மேலாக,*
*யாழ்ப்பாணம் புலிகளின் நிர்வாகத்திற்கு உட்பட்டது.*
*பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்று,*
*புலிகளுடன் பேச முயன்று அது தோல்வியில் முடிய,*
*யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவெனப்,*
*பெரும் போர் மேற்கொண்டது.*
*இப்போருக்கு அஞ்சி யாழ் மண்ணில் வாழ்ந்த,*
*8 லட்சம் தமிழர்களும் ஒரே நாளில் இடம் பெயர்ந்தனர்.*
*பின் அரசபடையின் கட்டுப்பாட்டினுள் யாழ்ப்பாணம் வர,*
*1996இல், மீண்டும் தம் இடம் சேர்ந்தனர்.*
*அங்ஙனமாய் மீளக் குடியேறியவர்களிற் சிலர்,*
*புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்று,*
*கைது செய்யப்பட்டுப் பின் காணாமற் போயினர்.*
*என்ன ஆனார்கள் என்று தெரியாத அவர்களுக்கு*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(14.12.1997 - தினக்குரல்)

## யாழ். மண்ணில்
## 1996 மீள்குடியேற்றத்தின் பின்,
## காணாமல் போனோர்க்கு...

*வணக்கம்.*
*நலத்துடன் நீங்கள் இருக்க வேண்டும் என,*
*பிரார்த்திக்கின்றேன்.*
*நலமில்லாவிடினும்,*
*உயிருடனாவது இருக்க வேண்டும் என,*
*அன்றாடம் கடவுளைத் தொழுகிறேன்.*
*முகவரி தெரியாதோர்க்கு எழுதும் முதற்கடிதம் இது.*
*நீங்கள் உயிருடன் இருக்கிறீர்களா,*
*இல்லையா என்று தெரியாமல்,*
*உங்கள் உறவினர் படும் பாடும்,*
*பொழியும் கண்ணீரும்,*
*வேதனையின் "சிகர" வெளிப்பாடுகள்.*
*ஜனநாயகநாட்டில் (நம்நாட்டை இன்றும் அப்படித்தான்*
*சொல்கிறார்கள்),*
*வீடு வந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள்,*
*எங்கிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாத நிலை.*
*சுதந்திரப் பொன்விழா ஆண்டில்*
*போற்றப்பட வேண்டிய உயர்ச்சி!*
*1995 நவம்பர் மாதத்தில்,*
*யாருமற்ற அநாதைகளாய்,*
*சொந்த இடம் விட்டு ஓடிய,*
*அந்த நாளை நினைத்துப் பார்க்கின்றேன்.*
*அன்று,*

காக்க வேண்டிய அரசே,
தாக்குதல் செய்ய,
நம்மை நாமே காக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.
கூடு கலைந்திட்ட குருவிகளாய்,
பூவும், பிஞ்சும், வேருமாய்ப் புறப்பட்ட,
அந்த நாளை மறக்கத்தான் முடியுமா?
அன்று,
எம்மை ஏன் என்று கேட்க எந்த நாதியுமில்லை.
இன்றோ,
எடுத்ததற்கெல்லாம் கேள்வி கேட்க ஆயிரம் பேர்.
ஏன் நமக்கு இந்த விதி?
துன்பந் தொலைந்து போகும் என்ற நம்பிக்கையோடு,
சொந்தமண் திரும்பிய,
நீங்கள் தொலைந்து போயிருக்கிறீர்கள்.
பொதுமக்களாகிய நீங்கள் செய்த குற்றம்தான் என்ன?
புலிகளோடு தொடர்பு வைத்திருந்தீர்களாம்.
புலிகளோடு தொடர்பு வைக்கவேண்டும் என்று,
அரச அமைச்சர்களிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர்வரை,
பாராளுமன்றத்தில் இன்றும் பேசுகிறார்கள்.
இவர்களில் ஒருவரை,
காணாமல் போகச் செய்ய முடியுமா?
மக்களேற்றிய பீடங்களிலிருந்து அவர்கள் பேசினால்,
அது இராஜதந்திரம்.
மண்ணிலிருந்து நீங்கள் பேசினால்,
அது தேசத்துரோகம்.
"மாமியார் உடைத்தால் மண்குடம்,
மருமகள் உடைத்தால் பொன்குடம்" என்ற கதைதான்.

மக்களவைக்கும், மக்களுக்கும் இடையிலான தூரம்,
மிகமிக அதிகரித்து விட்டது.
''ஜனநாயகம்'' இறுதி மூச்சிழுத்தபடி.
புலிகளின் தொடர்புக்காய்,
நீங்கள் காணாமற் போனீர்கள் என்பதை நினைக்க,
சிரிப்புத்தான் வருகிறது.
புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தவர்கள்,
புலிகளை நட்சத்திர விடுதிகளிலே தங்க வைத்து
உறவாடியவர்கள்,
புலிகளுடன் கைகுலுக்கி,
புலிக்கொடியின் கீழிருந்து பேசியவர்கள் என,
இவர்களெல்லாம் குற்றவாளிகள் அல்லராம்.
ஒரு நேர உணவும், தேநீரும் கொடுத்துதவிய,
நீங்கள் குற்றவாளிகளாம்.
என்னே இந்நாட்டின் அரச நீதி!
''புலிகளின் நிர்வாகத்தின் கீழ்,
எங்களை ஏன் வாழ விட்டீர்கள்?'' என,
நீங்கள் கேட்டால்,
இந் நாட்டை ஆண்டவர்கள்,
என்ன பதில் சொல்லப் போகின்றார்கள்?
ஓ....! அறியாமல் எழுதுகிறேன்.
இந் நாட்டில்,
''கேள்விக்குரியவர்கள்'' என்ற தகுதிதான் தமிழர்க்கு.
கேள்விகேட்க அவர்களுக்கு என்றுதான் சுதந்திரம் தந்தார்கள்.
நீதியும், நீதிமன்றங்களும், நீதிபதிகளும், சட்டங்களும்,
இன்றும் இந் நாட்டில் இருப்பதாகச் சொல்கிறார்கள்.
''பேய் அரசாள, பிணந்தின்னுஞ் சாத்திரங்கள்'',

பாரதி நெஞ்சைச் சுடுகிறான்.
''யாரால் இவர்கள் தொலைந்து போனார்களோ?''
அரசைப் பாதுகாக்கும் முயற்சியிற் சிலரின் கேள்வி.
யாராற் தொலைந்திருந்தாலும்.....,
பதில் சொல்ல வேண்டியது அரசுதான்.
ஒரு ஜனநாயக நாட்டில்,
எப்போதும் இதுவே பதில்.
யாழ்ப்பாணத்தைப் புலிகளிடமிருந்து கைப்பற்றி,
கொடியேற்றிக் கொண்டாடியபோது இருந்தபொறுப்பு,
பதில் சொல்வதில் வேண்டாமா?.
தனிமனித வாழ்வின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே,
மக்கள் வரிப்பணத்தில் அரசமைக்கப்படுகிறது.
அப்பாதுகாப்பே கேள்விக்குரியதானால்,
அரசெதற்கு?
தமிழ் மக்களின்,
''பதிலில்லாக் கேள்விப்பட்டியல்'',
நீண்டு கொண்டே போகிறது.
போகட்டும்.
நீங்கள் தொலைந்தாலும் நீதி தொலையாது,
அது திண்ணம்.
''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்''
காலம் கடந்து நிலைக்கும்,
சமணத்துறவியின் மணிவாக்கை,
அறியார், அறியாரே!.
மனைவி, மக்கள், உறவெனக் கூடி வாழ்ந்த,
தமிழர்களின் நெஞ்சத்து மெல்லுணர்வுகள் எல்லாம்,
எருமைக்கால் பட்ட எழில் மலர்களாய்,

*சிதைவுற்ற நிலையில்....*
*உங்கள் குடும்பத்தார்க்கு,*
*என்ன ஆறுதல் சொல்வதென்றும்,*
*யார் ஆறுதல் சொல்வதென்றும்,*
*எப்படி ஆறுதல் சொல்வதென்றும்,*
*ஒருவருக்கும் புரியவில்லை.*
*உங்கள் குடும்பத்தார் சோகத்தோடு இணைந்துகொள்கிறோம்.*
*நம்மால் ஆனது அவ்வளவே.*
*''தர்மத்தின் வாழ்வுதன்னைச் சூது கவ்வும்.*
*மீண்டும் தர்மம் வெல்லும்'',*
*பாரதியின் வாக்குப் பொய்க்குமா?.*
*நம்பிக்கையுடன் இருக்கிறோம்.*
*உங்கள் வருகை நோக்கியும்....*

*இங்ஙனம்,*
*பண்டிதன்.*



# 17

## இலங்கை நீதியமைச்சர்
## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

*பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு*
*வெற்றி பெற்றபோது,*
*தேர்தலில் நிற்காத இப்பேராசிரியர்,*
*ஜனாதிபதி சந்திரிக்காவினால்,*
*நீதியமைச்சர் ஆக்கப்பட்டார்.*

*அறிவியலாளரான இவர் பதவி ஏற்றதும்,*
*இனப் பிரச்சனையைத் தீர்க்க அனைவரையும் கூட்டி,*
*ஒரு தீர்வுத் திட்டத்தைச் சாத்தியப்படுத்துவதற்காக,*
*மூன்று ஆண்டுகளாய்,*
*பெரும் முயற்சி செய்தார்.*
*இவரால் முன் வைக்கப்பட்ட நகல் தீர்வுத் திட்டத்தை,*
*யாரும் முழுமையாய் அங்கீகரிக்கவில்லை.*
*இந்நிலையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட,*
*223 தமிழ் அரசியற் கைதிகள்*
*எவ்வித விசாரணையும் இன்றி,*
*கொழும்புச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டதால்,*
*தம்மை விசாரணைக்கு உட்படுத்தக் கோரி,*
*உண்ணாவிரதம் இருந்தனர்.*
*வழமையான உறுதி மொழிகளை நம்பி,*
*உண்ணாவிரதத்தைக் கைவிட்ட இவர்கள்,*
*பாதுகாப்பைக் காரணம் காட்டி,*
*களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.*
*அங்கு மனித உரிமைகள் தினமான,*
*டிசம்பர் 10ஆம் திகதி (1998),*
*இவர்களிற்பலர் சிறைச் சாலைக் காவலர்களால்,*
*துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர்.*
*இறந்த இக்கைதிகளின் உடல்கள்கூட,*
*சட்டத்தைக் காரணம் காட்டி,*
*தாய் மண்ணுக்குக் கொண்டு செல்லாமல் தடுக்கப்பட்டன.*
*இனி இவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்வேன் என,*
*நீதி அமைச்சர் அறிக்கை வெளியிட்டார்.*
*இச்செயல்களால் மனம் வருந்தி நீதியமைச்சருக்கு*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(21.12.1997 - தினக்குரல்)

## களுத்துறைச் சிறைச்சாலைக் கைதிகள் கொலைபற்றி மாண்புமிகு நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கட்கு...

மாண்புமிகு நீதியமைச்சர் அவர்கட்கு,
வணக்கம்.
நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன். (நாட்டினதும்)
ஆடம்பரமில்லாமல்,
அறிவுலகிலிருந்து அரசியலுக்கு வந்தவர் தாங்கள்.
அதனால்
அன்று தொட்டு தங்கள்மேல் எனக்கொரு நம்பிக்கை.
வாக்குகளுக்காக
வாக்குறுதிகளை அள்ளி வீசாமல் வந்தவராதலால்,
நிதானமாய்ச் செயற்படுவீர்களென ஓர் எதிர்பார்ப்பு.
அரசியற் பிரதிநிதியாக மட்டுமின்றி,
அறிவுலகப் பிரதிநிதியாகவும் இருப்பதால்,
''கட்சிநலன்'' என்னும் சுயநல நோக்கின்றி,
''தேசநலன்'' என்னும் தூயநோக்கோடு,
பிரச்சினைகளை
நிதர்சனமாய்ச் சந்திப்பீர்கள் என்னுமோர் கனவு.
நீண்ட நாட்களாக எமது நாட்டு அரசியலில்,
தொலைந்துபோன கண்ணியத்தை,
மீண்டும் காணலாம் என்று ஒரு நப்பாசை.
உண்மையின் குரல் இனி ஓங்கி ஒலிக்கும் எனும் விருப்பு.
இவையெல்லாம்
தாங்கள் பதவியேற்றபோது வந்த என் மன அலைகள்.
இன்று உலகெங்கும்,

நிதியும், பாதுகாப்புமே ஓர் அரசின் ஸ்திரத்தன்மைக்கு,
அவசிய அத்திவாரமாய்க் கருதப்படுகின்றன.
ஆனால்,
தமிழ்ப் பாரம்பரிய அரசியல் சிந்தனையாளர்களான,
வள்ளுவர்போன்ற பேரறிஞர்கள்,
இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.
நீதியே ஒரு அரசின் நிலைத்தலுக்கு
அடிப்படைக் காரணம் என,
அவர்கள் அடித்துக் கூறினர்.
பொருளாதாரம் எத்துணை சிறப்புற்றிருப்பினும்,
பாதுகாப்பு எத்துணை பலப்படினும்,
நீதி தவறுமாயின்....
ஒரு அரசினதும், நாட்டினதும் வீழ்ச்சி,
தவிர்க்க முடியாததாகிவிடும்.
இது இயற்கையையுணர்ந்த அத் தீர்க்கதரிசிகளின்,
இறுக்கமான எண்ணம்.
அப் பேரறிஞர்களைக் கற்றதால்,
தங்கள் செயற்பாடுகளில் எனக்கோர் அக்கறை.
அதனாற்றான் தாங்கள் அரசியலில் குதித்தபோது,
மேற்சொன்ன எண்ணங்கள் என்னுட் பிறந்தன.
தங்கள் ஆரம்பகால நடவடிக்கைகள்,
அவ்வெதிர்பார்ப்பிற்கு ஓரளவு உயிரூட்டியதும் உண்மையே.
முரண்டு பிடிக்கும் அனைவரையும் ஒன்றுகூட்டி,
மூண்டெரியும் நம்நாட்டு இனப்பிரச்சினைக்கு முடிவுகாண,
மூன்றாண்டுகளாய்த் தாங்கள் செய்த
பகீரதப் பிரயத்தனங்களை,
தூர இருந்தபடி அவதானித்தேன்.

நல்ல முடிவு காண்பீர்கள் எனும் என் நம்பிக்கை,
தாங்கள் வெளியிட்ட நகல் தீர்வுத்திட்டம் கண்டு,
நசிந்து போனது.
எதிர்க்கட்சி,
சிங்களத் தீவிரவாதிகள்,
பௌத்த பீடங்கள்,
தமிழ்க் கட்சிகள்,
புலிகள் என,
யாருமே தங்கள் திட்டத்தை முழுமையாய் ஏற்கவில்லை.
''ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்,
இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம்''
எனும் முயற்சிதான்!
எனினும்,
யாரும் ஏற்றுக்கொள்ளாத ஒரு தீர்வுத்திட்டம்,
சாத்தியமாதல் எங்ஙனம்?
தங்கள் பற்றிய என் எதிர்பார்ப்புகள்,
இதனால் தளரத் தொடங்கின என்றால்.....
அண்மையில் நடந்த
களுத்துறைச் சிறைச்சாலைக் கொலைச் சம்பவம்,
என் நம்பிக்கைகளை முற்றாகத் தகர்த்துவிட்டது.
அவ்வேதனையைத் தெரிவிக்கவே இக்கடிதம்.
நீதித்துறைக்கு இழுக்கூட்டிய கறுப்பு ஜூலையை,
நினைவூட்டும்படி நடந்திருக்கும் பாதகச் செயல்.
ஒரு ரயில் விபத்துக்காக தன் அமைச்சர் பதவியைத் துறந்த,
பாரதத்தின் ''லால்பகதூர் சாஸ்திரி'' நினைவுக்கு வருகிறார்.
அறிவியலாளரான தங்களிடமும்,
அத்தகு உயர் நடவடிக்கையை எதிர்பார்த்த எனக்கு,

மாபெரும் ஏமாற்றம்.
இனி நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன் என,
வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள்.
இத்தகு சம்பவம் எமது நாட்டில் நடைபெறுவது,
இதுதான் முதற்தடவையா?
எத்தனை முன் அனுபவங்கள்.
இம்முறைகூட முதல் நாட்களில் முயற்சி நடந்து,
பின் கொலைகள் நடந்திருக்கின்றன.
புகைப்படம் எடுக்குமளவிற்கு,
திட்டமிட்டுச் செய்யப்பட்ட கொலைகள்.
உயரதிகாரிகள் பார்த்திருக்க,
உயிர்கள் பறிக்கப்பட்டதாகச் செய்திகள் சொல்கின்றன.
இந்நிலையில்,
''இனி நடக்காமல் பார்த்துக்கொள்கிறேன்'' என,
யாரை நம்பி வாக்குக் கொடுக்கிறீர்கள்?
இறந்தவர்களின் உடல்களை,
தாய்மண்ணுக்கு எடுத்துச் செல்லாமல் தடுப்பதில் மாத்திரம்,
சட்டம் தன் வேலையைச் சரிவரச்(?) செய்திருக்கிறது.
இன்னும் பாதுகாப்பற்ற அதே சூழ்நிலையில் தமிழ்க்கைதிகள்.
ஒன்று நிச்சயமாகப் புரிகிறது.
இந் நாட்டில் நீதி சிங்களவர்களுக்கு மட்டுமே.
ஒரு தமிழனாய்,
நெஞ்சம் கொதிக்க,
தாங்கள் உள்ளிட்ட சிங்களத் தலைவர்கள் அனைவருக்கும்,
ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.
சிறுபான்மையினர்க்கான நீதி புறக்கணிக்கபடலாமென்றால்.....
இஸ்லாமியர்களைவிட,

*தமிழர்களைவிட,*
*பாதிப்புறப் போவது சிங்களவர்களே.*
*எப்படி? எனக்கேட்பீர்கள்.*
*இலங்கையென்ற ஒரு சிறு எல்லைக்குட்தான்,*
*மேற்குறித்த இரு இனத்தவர்களும் சிறுபான்மையினர்.*
*உலகம் எனப் பார்வையைச் சற்று விரித்தாலோ,*
*அவ்விரு இனமும்,*
*ஒப்பீட்டில்,*
*சிங்கள இனத்தைவிட மிகப்பெரிய இனங்களாய் மாறிவிடும்.*
*அந்நிலையேற்பட்டால்,*
*தங்கள் சிங்கள இனத்தின் கதி என்னவாகும்?*
*சிந்தித்துப் பாருங்கள்.*
*அப்போதும் சிறுபான்மையினருக்கு,*
*நீதி புறக்கணிக்கப்படலாம் என,*
*தாங்கள் சொல்வீர்களா?*
*கற்பனையாய்ப் பேசுகிறேன் என நகைப்பீர்கள்.*
*ஆனால் ஒன்று.*
*பிரிந்த நாடுகள் ஒன்றுபட்டு,*
*உலகம் சுருங்கிவரும் இக்காலத்தில்,*
*எதுவும் நடக்கலாம்.*
*நடுவு நிலையோடு நீதியைப் பேணுவது,*
*எப்போதும், எல்லோருக்கும் நல்லது.*
*"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"*
*நினைவூட்ட விரும்புகிறேன்.*

*இங்ஙனம்,*
*பண்டிதன்.*



# 18

## பிறக்கும் புத்தாண்டு

*1998 எனும் இவ்வாண்டு பிறந்த போது,*
*அவ்வாண்டை விளித்து,*
*கடந்த ஆண்டுகளில் இலங்கையில் நடக்கும் போரால்,*
*மக்கள் பட்ட இன்னல்கள் தீர்ந்து,*
*"உனது மடியிலாவது*
*சமாதானம் பிறக்க வழிசெய்வாயா?" எனக் கேட்டு*
*அப்புத்தாண்டுக்கு,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(04.01.1998 - தினக்குரல்)

## பிறக்கும் புத்தாண்டுக்கு...

புத்தாண்டே!
வணக்கம்.
நாம் நலம் எனச் சொன்னால் அது பொய்யாகும்.
நின் நலத்திற்காய்,
நான் மட்டுமல்ல இத்தேசமே பிரார்த்திக்கின்றது.
அமைதி நோக்கிய தமிழர்களின் விருப்பம்,
பல ஆண்டுகளாய்,
நாளை நாளையெனப் பிள்ளையார் கல்யாணம்போல்,
நீண்டு கொண்டிருக்கும் வேளையில்,
நீ உதித்திருக்கிறாய்.
உன் மடியிலாவது,
உண்மையும், சமாதானமும், சமத்துவமுமான வாழ்வும்,
இந்நாட்டு மக்களுக்குக் கிடைக்கட்டும்.
பகையெனும் "புரை" விழுந்த பாலாய்,
தமிழினமும், சிங்கள இனமும் "திரிந்து" கிடக்கின்றன.
தீர்க்கதரிசனமற்ற சுயநலத் தலைவர்களின் வழிகாட்டல்களால்,
இரு இன மக்களும்,
முகந் தெரியாமலே பகைவர்களாய்.
தனிமனிதராய்,
தத்தம் சொந்த உணர்வுத் தாக்கம் ஏதுமின்றி,
தமிழர், சிங்களவர் என்ற பொதுப் பெயர் கொண்டே,
ஒருவரை ஒருவர் பகைக்கப் பழகிவிட்டோம்.
ஒன்று சேர்க்கிறோம் என,
ஆட்சிக்கு வந்த அனைவரும்,
நட்பின் இடைவெளியை அதிகரித்தார்களேயன்றி,

வேறொன்றும் செய்யவில்லை.
மாரிகால மரவள்ளியாய்,
அவியாமல்,
ஒரே சட்டிக்குள்,
ஒருவரோடொருவர் ஒட்டாமல்,
இன்று இந்நாட்டு மக்கள்.
நாகவிகாரை வழிபாடு,
கீரிமலைக் குளியல்,
பனங்கள்ளு,
புழுக்கொடியல்,
யாழ்ப்பாண உபசரிப்பு என,
வடக்கைத் தேடிவந்த சிங்கள மக்களும்,
சிவனொளிபாதம்,
தலதாமாளிகை,
சிகிரியா தரிசனங்களுக்காக,
தெற்கைத் தேடிவந்த தமிழ் மக்களும்,
ஒருவரை ஒருவர் உண்மை அன்போடு நேசித்த காலம்,
மலையேறிவிட்டது.
உன் மடியிலாவது அக்காலம் மீண்டும் உதிக்குமா?
தமிழ் மக்கள் செய்த தவறுதான் என்ன?
தாய் மண்ணில்,
தம் தனித்துவமான மொழி, பண்பாடு, கலாசார
அடையாளங்களுடன்,
அவர்கள் வாழ நினைத்ததில் தவறென்ன?
தமது வாழ்வைத் தம் தாய் மண்ணிலன்றி,
அவர்கள் வேறெங்கு தேடுவார்கள்?
தமிழர்களின் இயல்பான அவ்வுரிமை நாட்டம்,
சிங்கள மக்களுக்கு,

பேரினவாதிகளாற் பகையாய்ப் போதிக்கப்பட்டது.
இம் மண்ணின் பூர்வீகக் குடிகளான தமிழர்களும்,
வந்தேறு குடிகள்போல,
தம்மிடம் உரிமைகளை யாசித்து நிற்க வேண்டும் என,
சிங்களவர்கள் எண்ணத் தலைப்பட்டார்கள்.
தாமே இந்நாட்டின் தனியுரிமையாளர்கள் என,
தவறாய்ச் சிங்களவர் தருக்குற்றனர்.
அவர்கள் எண்ணம் மீறப்பட்டபோது,
'சிற்றினம் தானே' எனும் அலட்சியத்தில்,
தமிழர்களின்,
உயிரும், மானமும், உடைமைகளும்,
நாடு முழுவதும்,
''இனக்கலவரம்'' எனும் அரக்கனால் பறிக்கப்பட்டன.
ஒருதரமல்ல,
பலதரம்.
உரிமை நோக்கிய தமிழர்களின் அன்புப்பாதை,
அலட்சியம் செய்யப்பட்டது.
''குனியக்குனிய குட்டுபவனும் மடையன்,
குட்டக் குட்டக் குனிபவனும் மடையன்'',
எனும் உண்மையைத் தமிழர்கள் உணர்ந்து கொண்டனர்.
அன்பும், உபசரிப்பும், கல்வியும், வழிபாடுமாக வளர்ந்த,
தமிழர் வாழ்வு திசை மாறியது.
ஆயுதமேந்த வேண்டிய அவசியம்
தமிழர்மேல் திணிக்கப்பட்டது.
நன்னீர் அருவிகளோடிய இம்மணணில்,
செந்நீர் அருவிகள் ஓடத்தொடங்கின.
இரு இனத்துள்ளும்,
ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டன.

இத்தேசம் தன்னைத்தானே சூறையாடிக் கொண்டது.
"ஏன் கொல்லப்பட்டோம்?" என,
காரணம் தெரியாமலேயே பலர் மாண்டு போயினர்.
சிங்கள இனத்திலும் தமிழினத்திலும்,
பிறக்கும்போதே பகையைக் கையிலேந்தியபடி,
புதிய சந்ததி தோன்றியது.
சர்வதேச அரசியலின் பாதிப்பால்,
இரு இனத்தின் கைகளிலும்,
வெற்றிக்கனி மாறிமாறி விழ,
வெற்றி நோக்கிய வெறி வீறுடன் எழ,
எப்போதும் சண்டையே இந்நாட்டின் அடையாளமாயிற்று.
சமாதானம்பற்றிய பேச்சுக்கள் இடையிடை பிறந்தாலும்,
தோற்றவர்கள் தம் மானத்தால் பின்வாங்க,
வென்றவர்கள் ஆணவத்தினால் அலட்சியப்படுத்த,
சமாதானம் நோக்கிய பேச்சுவார்த்தை,
"பேசா" வார்த்தையாகவே போய்விட்டது.
நடந்த ஓரிரு பேச்சுவார்த்தைகளும்,
இதயத்தால் அன்றி மூளையால் நடந்ததால்,
முறிந்து போயின.
இந்நிலையில்,
சமாதானக் கொடியோடு தேர்தல் களமிறங்கிய,
இன்றைய அரசும்,
நூறாண்டுப் பிரச்சினையை ஓராண்டில் தீர்க்க எண்ணி,
"அவசரச்சமையல்" ருசிக்காது போக,
பொறுமையிழந்து,
போரும் சமாதானமும் என,
புதுக்கொடி தூக்கி நிற்கின்றது.

*தலைவர்கள் எப்படியோ?*
*மக்களைப் பொறுத்தவரை,*
*சுதந்திரத்தினதும், சமாதானத்தினதும், அமைதியினதும்,*
*தேவை உணரப்பட்டு விட்டது,*
*இருபக்கமும்தான்.*
*மக்களின் விருப்பம்,*
*உன் மடியிலாவது நிறைவேற வேண்டுமென,*
*பிரார்த்திக்கிறேன்.*
*இருளோடு போராடி இருளை விரட்ட முடியாது.*
*ஒளியைக் கொண்டுவர,*
*அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.*
*ஒரு சிறு தீக்குச்சி பெருங்காட்டையே அழித்துவிடும்.*
*பகை, நட்பு எனும் இரண்டுக்கும் இது பொருத்தம்.*
*இத் தேசத்தை நிரப்பிக்கிடக்கும் ''பகைக்காடு'',*
*அன்பு, உண்மை, சமத்துவம் எனும் பொறிகளால்,*
*எரிந்து சாம்பலாகட்டும்.*
*அந் நற்காரியத்தைச் செய்த பெருமையை,*
*நீ தேடிக்கொள்ள வேண்டுமென்பதே என் விருப்பம்.*
*மற்றைய ஆண்டுகள்போல,*
*''இது எப்போ போய்த் தொலையும்'' என,*
*மக்களை நினைக்க வைக்காமல்,*
*''போகப் போகிறதே'' என,*
*ஏக்கத்தோடும், கண்ணீரோடும் உனக்குப் பிரியாவிடை தரும்,*
*நிலையை உருவாக்குவாயா?*
*மீண்டும் இத்தேசத்தில் ஒளி பிறக்க வழிகாட்டுவாயென,*
*எதிர்பார்க்கிறேன்!*

*இங்ஙனம்,*
*பண்டிதன்.*



19

# அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

*ஆசிரியராய்ப் பணி தொடங்கிய இப்பண்டிதை,*
*சமயச் சொற்பொழிவாளராய்ப் புகழ்பெற்று,*
*பின்னாளில்,*
*யாழ்ப்பாணத்திலுள்ள தெல்லிப்பளை எனும் ஊரில்,*
*அமைந்திருந்த துர்க்கை ஆலயத்தின்,*

*தர்மகர்த்தாவாய் ஆகி,*
*அவ்வாலயத்தைப் பிரபலப்படுத்தினார்.*
*இவர் வருகையால் எழுச்சியுற்று, பக்தர்கள் குவிய,*
*ஆலயத்தின் வருமானம் உயர்ந்தது.*
*இவ்வருமானத்தை சமயப்பணிகளுக்கு மாத்திரமன்றி,*
*சமூகப் பணிகளுக்குமாக ஆக்கிப் புதுமைசெய்தார் அம்மையார்.*
*அநாதைப் பிள்ளைகளைப் பாதுகாக்க,*
*இல்லம் அமைத்தார்.*
*போர் நடக்கும் எல்லையில் இருந்த இவ் ஆலயம்,*
*இராணுவத்தாக்குதலுக்குப் பலதரம் உள்ளானது.*
*அப்போதும் இவர்,*
*அசையாது தன்பணிகளை மேற்கொண்டார்.*
*இராணுவ முன்னேற்றத்தால்*
*இடம்பெயர நேர்ந்த போதெல்லாம்,*
*தான் வளர்த்த பிள்ளைகளைக் கைவிடாது,*
*தான் சென்ற இடமெல்லாம்*
*அவர்களையும் அழைத்துச் சென்று,*
*பல இன்னல்கள் மத்தியிலும்,*
*பெற்ற தாயாய் அப்பிள்ளைகளைப் பாதுகாத்தார்.*
*அவ் அன்னையின்*
*எழுபத்திமூன்றாவது பிறந்தநாளை ஒட்டி,*
*அவர் பணியைப் பாராட்டி,*
*பழம்பண்டிதரால் எழுதப்பட்ட பகிரங்கக் கடிதம்.*

(18.01.1998 - தினக்குரல்)

## அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கு...

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கு,
வணக்கம்.
தங்கள் நலத்திற்காய் அன்றாடம் பிரார்த்திக்கிறேன்.
தங்கள் ஒருவர் நலத்தில் பலரது நலமும் பொதிந்திருப்பதை,
அறிந்த அனைவருமே,
அங்ஙனமாய்ப் பிரார்த்திப்பர்.
எழுபத்து மூன்று அகவை நிறைந்ததாமே.
''மற்றவர் வயது வருடங்களாய்க் கழிய,
உன் வயது மட்டும் வரலாறாய்''..... என,
ஒரு, புதுக்கவிஞன் உங்களை வாழ்த்தியிருக்கிறான்.
எத்துணை உண்மை.
நம்மண்ணில் அறத்தின் வளர்ச்சி நோக்கி,
அதிகம் பேசியவரும் தாங்களே.
பேசப்பட்டவரும் தாங்களே.
கொடியேறிய கோவில்களிலெல்லாம்,
உங்கள் சொற்பொழிவுகளைக் கேட்டது,
நேற்றுப்போல் இருக்கிறது.
அடியார்களின் வருகையால்
புனிதம் பெற்ற திருத்தலங்கள்போல்,
தங்கள் விஜயத்தால் எழுச்சி கொண்ட,
ஆலயங்கள்தான் எத்தனை!
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியாய்,
சமயப்பணியாற்றத் தொடங்கிய நீங்கள்,
இன்று,

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியாய்
அனைவராலும் ஏற்கப்பட்டீர்கள்.
செல்வியாய் நின்று அன்னையாதல் இல்லறத்தில் இயல்பு.
துறவறத்திலும், அந்நிலை,
உங்கள் ஒருவராலேயே சாத்தியமாயிற்று.
உற்சவமூர்த்தியாய்
ஊரெல்லாம் ஓடித்திரிந்து பிரசங்கம் செய்த நீங்கள்,
மூல மூர்த்தியாய் தெல்லிப்பளையில் அமர்ந்ததும்,
துர்க்காதேவி கொண்ட விஸ்வரூபம் கண்டு,
உலகமே வியந்தது.
அதுவே தங்கள் தூய பணிக்குச் சான்றும் ஆயிற்று.
''அன்பேசிவம்'' என்ற நம் இந்து மத மூலத்தத்துவத்தைத்
தெளிவுற நீங்கள் புரிந்து கொண்டீர்கள்.
ஆணவமும் அகங்காரமும் மிகுந்த பல ஆலய
உரிமையாளர்களால்,
இடுக்குறிப்பெயராக்கப்பட்டிருந்த,
'தர்மகர்த்தா' என்ற சொல்,
தங்கள் வருகையால் மீண்டும் காரணப் பெயராயிற்று.
மற்றவர்கள், கோயிலை நோக்கி மக்களை ஈர்க்க,
நீங்களோ, மக்களை நோக்கிக் கோயிலைக் கொணர்ந்தீர்கள்.
இறந்தகால ஏக்கங்களுக்கும்
வருங்கால எதிர்பார்ப்புகளுக்குமே,
கோயிலும் வழிபாடும் என்ற நிலை மாற்றி,
நிகழ்கால வாழ்வுக்கும்
கோயிலும் வழிபாடும் வழிகாட்டும் என்று,
வரலாறு எழுதியவர் தாங்கள்.
''கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிருக்கும்'' உணவு தந்து,

காக்கும் அப்பரம்பொருள்,
யாழ்மக்களுக்கு வரப்போகும் இன்னலறிந்தே,
உங்களைப் படைத்திருப்பான் போலும்.
வடபகுதித் தமிழ்மக்கள் மீது,
மாரியாய் பொழியப்பட்ட குண்டுகளால்,
எத்தனையோ குழந்தைகள் அநாதைகளாக,
அன்னையாய் அனைவரையும் அணைத்துக் கொண்டீர்கள்.
துர்க்காபுரம் நோக்கிக் கையேந்தி வந்தவர்கள்,
அன்னை பராசக்தியின் அருள் கிட்டாவிட்டாலும்,
பண்டிதையின் அருள் கிட்டும் என நிச்சயமாய் நம்பினர்.
அவர்கள் நம்பிக்கை பொய்யாகவில்லை.
பெண்விடுதலை பேசிய பெரிய இடத்துப் பெண்களெல்லாம்,
போர் கண்டு பயந்து கொழும்பிற் குடியேற,
யாரும் அணுக அஞ்சும் இராணுவ எல்லையில்,
''எல்லைக்காளியாய்'' ஏழைகளைக் காத்துநின்ற,
தங்கள் விஸ்வரூபம் கண்டு வியந்திருக்கிறேன்.
''சைவமும், தமிழும்'' என்ற தொடரை நையாண்டி செய்த,
பல, ''படித்தபாமரரின்'' வாய்கள்,
அவ்விரண்டினது வளர்ச்சிக்கும்,
ஆலயத்தை, நிலைக்களனாக்கிய தங்கள் ஆற்றல் கண்டு,
அடைத்துப் போயின.
பல அநாதை நிலையங்கள்,
அநாதைப் பிள்ளைகளை, அநாதைகளாகவே பராமரிக்க,
தாங்களோ,
''நாங்களும் அநாதைகளாக மாட்டோமா?'' என,
மற்றவர் ஏங்கும் வண்ணம்,
பெற்ற பிள்ளைகளின் மேலாக,

அக்குழந்தைகளைப் பேணிக்காத்தீர்கள்.
உங்கள் ஆலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சில்,
நீங்கள் வளர்த்த அநாதைக்குழந்தை ஒன்று இறந்துபோக,
தாயாய்க் கதறிய உங்கள் தயை கண்டு தவித்திருக்கிறேன்.
இரண்டாண்டுகளின்முன்,
ஊர்விட்டு அனைவரும் ஓடும் சூழ்நிலையிலும்,
நமக்கென்ன? என்று கையுதறாமல்,
தாய்ப்பூனை குட்டிகளைக் காவுவதுபோல,
பொறுப்பேற்ற குழந்தைகளை,
இடம்மாற்றி, இடம்மாற்றிக் காவித்திரிந்த,
உங்கள் கருணை கண்டு கலங்கியிருக்கிறேன்.
தாயே,
இன்று சிலர் உங்களை அன்னை தெரேசாவாய்
உவமிக்கின்றனர்.
உவமானம் எப்போதும் உவமேயத்திற் சிறப்பாதல் நியதி.
எனவே இவ்வுவமிப்பில் எனக்கு உடன்பாடு இல்லை.
அன்னை தெரேசாவுடனான ஒப்பீட்டில்,
தாங்களே உவமானமாய் ஆக வேண்டியவர்.
தங்கள் மேல் கொண்ட அன்பினாலோ, அபிமானத்தினாலோ,
நான் இதைச் சொல்லவில்லை.
உண்மையை உரைக்கின்றேன்.
அன்னை தெரேசாவின் தொண்டின் பின்னணியில்,
உலகளாவி விரிந்த,
கிறிஸ்தவக் கைகளின் நிர்வாகப்பலமிருந்தது.
தங்கள் தொண்டின் பின்னாலோ,
தனித்த உங்கள் ஆத்மபலம் மட்டுமே.
நம் தமிழினத்தின் துன்ப வாழ்வோ,

தொடுவானமாய் நீண்டு செல்கிறது.
நாம் செய்த தவக்குறைவு போலும்.
முடிவுரைப்பார் யாருமிலர்.
சம்பந்தப்பட்ட எல்லோரும்,
அவரவர் நலன் கருதிய முயற்சிகளில்.
இந்நிலையில்,
அநாதைகளின் உற்பத்தி நிலையமாய் ஆகியிருக்கும்,
யாழ் மண்ணை,
உங்கள் வாழ்வு "கற்பகத்தருவாய்" நிழல் செய்யும்.
அது நோக்கி....
பொது நலத்திற்காய் வாழும் தங்கள் ஆயுள் நீடிப்புக்காக,
சுயநலத்தோடு பிரார்த்திக்கின்றோம்.
பெரியபுராணத்தில் தங்கள் பெயரை இணைக்க
மற்றொருசேக்கிழார் தேவைப்படுகிறார்.
கருணையோடு தமிழினத்தைப் பல்லாண்டு தாங்கிய,
தங்கள் நாமத்தை,
நன்றியோடு தமிழினம்,
பல்லாண்டு போற்றி நிற்கும்.
வாழ்த்த நான் யார்?
வணங்கி நிற்கிறேன்.

அன்புடன்,
பண்டிதன்.




# 20

# தேர்தலைச் சந்திக்கவிருக்கும் யாழ்மக்கள்

*1995ஆம் ஆண்டின் பின்,*
*புலிகளிடமிருந்து இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட,*
*யாழ்ப்பாணத்தில்,*
*29.01.98இல் தேர்தல் நடத்தப்பட்டது.*

*பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில்*
*50 வீதத்தினரே யாழ்ப்பாணத்தில் உள்ள சூழ்நிலையில்,*
*நடத்தப்பட்ட இத்தேர்தலில்,*
*மக்களுக்கு ஆர்வம் இருக்கவில்லை.*
*அரச சார்பான சில தீவிரவாதத் தமிழ்க்கட்சிகளும்,*
*கூட்டணியினரும் இத்தேர்தலில் பங்கேற்றனர்.*
*இராணுவக் கெடுபிடியுடன்,*
*நடைபெற இருந்த இந்த "ஜனநாயகத்"(?) தேர்தலுக்கு,*
*முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்த,*
*யாழ் தமிழ் மக்களுக்கு,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(25.01.1998 - தினக்குரல்)

## தேர்தலை சந்திக்கவிருக்கும்
## யாழ் மக்களுக்கு...

நேசத்துரிய யாழ்ப்பாணமக்களுக்கு,
வணக்கம்.
நலமுறப் பிரார்த்திக்கிறேன்.
நீண்ட காலத்தின் பின்,
தேர்தலில் வாக்களிக்கப் போகும் மகிழ்ச்சியில்
நீங்கள் இருப்பதாய்,
இங்கு பேசப்படுகின்றது.
கடந்த பல ஆண்டுகளாகவே,
உங்கள் விருப்பங்களை மற்றவர்கள்தான் பேசி வருகிறார்கள்.
உண்மையான உங்கள் விருப்பம்,
ஆண்டவனுக்கே வெளிச்சம்.
யார் எதைச் சொன்னாலும்,
உங்களுள் ஒருவன் என்ற நிலையில்,
உங்கள் மனநிலையை நன்கு அறிவேன்.
''எத்தைத் தின்றால் பித்தம் தீரும்'',
என்ற நிலையிலிருக்கும் உங்களுக்கு,
தேர்தலாவது மண்ணாவது?
உலகத்திடம் தான்நீட்டும் திருவோட்டில்,
அதிகப்பிச்சை விழச்செய்யும் அரசாங்கத்தின் முயற்சி இது.
உங்கள் பெயரால் உலகத்திடம்,
அரசாங்கம் இனி அதிகநிவாரணம் பெறும்.
''கூட்டாஞ்சோறு'' சமைத்துக் குதூகலிக்கும்,
குழந்தைகள்போல,
விளையாட்டுத் தேர்தலால்,

அரசாங்கம் வீறு கொள்ளப் போகிறது.
பாவம் நீங்கள்,
உங்கள் சம்மதம் இன்றியே,
உங்கள் பெயரால் நடைபெறும் அனைத்தையும் பார்த்தபடி.
தமிழர்க்குக் கைகொடுக்க வந்த இந்திய அரசு,
கபடமாய் நடத்திக்காட்டிய தேர்தலின்,
இரண்டாம் பதிப்பு அரங்கேறப்போகிறது.
முன் அனுபவம் நோக்காத முயற்சி.
"நோய்க்கு முதல் நாடும்" நோக்கம்,
என்றும்,
யார்க்கும்,
எப்போதும்,
இங்கு இல்லை.
தேசத்தின் தவக்குறைவு.
வெளிநோய்க்கு மாத்திரம் விசேட மருத்துவமாம்.
விழலுக்கு இறைத்த நீர்.
என்ன பாவம் செய்தீர்களோ தெரியவில்லை.
எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருக்கவேண்டிய துரதிர்ஷ்டம்,
நெடுங்காலமாய் உங்களுக்கு.
தேர்தலைத் திணிப்பவர்களே,
தேர்தலில் நிற்காமல் பின்வாங்கி விட்டனர்.
ஆனால்,
உங்களுக்காய் பாடுபட(?) உருவேறி நிற்கும்,
தமிழ்த் தலைவர்கள் என்று;
தம்மைத்தாமே சொல்லிக் கொள்வோரைக் காண,
வியப்பாயிருக்கிறது.
ஆயுத உதவியோடு,
தம்மைக் காக்கப் பாடுபட்டபடியே,

உங்களைக்காக்கவென ஓடிவருகின்றனர்.
எத்துணைத் தியாகம்!
உங்கள் வருத்தம் தீர்க்கப் போகிறார்களாம்.
''ஆடு நனைவதற்காய் அழுகின்ற ஓநாய்கள்''.
வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுவதாய் அறிகின்றேன்.
''நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி,
வஞ்சனை செய்வாரடி - கிளியே,
வாய்ச்சொல்லில் வீரரடி'',
பாரதி நினைவில் வருகிறான்.
சொந்தச் சகோரதர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்,
சிந்தை இரங்காத,
செம்மை மறந்த அவர் செயல் மறப்போம்.
நாடு கேட்டு,
பின் பாதிநாடு கேட்டு,
பின் ஐந்து ஊர் கேட்டு,
இன்று ஐந்து வீடு கேட்கும் நிலையில்,
மூத்த தமிழ்க்கட்சி.
இத்தனையும் தமிழருக்காக அல்ல,
தமக்காக.
இவ் இறக்கம்,
பாண்டவர் மனநிலையில் அல்ல,
கௌரவர் மன நிலையில்.
அவர்தம் சுயநலத் தாழ்ச்சி கண்டு,
மனம் சலிப்புறுகின்றது.
சில பொய்கள் சில காலம் வெல்லாம்.
பல பொய்கள் பல காலம் வெல்லலாம்.
ஆனால் எல்லாப் பொய்களும்,
எல்லாக் காலத்திலும் வெல்லப் போவதில்லை.

என்றோ ஒரு நாள்,
''இவரே எமக்குரியவர்''
எனத் தீர்மானித்து,
வாக்களிக்கும் சுதந்திரம்,
உங்களுக்குக் கிட்டத்தான் போகிறது.
அந்நாள்,
எந்நாள் என்றுதான் சொல்ல முடியவில்லை.
''துப்பாக்கி முனை ஜனநாயகம்'',
தொலைவதற்காய்ப் பிரார்த்திப்போம்.
இயற்கை, மனிதர்களைவிடச் ''சக்தி'' வாய்ந்தது.
இவ் இயற்கையை நம்பியே உயிர்வாழ்ந்த,
யாழ்மக்களாகிய உங்களை,
அது ஒருபோதும் கைவிடாது.
அதை உறுதியாய் நம்புங்கள்.
''போனால் போகட்டும் போடா,
இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?'' என்று,
''இறந்த'' கால அரசியல் அனுபவங்களால்,
உங்கள் மனம் பாடும் பாடல் கேட்கிறது.
தேர்தலை,
நீங்கள் எப்படிச் சந்திர்ப்பீர்கள் என்பது,
யாவரும் அறிந்ததே!.
அதற்கு அனுமதிக்கப்படுவீர்களா?
என்றுதான் பார்க்க வேண்டும்.
இன்னலும், துன்பமும் நமக்குத் புதிதல்லவே!.
தாண்டுவோம்!.
வெல்க!!.

அன்புடன்,
பண்டிதன்.



# 21

## சிங்கள மதத்தலைவர்கள், அறிஞர்கள், அரசியல்வாதிகள்

*இவர்களே இலங்கைத் திருநாட்டின்,*
*நன்மைகளுக்கும், தீமைகளுக்கும் பொறுப்பானவர்கள்.*
*சரித்திரப் பிரசித்தி பெற்ற பௌத்த பீடமாகிய*
*தலதாமாளிகையில்,*

*இலங்கையின் சுதந்திரப் பொன்விழா,*
*கொண்டாடப்பட இருந்தபோது,*
*25.10.98இல், அங்கு தற்கொலைத் தாக்குதலால்*
*பெரும் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது.*
*அக்குண்டு வெடிப்பினால்,*
*இப்புனிதத்தலம் சிதைவுக்குள்ளானது.*
*அதனால் ஆத்திரமுற்று,*
*மேற்குறிப்பிட்ட சிங்கள மதத்தலைவர்கள்,*
*அறிஞர்கள்,*
*அரசியல்வாதிகள் ஆகியோர்*
*அடுத்தடுத்துப் பல அறிக்கைகளை வெளியிட்டனர்.*
*அவ்வறிக்கைகளை உள்வாங்கி,*
*அவர் தமக்கு ஆறுதல் கூறியும்,*
*இத்தகு காரியங்களுக்குக் காரணமான,*
*அவர்தம் முன்னைச் செயற்பாடுகளைக் கண்டித்தும்,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(01.02.1998 - தினக்குரல்)

**தலதா மாளிகைக் குண்டு வெடிப்பினால்,**
**கவலையுற்றிருக்கும்,**
**சிங்கள மதத்தலைவர்கள், அறிஞர்கள்,**
**அரசியல்வாதிகள் ஆகியோருக்கு...**

*பெருமக்காள்!*
*வணக்கம்.*
*நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.*
*வரலாற்றுப்புகழ் மிக்க சரித்திரச் சின்னத்திற்கு,*
*ஏற்பட்டிருக்கும் பேரழிவால்,*
*கொதிப்பும், கவலையும், விரக்தியும் தோய்ந்த,*
*மனநிலையில் இருப்பீர்கள்.*
*நீங்கள் மட்டுமல்ல,*
*மனிதாபிமானமுள்ள அனைவரும் அதே மனநிலையில்தான்.*
*சமுதாய வழிப்படுத்தலைப் பொறுப்பேற்றிருக்கும்,*
*தங்கள் மன உணர்வுகள்,*
*அவர்களை விடச்சற்று மிகைப்பட்டிருக்கலாம்.*
*உங்கள் அறிக்கைகள் அதனை உணர்த்துகின்றன.*
*''மனிதாபிமானமற்ற,*
*மனித உணர்வுகளை மதிக்காத மிருகத்தனம்''.*
*இது. ஒரு அரசியல்வாதியின் அறிக்கை.*
*''காட்டு மிராண்டிகளின் மிலேச்சத்தனமான செயல்''.*
*இது ஒரு அறிஞரின் முடிவு.*
*''புத்தி சுயாதீனமற்றவர்களின் புன் செயல்''.*
*இது மதவாதி ஒருவரின் மன உணர்வு.*
*இங்ஙனமாய் உங்கள் அறிக்கைகள் விரிகின்றன.*

அத்தனையும் சத்திய வார்த்தைகள்.
நிலையாமை உணர்ந்து,
அரச போகங்களைத் துறந்து,
நிர்வாணம் பெற்ற ஒரு புனிதனின்,
நினைவுச் சின்னம் அடங்கிய திருக்கோவில்,
வன்முறையால் சிதைக்கப்பட்டிருக்கிறது.
மதத்தின் பெயரால் வழங்கிவந்த,
போலித்தனங்களை ஒழித்து,
அன்பையும், சத்தியத்தையும் போதித்த,
ஒரு மகானின் நினைவுத் தலத்திற்கு,
மனிதத் தன்மையையே இல்லாமல்
விளைவிக்கப்பட்டிருக்கும் தீங்கு இது.
உலகம் முழுவதும் அன்பு காட்டிய உத்தமர் மேலும் பகையா?
ஆத்திரப்படாதார் நெஞ்சங்கள்,
மனித நெஞ்சங்களே அல்ல.
இன, மத, மொழி பேதங்களைக் கடந்து நின்ற,
ஆன்மிகவாதிகள்கூட,
நம் கீழ்மையான பகை உணர்வுக்கு ஆளாகியுள்ளமை,
கொடுமையிலும் கொடுமை.
ஐயன்மீர்!
உங்கள் நெஞ்சங்கள் கொதித்ததும்,
அக்கொதிப்புக்கள் அறிக்கைகளாய் வெளிவந்ததும்,
நீதியானதே.
துணிவோடும் நேர்மையோடும்,
உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறீர்கள்.
சமுதாயத் தலைமைப் பொறுப்புணர்வுடன் செயற்பட்டிருக்கும்,
உங்களைப் பாராட்ட விழைகிறது என் மனம்.

*ஆனால்,*
*நெஞ்சத்தின் மூலையில் ஒரு கேள்வி முள்ளாய்த் தைக்கிறது.*
*நடந்திருப்பது ஒரு பாதகக் காரியம்.*
*சந்தேகமில்லை.*
*காரணங்களின்றிக் காரியங்கள் நிகழ்வதில்லை.*
*உண்மை உணர்ந்தோர்,*
*காரியங்களைக் கண்டிப்பதை விட,*
*காரணங்களை நீக்குவதுபற்றியே கவனம் எடுப்பர்.*
*பெரியவர்களாகிய உங்களுக்கு,*
*இதை நான் சொல்லத் தேவையில்லை.*
*தலதாமாளிகைக் குண்டு வெடிப்பு, காரியம்.*
*''இனத்துவேசம்'' காரணம்.*
*காரியம் கண்டு உணர்ச்சி வசப்படும்,*
*உங்கள் அனைவரையும் கைநீட்டிக் கேட்கிறேன்.*
*''இனத்துவேசம்'' எனும் காரண ஒழிப்பில்,*
*உங்கள் பங்கு எத்தகையது?*
*காரியத் தவறை ஒருமித்துக் கண்டித்த நீங்கள்,*
*காரணத்தவறையும் ஒருமித்துக் கண்டிக்க,*
*தயாராக இருக்கிறீர்களா?*
*முடிந்தால் என் முகம் பார்த்துச் சொல்லுங்கள்.*
*உங்களால் பதில் சொல்ல முடியாது.*
*இது நிச்சயம்.*
*''இனத்துவேசம்'' எனும் விருட்சத்தை,*
*நீரூற்றி வளர்த்தவர்கள் நீங்கள்தானே!*
*இன்றுவரை அச் செயலைத் தொடர்ந்தபடி நீங்கள்.*
*காரணத்தை வளர்க்கும் நீங்களே,*
*காரியத்தைக் கண்டு கொதிப்பது,*

நகைப்புத் தருகிறது.
இந்நிலையில்,
உங்கள் உணர்ச்சிகளும் அறிக்கைகளும்,
வெறுமனே நடிப்பாய்த் தோன்றுகின்றன.
தோன்றுவதென்ன....
நடிப்பேதான்.
தாங்கள் அனைவரும்,
இத் தேசத்தில் பற்றுள்ளவர்களாக இருந்திருப்பின்,
சரித்திரப் புகழ்பெற்ற,
நயினாதீவு நாகபூஷனி அம்மன் கோவில்,
இடிக்கப்பட்ட போதும்,
புகழ்பெற்ற சந்நிதி முருகன் கோவில், எரிக்கப்பட்ட போதும்,
பாடல்பெற்ற கோணேஸ்வரர் கோவிலை மறைத்து,
விகாரைகள் எழுந்த போதும்,
தமிழ்க்கடவுள் கதிர்காமக் கந்தன்,
வன்முறையால் சிங்கள மயமாக்கப்பட்ட போதும்,
புகழ்பெற்ற,
திருக்கேதீஸ்வரம்,
நல்லூர்,
மாவிட்டபுரம்,
நகுலேஸ்வரம்,
தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன்,
போன்ற ஆலயங்கள் சீர்குலைக்கப்பட்ட போதும்,
அகதிகள் சரணடைந்த நிலையில்,
யாழ். புனித யாகப்பர் ஆலயம்,
நவாலி தேவாலயம் ஆகியவை,
குண்டுத் தாக்குதலுக்காளாகி,

பல அப்பாவிகள் உயிர் துறந்த போதும்,
இதேயளவு கொதித்திருப்பீர்கள்.
அறிக்கைகளை இது போலவே அள்ளி வீசியிருப்பீர்கள்.
கலாசார நிலையங்களையும்,
வரலாற்றுப் பதிவுகளையும்,
தெய்வ சன்னிதானங்களையும்,
சிதைக்கும்,
முன்னுதாரணங்களை கண்டிக்கத் தவறிய நீங்கள்,
இன்று ஆவேசப்படுவது நகைப்புத் தருகின்றது.
அன்று அச் செயல்கள் கண்டிக்கப்பட்டிருந்தால்,
இப்பாதக எண்ணத்தின் வேர் அறுக்கப்பட்டிருக்கும்.
வேரறுக்கத் தவறிய நீங்கள்,
விழுதறுக்க முயற்சிக்கீறீர்கள்.
அது கூட வேண்டாம்.
தலதா மாளிகைத் தாக்குதலின் பின்,
சிங்களத் தீவிரவாதிகளால் சிதைக்கப்பட்ட,
கண்டி கட்டுக்கலை விநாயகர் ஆலயம்பற்றி,
நீங்கள் யாரும் எதுவும் பேசக் காணோம்.
உண்மையும் நீதியும் அனைவருக்கும் பொதுவானது.
இனியேனும் இன, மத, மொழி பேதமின்றி,
உண்மையை உரைக்கத் தலைப்படுங்கள்.
அப்போது நீதி அனைவரையும் பாதுகாக்கும்.
ஒரு நாட்டை வழிப்படுத்த வேண்டிய,
பெருமக்களாகிய நீங்கள் மாறாதவரை,
இழிவுறும் இத்தேசத்தின் தலை விதியை,
யாராலும் மாற்ற முடியாது.
மற்றவர்களைப் பின் திருத்தலாம்.

முதலில் நீங்கள் திருந்துங்கள்.
நிச்சயம் திருந்துவீர்கள் எனும் கனவோடு,
நானும் நாட்டு மக்களும்.
எங்கள் கனவு பலிக்க,
உங்கள் ஆசி வேண்டி நிற்கிறோம்.

அன்புடன்,
பண்டிதன்.





# 22

# பொன் விழாக்காணும் இலங்கைச் சுதந்திரதேவி

*பலகாலம் இந்நாட்டை ஆண்ட ஆங்கிலேயர்,*
*1948இல் இந்நாட்டை விட்டுச் சென்றபோது*
*பிறந்தவள் இவள்.*
*இவளுக்கு வயது ஐம்பதாவதை ஒட்டி,*

*இலங்கையில் பெருமளவில்,*
*பொன்விழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.*
*பிரித்தானிய முடிக்குரிய இளவரசர்,*
*பொன்விழாவிற்குப் பிரதம விருந்தினராய் அழைக்கப்பட்டார்.*
*இவ்விழாவிற்கான ஆயத்தங்களின்போது,*
*சிங்களவர்களின் முக்கிய ஆலயமான தலதாமாளிகையில்,*
*குண்டு வெடித்தது.*
*ஆத்திரமுற்ற சிங்கவர்கள் கண்டியில் உள்ள,*
*இந்துக் கோயில்களை எரித்தனர்.*
*இவ் அவல நிலையில்,*
*கொழும்பில், பலத்த பாதுகாப்பின் மத்தியில்,*
*இவளின் பொன்விழா நடைபெற்றது.*
*அப்போது,*
*பொன்விழாக்காணும்,*
*இலங்கைச் சுதந்திரதேவியை விளித்து,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(08.02.1998 - தினக்குரல்)

## பொன்விழாக் காணும்
## இலங்கைச் சுதந்திர தேவிக்கு....

இலங்கைச் சுதந்திரதேவிக்கு,
வணக்கம்.
நலமுறுக.
ஐம்பது அகவை எய்துகிறாயாம்.
பொன்விழாக் காணும் பூரிப்பில் இருப்பாயோ?
நீ பூரிக்கும் வகையில் இங்கு என்னதான் இருக்கிறது.
ஆயிரம் காவலோடு உன் ஐம்பதாண்டு நிறைவு விழா.
காவல் கடுமையால் கொழும்பே ஸ்தம்பித்துப் போனது.
இல்லாத உனக்கு இத்தனை எடுப்புக்கள்.
கானல் நீர் கண்டு களிக்கிறது நாடு.
யாருக்கு வேண்டும் இதுவெல்லாம்?
இந்திய சுதந்திரத்தோடு கிடைத்த இலவச இணைப்பு நீ.
முறையாக உன்னைப் பயன்படுத்தவில்லை என,
பொன்விழாவில் ஜனாதிபதியே கவலைப்பட்டிருக்கிறார்.
இராணுவ அணிவகுப்பில்,
ஊனமுற்ற படையினரின் ஒரு ஊர்வலம்.
அது,
உன்னைக் காப்பதற்காய்,
பிறநாடுகளோடு போர்புரிந்து ஊனமுற்றோரின் அணியல்ல.
இந்நாட்டின் சொந்தச் சகோதரர்கள்,
தம்முட் தாம் அடித்துக்கொண்டதால் அமைந்தது.
தேசம் சீர்கெட்டுக் கிடக்கிறது என்பதைக்கூட,
ஜனாதிபதி சிங்களத்தில் கூறவேண்டுமாம்.
தேசத்தின் சீர் கேட்டைப் பற்றியல்ல,

அதைச் செப்பும் பாஷை பற்றியே,
இந் நாட்டில் ''பலமுள்ளவர்களுக்குக்'' கவலை.
அடிமைப்படுத்தி ஆண்டவர்களின் பிரதிநிதி,
பிரதம அதிதியாய் வந்து,
அபிப்பிராயம் சொல்லிப் போயிருக்கிறார்.
''டயானா'' என்கின்ற,
ஒரு சமாதானத் தேவதையை,
வாழ வைக்கத் தெரியாமல் வழியனுப்பிய பெரிய மனிதர்,
சமாதானம்பற்றி ஆலோசனை தந்திருக்கிறார்.
யார், யாருக்கு புத்தி சொல்வது என்ற,
விவஸ்தையில்லாமற் போயிருக்கிறது.
வந்தவரை குறைகூறல் நாகரிகமன்று.
விட்டுவிடுவோம்.
நம் சீர்கேட்டில்,
யார்தான் புத்தி சொல்லமாட்டார்கள்.
''பூனை மெலிந்தால் எலி சுகம் கேட்குமாம்''
கேட்டிருக்கிறது,
பூனைகள் வெட்கப்படுவதாய்த் தெரியவில்லை.

சுதந்திரம் என்பது மனமகிழ்ச்சி.
சுதந்திரம் என்பது அச்சமின்மை.
சுதந்திரம் என்பது அரவணைப்பு.

இந்நாட்டில் இவை யாருக்குத்தான் இருக்கின்றன?
தமிழர்நிலையைக் கேட்கவே வேண்டாம்.
அவர்களைப் பொறுத்தவரை,
சுதந்திரம் என்று சொல்லவே அவர்களுக்குச் சுதந்திரமில்லை.
கழுத்தில் பட்டி கட்டிய நாய்களாய்,

அடையாள அட்டையுடன் அவர்கள்.
வீதியெல்லாம் நாய் பிடிகாரர்கள்.
இனிவரும் தமிழ்ச் சந்ததி,
கர்ணன்போல,
அடையாள அட்டையுடன் ஒட்டிப் பிறந்தால்தான்,
இந்நாட்டில் வாழ முடியும்.
வீட்டிலிருக்கப் பதிய வேண்டும்.
வெளியிற்செல்லப் பதிய வேண்டும்.
விடுதியிற் தங்கப் பதிய வேண்டும்.
அகதிமுகாமிலும் பதிய வேண்டும்.
மொத்தத்தில்,
"பதிவது",
இந்நாட்டுத் தமிழர்களின் தலைவிதியாயிற்று.
அவர்தம் உயர்வைச் சகிக்க முடியாது,
பதியச் செய்யும் முயற்சி.
ஏனைச்சிறுபான்மை இன மக்களான இஸ்லாமியரேனும்,
இன்பமாய் வாழ்கிறார்களா? என்றால்,
அதுவுமில்லை.
தம் தாய்மண் விட்டு,
அகதிகளாய் அல்லலுறும் நிலையில்,
யாழ்ப்பாண இஸ்லாமியர்கள்.
பெரும்பான்மைச் சிங்கள இனமோ,
தம் ஆட்சியாளர்களாலேயே அழிக்கப்பட்ட வரலாறு
ஐம்பதாண்டுகளில் அடிக்கடி.
புதைகுழிகளைக் கிளறி எலும்புகளைத் தேடுவதே
இங்கு அகழ்வாராய்ச்சி ஆகிவிட்டது.
மொத்தத்தில்,

யாரும் இந்நாட்டில் சுதந்திர அனுபவத்தோடில்லை.
இல்லாத உனக்குப் பொன்விழா?
கோமகனின் வருகையும்,
கோயிற் சேதங்களுமே மிச்சமாயின.
என்றோ ஒரு நாள்,
சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் என,
அனைவரும்,
தத்தம் தனித்துவம் பேணி,
கைகோர்த்து நிற்கும் நாள் வரும்.
அன்று உன்னைக் கொண்டாடுவோம்.
அவ்வளவே.
அடிமைச் சங்கிலி அனைவர்க்கும் உடையட்டும்.
அதுவே சுதந்திரம்.
அந்நிலை பிறக்க அனைவரும் பிரார்த்திப்போம்.
பொய்யாக உன்னைப் போற்ற,
விருப்பமில்லை.
முடிக்கிறேன்.

அன்புடன்,
பண்டிதன்.



23

# மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்

*தேயிலை ஏற்றுமதிதான்,*
*இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு.*
*இலங்கையின் மலைப்பிரதேசங்களில்,*

வெள்ளைக்காரர்களால் நிர்மாணிக்கப்பட்ட,
தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்வதற்காக,
ஒருகாலத்தில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட,
தமிழர்கள் இவர்கள்.
அக்காலத்தில் இந்தியாவிலிருந்து கப்பலிற் கொண்டுவரப்பட்டு,
தலைமன்னாரிலிருந்து மலையகத்துக்கு,
நடத்திக்கொண்டுவரப்பட்டார்கள் என்றும்,
அப்படி வரும்வழியிலேயே,
பலர் மாண்டு போனார்கள் என்றும்,
எஞ்சியவர்கள்,
மலையகத்தில் குடியேற்றப்பட்டார்கள் என்றும்,
வரலாறு சொல்கிறது.
இவர்கள் வெள்ளைக்காரத் தோட்டத்துரைமார்களினால்,
அடிமைகளாய் நடத்தப்பட்டனர்.
தொழிலாளிகளான இவர்கள் மத்தியிலிருந்து புறப்பட்ட சிலர்,
பின்னாளில் இவர்களின் தலைவர்களானார்கள்.
தொழிலாளர் மத்தியிலிருந்து புறப்பட்ட இத்தலைவர்கள்,
இவர்களை முன்னேற்றாது தாம் முதலாளிகள் ஆயினர்.
தோட்ட முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும்,
தலையும், வாலும் காட்டி,
விலாங்கு மீன்களாய் வேஷம் போட்டனர்.
காலாகாலமாய் வறுமையில் வாடும்
இத்தோட்டத்தொழிலாளிகள்,
இருபது ரூபாய் சம்பள உயர்வுக்காக,
வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
05.02.98 இல் ஆரம்பித்த வேலை நிறுத்தத்தால்,

*பாதிப்புற்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு,*
*ஆதரவும், அறிவுரையும் சொல்லி,*
*பழம் பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(15.02.1998 - தினக்குரல்)

(இவ்வேலை நிறுத்தமும் பண்டிதர் எழுதியது போல,
கோரிக்கையைவிடக் குறைந்த சம்பள உயர்வில்,
தலைவர்களின் சாகசத்தால் பின்பு கைவிடப்பட்டது.)

## வேலை நிறுத்தம் செய்யும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு...

*பேரன்புமிக்க தோட்டத் தொழிலாளர்களுக்கு,*
*வணக்கம்.*
*நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.*
*வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பீர்கள்.*
*பாதிப்புறுதல் உங்களுக்குப் புதிதல்லவே!*
*1820இல்*
*ஆங்கிலேயரால் இம்மண்ணுக்கு அழைத்து வரப்பட்டீர்கள்.*
*அழைத்து வரப்பட்டீர்கள் என்பதை விட,*
*'கொண்டு வரப்பட்டீர்கள்' என்பதுதான்*
*பெரிதும் பொருத்தமானது.*
*ஆட்டு மந்தைகள்போல்*
*நீங்கள் இங்கு கொண்டுவரப்பட்டதும்,*
*''கால்நடையாய்'' வழிநடத்தப்பட்டதும்,*
*வழிவழியே மாண்டவர்க்கு அவ்வவ் இடங்களிலேயே*
*புதைகுழிகள் அமைக்கப்பட்டதும் வரலாறு.*
*அன்று மாண்டவர்கள் அதிர்ஷ்டசாலிகள்.*
*இன்றுவரை நீங்கள் படும் பாட்டைக் காண,*
*அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது.*
*வர்த்தக ரீதியாய் இந்நாட்டின் முதுகெலும்பை*
*நிமிர்த்தியவர்கள் நீங்கள்.*
*ஆனால் உங்களை நிமிர்த்துதற்கு,*
*உண்மையாய்ப் பாடுபட*
*இந்நாட்டில் யாருமில்லாது போயினர்.*
*அழைத்து வந்த ஆங்கிலேயர்கள்,*

அடுத்து வந்த நம்மவர்கள்,
தலைமையேற்ற கட்சித் தலைவர்கள்,
கற்பிக்க வந்த ஆசிரியர்கள் என,
அனைவருக்கும் நீங்கள் பயன்பட்டீர்களே தவிர,
உங்களுக்காய்ப் பயன்பட்டார் ஒருவர் இலர்.
இவர்களோடு ஒப்பிடும்போது,
தேயிலைத்தோட்ட அட்டைகள்
உங்களில் உறிஞ்சிய இரத்தம் கொஞ்சமே.
உங்களுள் நின்று,
உயர்ந்த ஒரு சிலரும்,
முதலாளி வர்க்கத்தின் முதுகு தடவவே முன்னின்றார்கள்.
முடிவில்லா உங்கள் துன்பங் கண்டு
முதலைக்கண்ணீர் வடிக்கவே,
அவர்களால் முடிந்தது.
உங்கள் அறியாமையைப் பயன்படுத்தி,
அரசியலில் தங்கள் அந்தஸ்தை அசையாமற் செய்து,
அவர்கள் அக மகிழ்ந்தனர்.
வடக்கிலிருந்து
உங்கள் அறிவை வளர்க்கிறோம் என வந்தவர்களும்,
உங்கள் அறியாமையைப் பயன்படுத்தித்
தங்கள் வயிறு வளர்த்தனர்.
மண்வாசனையை எழுதுவதாய் சொன்ன உங்களவரிற் சிலரும்,
உங்கள் துன்பத்தைச் சொல்லி,
தம்மை இனம்காட்டினரே ஒழிய,
உங்கள் வாழ்வில் ஓர் அங்குலத்தைத் தானும்,
உயர்த்தியதாய்த் தெரியவில்லை.
ஒரு காலத்தில்,

உங்களுக்கு அறிவே இல்லை என்று ஒதுக்கியது போக,
உங்களிடம் அறிவு நிறைந்து கிடக்கிறது எனப்பொய்மை பேசி,
உங்கள் மத்தியில் புகழ் தேடும்,
சுயநல அறிஞர் கூட்டத்தின் ஏமாற்றும் வேலை,
இன்றும் தொடர்கின்றது.
மொத்தத்தில் இன்று நீங்கள் நிறையப் பேசப்படுகிறீர்கள்.
ஆனால் உங்கள் வாழ்வில் எந்த மாற்றமும் இல்லை.
கோழிக்கூடுகள் போன்ற "லயங்களில்"
உங்கள் கூட்டு வாழ்க்கை தொடர்கிறது.
ரொட்டிக்கும் வட்டிக்கும்
உங்கள் வாழ்க்கை பழக்கப்பட்டுவிட்டது.
அடிமைகளாக வாழ்ந்து பழகிவிட்ட நீங்கள்,
யாரோ தூண்ட, போராட்டம் தொடங்கியிருக்கிறீர்கள்.
இருபது ரூபாய்ச் சம்பள உயர்வுக்காக இத்தனைபாடு.
முடிவு தெரிந்ததுதான்.
முறுகுவதுபோல முறுகி, முதலாளிமார் சற்று இறங்கிவர,
உங்கள் தலைவர்கள் அவர்கள் பேரத்தை,
தலைசாய்த்து ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்.
போராட்டம் வென்றதாய்
நீங்களும் பொய்மையில் பூரிக்கப் போகிறீர்கள்.
ஏமாற்றுபவர்களை விட ஏமாறுபவர்களில்தான்,
எனக்கு இப்போது அதிகம் கோபம் வருகிறது.
உங்கள் எழுச்சிபற்றி முதலில் நீங்கள் முயலுங்கள்.
ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் உழைக்கும்
உங்கள் வீடுகளில்,
பஞ்சம் வர வாய்ப்பு இல்லை என்பது எனக்குத் தெரியும்.
பஞ்சத்தின் காரணம்,

உங்களில் பலரைப் பற்றியிருக்கும் போதைப் பழக்கமே.
வாழ்வை விரிவுபடுத்தவும் வளப்படுத்தவும்
நீங்கள் தயாரில்லை.
இதுவே உண்மை நிலை.
உங்களின் முதல் எதிரி நீங்கள்தான்.
கோழிக்கூட்டு வாழ்க்கையில் குதூகலித்துப் பழகி விட்டீர்கள்.
தலைவர்களின் பொய்யுரையில் பூரித்துப் பழகிவிட்டீர்கள்.
குடியும், கூத்துமாய்
உங்கள் வாழ்வை வீணாக்கிப் பழகிவிட்டீர்கள்.
இவைபற்றி உண்மையில் உங்களுக்குக் கவலையில்லை.
இந்நிலை மாறும்வரையும்,
உய்வுக்கு வழியில்லை என்பது சர்வ நிச்சயம்.
ஒருமித்து வேலைநிறுத்தம் செய்தாற்போல்......
குடியைத் தொடமாட்டோம் என்றும்,
பொய்மையான புகழ்வார்த்தைகளில் மயங்கமாட்டோம் என்றும்,
ஏமாற்றுவோரிடம் இருந்து விடுபடுவோம் என்றும்,
நாமாக எழுச்சியுற முயல்வோம் என்றும்,
கூடிநின்று சத்தியம் செய்வீர்களா?
நிச்சயம் உங்களால் அது முடியாது.
முடிந்தால் மறுநாளே உங்கள் வாழ்வு உயரும்.
அது நிகழ்ந்தால்,
மறு நிமிடமே,
வெற்றிலை எச்சிலில் வீழும் அட்டைகள் போன்று,
உங்களை உறிஞ்சும் அனைவரும் கழன்று போவர்.
உங்களின் வாழ்வு உங்களால் தீர்மானிக்கப்படும்.
உறுதியாய் உயர்வீர்கள்.
அதுவரை உங்கள் போராட்டங்கள்,

வெறுமனே விழலுக்கு இறைந்த நீர்தான்.
இதை எழுதுவதால் என் மீது உங்களுக்குக் கோபம் வரலாம்.
உண்மை சுடுவது தவிர்க்க முடியாததே.
சுடட்டும்.
அப்போதாவது சொறணை வருகிறதா பார்க்கலாம்.
உங்கள்மேற் கொண்ட உண்மை அன்பினால் எழுதுகிறேன்.
உயர முயலுங்கள்.

அன்புடன்,
பண்டிதன்.



# 24

## திருமதி. சோனியா காந்தி

*இத்தாலியப் பெண்மணியான இவர்,*
*மறைந்த இந்தியப் பிரதமர்,*
*ராஜீவ் காந்தியின் மனைவியாவார்.*
*கணவரின் அரசியலுக்குத் துணைபுரிந்துவந்த இவர்,*
*அவரின் மறைவின்பின் அரசியற் துறவறம் பூண்டார்.*
*பதவி எதனையும் ஏற்காவிட்டாலும்,*

*இந்தியக் காங்கிரஸில் பெரும் சக்தியாக விளங்கியவர்.*
*அரசியலில் கலந்து கொள்வதில்லையெனும்*
*உறுதி பூண்டிருந்த இவர்,*
*குஜரால் தலைமையிலான*
*ஐக்கியமுன்னணி அரசு கவிழ்ந்ததும்,*
*நடைபெற்ற இந்திய பாராளுமன்ற*
*12ஆவது பொதுத் தேர்தலில்,*
*சீத்தாராமகேசரி அவர்களின் தலைமையிலான,*
*இந்திரா காங்கிரஸ் கட்சிக்காக,*
*பிரசாரம் செய்ய முன்வந்தார்.*
*இந்திரா காங்கிரஸ்கட்சி வெற்றிபெற்றால்,*
*இவரையே பிரதமராக்கவேண்டும் என,*
*காங்கிரசின் ஒருபகுதியினரின் கோரிக்கைக்கு மத்தியில்,*
*நடைபெற்ற தேர்தலில் வாக்களித்த,*
*திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(22.02.1998 - தினக்குரல்)

(இத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கூட்டணி,
168 இடங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவ,
வாஜ்பாய் தலைமையிலான
பாரதிய ஜனதாக்கட்சிக் கூட்டணி,
277 ஆசனங்களைப் பெற்று ஆட்சியைப் பிடித்தது,
குறிப்பிடத்தக்கது.
இந்திரா காங்கிரஸின் தோல்வியைத் தொடர்ந்து,
ஏற்பட்ட பிரச்சினைகளால்,
சீதாராம்கேசரி அவர்கள்,
இந்திரா காங்கிரஸ் தலைமையை
சோனியாகாந்தி அவர்களிடம் ஒப்படைத்தார்.

## திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு...

பெரு மதிப்பிற்குரிய 'சோனியாகாந்தி' அம்மையார் அவர்கட்கு,
வணக்கம்.
நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.
தேர்தலில் வாக்களித்த திருப்தியில் இருப்பீர்கள்.
இத்தாலியில் பிறந்த நீங்கள்,
இன்று இந்தியத் தலைவிதியை நிர்ணயிக்கும் நிலையில்.
இதைத்தான் விதி என்பது.
கல்விக்கூடத்தில்,
நேருவின் பேரன் உங்களைச் சந்தித்துக் காதல்கொண்டதும்,
அன்னை இந்திராவின் 'மனக்கசப்புடன் கூடிய சம்மதத்துடன்',
உங்கள் திருமணம் நிகழ்ந்ததும்,
அரசியலே வேண்டாம் என நீங்கள் இருவரும்,
காதற்புறாக்களாய்ப் 'பறந்ததும்'
தனிக்கதை.
இந்த நூற்றாண்டின் தலைமை ஆளுமைப் பெண்ணாய்,
அரசியலில் மிளிர்ந்த 'அன்னை' இந்திராகாந்தி,
பெயருக்கேற்ப,
பிள்ளைப் பாசத்தைக் கடக்க முடியாத பேதைமையால்,
ஜனநாயகம் மறந்து,
சஞ்சைய்காந்தியை சரித்திர நாயகனாக்கும் முயற்சியில்,
முனைந்து வெற்றிபெறும் நிலையில் நிற்கையில்....
திடீரென விதி அவர் உயிர் பறிக்க,
உங்கள் விருப்பமின்றியே உங்கள் கணவரின் கழுத்து,
இந்திய அரசியலெனும் பலி பீடத்தில்
பலவந்தமாய் வைக்கப்பட்டது.

நேரு பரம்பரைக்கு இருக்கக்கூடிய உயிராபத்துக் கருதியோ,
பெண்மை தந்த முன்னெச்சரிக்கையாலோ,
அரசியலே வேண்டாம் என்ற உங்கள் ஆட்சேபனை,
அன்னை இந்திராவின் ஆளுமைக்குமுன்
தவிடு பொடியாயிற்று.
'தற்கொண்டான் பேணத்' தவறினீர்கள்.
தொடர்ந்து நிகழ்ந்த,
இந்திராகாந்தியின் அவலமரணத்தையும்,
ராஜீவ்தலையில் ஏற்றப்பட்ட இந்திய தலைமைத்துவத்தையும்,
விதியின் செயல் என்று சொல்லாமல்,
வேறென்னென்று சொல்வது!
ஆனால் ஒன்றை நீங்கள் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.
ஆட்சிபீடம் உங்கள் கணவரை மட்டுமின்றி,
உங்களையும் ஆசைக்கும் ஆணவத்துக்கும் உள்ளாக்கியமை,
மறுக்கமுடியாத உண்மைகள்.
அவ் ஆணவத்தினாற்தான் உங்கள் கணவர்,
தமிழருக்கு 'உதவி' எனும் பெயரில்,
இலங்கைக்கு 'கட்டாயமாய்' சமாதானப் படையை அனுப்பி,
பின் அதனையே சண்டைப்படையாக்கி,
அப்படையால் தமிழர்தம் உயிரையும், மானத்தையும்,
பறித்துப் பழி கொண்டார்.
தமிழர்க்கு நடந்த அவ் அநியாயங்களை,
இந்திய வல்லாதிக்கத்தின் கைகள்,
உலகத்தின் கண்களிலிருந்து மறைத்தது,
வரலாற்று உண்மை.
''அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்'' என்னும்,
உங்கள் நாட்டுத் துறவியின் வார்த்தையை மறந்ததால்,

17263 S.C

உங்கள் கணவர் மரணம்,
அனைவரும் வருந்த நடந்து முடிந்தது.
செல்வாக்கு மிகுந்த உங்கள் கணவரின் மரணம்
பிரபலப்படுத்தப்பட்டு,
உங்கள் நாட்டு அரசியலை மட்டுமல்ல,
எங்கள் நாட்டு அரசியலையும்,
இன்றுவரை பாதித்து நிற்கின்றது.
ஆனால் அமைதிப்படையின் அட்டூழியத்தால்,
அழிந்துபோன அப்பாவித் தமிழர்களின் உயிர்களும், மானமும்,
இன்றுவரை கேட்பாரற்றுக் கிடப்பிற் போட்ட நிலையில்.
ஜனநாயகம் கண்ணீர் வடிக்கின்றது.
கணவனின் இழப்பின் பின் அரசியல் துறவறம் பூண்ட நீங்கள்,
உலக நன்மைக்காய் உழைக்கப்போவதாய்
உறுதி கொண்டீர்கள்.
ஆனால் உங்களை யார்தான் விட்டார்கள்?
எவ்வித பதவியில் இல்லாதிருந்த போதும்,
நீங்கள்தான் காங்கிரஸில் மிகப்பெரிய சக்தி.
தாம்கட்டிவளர்த்த காங்கிரஸின் இன்றையநிலை கண்டு,
காந்தியும் நேருவும் கண்ணீர் வடித்திருப்பார்கள்.
என்ன செய்ய? இந்திய ஜனநாயகம் இப்படியாயிற்று.
உங்களைத் திருப்திப்படுத்துவதற்காய்,
'கேசரித்தாத்தா' ஒரு வெற்றுக் 'கமிஷன்' தீர்ப்புக்கொண்டு
விளையாடப்போக.,
ஒன்றரை ஆண்டுக்குள் மீண்டும் தேர்தல்.
கோடிக்கணக்கில் இந்தியப் பணம்
மண்ணாக்கப்பட்டிருக்கிறது.
அனைத்தும் உங்கள் குடும்ப நன்மை நோக்கி.

இந்நிலையில் கதியற்ற காங்கிரஸைக் காக்க,
உங்களின் புது அவதாரம்.
இன்றும் ஆட்டிப்படைக்கும் எண்ணம் தவிர,
அரசியல்பற்றிய தெளிந்த முடிவு உங்களிடம் இல்லை.
ஓர் இத்தாலியப் பெண்ணின் கண் அசைப்பிற்காய்,
இந்திய காங்கிரஸ்,
'தலைமைக்கதிரையைத்' துடைத்து தலையில் வைத்தபடி.
அறிவுலகம் கைகொட்டிச் சிரிக்கிறது.
மற்றவர்களை நீங்கள் ஏமாற்றலாம்.
அறிவுலகத்தை அங்ஙனமாய்ச் செய்தல் கடினம்.
உங்கள் புதிய அரசியல் வரவு,
இந்திய காங்கிரஸையோ, இந்திய தேசத்தையோ,
காக்கும் எண்ணத்துடன் இல்லை.
''போபர்ஸ்'' கோப்புக்களை மூடிமறைக்கவும்,
இந்திய அரசின் செலவில்,
உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்,
இந்தியப் பிரதமருக்குச் சமமாய்க் கிடைக்கும்
வசதிகளைப் பேணவுமே.
ஒரு முக்கிய செய்தியைச் சொல்லவே இக்கடிதம்.
இந்தியத்தேர்தல் முடிவுகள்,
பெரும்பாலும் பாமரர்களால்தான் தீர்மானிக்கப்படுகிறது.
இருந்தபோதும், தேசப்பற்று மிக்க அம் மக்கள் தீர்ப்பு,
எப்போதும் சரியாகவே இருந்துள்ளது.
இத்தேர்தலிலும் அவ்வுண்மைவென்றால்,
தங்கள் நிலை மிகச்சங்கடமாகும்.
சுயநலமற்ற பாமரமக்களின் வாக்குகளால் முடிவாகும்,
இந்தியத் தலைமை எனும் வெற்றிக்கனி,

*பிறநாட்டுப் பெண்ணான,*
*உங்கள் கையில் விழும் சாத்தியம் மிகக்குறைவே.*
*நேரு குடும்பத்து மருமகள் எனும் பெருமையுடன்*
*திருப்தியுற்றால் உய்வடைவீர்கள்.*
*உய்வதும் உழல்வதும் உங்கள் கையில்.*
*உங்களதும், உங்கள் பிள்ளைகளதும் வாழ்வு மலர,*
*நேரு, இந்திரா ஆகியோர்தம் தொண்டு நோக்கி,*
*என் வாழ்த்துக்கள்.*

*அன்புடன்,*
*பண்டிதர்.*



# 25

## ஜனாதிபதி சதாம் ஹுசெய்ன்

*இவர் புரட்சி மூலம் ஈராக்கின் ஜனாதிபதியானவர்.*
*திடீரெனப் படை அனுப்பி, குவைத்தை இவர் கைப்பற்ற,*
*உலகம் பதற்றமானது.*
*அமெரிக்கத் தலைமையில்*
*உலக நாடுகளின் படைகள் ஒன்றுபட்டு,*

*குவைத்தை மீட்டன.*
*அந்த அளவில் உலகப்படை கலைந்துவிட*
*அமெரிக்க, ஈராக் பகை நிரந்தரமானது.*
*தன் உலகச் செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி,*
*அமெரிக்கா பலவிதத்திலும் ஈராக்குக்கு*
*இடையூறு விளைவித்தது.*
*ஈராக்கில் ஆயுதப் பரிசோதனை வேண்டும் என்ற,*
*ஐ.நா.சபையின் நிலைப்பாட்டை ஈராக் மறுக்க,*
*மீண்டும் யுத்தச் சூழ்நிலை உருவாகி,*
*உலகை அச்சுறுத்திற்று.*
*ஐ.நா. செயலாளர் ஈராக் விஜயம் செய்து,*
*அமெரிக்கா, ஈராக் நெருக்கடியைத் தடுத்தார்.*
*உலகம் ஆறுதல் உற்றது.*
*இந்நிலையில்,*
*ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசெய்னுக்கு,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம் இது.*

(01.03.1998 - தினக்குரல்)

## ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசெய்னுக்கு...

மாண்புகுமிகு ஜனாதிபதி சதாம் ஹுசெய்ன் அவர்கட்கு!
''அஸ்ஸலாமு அலைக்கும்''
நலமுறுக.
போர் தள்ளிப்போனதால் சற்று ஓய்வாக இருப்பீர்கள்.
புதிரான மனிதர் நீங்கள்.
நீங்கள் நல்லவரா, கெட்டவரா எனத் தீர்மானிக்க முடியாத,
பிரமிப்பில் உலகம்.
உங்களை நினைக்க வியப்பாக உள்ளது.
''சென்ற வார உலகம்'',
இரும்பு மனிதரான உங்கள் முடிவு நோக்கி ஏங்கி நின்றது.
''கோபிஅனான்'' உங்களைச் சந்தித்து திரும்பும்வரை,
ஏங்காத நெஞ்சில்லை.
திரும்பியதும் வாழ்த்தாத நெஞ்சுமில்லை.
வல்லரசுகளை தனி மனிதனாய் நின்று ஆட்டிப்படைக்கும்,
உங்கள் அசையாத ஆண்மை ஆச்சரியம் தருகின்றது.
எது எப்படியோ?
''உலகப் பொலிஸ்காரனாய்''
தன்னைத்தானே நியமிக்கத் தவித்து நிற்கும்,
அமெரிக்க ஆதிக்க மேலாண்மைக்கு,
உங்களை விட்டால்,
சரியான முறையில் ''சறுக்குக்கட்டை'' போட ஆளில்லை.
''பாக்தாத்தை'' உள்ளடக்கிய தேசத்தலைமை பெற்றதால்,
''அரபுத்தலைமை'' நோக்கிய கனவு உங்களுக்கு.
இது பலரது அபிப்பிராயம்.

அதை நிரூபிக்குமாப்போல்.
குவைத்தின்மேல்
தாங்கள் மேற்கொண்ட படையெடுப்பு அமைந்துவிட....
"கோயிற்கள்ளன் கோழிக்கள்ளனைப் பிடித்தகதையாய்"....
கொதித்தெழுந்து,
உங்களைப் பயங்கரவாதியாய்
உலகிற்குக் காட்டி நின்றது அமெரிக்கா.
ஒரு காலத்தில் ஒன்றாய் இருந்து பின் பிரிக்கப்பட்டவைதான்,
குவைத்தும், ஈராக்கும் என்பது வரலாற்று உண்மை.
எல்லையிற் கிடந்த எண்ணெய்க் கிணறுகள்,
எல்லையற்ற எண்ணையை நிலத்தடியில் கொண்டிருந்தன.
வருங்காலத்திற்கான வைப்பு நிதியாக,
தாங்கள் அதனைப்பேண நினைத்தீர்கள்.
குவைத்நாடு,
அமெரிக்க ஆலோசனைப்படி
ஒப்பந்தம் மீறி அதனை அள்ளத்தொடங்க,
படையெடுக்கும் கட்டாயம் உங்களுக்கு!
தங்கள் படையெடுப்பு நாடுபிடிக்கும் முயற்சியாக மாத்திரம்,
அமெரிக்காவால் சித்தரிக்கப்பட....
அகிலமே அதை நம்பியது.
உலக நாடுகள் அனைத்தும்,
ஒன்று திரண்டு படையெடுத்து உங்களை அடக்கின.
இச்செயல் மூலம்,
உலகம் அமெரிக்காவிற்கும் ஒரு செய்தி சொல்லிற்று.
மற்ற நாடுகளின் இறையாண்மைக்குள் கைவைத்தால்,
அதை எதிர்க்க,
உலகம் ஒன்றுபடத்தயங்காது என்பதே அச்செய்தி.

அதை நிரூபிக்கும் முகமாக...
குவைத்திலிருந்து நீங்கள் பின் வாங்கியபின்பும்,
''கூட்டுப்படையை'' இயக்கநினைத்த
அமெரிக்கக்கனவைப் பொய்யாக்கி,
உலகப்படை கலைந்தது.
ஆனால் அமெரிக்காவோ,
உங்களை ஒழிக்காமல் விடுவதில்லை என்று,
உறுதி கொண்டது.
தன் சொல்லைக் கேட்காத எவரும்
தண்டிக்கப்பட வேண்டும் எனும்,
தலைக்கனம் அதற்கு.
விற்பனைத்தடை, பொருளாதாரத்தடை, ஆயுதத்தேடுதல் என,
உங்களை அலைக்கழித்தது.
ஒரு நாட்டின் இறையாண்மை மீறப்படுவது தெரிந்தும்,
ஒன்றும் செய்ய முடியாத நிலையில் உலகம்.
வல்லரசுப் போட்டி ஒழிந்தது கண்டு
ஒரு காலத்தில் மகிழ்ந்த உலகம்,
இன்று
கேட்பார் இன்றி அமெரிக்கா செய்யும் அட்டகாசம் கண்டு,
கண்ணீர் வடிக்கின்றது.
பல் பிடுங்கப்பட்ட பாம்பாக,
''சீறமட்டுமே'' முடிந்த நிலையில் ரஷ்யா.
ஐ.நா. சபைக் கட்டடங்கள் மட்டுமல்ல,
இன்று ஐ.நா சபையே அமெரிக்காவிற்குள்தான்.
அதனால்,
''தடியெடுத்தவன் தண்டற்காரன்'' என்ற நிலையில்
அமெரிக்கா.

KOHA-JPL


ஆனால் நீங்கள்
அதற்கெல்லாம் பயப்பட்டதாய்த் தெரியவில்லை.
அமெரிக்காவின் உள்நோக்கத்தை உலகிற்கு எடுத்துக்காட்ட,
இடைக்கிடை தாங்கள் செய்யும் ''குறும்புகள்'',
அதனைச் சங்கடத்தில் நெளியச் செய்கின்றன.
வெளியில் உங்களைக்
கண்டிக்குமாப்போல் காட்டிக்கொள்ளும் பல நாடுகளும்,
உள்ளே உங்கள் விளையாட்டை இரசிக்கவே செய்கின்றன.
இம்முறை உங்களுக்கெதிராக உலகை ஒன்று திரட்டும்
முயற்சியில்,
அமெரிக்காவின் தோல்வி,
இதனை வெளிப்படுத்திற்று.
யுத்த முஸ்தீப்பை அவசரப்பட்டுச் செய்து,
உலகம் கைதர மறுக்க,
பிரிட்டன் போன்ற
முன்னாள் ''உலகச் சண்டியர்கள்'' மாத்திரம் துணைதர....
வெளித்தோற்றத்தில்
ஜனநாயக வாதியாய் தன்னைக் காட்டி நிற்கும் அமெரிக்கா,
தன் பெயர் கெட்டுவிடுமோ? எனத் திகைத்துப்போனது.
''திருடனுக்குத் தேள் கொட்டியநிலை''.
உங்களுக்கோ,
அமெரிக்காவைச் சங்கடப்படுத்தியதில் ஆனந்தம்.
இருவரும் வெளியில் பிடிவாதம் பிடித்தாலும்,
உள்ளே ''இறங்கிவரத்'' தயாரானீர்கள்.
''அனான்'' பெருமை கொண்டார்.
ஆனால் ஒன்று,
பிரச்சனை முடியவில்லை.

உங்களை வீழ்த்தும் முயற்சியை,
அமெரிக்கா ஒரு போதும் கைவிடப் போவதில்லை.
உங்களை வீழ்த்தி,
ஒரே கல்லில் இரு மாங்காய்களை அடிப்பது
அமெரிக்க எண்ணம்.
''உலகின் எந்த மூலையிலும்,
அமெரிக்காவை எதிர்ப்பவர்கள் வாழ முடியாது''
உங்கள் வீழ்ச்சி மூலம்,
உலகிற்கு அமெரிக்கா இச்செய்தியைத்
தெரிவிக்க விரும்புகிறது.
இது அமெரிக்காவின் முதல் நோக்கம்.
சோவியற்யூனியன் கலைந்து வல்லரசுப் போட்டி முடிந்ததும்,
''அமெரிக்கக் கழுகின்'' பார்வை ஆழப்பதிந்தது,
அரபு நாடுகள் பக்கமே.
''அல்லா'' என்ற ஒரு சொல்லால்,
ஒன்று படக் கூடியவர்கள் என்று புகழ் பெற்ற,
இஸ்லாமியர்களையும்,
அவர்தம் செல்வம் கொழிக்கும் நாடுகளையும்,
''மித்திரபேதம்'' செய்து பிரிப்பது என,
அது அன்றே முடிவு செய்தது.
உங்கள் வீழ்ச்சி மூலம்,
அமெரிக்கா சாதிக்க நினைக்கும் இரண்டாம் விடயம் இது.
வெல்லப் போவது நீங்களா? அமெரிக்காவா?
இன்று உலகின் முன் விஸ்வரூபமாய் நிற்கும் கேள்வியிது.
மூன்றாம் உலகப் போரின் ஆரம்பம்
உங்கள் இருவர் கையிலும் தானோ?
அளவற்ற அன்பாளனும் நிகரற்ற அருளாளனுமான,

*அல்லாவின் முடிவை யாரறிவார்?*
*ஆனால் ஒன்று.*
*உங்கள் வெற்றி தோல்வி,*
*உலகைப் பாதிக்கப்போவது நிச்சயம்.*
*உலகம் உய்யப் பிரார்த்தித்து நிற்கிறேன்.*
*கடவுளிடம் மட்டுமல்ல,*
*உங்களிடமும்.*

இங்ஙனம்,
பண்டிதன்.





# 26

## புதுமைப் பெண்கள்

*இவர்கள் பெண்விடுதலைப் போராட்டம் என்பதை,*
*பொழுது போக்காய்ச் செய்து வரும்,*
*மேற்தட்டு வர்க்கப் பெண்மணிகள்.*
*நம் தமிழ்ப்பண்பாடு உணராமல்,*
*மேலைத்தேயக் கருத்துக்களை உள்வாங்கி,*
*நம்மண்ணில் விதைக்க நினைப்பவர்கள்.*

*நம் தமிழ்ப்பண்பாடு முழுவதும் கீழ்மையானது எனும்,*
*எண்ணம் கொண்டவர்கள்.*
*நம்நாட்டுப் பெண்களின் பிரச்சனைகளின்*
*நிதர்சனங்களைத் தரிசிக்க விரும்பாதவர்கள்.*
*1998ஆம் ஆண்டு நடந்து முடிந்த,*
*உலகப் பெண்கள் தினத்தை ஒட்டி,*
*அப்பெண்மணிகளுக்கு,*
*பழம் பண்டிதரால் எழுதப்பட்ட பகிரங்கக் கடிதம்.*

(15.03.1998 - தினக்குரல்)

## புதுமைப் பெண்களுக்கு...

நவநாகரிக அம்மணிகாள்!
வணக்கம்.
நலமுறுக.
உலகளாவிய பெண்கள் தினத்தைக் கொண்டாடி,
உவப்புற்று இருப்பீர்கள்.
கொண்டாட்டங்கள் என்றால் பெண்களுக்கு மகிழ்ச்சிதானே!
நீண்ட நாட்களாகவே உங்களுக்குக்
கடிதம் வரைய வேண்டும் என,
சிந்தித்திருந்தேன்.
எனது சில கருத்துக்கள் உங்களுக்குக் கசக்கலாம்.
பழம் பண்டிதருக்குப் புதுமை பிடியாதென,
பரிகசிப்பீர்கள்.
ஆரம்பத்திலேயே அக்கருத்தை மறுக்க விரும்புகிறேன்.
நிச்சயம் பெண் விடுதலைக் கருத்துக்கு நான் எதிரியல்ல.
விளக்கமில்லாமற் பேசும்,
சில விடுதலை விரும்பிகளோடுதான் எனக்கு முரண்பாடு.
இனி விடயத்திற்கு வருவோம்.
பெண் விடுதலைப் போராட்டமென்பது,
உங்கள் தாரக மந்திரம்.
அதிலிருந்தே என் முதற் கேள்வி ஆரம்பமாகிறது.
''பெண் விடுதலைப் போராட்டம்'' எனும் தொடரிலிருந்து,
பெண்களை யாரோ அடிமைப்படுத்துகிறார்கள்,
அவர்களிடமிருந்து விடுதலைபெற,
பெண்கள் போராடுகின்றார்கள் எனும் செய்திகளை,
தர்க்கத்தினால் நாம் பெற்றுக் கொள்கிறோம்.

அங்ஙனமாயின்,
அடிமைப்படுத்தியவர்கள் யார்?
போராட்டம் யாருக்கெதிரானது?
கேள்விகளுக்கு விடைகாணல் அவசியமாகிறது.
இக்கேள்விகளுக்கு உங்களிடமிருந்து,
இன்றுவரை தெளிவான பதிலில்லை.
எதிரி இனங்காணப்படாமல்,
போராடுதல் எங்ஙனம்?
யார் எதிரி? என்ற கேள்விக்குப் பதிலாக,
சமுதாயம், சமயம், கலாசாரம், பண்பாடு, இலக்கியம் என,
நீங்கள் கை நீட்டுகிறீர்கள்.
இவை அறிவுடைப் பொருட்களாகா.
அறிவுடைய (?) உங்களை,
அறிவற்ற இவை எங்ஙனம் அடிமைப்படுத்த முடியும்?
எனவே மேற்சொன்னவற்றினூடு உங்களை அடிமைப்படுத்திய,
அந்த அறிவுடைய எதிரி யார்?
மீண்டும் கேள்வி பிறக்கிறது.
பதில் ஒன்றே ஒன்றுதான்.
உலக அமைப்பில்,
சிந்திக்கத்தக்க ஆற்றல்,
ஆண், பெண் எனும் இரு பாலார்க்குமே உரியது.
அடிமைப்பட்டோர் பெண்கள் எனின்,
அடிமைப்படுத்தியோர் நிச்சயம் ஆண்களே.
நேரடியாகவோ,
சமயம், சமூகம் முதலிய கருத்துக்கள் மூலமாகவோ,
உங்களை அடிமைப்படுத்தியது
ஆணினமாகத்தான் இருக்க வேண்டும்.

KOHA JPL

*இவ்வுண்மை பெறப்பட,*
*உங்கள் எதிரி ஆண் வர்க்கம் என்றும்,*
*உங்கள் போராட்டம் ஆண்வர்க்கத்திற்கு எதிரானது என்றும்,*
*தெளிவாகிறது.*
*ஆனால்,*
*விடுதலைபற்றிப் பேசும் நீங்களோ,*
*ஆண்கள்தான் எங்கள் எதிரிகள் என்று,*
*இன்றுவரை பகிரங்கமாய் அறிவிக்கத் தயங்குகிறீர்கள்.*
*காரணம் ஆண்களின் தேவையை,*
*உங்களால் முற்றாய் நிராகரிக்க முடியவில்லை என்பதுதான்.*
*எதிரியை இனங்காட்டத் துணியாத,*
*உங்கள் போராட்டம் நகைப்பூட்டுகின்றது.*
*அது கிடக்க,*
*ஆண்கள் உங்கள் எதிரிகள்தானா?*
*தமிழனாய் மீண்டும் சிந்திக்கிறேன்.*
*அப்படியும் தெரியவில்லை.*
*தமிழர் மரபில்,*
*''சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்?''...*
*என்ற வள்ளுவனில் இருந்து,*
*''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொழுத்துவோம்'',*
*என்ற பாரதிவரை,*
*விடுதலை நோக்கி உங்களை ஊக்கப்படுத்தியவர்கள்,*
*ஆண்களே!*
*சீதை, கண்ணகி, பாஞ்சாலி என,*
*காவியம் படைத்து,*
*பெண்ணடிமை முயற்சியையும்,*
*பெண்ணினத்தின் எழுச்சியையும், எடுத்துக்காட்டி,*

*சமூகத்தை விழிப்புறச் செய்தனர் தமிழ்ப் புலவர்கள்.*
*இன்று அவர்களும் உங்கள் பார்வையில் குற்றவாளிகளாய்.*
*கற்காமல் குற்றம் சொல்லும் உங்களை,*
*கடிவதில் அர்த்தமில்லை.*
*மொத்தத்தில் ஆண்களும்,*
*உங்களின் எதிரிகள் இல்லைப்போல் தெரிகிறது.*
*அங்ஙனமாயின்,*
*உங்களை அடிமைப்படுத்திய எதிரி யார்?*
*தெளிவின்மை தெளிவுபடுகின்றது.*
*உங்களின் தெளிவின்மைக்கு அடிப்படைக் காரணம்,*
*இவ்விடுதலைக் கருத்துக்கள்,*
*உங்களின் சிந்தனையில் உதிக்காததே.*
*பெண்விடுதலை எனப் பேசி நிற்கும் உங்களிற் பலர்,*
*சமுதாய மேற்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்.*
*இக்கருத்துக்கள் மேலைத் தேயத்தவர்களிடமிருந்து,*
*நீங்கள் இரவல் வாங்கியவை.*
*விமானம், கொம்பியூட்டர் என,*
*பலவற்றை மேலைநாடுகளில் இரவல் வாங்குகிறோம்.*
*கருத்தை வாங்கக் கூடாதா? என்று,*
*உங்களுள் சில படித்த மேதாவிகள் கேள்வி எழுப்புகின்றனர்.*
*அவை கருவிகள்.*
*கருவிகள் நம் கருத்துக்கு உட்படுபவை.*
*அதைக்கடன் வாங்குவதால் நம் சுயம் கெடப்போவதில்லை.*
*கருத்துக்களைக் கடன் வாங்கினால்,*
*நாம் கருவிகளாகிச் சுயமற்றுப் போவோம்.*
*இதுகூட உங்களுக்குத் தெரியவில்லை.*
*பிரச்சினைகளைச் சந்திக்காமலேயே,*

பிரச்சினைபற்றிப் பேசிக் கொண்டிருப்பதால்,
உண்மை விடுதலை வேட்கையை,
நீங்கள் என்றும் உணரப் போவதில்லை.
விடுதலை என்பதோர் எழுச்சி.
அது அனுபவத்தால் அடி மனதில் இருந்து கிளம்பவேண்டும்.
அப்படி அச்சுதந்திர உணர்ச்சி கிளம்ப,
அடிமைத்தனத்தின் வேதனை புரிதல் வேண்டும்.
ஆனால் உங்களைப் பொறுத்தவரை,
விடுதலை பற்றிப் பேசுவதென்பது,
அதனாற் கிடைக்கும்,
பதவிகள், பயணங்கள், விளம்பரங்கள் முதலிய,
புகழ்நோக்கிய பொழுதுபோக்கு.
அதனாற்தான் பாவம்,
கலாசாரம், பண்பாடு, கம்பன், வள்ளுவன் என,
கற்பனையிலேயே எதிரிகளைச் சாடி மகிழ்கிறீர்கள்.
ஆற்றல் மிகு விளையாட்டு வீராங்கனை,
சுசந்திகாவின் அழகு,
அமைச்சரொருவரால் நையாண்டியாய் பேசப்பட்டபோது,
சாட்டுக்காய் குரல்கொடுத்துத் தப்பினீர்கள்.
காரணம்....,
பேசியவர் ஓர் அமைச்சர்.
அவரைப் பகைத்துக்கொள்ள,
உங்கள் மேல்தட்டு வர்க்கம் உடன்படாது.
நீங்கள் எதிர்பார்க்கும் அரச கௌரவங்களும், விருதுகளும்,
கிடைக்காமல் போகலாம் எனும் பயம் உங்கள் மனதில்.
இவை கசக்கும் உண்மைகள்!
இன்று வட கிழக்கில் போராட்டத்தால்,

கற்பிழந்து கதறும் பெண்கள் நூற்றுக்கணக்கில்.
விதவைகளான பெண்கள் ஆயிரக்கணக்கில்.
இராமன் தேடிய சீதையாய் அன்றி,
இராமனைத் தேடிய சீதைகளாய்,
வெளிநாடுகளுக்கு "பொதி" பண்ணப்படும்,
பெண்களின் உள்ளக்கொதிப்பு எனும் ஒரு புதுப் பிரச்சினை,
பாதுகாப்பு என்னும் பெயரில் நடக்கும்,
பாலியல் துன்புறுத்தல்கள்,
நிதர்சனமாய் நடக்கும் இந் நிஜக் கொடுமைகள்,
உங்கள் கண்ணில் படாது.
அடிமைத்தனம் நிகழும் இடத்தில் அல்லவோ,
போராட்டம் நிகழ வேண்டும்.
நீங்களோ,
வசதியாய் இருந்தபடி வாய்வீச்சுப் போராட்டத்தில்.
இதுதான் உங்கள் எல்லை.
இதன் மேல் செல்ல,
உங்கள் மேற்தட்டு வர்க்க வாழ்க்கையும் சிந்தனையும்,
இடமளிக்காது.
ஒன்று தெளிவாகிறது!
உண்மைப் போராட்டத்தையும்,
உண்மை எதிரியையும்,
இனம் காணாமலேயே,
உங்கள் போராட்ட முயற்சிகள் தொடர்கின்றன.
ஆராயத்தலைப்பட்ட கேள்வி எஞ்சியே நிற்கிறது.
பெண் விடுதலையின் எதிரி யார்?
உலகப்படைப்பில்,
சிந்திக்கத் தக்க ஆண், பெண் இருவருள்,

பெண்ணினம் அடிமைப்படுத்தப்பட்டதாய்ப் பேசுகிறீர்கள்.
அடிமைப்படுத்தியவன் ஆணல்ல என்பது உங்கள் வாதமுமாம்.
ஆகவே உங்களை அடிமைப்படுத்தியது?....
மன்னிக்கவும் நீங்கள் தானோ?
''மாதர்,
தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்.''
பாரதி பாடலில்,
இரட்டை அர்த்தம் தொனிக்குமாற்போல் தோன்றுகின்றது.
ஒன்று நிச்சயம்.
உங்களையோ, போராட்டத்தையோ,
கொச்சைப்படுத்தவல்ல இக்கடிதம்.
உங்களை சிந்திக்கச் செய்யவே.
அதனாற்தான் தெளிவுறப் பதில்காணாமல்,
ஐயங்களோடு இக்கடிதத்தை முடிக்கிறேன்.
முடிந்தால்,
சிந்தியுங்கள்.
தெளியுங்கள்.
பதில் காணுங்கள்.
வெற்றிபெற வாழ்த்துக்கள்.

இங்ஙனம்,
பண்டிதன்.



# 27

## பாரதப் பிரதமர் வாஜ்பாய்

*பிரமச்சாரியான இவர்,*
*1998இல்,*
*பாரதத்தின் தலைமையை இரண்டாம் முறையாக ஏற்றார்.*
*1996ஆம் ஆண்டுத் தேர்தலில் வென்று,*
*பெரும்பான்மையின்மையால் 13 நாட்களில்,*

*இவர் ஆட்சி கவிழ்ந்தது.*
*பாரதிய ஜனதாவின்,*
*மூத்த தலைவர்களுள் ஒருவரான இவர்,*
*சிறந்த கவிஞருமாவார்.*
*மென்மையும் திண்மையும் உண்மையும் கொண்ட,*
*தலைவர் இவர்.*
*தன் ஆட்சிக்கு ஆதரவு அளித்த,*
*தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா,*
*தமிழகத்தில் ஆட்சியிலிருந்த,*
*தி.மு.க. அரசினைக் கலைக்க வேண்டும் என,*
*நிபந்தனை விதிக்க,*
*ஆட்சி கவிழலாம் எனும் சூழ்நிலையிலும்,*
*அந்நிபந்தனையை நிராகரித்து,*
*தன் ஆளுமையை நிரூபித்தார்.*
*இவரது தலைமை கண்டு மகிழ்ந்து,*
*தொடரும் இவர்தம் ஆட்சியின் வெற்றிக்கு வாழ்த்துரைத்து,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(22.03.1998 - தினக்குரல்)

(13 மாதங்கள் நடந்த இவரது ஆட்சியில்,
பல பிரச்சினைகளைக் கொடுத்துப் பின்,
தன் ஆதரவை ஜெயலலிதா விலக்க,
பாராளுமன்றில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில்,
ஒரு வாக்கு வித்தியாசத்தில் இவரது ஆட்சி கவிழ்ந்தது.)

# இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு...

மாண்புமிகு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்கட்கு.
வணக்கம்.
நலம் வேண்டி நிற்கிறேன்.
வாழ்த்துக்கள்.
இரண்டாம் தரமாய் இந்தியப் பிரதமர் பதவி வாய்த்திருக்கிறது.
நிச்சயம் இம்முறை ஆட்சி,
13 நாட்களைத் தாண்டும் என்பது அவதானிகள் கணிப்பு.
தாண்டவேண்டுமென்பது என் பிரார்த்தனையும்.
ஏனோ உங்களை எனக்கு நிரம்பப் பிடிக்கின்றது.
உங்கள் கட்சியையும்தான்.
காந்தி எனும் மாமனிதனால் உருவாக்கப்பட்ட காங்கிரசும்,
அதன் கொள்கைகளும்,
பின்வந்த தலைவர்களாற் பெயரளவிற் பேணப்பட,
''கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாய்''
இந்திய தேசத்தின் புகழ் இறங்கு திசையில்.
பெயரளவில் காந்தியமும்,
உள்ளே சுயநலமுமாய்,
இயங்கும் அண்மைக்கால காங்கிரசை,
எனக்குப் பிடிக்கவில்லை.
''பசுத்தோல் போர்த்திய புலிகள்.''
நன்மையோ தீமையோ.....
உங்கள் கட்சியின் கொள்கையில் உண்மை வெளிப்படுகின்றது.
சாதி, சமய அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட,
வாக்கு வங்கிகள் உருவாகிவிட்ட உங்கள் தேசத்தில்.....

எல்லோரையும் ஈர்ப்பதற்காய்,
பொய்யான ''பொதுமை'' பேசாமல்,
''இதுதான் நான்'' என இயம்பும்,
உங்கள் இயல்பு பிடிக்கிறது.
மனமும், செயலும் வேறுவேறாக,
பொய்முகம் காட்டி அனைவரையும் ஈர்க்கும்,
''பரத்தமை'' உங்களிடம் இல்லை.
ஆரம்பம் தொட்டு,
இந்திய தேசத்தை இந்து தேசமென
உங்கள் கட்சி சொல்லி வருகிறது.
பிரச்சினை தீர்வதற்காய்,
''பாபர் மசூதி''
உடைக்கும் உங்கள் முயற்சியைக்
கைகட்டிப் பார்த்திருந்து,
பின் பதறியதாய்க் காட்டிய காங்கிரசை விட,
உங்கள் நேர்மை உயர்ந்தது.
இந்தியதேசம் இந்து தேசம்தான்.
உண்மையை நோக்குவோர்,
இக்கருத்தில் மாறுபட நியாயமில்லை.
வந்தவரே முகமதியர் என்பது,
நிச்சயமான வரலாறு.
அவதாரங்கள் நிகழ்ந்த தேசம்.
வரலாற்றுப் புகழ் மிக்க ஆலயங்கள் வளர்ந்த தேசம்.
சமயகுரவர், சந்தானகுரவர்,
ஆழ்வார்கள், அடியார்கள்,
சித்தர்கள், ஞானியர்கள் என,
மகானுபாவர்கள் நிறைந்த தேசம்.

வேதத்தை அடிப்படையாகக் கொண்டு.
தத்துவங்களைத் தந்த தேசம்.
இத் தேசத்தை இந்து தேசமென அறிவிப்பதில் என்னதயக்கம்?
இத்தகைய அற்புதங்கள் நிறைந்த மண்ணை.
வேற்று மதத்தவராயின் விட்டுக்கொடுப்பார்களா?
இன்னும் இஸ்லாமிய நாடுகளில்,
மற்றைய மத வழிபாட்டுக்கு,
மதிப்புமில்லை, மன்னிப்புமில்லை.
இத்தனைக்கும் உங்கள் தேசத்தில்,
அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஒன்றிணைந்து,
விடுதலையின்போது விலகி,
தேசத்தில் பகுதி கேட்டு,
பாகிஸ்தான் உருவானது வரலாறு.
''எதனையும் எடுத்துப் போகட்டும், அவர்கள் எம்மவர்கள்''
என, கைகட்டி நின்றார் காந்தி.
விட்டுக்கொடுப்பது அழகுதான்.
விளங்க மறுத்தால்?
''கொல்லப் பயன்படும் கீழ்''
என்கிறார் வள்ளுவர்.
எனவேதான்,
உங்கள் உண்மை நிலையில் எனக்கோர் உவப்பு.
அருகிருந்து அன்றாடம் வாலாட்டும் பாகிஸ்தானை,
''அணுவாயுதம் எடுப்பேன்'' என்று மிரட்டும்,
உங்கள் ''ஆண்மை'' பிடிக்கிறது.
இந்திய தேசத்தை நிமிர்த்த வேண்டுமாயின்
இன்றைய தேவை,
ஜனநாயக உணர்வு மிக்க ஒரு சர்வாதிகாரி.
அல்லது,

சர்வாதிகாரத் தன்மை கொண்ட ஒரு ஜனநாயகவாதி.
இதில் இரண்டாம் நிலையை உங்களிடம் காண்கிறேன்.
காங்கிரசின் வீழ்ச்சிக்கு அடிப்படைக்காரணம்,
தலைவர்களின் பிள்ளைப்பாசம் என்பது உலகறிந்த இரகசியம்.
இந்திரா அம்மையார்கூட இதற்கு விலக்கல்ல.
பிரமச்சாரியான நீங்கள் இக் குற்றத்தில் விழ வாய்ப்பில்லை.
இலக்கியவாதி என்பது இன்னொரு தகுதி.
இவையெல்லாம் ஒன்றுசேர்ந்த உங்களிடம்,
தக்கதோர் தலைமையை உலகம் எதிர்பார்க்கிறது.
பெரும்பான்மைப் பலமிழந்தது ஒரு பெரும்சோதனைதான்.
அனைவரையும்
அணைத்து நடக்க வேண்டிய அவசியத்தில் தாங்கள்.
தேசியக்கொள்கையறிவிப்பில்
சமரசம் கட்டாயத் தேவையானது, தெளிவாகிறது.
வேறுவழியில்லையென,
அரசியல் அவதானிகள் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்.
எனினும் எல்லை மீறி "இழுபட" மாட்டீர்கள் என்பதை,
ஜெயலலிதா மோதலில் நிரூபித்திருக்கிறீர்கள்.
எல்லோரும்
உங்கள் தலைமையைக் கணிக்கக் காத்திருக்கிறார்கள்.
ஈழத்தமிழரும்தான்.
எங்கள் சார்பானவர்கள் உங்கள் அமைச்சரவையில்.
இனியேனும் எமக்கு வாழ்வு பிறக்குமா?
ஏங்கியபடி நாங்கள்.
வெற்றிபெற வாழ்த்துக்கள்.

அன்புடன்,
பண்டிதன்.




# 28

## தினக்குரல் பத்திரிகை

*நீண்ட நாட்களின் பின் இலங்கையில் வெளிவரத் தொடங்கிய,*
*தேசியத் தமிழ்த் தினப்பத்திரிகை இது.*
*தினகரன், வீரகேசரி எனும்,*
*இரு தேசியத் தமிழ்த் தினப் பத்திரிகைகள்,*
*இலங்கையில் பல ஆண்டுகளாய் வெளிவருகின்றன.*
*இவற்றுள் தினகரன் அரசுசார்புப் பத்திரிகை.*

*வீரகேசரி நடுநிலைப் பத்திரிகை.*
*அதனால் வீரகேசரி,*
*தமிழர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருந்தது.*
*இவற்றின் நீண்டநாள் வரவுக்கிடையே,*
*தினக்குரல், 06.05.97இல் வெளிவரத் தொடங்கியது.*
*இதன் வருகையால் இலங்கைத் தமிழ்ப்பத்திரிகை உலகில்,*
*ஒரு போட்டி தொடங்கிற்று.*
*பல புதிய முயற்சிகளை இப்பத்திரிகை அறிமுகப்படுத்த,*
*மற்றைய பத்திரிகைகளும் அம்முயற்சிகளைப் பின்பற்றின.*
*இந்நிலையில்,*
*பலருக்கும் இப்பத்திரிகையிலேயே தொடர்ச்சியாய்,*
*பகிரங்கக் கடிதம் வரைந்த பண்டிதர்,*
*இப்பத்திரிகையின் ஓராண்டு நிறைவை ஒட்டி,*
*வரைந்த பகிரங்கக் கடிதம்.*

(05.04.1998 - தினக்குரல்)

## ஓராண்டு நிறைவுறும் தினக்குரல் பத்திரிகைக்கு...

*அன்புக்குரிய தினக்குரலே!*
*வணக்கம்.*
*நலமுறுக.*
*ஓராண்டு அகவை நிறைகிறாய் எனக்கேட்டு உவப்புறறேன்.*
*பல்லாண்டு எழுச்சியுற வாழ்த்துக்கள்.*
*நீ பிறந்தது நேற்றுப்போல் இருக்கிறது.*
*'தேசிய தமிழ்த் தினப்பத்திரிகை' எனும் குடும்பத்தில்,*
*முன்பிறந்த இரண்டு சகோரதரர்களின் பின் பிறந்தாய் நீ.*
*ஓரிரு சகோதரர்கள் உனக்கு முன் தோன்றி மடிந்ததும் உண்டு.*
*வாழும் உன் சகோதரர்களில் ஒருவன்,*
*'அரச ஊதுகுழலாய்' செயற்படுவதே*
*தன் தொழிலெனக் கொண்டு,*
*மதிப்பிழந்து போனான்.*
*மற்றவன் மக்கள் மன்றிற்கு,*
*நீண்ட நாள் நிதானத்தோடு செய்தி தந்தான்.*
*ஆதலால் நிலைத்து நின்றான்.*
*எனினும் உன்பிறப்பில் அவனுக்கு உடன்பாடு இல்லை.*
*தமிழ் இனத்தின் 'செல்லப்பிள்ளை' எனும் பதவி,*
*பறிபோய் விடும் எனும் அச்சம் அவனுக்கு.*
*தன்னை வளர்த்துப் பாசம் பொழிந்தவர்கள் எல்லாம்,*
*உனது வருகையோடு உன்னையும் நாட,*
*அவனுக்கு உன்மேற் பொறாமை.*
*புதிதாய்ப் பிறக்கும் குழந்தையில்*
*விருப்பு உண்டாதல் இயல்பு என,*

ஏனோ அவன் விளங்க மறுத்தான்.
உன்மேலான விருப்பு தன்மேலான வெறுப்பு எனும்,
பிழையான கருத்து அவனுக்கு.
தன்னை வளர்த்தவர்கள் உன்னை வளர்க்கக்கூடாதென,
அவனிடம் ஒரு 'செல்லப்' பிடிவாதம்.
வளர்ந்துவிட்ட அவனை,
இனி யாரும் பராமரிக்கலாம் எனும் உண்மை,
அவன் அறிவில் ஏனோ படாமல் போயிற்று.
நீயோ இவைபற்றிக் கவலையின்றி வளரத்தலைப்பட்டாய்.
உடல் பிரட்டி,
முழங்கால்குத்தி,
தவழ்ந்து,
தடுமாறி,
நின்று,
கைகொட்டிச் சிரித்த,
உனது கவர்ச்சி,
மெல்ல மெல்ல அனைவரையும் ஈர்த்தது.
நீ நீண்ட நாட்களின் பின் பிறந்தவனாகையால்,
உன்மேல் அனைவர்க்கும் கொள்ளைப்பாசம்.
இன்றைய குழந்தைகளைப் போலவே,
உன் விளையாட்டுக்கள் அத்தனையும் புதுமை பேசிற்று.
என்னென்னவோ செய்து எல்லோரையும் கவர்ந்தாய்.
உன் அண்ணன்மார்கூட,
பகை மறந்து உன்னை ரசிக்கத் தலைப்பட்டனர்.
மற்றவர் மனம் கவரும் உன் செயற்பாடுகள் கண்டு,
தாமும் அங்ஙனமாய்ச் செயற்பட முயன்றனர்.
உன் ஒவ்வொரு செயற்பாடுகளும்

*உனது சகோதரர்களினால் பின்பற்றப்பட்டன.*
*முன்னேற்றத்தில் போட்டியிடும் உங்கள் செயல் கண்டு,*
*தமிழ் மக்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி.*
*அண்மைக்காலமாய் நீயும் உன் சகோதரர்களும்,*
*தட்டிக்கொடுத்து கோபம் மறந்து கூடுதல் கண்டு,*
*நானும் மகிழ்ச்சியுற்றேன்.*
*தமிழ்ப் பிள்ளைகளாகிய உங்கள் வளர்ச்சி கண்டு,*
*'தகிப்பவர்கள்' மத்தியில்,*
*நீங்கள் வளர்வதை மறந்து விடாதீர்கள்.*
*பத்திரிகைச் சுதந்திரம், பாராளுமன்றம், வாக்குரிமை,*
*நீதிமன்றம் என்னும்,*
*'ஜனநாயகத்தூண்கள்' நான்கில்,*
*ஒன்றான பெருமை உங்களுடையது.*
*சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளைப் பறித்து,*
*ஜனநாயகப் போர்வையில்,*
*சர்வாதிகாரம் செய்யும் பேரினவாதச் சிங்கள அரசுகளுக்கு,*
*உங்கள் வளர்ச்சி நிச்சயம் ஒவ்வாது.*
*தமக்கு ஊதுகுழலாய்ச் செயற்படும்,*
*உங்கள் அண்ணன் வழியிலேயே*
*நீங்களும் வரவேண்டும் என்பது,*
*அவர்தம் விருப்பமாய் இருக்கும்.*
*இந்நிலையில் ஒற்றுமையே உங்கள் இருவர்தம் பலமென,*
*உணர்ந்து செயற்படுங்கள்.*
*ஒருவர்க்கொருவர் போட்டிகள் தவிர்த்து,*
*பொது எதிரியின் முன் ஒன்றுபட்டு,*
*உங்களை அன்போடு வளர்க்கும்*
*தமிழ் மக்களுக்காய்ப் பாடுபடுங்கள்.*

அரசின் அடக்குமுறைகளுக்கு ஆளாகி,
தமிழ் மக்கள் படும் அவதிகள் அகிலம் அறிந்தவை.
சீராக வாழ்ந்த தமிழினம்,
கையேந்திப் பாரெல்லாம் பறக்கின்றது.
ஓயாத அழுகுரல் ஒலித்தபடி தமிழ் மண்.
உயிர், உற்றார், உடமை என,
அனைத்தையும் இழக்கும் நிலையிலும்,
பாசத்தோடு உமைவளர்க்கும் அப்பண்பாளர்களின்,
துயர்துடைத்தல் நும் கடமையன்றோ!
அவர் துன்பச் சுமையை,
உலகெல்லாம் ஒலிக்கச் செய்யும் சக்தி,
உங்கள் இருவருக்கும்தான் உண்டு.
''ஆயிரம் உண்டிங்கு ஜாதி - எனின்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி'' என,
பேதம் மறந்து பெரும்பணியாற்றுங்கள்.
நீவிர் இருவரும் ஒரே 'குட்டையில் ஊறிய மட்டைகள்'.
''சீச்சீ'' ஒரு குளத்துத் தாமரைகள்.
உமக்குள் பகை ஏன்?.
உங்களிடம் இத் தமிழ்மண் எத்தனையோ எதிர்பார்க்கின்றது.
மறந்து விடாதீர்கள்.
அது போக,
இக் கடிதம் வரையும் நோக்கம் இனி உரைப்பேன்.
உன் ஓராண்டு வளர்ச்சி மகிழ்ச்சி தந்தாலும்,
அதனையே 'உச்சமெனக்' கொண்டு ஓய்ந்துவிடாதே.
இன்றைய,
உலகப் பத்திரிகைகளின் சாதனைகளோடு ஒப்பிடும்போது,
நீ பச்சைக்குழந்தை என்பது பகிரங்கம்.

பொதுசன நூலக

*நீயென்ன?..... உன் அண்ணனும்தான்.*
*இன்று உலகில் வல்லரசுத் தலைமைகளைக்கூட,*
*பத்திரிகைகள் அசைக்கின்றன.*
*காற்றுப்புகா இடமெல்லாம் புகுந்து,*
*சித்துச் செய்யும் பத்திரிகையாளர்கள்,*
*இன்று உலகெங்கும்.*
*உயிராபத்தை மறந்து,*
*குண்டுமாரி பொழியும் போர்முனைகளிற்கூட,*
*பேனாவுடன் அவர்கள்.*
*ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கில் உயிர் துறக்கும் அளவில்,*
*அவர்கள் துணிவு.*
*சமுதாய ஓட்டத்தில் அடிபட்டுச் செல்லாமல்,*
*அதனைத் திசை திருப்பும் முனைப்பில்,*
*அவர்தம் எழுத்தாற்றல்.*
*செத்தவர்கள் எண்ணிக்கையை வெளியிடுவதிலேதான்,*
*இன்றும் உங்களின் சாதனை!*
*அவர்களோ போரையும், சாவையும் தடுக்கும் ஆற்றலோடு!*
*கேள்விகளால் அரசுகளையும் தலைவர்களையும்,*
*திகைக்கச் செய்கிறார்கள் அவர்கள்.*
*கொடுங்கோலர்களின் முதுகிலும்,*
*தட்டிக்கேட்கும் தகுதி அவர்களுடையது.*
*அத்தகு பத்திரிகைகளோடு ஒப்பிடும் போது,*
*உங்கள் வளர்ச்சி கடுகளவாய்ச் சிறுத்துப் போகிறது.*
*''காலக்கணக்கால்'' தம் மூப்பை நிரூபிக்கவே,*
*இங்குள்ள பத்திரிகைகள் முனைகின்றன.*
*அவைகளின் ஆற்றலும் வளர்ச்சியும்,*
*அதிக பேதமின்றி அன்று போலவே இன்றும்.*

'மூத்த பத்திரிகையாளர்' எனும் தகுதி,
இங்கு ஆற்றலாலன்றி அகவையால் தீர்மானிக்கப்படுகின்றது.
பக்கம் நிரப்புவது எங்ஙனம் என்பதையே,
தொழில் ரகசியமாய்,
பாதுகாக்கும் பரிதாப நிலையில் நம் பத்திரிகைகள்.
சுருக்கம் என்பதை,
பத்திகளை அகற்றுவதாய்ப் பாடம் பண்ணிய,
பத்திரிகை ஆசிரியர்கள் இங்கு பலர்.
தொடர்பறுந்து தொங்கும்,
கருத்துப்பற்றி அவர்கட்குக் கவலையில்லை.
மக்களுக்குச் சொல்ல வேண்டியதை விடுத்து,
மக்கள் சொல்வதையே தலைப்பாய்த் தீட்டும்,
நகைப்பிற்குரிய ஆசிரியத் தலையங்கங்கள்.
வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளும்,
அரச அறிவித்தல்களுமே,
இங்கு பத்திரிகைகள் தரும்,
'துணிவு' மிக்க போர்க்களச் செய்திகள்.
தொடை காட்டும் பெண்களால் துலங்கும் சினிமாப் பகுதி,
சமையற் குறிப்பும், அழகுக் குறிப்பும் மாத்திரம் பேசும்
மாதர் பகுதி,
வேதாளத்தை வீழ்த்தும் விக்கிரமாதித்தன் முயற்சியையே,
இன்றும் நம்பியிருக்கும் சிறுவர் பகுதி,
ஆட்சியாளர்களையும், பதவியாளர்களையும்
தடவிக் கொடுக்கும் கட்டுரைகள்,
தம் சாதனைகளைத் தாமே பறைசாற்றும்
இலக்கியவாதிகளின் செவ்விகள்,
எனப் பழம்பஞ்சாங்கங்களாய்,

இன்றும் எமது பத்திரிகைகள்.
நீங்கள்,
இன விடுதலை வேண்டி எழுச்சியுற்றிருக்கும்,
நம் தமிழினத்தின் தரம் பேச வேண்டாமா?
உலகப் பத்திரிகையாளர்கள்,
உங்களை ஆச்சரியத்தோடு நோக்கும் நாள் வரவேண்டும்.
உங்கள் சொல்வீச்சால் பேரினவாதம் பேதலிக்க வேண்டும்.
உங்கள் ஆவேசம் கண்டு,
அநியாயம் செய்யும் அரசுகள் அதிர வேண்டும்.
இவையெல்லாம் என் விருப்பங்கள்.
தமிழ் மக்களின் விருப்பமுமாம்.
மற்றவர்கள் எப்படியோ!.....
புத்துயிர்ப்போடு புது உலகம் காணப் புறப்பட்ட நீயாவது,
நிச்சயம் இந்நிலை எய்தல் வேண்டும்.
உன் ஓராண்டுத் துடிப்பைக் காணும்போது,
உயர்வு நிச்சயமாய்த் தெரிகிறது.
நான் நினைக்கும் அளவிற்கு உயர்வாயா?
பெரும் எதிர்பார்ப்போடு,
நானும் தமிழ் மக்களும்.

அன்புடன்,
பண்டிதன்.





# 29

## பாட்டாளி மக்கள்

*இவர்கள் காலாகாலமாய் முதலாளிகளால்,*
*ஏமாற்றப்படும் அப்பாவிகள்.*
*உலக தொழிலாளர் தினமென அறிவிக்கப்பட்டிருக்கும்,*
*மேதினத்தில் மட்டும் போராடுவதால்,*
*தம் வாழ்வு உயரும் என நம்பும் ஏமாளிகள்.*

*அரசியற் தலைவர்களாலும்,*
*தொழிற் சங்கத் தலைவர்களாலும்,*
*பகடைக்காய்களாய்ப் பயன்படுத்தப்படும் வெகுளிகள்.*
*வருடாவருடம்,*
*மேதினக் கொண்டாட்டங்களிலும், ஊர்வலங்களிலும்*
*தொழிலாளர் உயர்வுக்காகக் கோசமிட்டுவிட்டு,*
*பின் வழமையான வாழ்வைத் தொடரும் அடிமைகள்.*
*இவ் அப்பாவிகளுக்கு 1998 மேதினத்தை ஒட்டி*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(03.05.1998 - தினக்குரல்)

## மேதினத்தை முன்னிட்டு,
## பாட்டாளி மக்களுக்கு...

என் இனிய பாட்டாளி மக்களே!,
வணக்கம்.
நலமுறுக.
மேதினக் கொண்டாட்டங்களால் எழுச்சியுற்றிருப்பீர்கள்.
"இத்தேசத்தின் வேர்களென" உங்களைப் புகழ்ந்து,
ஒருவர் தப்பாமல்,
அனைத்துக்கட்சித் தலைவர்களும் வெளியிட்ட அறிக்கைகள்,
உங்களை ஆனந்தங்கொள்ளச் செய்திருக்கும்.
அவர்களின் அறிக்கைகள் அத்தனையும்,
உண்மை என்று எண்ணும் உங்கள் அறியாமை கண்டு,
நகைப்புண்டாகிறது.
வேரென்று உங்களைச் சொல்வதன் மூலம்,
என்றும் உங்கள் வாழ்வு மண்ணின் கீழ்தான் என,
மறைமுகமாய்ச் சொல்லும்,
அவர்கள் உத்திகூடவா உங்களுக்குப் புரியவில்லை.
பாவம் நீங்கள்!.
புரிந்திருந்தால், இப்படியா இருப்பீர்கள்?.
தொழிலாளர் தினத்தை முதலாளிகள் கொண்டாடும் விந்தை,
நீங்கள் மூடர்களாய் இருக்குமட்டும் தொடரும்.
கொள்கைகளுக்காய்த் தனித் தினங்களமைத்துக்
கொண்டாடும்,
மேற்குலகச் சிந்தனையில் எனக்கு நம்பிக்கையில்லை.
பெண்கள் தினம், தொழிலாளர் தினம்....,
என்பதாய் அமைக்கப்படும் தினங்களே,

*அவரவர் தாழ்வு நிலையை*
*வெளிப்படுத்துவனவாய் அமைந்து விடுதல்,*
*ஒருதலை.*
*வருடத்தில் ஒரு நாள் உங்களுக்குரியதாகில்,*
*மற்றைய நாட்களில் உங்கள் நிலை...?*
*பதில் காண விழையாத ''பரவசம்'' உங்களுடையது.*
*தந்தைக்கு, தாய்க்கு, காதலர்க்கு என்றும்,*
*இப்போது நாட்கள் ஒதுக்குகின்றனராம்.*
*உணர்வு சாரா மேற்குலகப் போலிநாகரிகத்தின்,*
*அறியாமைக் குறியீடாய் அத்தினங்கள்...*
*உறவுகளைக்கூட ஒரு நாளைக்குள் அடக்கிவிடும் கொடுமை.*
*நம்மைப் பொறுத்தவரை,*
*மேற்குலக அழுக்குகளும் வரங்களே.*
*''அங்கிருந்து வருமானால் அத்தனையும் ஏற்றுக்கொள்!.''*
*இது நம் அடி மனத்தில் பதிந்திருக்கும் ''அடிமைப்பாடம்.''*
*பதித்தவர்கள் தலைவர்களும், அறிஞர்களும்.*
*இடுகுறியாய்ப் பெயர் கொண்ட இவர்கட்கு,*
*''கோட்டும்'', ''சூட்டும்'' கோடையிலும் சுகம் தரும்.*
*கொள்கையிலா இப்போலிகள்,*
*நுனி நாக்கு ஆங்கிலத்தில் மட்டுமே,*
*தனிப்பெருமை கொள்ளும் தற்குறிகள்.*
*தனித்துவமில்லா இவர்தம் வழிப்படுத்தலில்,*
*நடந்து பழகியதால்,*
*மேதினத்தை,*
*உங்கள் தினமாய்க் கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள்.*
*கொண்டாட வேண்டியதுதான்.*
*முதலாளிகள் உங்களுக்காக வருடத்தில் ஒரு தினத்தையாவது,*
*கருணையோடு ஒதுக்கியதை....!*

அன்று தொட்டு இன்றுவரை,
உலகம் போராட்ட மயமானது.
ஏன்?, என்றென்றும் அதுவே சாசுவதம்.
பணக்காரன் - ஏழை,
முதலாளி - தொழிலாளி,
படித்தவன் - படியாதவன்,
பலசாலி - கோழை என,
உலகம் இரண்டுபட்டே கிடக்கிறது.
இரண்டுபட்ட இவ்வுலகில் என்றும் மோதல்தான்.
வலிமையுள்ளவன்,
மேலும் வலிமையுள்ளவனாக முயற்சிக்கின்றான்.
அதற்காக வலிமையற்றவனை,
மேலும் வலிமையற்றவனாக்க நினைக்கின்றான்.
வலிமையற்ற பலபேர்,
அந்நிலையை விதியாய் ஏற்று அதற்கு ஆட்பட,
திண்மையுள்ள ஒரு சில பேர்,
அந்நிலை மாற்றப் போராடுகின்றனர்.
ஓர் ஆச்சரியம்!
இப் போராட்டத்தில்,
கொள்கைக்கு நிலைத்த வெற்றி தோல்வி என்றுமே இல்லை.
வெற்றி தோல்விகள் போராளிக்கு மாத்திரமே.
போராட்டம் தொடர்ந்த படி.
தோற்றவன்,
வலிமையுள்ளவனுக்கு அடிபணிந்து போக,
வென்றவன்,
தான் வலியனாகி,
தன் வலிமையை நிலை நிறுத்துதற்காய்,

மீண்டும் மற்றவனை வலியிழக்கச்செய்யத் தொடங்குவான்.
தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைவர்களாகி,
பின் தலைவர்களாகி,
பின் முதலாளிகளாவது,
எங்கும் உண்மை; இங்கும் உண்மை.
இடைப்பட்ட நீங்களெல்லாம்,
உங்கள் எழுச்சிக்காய் யார் யாரோ பாடுபடுவதாய் எண்ணி,
உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறீர்கள்.
பாட்டாளி மக்களின் எழுச்சிக்காய் பாடுபடுவதாய்ச் சொன்ன,
இடதுசாரிக் கட்சிகளும்,
இன்று,
தொழிலாளர்களை அவசரகாலச் சட்டத்தால் அரசு அடக்க,
பாராளுமன்றத்தில் பார்வையாளர்களாய் மட்டுமே.
பாட்டாளிகளுக்காய்க் குரல் கொடுப்பதாய்ப் பகர்ந்த,
அவர்ளே இன்று முதலாளிகளான நிலையில்.
அளவுக்கு மிஞ்சிய உங்கள் எழுச்சி கண்டு,
அவர்கள் அச்சப்படல் தவிர்க்க முடியாதது.
ஏனென்று? கேளாதவரைதான் நீங்கள் ''தோழர்கள்''.
நீங்கள் வெள்ளமாய்ப் பொழியும்
வியர்வைத் துளிகளின் பயன்களெலாம்,
இரத்தத் துளிகளாய்ப்
போர்க்களத்தில் இன்று கொட்டிக் கிடக்கின்றன.
போர் ஓயாதவரை,
நீங்கள் எத்துணை வியர்வை சிந்தினாலும்,
இந்நாடு தன்னிறைவு எய்தாது.
நாடு தன்னிறைவு எய்தாதவரை,
உங்கள் தனி வாழ்வு உயரப் போவதில்லை.

இவை நிதர்சனமான உண்மைகள்.
உங்களுக்காக அறிக்கைவிடும் தலைவர்கள் எல்லாம்,
ஏதோ ஒரு வகையில் போர்க்குக் காரணமாய் இருக்கின்றனர்.
மேதினத்தில் மட்டுமே
உங்கள் நல்வாழ்வுபற்றி அவர்கள் பேச்சு.
நீங்களும் செங்கொடிகளோடு சிரித்தபடி அவர்கள் பின்னால்.
ஏமாறுபவர்கள் இருக்கும் மட்டும்,
ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.
இவ்விருவர்தம் இருக்கையும்,
உலகுள்ளவரை தொடரத்தான் போகிறது.
போராட்டங்களும், மேதினங்களும்,
வெறும் திருவிழாக்களாய்த் திகழப் போகின்றன.
வாய் திறந்து வேடிக்கை பார்க்கும் குழந்தைகளாக,
தொழிலாளர்களாகிய நீங்கள்.
அங்ஙனமாயின் தொழிலாளர்களின் உண்மை நிலை?,
கேள்வி பிறக்கிறது.
''காடு விளைஞ்சென்ன மச்சான்,
நமக்குக் கையும் காலுந்தானே மிச்சம்''
பட்டுக்கோட்டையார் தம் பாடலே பதிலாம்.
உய்ய வேண்டுமாயின்,
முதலாளிகளாக முயற்சி செய்வதாய்;
தொழிலாளர் தினத்தில் முடிவெடுங்கள்.
ஒரு சிலராவது வெற்றி பெறுவீர்கள்.
பிறகென்ன,
முதலாளிகளாகி தொழிலாளிகளை முடக்கலாம்.
பிறகு உங்களை எதிர்த்து தொழிலாளி போராட.....,
வேடிக்கைதான்.

மேதினங்கள் தொடரட்டும்.
தொழிலாளி,
முதலாளி பேதம் ஒழியுமென,
தொடர்ந்து நம்புவோம்.
மானுட வளர்ச்சிக்காக,
ஒரு பொய்யை நம்புவது தவறில்லைத்தான்.
என் இனிய வாழ்த்துக்கள்!.

இங்ஙனம்,
பண்டிதன்.





# 30

## இந்தியப் பிரதமர் வாஜ்பாய்

*பிரதமர் வாஜ்பாய் தலைமையில்,*
*பல கட்சிகளின் கூட்டால் அமைந்த,*
*அறுதிப் பெரும்பான்மையற்ற அரசு,*
*11.05.98இல்,*
*வல்லரசுகளின் கண்களை மறைத்து,*

*நீண்ட நாட்களின் பின் இரண்டாம் தரமாக,*
*பொக்ரானில் அணுகுண்டு வெடித்துப்*
*பரிசோதனை செய்தது.*
*தமிழரான அப்துல்கலாம் எனும் விஞ்ஞானி*
*இம்முயற்சியின் தலைமை ஏற்றார்.*
*இக்குண்டு வெடிப்பினால்,*
*உலகத் தரத்தில் இந்தியா உயர்ந்தெழ,*
*அமெரிக்கா போன்ற வல்லரசுகள் அதிர்ந்து,*
*தடைகள் இட்டன.*
*அயல் நாடான இலங்கை,*
*''அணுவாயுத ஒப்பந்தம் பற்றிப் பேச,*
*யாருக்குத் தகுதி உண்டெ''னக்*
*கேள்வியெழுப்பி,*
*பின் அமெரிக்கா அதட்ட,*
*பதறித்தடுமாறி பத்திரிகைத் தவறெனச் சமாளித்தது.*
*எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சாத,*
*இந்திய அரசின் ஆண்மை கண்டு வியந்து,*
*பாரதப் பிரதமருக்குப்*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(24.05.1998 - தினக்குரல்)

## அணு குண்டு வெடிப்புப்பற்றி பாரதப் பிரதமர் வாஜ்பாய்க்கு...

*மாண்புமிகு பாரதப்பிரதமர் வாஜ்பாய் அவர்கட்கு,*
*வணக்கம்.*
*நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.*
*இரண்டாவது முறையாய் இக்கடிதம் வரைவதில் மகிழ்ச்சி.*
*சாதித்த பெருமையுடன் கூடிய சந்தோசம் உங்கள் முகத்தில்.*
*'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்ற நிலையில்,*
*ஆடிக் கொண்டிருந்த தங்கள் சிம்மாசனம்,*
*இன்று 'தற்காலிகமாய்' அசையா உறுதியுடன்.*
*அனைவரும்,*
*உங்கள் ஆட்சிக்கெதிரான ஜெயலலிதா அம்மையாரின்,*
*அரசியற்குண்டு வெடிப்பை எதிர்பார்த்திருக்க,*
*அணுகுண்டு வெடித்து ஆச்சரியப்படுத்தியிருக்கிறீர்கள்.*
*தன் மோகன நடனத்தால்,*
*விசுவாமித்திர மோனம் கலைக்க முடியாத முறைப்பில்,*
*இன்று தமிழ்நாட்டு 'மேனகை'.*
*பாலைவனத்தில் வெடித்த குண்டு,*
*உங்கள் அரசியலைப் பசுமையாக்கியிருக்கிறது.*
*'கவிழ்ந்தார்' எனக் காத்திருந்த எதிர்க்கட்சிகளைத்,*
*திடீரென ஓரங்கட்டி,*
*'அவதானம்' (Check) சொன்னதில்,*
*உங்கள் அரசியற் சதுரங்க ஆற்றல் புரிந்திருக்கின்றது.*
*பாரத மக்கள் பரவசத்தில்.*
*அவர்தம் ஆதரவு கண்டு,*
*மெல்லவும் முடியாத, விழுங்கவும் முடியாத நிலையில்,*

எதிர்க்கட்சிகள்.
உங்கள் சாதனையை
ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு.
எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல,
வல்லரசுகளும் வாடிப்போயிருக்கின்றன.
தம்முடைய உளவுத்துறை ஆற்றல் கடந்து,
உங்கள் குண்டு வெடித்ததில்,
ஒப்பற்ற கோபம் அவர்களுக்கு.
பாதுகாப்பு அமைச்சர் 'பர்னாண்டஸின்',
சீனா மீதான திடீர்ப் பாய்ச்சலும்,
அதனால் வெளிப்பட்ட சீனக்கோபமும்,
''அது அவர்கருத்து'' என்ற தங்கள் சமாதானமும்,
அணுகுண்டு, வெடிப்புக்கான ஆயத்த நாடகங்கள் என்பது,
யாருக்கும் தெரியாமற் போயிற்று.
இவ் 'அணுக்குஞ்சு'' தன் கண்ணில் அகப்படாமல் போனதில்,
'அமெரிக்கக்கழுக்குக்கு' அளவற்ற வருத்தம்.
பதறுகிறது பாகிஸ்தானம்.
'மூன்று நாட்களுக்குள் நானும் முடித்துக்காட்டுவேன்'
எனும் அதன் முழக்கம்,
''வைக்கற் பட்டடையுள் அப்பன் இல்லை'' எனும்கூற்றாய்,
உலகை முகம் சுழிக்க வைத்து,
உங்களை நியாயப்படுத்தியிருக்கிறது.
சீறுகிறது சீனா.
நேர்ப்போர் தவிர்த்து,
பாகிஸ்தானூடு நீட்டிய அதன் மூக்கில்,
நேரடியாய் விழுந்த குத்து.
'மேலும் சப்பையான' மூக்கால் வரும் முனகல்களில்,

உறுதியில்லை.
மடியிற் கனம் வழியில் பயம்.
உலகின் அணுப்பாதுகாப்புப்பற்றி
அமெரிக்காவோடு சேர்ந்து அது அலறுகிறது.
மற்றைய அணு ஆயுத நாடுகளும் அவ்வாறே.
சைத்தான்கள் ஓதும் வேதம்.
பொருளாதாரத் தடை எனும் 'பொல்'(கட்டை) கொண்டு
அடிக்க நினைக்கும்,
அணுவல்லரசுகளுக்கு,
'எதிர்பார்த்ததுதான்' என்ற தங்களின் பதில்,
எரிச்சலூட்டியிருக்கின்றது.
'கடன் கொடேன்' என்ற யப்பானின் குரலில் மாத்திரம்
தார்மீகம்.
அனுபவ அதிர்ச்சி அதன் குரலில்.
மற்ற அனைவர் குரலிலும் அழுக்காறுதான்.
உங்கள் அணுப்பலத்தால்
அயல் நாடான இலங்கையும் அந்தரத்தில்.
உலகக் கருத்தாய் ஒலிக்க முயற்சித்து,
பின் உங்கள் ஆதரவுக் கருத்தாகி,
அமெரிக்க வாத்தியாரின் அதட்டலுக்குப் பின்,
தம் அறிக்கையில் 'அரும்பொருள்' தேடும் அவசியத்தில்,
நம் அமைச்சர்.
பாவம் அவர் என்ன செய்வார்.
''ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்,
இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம்.''
உங்கள் ஆதரவின் அவசியம் புரிந்திருக்கிறது அவருக்கு.
அதே நேரத்தில் அடுத்தவர்தம் அதட்டல்களுக்கும்

அஞ்சவேண்டிய நிலை!
ஈழத்தமிழர்க்கான ஆதரவில்,
உங்கள் பாதுகாப்பு அமைச்சரின் பங்களிப்பை,
அறியமுடியாத குழப்பம் வேறு.
உங்கள் அணுகுண்டு வெடிப்பால்,
இங்கும் புதிய நாடகங்கள் அரங்கேறலாமென
எதிர்பார்க்கப்படுகிறது.
எது எப்படியோ!
உங்கள் சாதனையும், துணிவும்
மீண்டும் பதிவாகியிருக்கின்றன.
தாளாத துன்பத்தில் வீழ்ந்திருக்கும் நம் ஈழத்தமிழர்கள்,
தங்கள் தயையை எதிர்பார்த்தபடி.
அண்மையில்,
ஆட்சியாளர்களை அதிரச்செய்த தங்கள் ஆலோசகர் கருத்தில்,
சற்று ஆறுதலாய் அவர்கள்.
அணுகுண்டு வெடிக்கச் செய்தவர் தமிழர் என்பதில்
நமக்கும் தனிப்பெருமை.
வெடித்த அணுகுண்டை விட,
வெடிக்கப்போகும் அரசியற் குண்டுகளை....
ஆவலுடன் எதிர்பார்த்தபடி நாங்கள்.
நாடகத்தில் பரபரப்பான அடுத்த காட்சிகளை எதிர்பார்த்தபடி,
தென்னாசிய மக்கள்.
சாதனை தொடரட்டும், சரித்திரம் மாறட்டும்.
எதிர்பார்ப்புடன்கூடிய எங்கள் வாழ்த்துக்கள்.
தொடர்ந்தும் வெல்க.

இங்ஙனம்,
பண்டிதன்.




# 31

## பட்டிமண்டப ரசிகர்கள்

*இவர்கள் உண்மையான இலக்கியம் ரசிக்கும்,*
*விருப்புக் கொண்டவர்கள்.*
*அண்மைக்காலமாய்,*
*ஜனரஞ்சகப் படுத்துவதாய்ச் சொல்லப்பட்டு,*
*தரம் தாழ்ந்துபோன பட்டிமண்டபங்களைப் பார்த்து,*

*தம் ரசனையைக் கொச்சைப் படுத்துபவர்கள்.*
*குடும்பப் பிரச்சினைகளும், சினிமாவும்,*
*பட்டிமண்டபக் கருப்பொருளாக,*
*மலினப்படுத்தப்பட்ட அவ்விசயங்களை,*
*ரசிப்பதில் தம் காலத்தை விரயம் செய்து,*
*கேள்வி ஞானத்தைச் சிதைத்துக் கொள்பவர்கள்.*
*இப்பட்டிமண்டப ரசிகர்களுக்கு,*
*உண்மைநிலையை எடுத்துக்கூறி,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(21.06.1998 - தினக்குரல்)

## பட்டி மண்டப இரசிகர்களுக்கு...

*பேரன்பு மிக்க பட்டிமண்டப இரசிகர்களுக்கு,*
*வணக்கம்.*
*உங்கள் அறிவின் நலம் வேண்டி,*
*அன்றாடம் பிரார்த்தித்தபடி நான்.*
*வெளுத்ததெல்லாம் பால் என நினைக்கும்,*
*அப்பாவி இலக்கிய இரசிகர்கள் நீங்கள்.*
*உங்களை அறியாமலேயே*
*உங்களுக்கு விஷம் ஏற்றும் முயற்சி நடக்கிறது.*
*அது பற்றி எச்சரிக்கை செய்யவே இக்கடிதம்.*
*''தர்க்கம்'' அறிவை வளர்க்கும் என்பதறிந்து,*
*மரபிலக்கியங்களை மக்களிடம் சேர்ப்பிக்க,*
*அறிஞர்களால் அமைக்கப்பட்டதே,*
*இன்றைய பட்டிமண்டப வடிவம்.*
*ஒரு காலத்தில்,*
*பேரறிஞர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சிக்கு,*
*பெரும் இலக்கிய அந்தஸ்து.*
*சிந்திக்க வைக்கும் உயர்நிலை இலக்கிய வடிவாய் இருந்த,*
*பட்டிமண்டபம்,*
*இன்று நகைச்சுவை நிகழ்ச்சியாய் நலிவுற்ற நிலையில்.*
*பாமர மக்களிடம் கொண்டு செல்வதாய்க்கூறி,*
*இந்நிகழ்ச்சியின் வீழ்ச்சிக்கு,*
*தன்னை அறியாமலே வித்திட்டவர்,*
*ஒரு காலத்தில் பிரபல இலக்கியப் பேச்சாளராய் விளங்கிய*
*''பேராசிரியர் சாலமன் பாப்பையா'' அவர்கள்.*
*தரம் குறைய சனம் கூடிற்று.*

*இலக்கியம் பேசிய பாப்பையாவை விட,*
*''ஏதேதோ'' பேசிய பாப்பையா புகழ் கொண்டார்.*
*நாள் முழுவதும்*
*நிகழ்ச்சிகள் நடத்த வேண்டியநிலையில் இருந்த,*
*இந்தியத் தொலைக்காட்சி நிலையங்களுக்கு,*
*இந்நிகழ்ச்சி,*
*குறைந்த செலவில் நிறைந்த பலன் தரும்*
*வரப்பிரசாதமாயிற்று.*
*பற்றிக் கொண்டார்கள்.*
*இம் முயற்சியில் ''ஜனரஞ்சகம்'' என்ற பெயரில்,*
*தரக்குறைவின் உச்சத்தை தொட்டார் ''லியோனி''.*
*''வாடா'', ''போடா'' போன்ற*
*''சந்திச்சண்டை'' வார்த்தைகள் எல்லாம்,*
*மேடையில் பயன்படுத்தப்பட்டு இலக்கியத்தரம் பெற்றன.*
*இத் தரக்குறைவால் பட்டிமண்டபம் ''உலகப்புகழ்'' பெற்றது.*
*மேலும் ஒரு படி சென்று,*
*ஜனரஞ்சகத்தின்பேரால் இக்கியத் தலைப்புக்கள் நீக்கப்பட்டு,*
*மாமனா? மாமியா?,*
*கணவனா? மனைவியா? என,*
*''காசுக்குதவாத'' தலைப்புக்கள் வாதப் பொருள்களாயின.*
*அதற்கு ''சமகாலப்பிரச்சினை'' என்ற ''சப்புக்கட்டு'' வேறு.*
*வாழ்ந்துநிறைந்த அறுபது வயதுக் கிழவனுக்கு,*
*வாழத்தொடங்காத இருபது வயதுப் பையன்,*
*பட்டிமண்டபங்களிற் புத்தி சொன்னான்.*
*சேர்ந்திருந்த,*
*மருமகளும் - மாமியும்,*
*கணவனும் - மனைவியும்,*

இப் பட்டிமண்டபங்களால்,
தம்முள் யார் உயர்ந்தவரென ஆராய்ந்து,
மோதிக் கொண்டனர்.
அன்றைய ஊர்க்கிழடுகளின் ''உளறல்களே'',
இன்றைய பட்டிமண்டபங்களாயின.
பட்டிமண்டபங்கள்,
''பாட்டி'' மண்டபங்களான வியத்தகு விந்தை கண்டு,
அறிவுலகம் விக்கித்தது.
பட்டிமண்டபம் ஏற.....
பழைய நாடக ''பபூனின்'' தரமே பாங்கான தகுதியாயிற்று.
மேலும் கூட்டம் கவரும் அவசியம் நேர,
அத்தனை இளைஞர்களினதும் ஏக ரசனைப் பொருளான,
''சினிமா'',
பட்டிமண்டபப் பொருளாயிற்று.
இப்புது வரவால்,
ஜனரஞ்சகம் ''பிய்த்துக்கொண்டு'' போயிற்று.
சினிமாவில் ஆபாசம்பற்றி ஆராயத் தலைப்பட்டவர்கள்,
அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிதறிக்கிடந்த
ஆபாசங்களை,
ஒன்றுதிரட்டி ரசிகர் மனதில் ஆழப்பதித்தனர்.
பேச்சாளர்களின் ''அற்புத'' விளக்கம் கேட்டு,
அவ் ஆபாசக் காட்சிகளை இரண்டாம் தரம்,
''கலைக்கண்ணோடு'' தேடிப்பார்க்கும் நிலையில்
இளைஞர் கூட்டம்.
சினிமாவை,
தன் பட்டிமண்டபங்களில் கண்டித்துக் கண்டித்தே,
சினிமாவில் நடிக்கும் வாய்ப்பை (?) பெற்றுக்கொண்டார்

*"லியோனி."*
*இந்நிலையில்,*
*இலக்கிய மேடைகளில்*
*தரமாய்ப் பேசிவந்த அறிஞர் பெருமக்களும்,*
*எங்கே தங்கள் "மவுசு" (மரியாதை) குறைந்துவிடுமோ*
*எனும் அச்சத்தில்.....*
*தரக்குறைவில்*
*தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என நிரூபிக்க,*
*கச்சைகட்டிக் களத்தில் குதித்தனர்.*
*பட்டிமண்டபங்களில்*
*"இலக்கியம்" தன் கடைசி மூச்சை விட்டுவிட,*
*விரசம் சிகரம் தொட்டது.*
*மேலும் புதுமை தேடிய தொலைக்காட்சிகள்,*
*நடிகர்களையே நடுவர்களாய் அறிமுகம் செய்து*
*புரட்சி செய்தன.*
*பெயரளவில் நடுவர்களாய் அமர்த்தப்பட்ட,*
*அறிஞர்களின் அபிப்பிராயத்தின் பின்,*
*நடிகர் தீர்ப்புச் சொன்னார்.*
*அவரின் "பிரபல்யம்" நோக்கிப்,*
*பின் இருந்து தலையாட்டப் பேரறிஞர்கள் ஒப்பினர்.*
*தொலைக்காட்சியில் தலை தெரிந்திட,*
*அவர்கள் அகத்திலும், முகத்திலும் ஒப்பற்ற மகிழ்ச்சி.*
*அறிஞர்தம் பட்டிமண்டபங்களைவிட,*
*விசுவின் "அரட்டை அரங்கம்" பயன் தந்தது,*
*மறுக்கமுடியாத உண்மையுமாம்.*
*இன்று,*
*அரட்டை அரங்கத்தின் "விசு"வரூப எழுச்சி கண்டு,*

வாய்ப்பற்ற நகைச்சுவை நடிகரெல்லாம்
நடுவராகும் முயற்சியில்.
சென்றவாரம் ''சன் டி.வி.'' யில்,
நகைச்சுவை நடிகர் ''எஸ்.வி. சேகர்'' நடுவரானார்.
''ஜாக்கி ஹுசேனின் தபலா இவள்தானா''
என்ற பாடல் வரிக்கு,
கமலஹாசன் தட்டியது நடிகையின் முதுகிலா? பின்புறத்திலா?,
எனும் பெருவினாவுக்கு,
அவர் தன் நுண் அறிவால் விடை காணமுயன்றார்.
கேட்ட நீங்கள் சிலிர்த்திருப்பீர்கள்.
தமிழ் நாட்டின் கீழே இருந்ததாலோ என்னவோ,
கலை, கலாசாரத்தைப் பொறுத்தவரை,
இன்று அவர்களுக்கு,
இலங்கை ''குப்பைத்தொட்டி'' ஆகிவிட்டது.
தங்கள் அழுக்குகளை இங்கு அள்ளிக் கொட்டுகின்றனர்.
அவற்றை விலை கொடுத்து வாங்க இங்கு பலர்.
இதில் போட்டி வேறு.
பட்டி மண்டபம் நடத்துவதில்,
இங்குள்ள ஆலயத் தர்மகர்த்தாக்களுக்குள்ளும் பலத்த போட்டி.
''காசேதான் கடவுளடா'' என்னும் உயர்ந்த இலட்சியத்தால்,
கூட்டம் வந்தால் போதும்,
கோயில் உருப்படும் என்ற கொள்கையில் அவர்கள்.
பின்கேட்பானேன்,
வீட்டுக்குள்ளும் நாட்டுக்குள்ளும் ஒரே பட்டிமண்டபம்தான்.
''ரி.வி'' முன்னும் மேடைகள் முன்னும்
வாய் திறந்தபடி நீங்கள்.
இந்த ஒழுங்கில்.....

''தமிழகத்திலிருந்து ஏன் வர வேண்டும்?
இங்கு நாம் இல்லையா''?,
எனச் ''சுதேசியம்'' பேசும்,
உள்ளூர் பேச்சாளர் கூட்டத்தின் ''கொட்டம்'' வேறு.
''குறைந்த விலையில் நிறைந்த நகைச்சுவை'',
''உள்ளூர் உற்பத்தியை ஊக்குவியுங்கள்'',
என்பவை இவர் தம் விளம்பர வாசகங்கள்.
தம் பெருமை நிரூபிக்க,
இவர்கள் கடல், அருவி, கால்வாய் என,
வகையின்றி தமக்குத் தாமே செய்யும்
''பட்டாபிஷேகப்'' பரிதாபம் ஒருபுறம்.
அவர் (தம்) பட்டம் கண்டு தமிழறிஞர்கள்.
தலையில் கை வைத்தபடி.
அளக்க ஆளில்லாத தமிழுலகில்,
கையளவு நீரும் கடலளவு நீராய்த் தெரிவதில்
வியப்பில்லைத்தான்.
என்ன செய்ய?
ஏன் என்று கேட்க இங்கு எவருமிலர்.
மொத்தத்தில் உங்களை முட்டாளாக்க,
இங்கு நிறையப்பேர்.
அவர்களால் உங்கள் கேள்விஞானம் சிதைவது கண்டு,
நான் நிறைய வருந்துகிறேன்.
மருத்துவம், சட்டம், பொருளாதாரம் என,
எதைப்பற்றிப் பேசுவதானாலும்.....
கல்வியும், அங்கீகரிக்கப்பட்ட பட்டமும் வேண்டும்.
பட்டிமண்டபத்தில் அந்தப் பிரச்சினையே இல்லை.
நீங்களாக எந்தப் பட்டத்தையும் சூட்டிக்கொண்டு

எதையும் பேசலாம்.
என்னே வசதி!
நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.
உருப்படும் எண்ணம் உள்ளவர்களுக்கு....
இதோ ஒரு வார்த்தை.
நிறுத்தி விடுங்கள்.
முடிந்தால் பட்டிமண்டபத்தை.
இல்லையேல் பட்டிமண்டபம் பார்ப்பதை.

இப்படிக்கு,
பண்டிதன்.



32

# மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா

*ஈழத்தில் முப்பத்து மூன்று ஆண்டுகளாய் வெளிவரும்,*
*"மல்லிகை" எனும் சிறுசஞ்சிகையின் ஆசிரியர் இவர்.*
*தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்த இவர்,*
*தன் சுயமுயற்சியால்*
*இலக்கிய உலகில் பெயர் பொறித்தவர்.*

*நல்ல வருமானம் தந்த*
*சிகையலங்காரத் தொழிலைக் கைவிட்டு,*
*சிறு சஞ்சிகை நடத்தத் துணிந்த சாதனையாளர்.*
*சாகித்திய அக்கடமி விருது பெற்றவர்.*
*ஈழத்தின் இலக்கிய வாதிகள் பலரை,*
*வெளிப்படுத்திய பெருமை கொண்டவர்.*
*மார்க்சீயக்கொள்கை கொண்ட முற்போக்கு இலக்கியவாதி.*
*'மல்லிகைப் பந்தல்' எனும்*
*மல்லிகையின் உப அமைப்பின் மூலம்,*
*பல எழுத்தாளர்களின் ஆக்கங்களையும்,*
*முப்பத்துமூன்று நூல்களாய் வெளியிட்டிருப்பவர்.*
*இவரது முயற்சிகள் அனைத்தினதும் வெற்றிக்கு,*
*இவரது தனிமனித சாதனையே காரணம்.*
*27.06.1998இல் நடைபெற்ற,*
*இவரது எழுபத்திரண்டாவது பிறந்தநாளை ஒட்டி,*
*இச்சாதனையாளருக்குப்*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(28.06.1998 - தினக்குரல்)

## எழுபத்திரண்டு அகவை காணும் 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு....

*அன்புக்குரிய 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா*
*அவர்கட்கு,*
*வணக்கம்.*
*நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.*
*நேற்று எழுபத்திரண்டு அகவை எய்தியதாய் அறிந்தேன்.*
*மகிழ்ச்சி.*
*நூறாண்டு வாழ என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.*
*எழுபத்திரண்டு வயதிலும்,*
*''துள்ளும்'' உங்கள் இளமை கண்டு,*
*என்னுள் பொறாமை துளிர்க்கிறது.*
*''பிறர் ஈன நிலை கண்டு துள்ளும்'' பாரதியின் வாரிசு நீங்கள்.*
*வித்திட்டு, வரப்புகட்டி, நீர் பாய்ச்சி,*
*உடன் விளைவு தரும் வீட்டுப்பயிராய் அல்லாமல்,*
*கண்காணாச் சிறுவிதையாய்,*
*எச்சங்கலந்து,*
*எங்கோவிழுந்து,*
*மண்கீறி, வேர்விட்டு, மழைநம்பி, மரபுமீறி,*
*எங்கிருந்து வந்ததென எண்ணுமுன்........*
*கிளையாகி, கொப்பாகி, மரமாகி,*
*அசைக்கமுடியாத உறுதியுடன் வளர்ந்து,*
*அனைவர்க்கும் நிழல் தரும் ஆலமரமாய்த்தான்,*
*நீங்கள் என் அகத்தில் படுகிறீர்கள்.*
*எவர் துணையும் இன்றி தனித்துத் தானே வளரினும்,*

பழிவாங்கும் உணர்வின்றிப் பலருக்கும் நிழல் செய்யும்,
அவ் ஆலமரப் பண்பு அப்படியே உங்களிடம்.
இன்று எத்தனையோ வித்துக்கள்,
உங்களால் உருவாகி,
ஊரெல்லாம்.... ஏன்? உலகெல்லாம் நிறைந்தபடி.
விழுதுகள் மண் தொட்ட பின்னும்,
இன்றும் சுமந்தபடி நிற்கும் உங்கள் கம்பீரம்,
எனக்கு நிரம்பப் பிடிக்கிறது.
வேண்டாத விழுதுகளை உதற நினைக்காத,
உங்கள் உண்மை கண்டு,
மகிழ்ந்து போகிறேன்.
இத்தனைக்கும்,
சுமப்பார் எவருமின்றி 'சுமை'யுடன் முன்னேறியவர் தாங்கள்.
சான்றோர்தம் சிந்தனையில்,
'வர்ணமாய்ப்' பிரிவுற்ற சமூகத்தத்துவம்,
வக்கிரமுற்ற நம் மானுடக்கீழ்மையால்......,
'சாதி'களாகி,
சழக்குகளும், வழக்குகளும், சண்டைகளும் உருவாக்க,
பிளவுற்ற நிலையில் பேதைமை மாறாமல்,
'வரலாறாய்த்' தொடரும் சாதிய வக்கிரத்துடன்,
நீண்ட நாளாய் நம் தமிழினம்.
வள்ளுவனும், கம்பனும், பாரதியும்....
மல்லுக்கட்டியும் மாறாத கீழ்மையுடன்
இன்றும் நம் தமிழ்ச் சாதி.
அனைத்திலும் இருந்த யாழ்ப்பாணத்தானின் உறுதி,
இந்த அழுக்கிலும் அமைந்தது அதிர்ஷ்டயீனமே.
தனிக்கோயில், தனிக்கிணறு, தனிப்பேணி என.....

தன் சக மானுடனைத் தள்ளிவைப்பதிலேயே.
'தனி' த்துவம் பேணி,
'உயர்சாதி' என மிடுக்குக்காட்டிய உலுத்தர்கள் மத்தியில்,
அதிசயமாய்,
மண்புழுவாய்க் கிடந்த நீங்கள்,
மலைப்பாம்பாய்ப் பலம் பெற்று எழுந்தீர்கள்.
எழ வைத்தது,
'பொதுவுடைமைத் தத்துவம்' எனும் உண்மை தெரிய,
கற்காவிடினும்,
'மார்க்ஸ்' எனும் முனிவனை. மதிக்கத் தோன்றுகிறது.
மாகாளி கண்வைக்க
'ஆகா' என்று எழுந்த 'ருஷ்ய' யுகப்புரட்சி,
யாழ் மண்ணையுந் தொட்டது.
அப்புரட்சியால் உந்தப்பட்டு,
அடக்கு முறையைத் தலைவிதியாய் ஏற்றுத்
தாழ்ந்து கிடக்காமல்,
தனித்துவம் பேணித் தலை நிமிர்த்திய.....
ஈழத்தின் முதல் 'இலக்கியச் சூரியன்' நீங்கள்.
உதிக்கும் சூரியனின் முதற்கீற்றை,
மின்மினியாய் நினைத்து,
மிதிக்க நினைத்தோர் பலர்.
மிதிக்க நினைத்தோரை,
மதிக்க வைத்தது உங்கள் மாண்புறு சாதனை.
இன்றும்,
உங்கள் 'புறம்' நின்று, சாதிச் சழக்குரைக்கும்,
'இலக்கியக் கீழ்மக்கள்' இல்லாமலில்லை.
அஃதறிந்தும்,

அறியார்போல் அவர்களையும் அணைத்து நிற்கும்
உங்கள் பண்பு
பிடிக்கிறது.
உங்கள் மாறாப் பிடிவாதத்தினால்,
மறுதலித்தவர்களையெல்லாம் மண்கவ்வ வைத்தீர்கள்.
அந்தப் பிடிவாதம்தான் உங்கள் பலம்.
ஒரு குடும்பத்தலைவனாய் இருந்துகொண்டும்,
'சோறிட்ட' தொழிலை உதறி,
'இனி இலக்கியமே என் வாழ்வு' என அறிவிக்க,
பிடிவாதமுள்ள உங்களால் மாத்திரமே முடியும்.
''மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய'' கதையாய்
'மல்லிகை' எனும் சிறு சஞ்சிகையை நம்பி,
'புருஷ இலட்சணம்' துறந்து புரட்சி செய்தீர்கள்.
அம் மண் குதிரைக்கு,
உயிர் கொடுத்து, ஓடவைத்து, வெற்றி கொண்ட,
உங்கள் 'சித்து' வேலை கண்டு,
இன்று தமிழகமும் வியந்து நிற்கின்றது.
அன்றைய நிலையில் தாழ்வுற்ற தனிமனிதனாய்,
நீங்கள் எதிர்கொண்டிருக்கக்கூடிய பிரச்சினைகளை,
எண்ணிப் பார்க்கின்றேன்.
அத்தனை இடர்களையும் எங்ஙனமாய்ச் சமாளித்தீர்களோ?
வழி மறைக்காமல் துணைநின்ற உங்கள் குடும்பத்தை,
வணங்கத் தோன்றுகின்றது.
ஒதுக்கப்பட்ட பாதிப்பின் எதிர் விளைவாய்,
'மறுதலிப்பை' உங்கள் மனதுட் புகவிடாமல்,
அனைவரையும் அரவணைத்து, நீங்கள் ஏற்று நிற்பது,
ஆச்சரியமே!.

தனிவாழ்வுப் பாதிப்புக்களின் பழிவாங்கும் கருவியாய்.
இலக்கியத்தை மாற்றாத உங்கள் ஏற்றம் கண்டு மகிழ்கிறேன்.
''சாதிப்பிரச்சினையில் முன்னின்று போராடிய ஜீவா.
இனப்பிரச்சினையில் ஏதும் செய்யவில்லை''......
என உங்கள்மேல் ஒரு குறையுண்டு.
மனிதர்களை வேறுபடுத்தும் எந்தக் கொள்கைகளையும்,
தாங்கள் ஏற்காததற்கு,
'அடிபட்ட' தங்களின் ஆரம்ப மனநிலையே,
அடிப்படை என்பதறிவேன்.
அதனாற்தான், தமிழர்தம் இனப் போராட்டத்தைத்,
தாங்கள் புறக்கணித்தீர்கள் என்பது என் கருத்து.
அம்முடிவில் தங்களோடு நான் முரண்படினும்,
வடக்கில் ஒன்று, கிழக்கில் ஒன்று, தெற்கில் ஒன்றாய்ப் பேசும்,
சந்தர்ப்பவாதப் ''பேரறிஞர்களை''(?) விட,
சரியோ, பிழையோ 'இது தான் நான்' எனச் 'சுயம்' காட்டும்,
உண்மைத்தன்மை கொண்ட உங்களை
மதிக்கத் தோன்றுகிறது.
எது எப்படியோ,
உழைப்பால் உயர்ந்த உங்களை
எவரும் மதிக்காமலிருக்க முடியாது.
முப்பத்து மூன்றாண்டுகளாய் 'மல்லிகையை' நடாத்துவதோடு,
முப்பத்து மூன்று நூல்களை,
'மல்லிகைப் பந்தல்' மூலம் வெளியிட்டிருக்கும்,
உங்கள் முயற்சி,
நிச்சயம் 'அசுர' சாதனைதான்.
என்றோ நம் பல்கலைக்கழகங்கள்,
உங்களைப் பாராட்டியிருக்க வேண்டும்.

கருத்துக்காக இல்லையெனினும்,
உழைப்புக்காகக் கட்டாயம் செய்திருக்கலாம்.
மண்ணோடு கலந்தால்தானே அவர்களுக்கு
மனிதர்களைத் தெரிந்திருக்கும்.
மூடிக்கட்டிய மதில்களினுள்ளே
கூடு கட்டிக் குதூகலிக்கும் குருவிகள்.
எவர்க்கும் நிழல் செய்ய விரும்பாத 'பட்ட' மரங்கள்.
அப் பட்டமரங்களும் தம் பட்டங்களுக்காக,
மல்லிகையில் கட்டுரை வரைந்தன.
களம் கொடுத்தீர்கள்.
எவர் மறந்தாலும் ஈழத்து இலக்கிய உலகம்,
தங்கள் பெயரைப்,
பொன்னெழுத்தில் பொறித்து வைக்குமென்பது,
சர்வநிச்சயம்.
இத்தனையும் கிடக்க,
உங்களைப்பற்றி விடைகாண முயலும் கேள்விகளும்
என்னுள் உண்டு.
'சாதியரக்கனை' எதிர்த்து,
'பேனாவாளோடு' போர்க்களம் புகுந்தீர்கள்.
அவனை அழித்துவிட்டீர்களா?
'ஆம்' என நீங்கள் சொன்னால் அது பொய்.
புறமுதுகிட்டு ஓடிய அவனைப்,
போரில் வெற்றிகொண்டதாய் மகிழாதீர்கள்.
அவன் ஓடியது உங்கள் எழுத்துக்களாலல்ல.
இம்மண்ணில் எழுந்த இனப்போர்,
சாதி அரக்கனைச் சற்றுப் பின்வாங்கவைத்திருக்கிறது.
தக்க பலத்தோடு,

மீண்டும் தலைதூக்குந்தருணம் பார்த்திருக்கின்றான் அவன்.
ஓடிவிட்டதாலேயே,
ஒழிந்து விட்டான் என நினைந்து விடாதீர்கள்.
தனிமனிதனாகிய உங்களுக்குக் கிடைத்த அங்கீகாரம்,
தாழ்த்தப்பட்ட அனைவருக்கும் கிடைத்த அங்கீகாரமாய்,
மயக்கம் செய்யும்.
இன்றும்,
''ஜீவா எதை வெட்டித் தள்ளினார்?'' என்றும்,
''டானியல் எதை வெளுத்துக்கட்டினார்?'' என்றும்,
குறிப்புப் பொருளில் சாதிபேசும் வஞ்சகர்கள் உளர்.
வருந்த வேண்டிய உண்மையாய்,
உங்கள் முற்போக்கு இலக்கிய வட்டத்துக்குள்ளேயே
அவர்களும்.
ஆதலால் பொன்னாடைகளும், புகழ் வார்த்தைகளும்,
உங்கள் போர்க்குணத்தை
மழுங்கச் செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
தாழ்த்தப்பட்டோருக்கான போராட்டத்தில்,
மல்லிகையின் ஆக்கங்கள் செய்த
தாக்கம்பற்றி ஆராய்ந்தால்....
நீங்கள் மகிழத்தக்க விடை கிடைக்குமா?
சந்தேகம்தான்....
இனியேனும் மல்லிகை,
பண்டிதர்கள் கைவிட்டு, பாமரர்கள் கைசேரட்டும்.
'ஜனரஞ்சகப்' பெயர் நீக்கத்துக்காக மட்டுமாய்,
படிப்பாளிகளை மல்லிகையில் 'வறட்டி' தட்டவிடாமல்,
அதனை மக்களுணர்வால் வளப்படுத்துங்கள்.
மூன்று தசாப்த முடிவின் பின்,

*சொல் புதிது, பொருள் புதிது, சோதிமிகு வடிவமென,*
*''மல்லிகை'' மலராவிட்டால்,*
*முதுமை சூழ,*
*தலைமுறை இடைவெளியால் 'மல்லிகை' தனித்துப்போகும்.*
*எழுபத்திரண்டு வயதிலும் இளமையுடன் இருக்கும் நீங்கள்,*
*முப்பத்து மூன்று வயது மல்லிகையை*
*முதுமையடைய விடலாமா?*
*உங்கள் இளமையைவிட மல்லிகையின் இளமை,*
*எனக்கு முக்கியமாய்ப்படுகிறது.*
*புரட்சி உங்களுக்குப் புதியதல்ல,*
*உங்கள் 'மறுபுரட்சிக்காய்' வாசகர்கள் காத்துக்கிடக்கின்றனர்.*
*அவர்தம் மகிழ்வுக்காய்,*
*தோள்தட்டி வாளெடுக்கத் துணியுங்கள்.*
*எதிர்பார்ப்புடன் நாம்.*

*இங்ஙனம்,*
*பண்டிதன்.*

(2001-ஆம் ஆண்டில்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
ஜீவாவிற்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்க முன்வர,
ஓர் இலக்கியவாதிக்குக் கல்விசார் பட்டம் வழங்கப்படுவது
பொருத்தமில்லை எனக்கூறி,
அப்பட்டத்தை நிராகரித்துப் புதுமை செய்தார் ஜீவா.)



33

## பேராசிரியர் கா.சிவத்தம்பி

*இவர் புகழ்பெற்ற ஒரு பேராசிரியர்.*
*இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பெருமையை,*
*உலகளாவி நிறுவி வருபவர்.*
*ஆற்றல்மிகு மார்க்சீய அறிஞர்.*
*உலகெங்கும் பிரபலம் பெற்ற விமர்சகர்.*

*இப்பேராசிரியர்,*
*ஒரு பெண்கள் அமைப்புக் கூட்டத்தில் பேசும்போது,*
*"அச்சம், மடம், நாணம் முதலியவற்றை,*
*ஆண்கள்தான் பெண்களிடம் புகுத்தினர்,"*
*எனப் பேசிய செய்தி,*
*ஒரு பத்திரிகையில் வெளிவர,*
*அக்கருத்தோடு முரண்பட்டு,*
*பேராசிரியர் கருத்துக்களில்,*
*நிலைத்த தன்மை இல்லை எனக் கண்டித்து,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(12.07.1998 - தினக்குரல்)

## பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கு...

மதிப்புக்குரிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கட்கு,
வணக்கம்.
நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.
எப்போதோ எழுத நினைத்த மடல்,
அண்மையில் வெளிவந்த தினக்குரல் செய்தியால்,
இன்று உருப்பெறுகிறது.
நாற்குணங்களைப் பெண்களிடம் ஆண்களே புகுத்தியதாக,
பேசி இருக்கிறீர்கள்.
உங்கள் கருத்துப்படி,
பழைய காலத்திலாவது,
ஆண்கள் வலிமையாக இருந்ததுபற்றி,
மகிழ்ச்சி.
அதுபற்றிப் பின் பேசலாம்.
கல்வித்துறையில் என்னால் மதிக்கப்படுபவர் தாங்கள்.
பண்டிதர்களிடமிருந்த தமிழைப்
பல்கலைக்கழகம் பொறுப்பேற்ற பின்,
உருப்படியாக ஏதாவது சாதித்தவர்களில்,
தாங்களும் ஒருவர்.
நம் நாட்டுப் பல்கலைக்கழங்கள் அனைத்திலும்,
தமிழ்த்துறை முற்றாய் மதிப்பிழக்காமல் இருப்பதற்கு,
இன்றைய நிலையில் நிச்சயம் நீங்கள்தான் முதற்காரணர்.
வெளிநாட்டார் போற்றும்
''திறமையான புலமை'' தங்களுடையது.
இதில் எவருக்கும் ஐயமிருக்க நியாயமில்லை.

என்றாலும் உங்கள்மேல் எனக்கொரு கோபம்.
அக் கோபத்தின் காரணம்,
உங்கள் உறுதியின்மையே.
அன்றுதொட்டு இன்றுவரை பரபரப்புக்காகப் பேசுவதே,
தங்கள் பழக்கமாகிவிட்டது.
உங்கள் ஆய்வுப் பார்வையால்,
தமிழைத் தாண்டி,
சமூகத்தையும் அடிக்கடி நோக்குபவர் தாங்கள்.
உங்கள் கருத்துக்களைக் கேட்கவும் பின்பற்றவும்
இன்று பலபேர்.
ஆனால் தங்கள் பார்வையிலோ தீர்க்கதரிசனம் இல்லை.
மிகச் சொற்பகால எல்லைக்குள் உங்கள் கருத்துக்கள்,
அடிக்கடி மாற்றம் பெறுகின்றன.
கேட்டால் நீங்கள் வளர்ச்சி என்கிறீர்கள்.
சந்தர்ப்பவாதத்திற்கு வளர்ச்சி என்றோர் பெயருண்டோ?
தெரியவில்லை.
எப்போதும் நீங்கள் ''வென்ற'' கருத்தின் ஆதரவாளர்.
உண்மை பேசுவதை விட.
உளங்குளிரப் பேசுவதிற்தான் நீங்கள் வல்லவர்.
ஆரம்பத்தில் சோவியத்யூனியன் எழுச்சியின் பின்னணியில்,
மார்க்சிசக் கொள்கைகளை ஏற்று,
நீங்கள் கொடுத்த விளக்கம் வேறு.
இன்று சோவியத் யூனியனின் சிதைவின் பிறகு,
அக்கொள்கைகளுக்கு நீங்கள் கொடுக்கும் விளக்கம் வேறு.
கேள்வி கேட்பவர்களை,
வியாக்கியானங்களால் குழப்பி விடுவதில்,
தாங்கள் வல்லவர்.

ஒரு காலத்தில்,
மரபு சார்ந்த அனைத்தையும் ''நையாண்டி'' செய்த நீங்கள்,
இன்று மரபு வேணுவதற்காய் குரல் கொடுத்து வருகிறீர்கள்.
ஒரு காலத்தில்,
சமயவாதிகளைப் பிற்போக்குவாதிகள் என்று சொன்ன நீங்கள்,
இன்று அவர்களுள் ஒருவரை பாராட்டும்போது,
அவர் புகழைப் ''பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே'' என,
மிகைப்படப் புகழ்கிறீர்கள்.
ஒரு காலத்தில்,
உங்கள் பார்வையில் பணக்காரர்கள் முதலாளித்துவவாதிகள்.
இன்று அங்ஙனமாய் நிச்சயம் நீங்கள் பேசத்துணியமாட்டீர்கள்.
காரணம் இன்று நீங்களும் அவர்கள் வரிசையில்.
ஒரு காலத்தில்,
முற்போக்கு இலக்கியங்களை முதன்மைப்படுத்திய தாங்கள்,
இன்று அவற்றில் கலைத்தன்மை இல்லை என்று
கண்டிக்கிறீர்கள்.
உயிரோடிருந்த காலத்தில்,
எழுத்தாளர் டானியலை உயரத்தில் தூக்கிய தாங்கள்,
மறைந்த பின்பு அவர் எழுத்துக்களை,
''சமுதாயத்தைப் படுத்திருந்து பார்க்கும்பார்வை'' என,
கொச்சைப்படுத்துகிறீர்கள்.
யாழ்ப்பாணத்திலிருந்து,
இஸ்லாமியர்கள் வெளியேற்றப்பட்டபோது,
நீங்கள் எதுவும் பேசவில்லை.
இத்தனைக்கும் நீங்கள் அன்றைய சூழ்நிலையில்,
''அனைவராலும்'' மதிக்கப்பட்டவர்.
1995இல் யாழ்ப்பாணம் பறிபோய்,

நீங்கள் கொழும்பில் குடியேறிய பின்,
இஸ்லாமியர்கள் விரட்டப்பட்டதைக் கடுமையாகக்
கண்டிக்கிறீர்கள்.
இவை உங்கள் கருத்து முரண்பாட்டுக்கான சான்றுகள்.
இலக்கியங்கள் இரசனைக்கு அல்ல வாழ்விற்கு என்று,
அடித்துப் பேசிய தாங்கள்,
இதுவரை,
தமிழ் மக்களின் வாழ்வை இலக்கியம் நோக்கியோ,
இலக்கியத்தைத் தமிழ் மக்களின் வாழ்வு நோக்கியோ,
நகர்த்த எந்த முயற்சியும் எடுத்ததாய்த் தெரியவில்லை.
இஸ்லாமியர்களின் கூட்டத்திற்குச் சென்றால்,
தமிழ் வளர்த்தவர்கள் அவர்கள்தான் என்கிறீர்கள்.
கிறிஸ்தவக் கூட்டங்கிளிலோ வீரமாமுனிவரைக்
''கிறிஸ்தவக் கம்பன்'' என்கிறீர்கள்.
மலையகத்தமிழர் மத்தியில் பேசும்போது,
அவர்கள் ஆக்கங்களை வானளாவ உயர்த்தி,
மிகைப்பட அவர்களைப் பொருத்தமின்றிப் புகழ்கின்றீர்கள்.
அனைத்தும் ''வாய்ச்சொற்கள்''.
உங்களைப் பொறுத்தவரை,
அனைவர்தம் ஆதரவைத் திரட்டுவதே,
அடிப்படைக் கொள்கை.
ஆதரவு, தர்மத்தை நோக்கியதல்ல,
தன்னை நோக்கியது.
அதுதான் எரிச்சல் தருகிறது.
அரசியல்வாதிகள்போல்
அறிஞர்களும் ஆதரவுநோக்கிப் பேசினால்,
இளம் தலைமுறையினரை வழிப்படுத்துவது யார்?

*நிலையான கருத்தற்றவர் என்ற பழி,*
*உங்களை,*
*ஆரம்பந்தொட்டு இன்றுவரை தொடரவேண்டுமா?*
*கருத்து மாற்றங்கள் உயர்நிலையிருக்கும் உங்களைப் பாதிக்கா.*
*உங்களை நம்பிச் செய்திகளை உள்வாங்கும்,*
*''சாதாரணனையும்'', அவன் தனி வாழ்வையும்,*
*அது நிச்சயம் பாதிக்குமன்றோ!*
*கம்பனைப்போல் வள்ளுவன்போல் தங்கள் கருத்துக்கள்,*
*ஆயிரம் ஆண்டுகள் நிலைக்க வேண்டும் என்று,*
*நான் எதிர்பார்க்கவில்லை.*
*ஐம்பதாண்டுகள்?*
*வேண்டாம் குறைந்தது ஐந்தாண்டுகளாவது,*
*அவை உறுதிபட நிலைக்க வேண்டாமா?*
*சிந்திக்கப் பிரார்த்திக்கின்றேன்.*
*இனிப் பத்திரிகைச் செய்திபற்றி...*
*இன்றைய நிலையில் பிரச்சனையில்லாமல்,*
*நம்நாட்டில் அனைவரும் பேசக்கூடிய விடயம்,*
*''பெண்கள் சுதந்திரம்''தான்.*
*மாதரமைப்புக் கூட்டத்தில் ஜமாய்த்திருக்கிறீர்கள்.*
*ஆண்களே பெண்களை அடிமைப்படுத்தியதாய்,*
*மறைமுகமாய்ப் பேசியிருக்கிறீர்கள்.*
*அறிவுலகத்தின் உதவியால் ஏற்கனவே நாடு*
*இரண்டுபட்டுக்கிடக்கிறது.*
*இனி வீடும் இரண்டுபடட்டும்.*
*பலத்த கைத்தட்டு வாங்கியிருப்பீர்கள்.*
*அழைப்பவர்களின் எதிர்பார்ப்புத் தெரிந்து பேசும்,*
*உங்கள் திறமை தெரியாமல்,*

பாவம் அதுவே உண்மை என நம்பி,
அங்குள்ள அம்மணிகள் சிலர் இனி அடித்து முழங்குவார்கள்.
தக்கவர் தடுத்தால்.....
அழுது புலம்புவார்கள்.
தங்களிடம் நான்கேட்க விரும்புவது,
அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவற்றை,
பெண்களிடம் புகுத்தியவர்கள் ஆண்களே எனும்
தங்கள் கூற்றுக்கு,
ஆதாரம் ஏதும் உண்டா?
அல்லது கற்பனையே சான்றா?
இயல்பற்று மற்றவராற் புகுத்தப்பட்ட ஒரு பொய்,
கலாங்கடந்து சமுதாயத்தில் நிலைக்குமா?
இடத்தாலும் பண்பாட்டாலும் பிரிந்து கிடந்த,
பல இனப் பெண்களுக்குள்ளும்
இவ்வியல்பு காணப்படுகிறதே.
பிரிந்து கிடந்த உலகில்,
ஒரு பொய் ஒன்றாய்ப் புகுத்தப்பட்டது எங்ஙனம்?
இக்கேள்விகளுக்குப் பதில் என்ன?
உலகின் சனத்தொகையில்,
அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள்தான் என,
அக்கூட்டத்திற் பேசிய நீங்கள்,
அப்பெரும்பான்மையினரின் ஆதரவு கருதிப் பேசினீர்களோ?
உங்களுக்கு சொல்ல நான் யார்?
எனினும்,
அனுபவத்தால் இந்த ஏழைப் பண்டிதன் உணர்ந்த ஒன்றை,
இயம்ப விரும்புகிறான்.
கருத்துக்களின் 'நிலைத்தல்' தன்மை,

*ஆட்பலத்திலல்ல! ஆன்மபலத்திலேயே!*
*முக்காலத்திற்கும் இக்கருத்து உடன்பாடானது.*
*அப்பலம் தங்களிடம் வளர,*
*பிரார்த்திக்கிறேன்.*
வணக்கம்.

*அன்புடன்,*
*பண்டிதன்.*

## பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதத்திற்கு பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பதில்

(26.07.1998 - தினக்குரல்)

பண்டிதர் அவர்கள், எனக்கு எழுதியிருந்த பகிரங்கக் கடிதத்தைப் படித்தேன். மிக்க மகிழ்ச்சி பண்டிதரின் நக்கல்கள் எனக்குப் புரிகின்றன. அதே மொழியில் பதிலிறுக்க பேனாவும் துடிக்கிறது. ஆனால், அவர் கிளப்பியுள்ள பிரச்சினைகளினூடே எந்த ஒரு புலமையாளருக்கும், தமது புலமைநிலை பாடுகள் பற்றிய "பதில் கூறு கடப்பாடு" ஒன்று உண்டு எனும் விடயம் அடிநாதமாக விருப்பதால், அதற்குரிய அறிவுநேர்மையுடனும், பணிவுடனும் எழுதுவதே சரியென்று கருதுகிறேன். என் எழுத்துக்களில் இப்பண்பை என்னால் இயன்ற அளவு போற்றியும் வந்துள்ளேன்.

புலமை நிலை நிற்கும் எனது கூற்றுக்கள் சந்தர்ப்பவாதத் தன்மை கொண்டன என்பதும் "ஆதரவு" பெறுவதற்காகப் பேசப் படுவன என்பதும் பண்டிதரின் பொதுவான குற்றச்சாட்டுக்கள் ஆகும்.

குற்றச்சாட்டுக்கள் பகிரங்கமாக வந்துள்ளதால் பதிலும் அதே அளவு பகிரங்கத் தன்மையுடன் வருதல் அவசியமாகிறது.

அதற்கான இடத்தைத் தந்துதவுமாறு "தினக்குரல்" பொறுப்பாளர்களை வேண்டுகிறேன். தருவார்கள் என்ற எண்ணத்துணிவு உண்டு. அண்மையில் 'விபவி' ஒழுங்கு செய்த இலக்கிய விமர்சனம் பற்றிய அரங்கில் (அது பெண்கள் ஒழுங்கு செய்த கூட்டம் அன்று வந்திருந்தோரிற் பெருந்தொகையினர் ஆண்களே). "உலக மாறுதல்களும் இலக்கிய விமர்சனமும்" என்ற தலைப்பிலே நான் பேசியபொழுது பெண்நிலைவாத இலக்கியக் கொள்கையின் எடுகோள்கள் பற்றிக் குறிப்பிட்ட ஒரு கூற்றினை மனங்கொண்டு (அதுவே அச்செய்தித் தலைப்பும் ஆயிற்று) அது சம்பந்தமாக வினாவெழுப்பும் பண்டிதர் அவர்கள் கடந்த சில காலமாக எனது கருத்துக்களிற் காணப்படும் நிலைபாடுகளையும் எடுத்துக்கூறி எனது பேச்சுக்களைப் பற்றிய தனது ஒட்டுமொத்தமான மனப்பதிவை வெளியிட்டுள்ளார்.

அந்த மனப்பதிவுகள் என்னை அவர் கண்களில் "சந்தர்ப்பவாதி", "ஆதரவு தேடுவதற்காகப் பேசுபவர்" என நிறுத்துகின்றன.

அவர் கூறுவனவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்பதற்கு முன்னர் என் கண்ணோட்டத்தில் என்னைப் பற்றிய எனது பார்வை யாது என்பதைக் கூறி வைத்தல் முக்கியமாகும். நான் பிரதானமாக ஒரு தமிழியல் ஆய்வாளன். வரலாற்றுப் பொருள் முதல் வாத — இயங்கியற் பொருள் முதல் வாதக் கருத்து நிலையை (மார்க்சீயத்தை) எனது தளமாகக் கொண்டவன். இந்தக் கருத்து நிலை என்னைச் சமூக சிரத்தையுள்ள ஒருவனாக, பல்துறைச் சங்கம அணுகுமுறை கொண்டவனாக ஆக்கியுள்ளது. பேச்சு மாத்திரமெனது தொடர்பு முறைமையன்று. எழுத்துத்தான் பிரதானமான முறைமை. ஆனால் பேச்சுக்கும் ஒரு இடமுண்டு. எனவே என்னைப் பற்றிய விமர்சனங்களில் எனது எழுத்துக்களையும் சேர்த்துக் கொள்ளல் அவசியம்.

புலமையாளர்களுக்கு (குறிப்பாக மூன்றாவது உலகப் புலமையாளர்களுக்கு) ஒரு முக்கியமான சமூகப் பொறுப்பு உண்டு எனும் வழி நடத்தலுக்கு ஆட்பட்டவன் என்ற வகையில் இக்கால கட்டத்தின் (1984-1995) ஈழத்தமிழர் பிரச்சினைகளிலும் புலமை ஈடுபாடு காட்டியுள்ளேன். (Studies in Sri Lankan Tamil Society and Politics Chennai - 1997). பிரதானமாகப் புலமை நிலை ஈடுபாடு உடையவன் என்ற வகையில் நான் ஆர்வங் கொண்டுள்ள அறிவுத்துறையின் புலமை விருத்திகளிலும், வளர்ச்சிகளிலும் எனக்கு ஈடுபாடு உண்டு. அறிவு என்பது வளர்வது. கருத்து நிலை (Ideology) என்பது அந்த அறிவின் செல்நெறிகளைச் சரிவர உள்வாங்குவதற்கு உதவுவது. இந்த "உள்வாங்கல்" என்பது ஒரு "வெற்றிடத்"துள் (Vacuum) நிகழ்வதன்று. அது வறலாற்றின் ஓட்டத்துள் (தொழிற்பாடுகள் எதிர்த்தொழிற் பாடுகள்) நிகழ்வது. சென்ற காலத்தின் சிறப்பையும் வருங்காலத்தின் சாத்தியப்பாடுகளையும் இன்று நின்று பார்த்தல் ஆகும். இதுவரலாற்றுப் பகுப்பாய்வு.

பண்டிதர் கிளப்பியுள்ள பிரச்சினையை என் நண்பர்கள் சிலரும் கிளப்பியிருப்பதால் அவை பற்றி இங்கு எழுதவது முக்கியமாகிறது.

"சோவியத் யூனியன் எழுச்சியின் பின்னணியில்" நான் கூறிய விளக்கம் வேறு. இப்பொழுது கூறுவது வேறு என்பது ஒரு குற்றச்சாட்டு. அது பற்றிச் சற்று நோக்குவோம். சீன-சோவியத் பிளவின்போது நான் சோவியத் சார்பினனாக நின்றவன். சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் சோவியத் யூனியனின் நிலைப்பாட்டை ஆதரிப்பது என்பது கொர்பச்சோவ், யெல்ட்சின் நிலைபாடுகளை ஆதரிப்பதாகவே ஆகும். சோவியத்

பொது சன நூல
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் ப
விசேட

யூனியனுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியை மார்க்ஸீஸ நிலை என்று நோக்குவது அவசியம். எழுபது வருடகாலச் சோஷலிச ஆட்சியின் பின்னர் சோஷலிசம் ரஷ்யாவில் ஏன் தோற்றது. மார்க்சீயத்தின் தன்மையாலா அல்லது மார்க்சீயத்தை நாங்கள் விளங்கிக் கொண்டிருந்த தன்மையாலா?

கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட சிதறல்கள், சீனாவில் ஏற்பட்ட மாறுதல்கள் ஆதியனவற்றையும் அதே வேளையில் மேற்கு வங்காளம், கேரளம் ஆகிய இந்திய மாநிலங்களில் (முதலாளித்துவ அமைப்பினுள்ளும்) காணப்படும் தொடர்ச்சி ஆகியனவற்றையும் நோக்கவேண்டிய தேவையுள்ளது. உலகை மாற்றுவதில் மார்க்சீயம் மேற்கொண்ட முயற்சிகளுள் எவை யெவை தவறான வாசிப்புக்களால் ஏற்பட்டவை, மார்க்சீயத்தின் எவ்வெவ் அம்சங்கள் அந்த நாடுகளில் வாசிக்கப்படாமலே இருந்தன என்பதைப் பற்றி ஆராய்தல் அவசியம். அரசியல் கருத்துநிலை மதம் போன்றதன்று.

மதத்தில்தான் "விசுவாசம் / நம்பிக்கை" (FAITH) அடிப்படை யானது. அதுவும் விசாரணைக் குட்படுத்தப்படாத விசுவாசம் ஆகும். மார்க்சீயத்தில் அப்படியல்ல. இதுவொரு சமூக விஞ்ஞானப் பிரச்சினை. இங்கு பகுப்பாய்வு முக்கியம். அத்தகைய பகுப்பாய்வுகள் பல பல்வேறு நாடுகளின் அனுபவங்களிலு மிருந்து செய்யப்பட்டுள்ளன. சேகுவேரா, கிராம்ஸ்கி, அல்தூசர் எனப் பலர் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இவ் வேளையில் ஓர் உண்மையை வெகு ஆணித்தரமாகப் பதிவு செய்தல் வேண்டும். அதாவது மார்க்சீயக் கருத்து நிலைகளின் வளர்ச்சிகளையும், விருத்திகளையும், மார்க்சீய உரைகல் கொண்டு பகுப்பாய்வு செய்தல் வேண்டும். கட்சியை

கட்சி நிலைபாடுகளுக்கும் கோஷங்களுக்கும் அப்பால் வைத்து இது செய்யப்படல் வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான கேள்வி. தேசிய நிலைப்பாடு பேசிய குரல் அடங்கு முன்னர் ஏன் இலங்கையில் இன ஒடுக்குமுறை வந்தது? இதற்கான வர்க்கக் காரணிகள் யாவை? இவை பற்றி நான் மனம் திறந்து பேச விரும்புகிறேன்.

இந்தப் பின்புலத்திலேதான் நான் பிரதானமாகத் தொழிற்பட்ட இலக்கியத்துறையைப் பற்றிய ஒரு மீள் வாசிப்பில் ஈடுபட்டேன். ''எங்கு தவறு நடந்தது.'' இதற்கான சீரான பதில் அவசியம். எனது கணிப்பில் நாம் யதார்த்தம் எனக் கொண்டதில் ஏற்பட்ட தவறு இவற்றுக்கு இட்டுச்சென்றது. யதார்த்தம் அவசியம். ஆனால், அது தவறான முறையில் விளங்கப்படக் கூடாது.

எனது இந்த நிலைபாட்டை தொமுசி, ரகுநாதன் போன்ற எழுத்தாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

அறிவிற்கு வரையறை கிடையாது, இதற்கு மேல் அறிவு இல்லை, இவற்றையே நம்புவோம் என்பது அறிவுக்கும் பொருந்தாது; அரசியலுக்கும் பொருந்தாது. பண்டிதர் அவர்கள் மரபுப் போராட்டத்திலே (1960-களில்) நான் எடுத்த நிலைப் பாடை எடுத்துக்கூறி அப்பொழுது மரபை எதிர்த்த நான் இப் பொழுது மரபை ஆதரிக்கிறேன் என்கின்றார். இதில் தவறு உள்ளது.

அப்பொழுது சில பண்டிதர்கள், மரபு என்பது பழைமையைப் பேணுவதுதான், புதுமையை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று கூறி, சிறுகதை, நாவல் ஆதியன இலக்கிய வடிவங்களே அல்ல என்றனர்.

அந்த விவாதத்தில் நான் எழுதிய முதல் இவ்வாக்கியம் எனக்கு இப்பொழுதும் நினைவில் இருக்கிறது. ''அலையாத குட்டைநீர் அல்ல மரபு''.

மரபு பற்றி அன்றும் நான் வற்புறுத்தியது இன்றும் நான் வற்புறுத்துவது 'பேராசிரியர்' தமது உரையிலே தரும் ஒரு கூற்றையாகும். ''மரபு என்பது காலமும் இடனும் பற்றி வழக்குத் திரிந்தக்காலும் திரித்தவற்றுக்கேற்ப வழுப்படாமற் சொல்வதோர் முறைமை'' எனப் பேராசிரியர் கூறுவார். மரபு என்பதற்கு மார்க்சீயத்தில் ஒரு முக்கிய இடம். மார்க்சீயம் பேசுகின்ற ''வரலாற்று நிலைமைகள்'' என்பனதான் மரபுக்குத் தளமாக அமைகின்றன. வரலாற்றின் நிலைமை வரலாற்றின் முற் போக்கைத் தடுத்துவிடுதல் கூடாது. வரலாற்றுப் போக்கும் வந்த பாதையின் முக்கியத்துவத்தை மறுதலிப்பதாக இருக்கக் கூடாது. சோஷலிச வரலாற்றில் ரஷ்ய அனுபவத்திற்கும் சீன அனுபவத் திற்கும் வித்தியாசமுண்டு. அந்த வித்தியாசம் வரலாற்று வேறுபாடுகளில் உள்ள வித்தியாசமாகும்.

மரபு என்பது பற்றிப் பேசும்பொழுது சமயம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சமயவாதிகளைப் பிற்போக்கு வாதிகள் என்று நான் பகிரங்கமாகச் சொன்னது எனது நினைவிலில்லை. ஆனால், சமய வளர்ச்சியை சமூக நோக்கு தேவைகளுடன் இணைத்துச் செல்கின்ற தங்கம்மா அப்பாக்குட்டியை நான் வாயாரப் புகழ்ந்துள்ளேன்.

நமது கோயில்கள் சமூக மையங்களாக முகிழ்க்க வேண்டும். அதற்கு, சமய மெய்யியல் நோக்குகள் உதவ வேண்டும் என்பதை நான் பலவிடங்களில் வற்புறுத்தி வந்துள்ளேன். கோயில்,

பிரசங்கத்திற்காக மாத்திரம் உரியதல்ல; ''பிரஜாப்பிய பரி பாலன''த்திற்குமானது.

எனது வரலாற்று வளர்ச்சி, பின்புலம் என்னை மதங்களை முற்றிலும் நிராகரிக்க விடாது.

மதத்தை எந்த மார்க்சீய வாதியும் நிராகரிக்க மாட்டான். கடவுள் கோட்பாடுகள் இயற்கையதீத வாதங்கள் ஆகியவற்றை நிராகரிப்பான். ஆனால், மதத்தை ஒரு மனித நிறுவனமாக, சமூக நிறுவனமாக அவன் ஏற்றுக்கொள்வான். மார்க்ஸ் ஏற்றுக் கொண்டுள்ளார்.

முற்போக்கு இலக்கியம் பற்றிய எனது பார்வை மாறி விட்டதாகக் கூறுகிறார் பண்டிதர். இதனை நான் 1984 முதல் வற்புறுத்தி வருகிறேன். முற்போக்கு இலக்கியம் என்பது மார்க்சீய இலக்கிய அடைகைக்கான ஒரு படிக்கல். நாங்கள் விட்ட தவறு ஒரே படிக்கட்டிலேயே நின்று விட்டதுதான். எங்கள் எழுத் தாளர்கள். ''முற்போக்கு''ப் படியிலிருந்து மார்க்சீயப் படிக்கு கால் எடுத்து வைத்திருப்பின் எங்களிடையே ஒரு 'தகழி' ஒரு 'வைக்கம் பஷீர்' நிச்சயமாகத் தோன்றியிருப்பார்கள்.

முற்போக்கு இலக்கியம் அதன் வருகைக் காலத்தில் ஏற்படுத்திய தாக்கத்தையும் சமூக பலனையும் தொடர்ந்து பேண முடியாது போனமைக்கான காரணங்களை அறிதல் வேண்டும். இது முற்போக்கு வாதம் நம் மீது திணிக்கும் கடமை.

'டானியலை'ப்பற்றி நான் கூறியதைப் பண்டிதர் குயுக்தி என்று கூறுகிறார்.

டானியல் யாழ்ப்பாண சமூக அமைப்பின் மிக்க அடி நிலையிலுள்ள சாதியில் பிறந்தவர். அவர் அதை என்றும்

மறுதலித்ததில்லை. டானியலுக்கும் எனக்கும் நீண்டகால உறவிருந்தது. நான் சோவியத் சார்பாளனாக இருந்த பொழுதே அவருடன் நட்பு இருந்தது. டானியல் தனது கீழ் நிலையிலிருந்து ''படுத்திருந்து'' பார்ப்பவன் போல் பார்த்ததால் யாழ்ப்பாண வாழ்க்கையின் அசிங்கங்கள் யாவும் தெரிந்தன. அவற்றைப் பதிவு செய்தார்.

யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் பற்றி 1996-இல் நான் வெள்ளவத்தையில் பேசிய ஒரு பேச்சுப் பற்றி, அது திரிபுபடுத்தப்பட்டது பற்றிப் பலர் என்னைச் சாடியுள்ளனர். 'தினக்குரலி'ற்கூட ஒருவர் எழுதியிருந்தார்.

நடந்த விடயம் இவ்வளவுதான். வெள்ளவத்தையில் முஸ்லிம் நிறுவனம் ஒன்று யாழ் முஸ்லிம் அகதிகள் சம்பந்தமாக ஒழுங்கு செய்த கூட்டத்தில் நான் பேசும் பொழுது முஸ்லிம்கள் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டது, ''துரதிர்ஷ்டவசமானது'' என்று கூறினேன். அக்கூட்டம் பற்றிய செய்தி ''தினகரன்'', ''வீரகேசரி'' பத்திரிகைகளில் வெளிவந்த பொழுது ''அருவருக்கத்தக்கது'' என நான் பேசியதாக அறிக்கை செய்யப்பட்டது. இந்த விடயத்தை அந்தக் கூட்ட ஒழுங்கிணைப்பாளரிடம் தெரிவித்தேன். அவர்கள் விட்ட திருத்த அறிக்கை தினகரனில் வெளிவந்தது. வீரகேசரி ஆசிரியர் தலையங்கத்திலும் குறிப்பிடப்பட்டது. திருத்தத்தை வாசிக்க விரும்பாதவர்களை நான் எதுவும் செய்ய முடியாது.

ஆனால், ஒரு விடயம் உள்ளது. முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டபோது நான் யாழ்ப்பாணத்தில் ஒன்றும் பேசவில்லை; அது சந்தர்ப்பவாதம்; வென்ற பக்கத்தின் குரல் என்று கூறப்படுகிறது. அந்தச் சூழலில் எத்தனைபேர் வாய்விட்டுப் பேசினார்கள்

என்பதைக் கணக்கிடுவது நல்லது. ஆனால், நான் இதுவரை பதியப்படாத ஓர் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். அந்தச் சம்பவம் நிகழ்ந்த பொழுது எனது நண்பர் ஒருவரிடம் சொன்னேன். ''தமிழ் பேசும் மக்கள்'' என்று பேசுவது இனிச் சிரமமாகும் என்று

அதைவிட முக்கியமானது நான் முஸ்லிம் தமிழ் உறவு பற்றி 1992-இல் "Facets of ethnicity" எனும் நூலில் எழுதியுள்ள கட்டுரையாகும். இதில் முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளேன். இந்தக் கட்டுரை பலரால் மேற்கோள் காட்டப்பட்டுள்ள ஒரு கட்டுரையாகும்.

பண்டிதர் தமது குற்றச்சாட்டுகளில் ஒன்றாகச் சொல்வது: ''இலக்கியங்கள் இரசனைக்கல்ல வாழ்வுக்கு என்று அடித்துப் பேசிய தாங்கள் இதுவரை தமிழ் மக்களின் வாழ்வை இலக்கியம் நோக்கியோ இலக்கியத்தை வாழ்வை நோக்கியோ நகர்த்த எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை'' என்றார்.

வாழ்க்கை இலக்கியத்தை நோக்கி நிற்றல், இலக்கியம் வாழ்க்கையை நோக்கி நிற்றல் ஆகிய இரண்டு நிலைபாடு களையும் நான் செய்யவில்லை என்றுதான் அந்தக் கூற்றுக்குப் பொருள் கொள்ளலாம் என்று கருதுகிறேன். (வேறு கருத்து இருந்தால் பண்டிதர் சொல்ல வேண்டும்) அவ்வாறாயின் அதற்கு நான் எனது நிலையிலிருந்து என்ன செய்ய வேண்டும்.

1. தமிழ் மக்களின் வாழ்க்கைக்கும் இலக்கியத்துக்கும் இருந்து வந்துள்ள தொடர்புகளைப் பற்றிப் பேசியிருத்தல் வேண்டும்.

2. தமிழ் மக்களின் வாழ்க்கையைச் செழுமைப்படுத்துகின்ற இலக்கியங்கள் எழுதப்படுவதற்காக உழைத்திருத்தல் வேண்டும்.

நான் இது இரண்டையும் செய்துள்ளேன். எனது ஆய்வுகள், விமர்சனங்கள் மூலம். நான் உபதேசியாக நின்று இவற்றைச் சொல்ல முடியாது. அது என் தொழில் அன்று. இலக்கியத்தின் முற்போக்குத் தன்மைக்காக, அது மார்க்சீயத்துக்கான ஒரு உதவு காரணியாக அமைய வேண்டும் என்பது எனது தொழிற்பாடாக இருந்து வந்துள்ளது. இலக்கியம் மாத்திரமல்ல தமிழ் இலக்கணமே தமிழ் வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது என்பது பற்றிய எனது நீண்ட கட்டுரை (நூல்) ஒன்று உள்ளது.

இவ்வாறு கூறிச்சென்ற பண்டிதர் நான் 'வரவழைப்பவர்கள் மனம் குளிருவதற்காகப் பேசுகிறேன்' என்று கூறி அதற்கான உதாரணங்களைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார். "இஸ்லாமியர்கள் கூட்டத்திற்குச் சென்றால் தமிழ் வளர்த்தவர்கள் அவர்கள்தான் என்கிறீர்கள். கிறீஸ்தவக் கூட்டங்களிலே வீரமாமுனிவரை கிறீஸ்தவக் கம்பன் என்கிறீர்கள். மலையகத் தமிழர் மத்தியில் பேசும்பொழுது மிகைபட அவர்களைப் பொருத்தமின்றிப் புகழ்கிறீர்கள்" என்கிறார்.

இஸ்லாமியர்கள் கூட்டத்திற் பேசும் பொழுது அவர்களின் தமிழ்ப் பங்களிப்பை வற்புறுத்துகிறேன். கிறிஸ்தவர்களின் தமிழ்ப்பங்களிப்பை முக்கியப் படுத்துகிறேன். (கிறிஸ்தவக் கம்பர் என்பது வீரமா முனிவரை அல்ல. கிருஷ்ண பிள்ளையை) மலையகத்தைப் பற்றி ஆழமான ஒரு சமூக - பண்பாட்டு ஆராய்ச்சி செய்துள்ளேன்.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று எவருடைய பங்களிப்புகள் புறக்கணிக்கப்படுகின்றனவோ நான் அந்தப் பங்களிப்புகளுக்காகக் குரல் கொடுக்கிறேன். இரண்டு, ஒரு இடத்தில் பேச ஒப்புக்கொள்ளும் பொழுது அவர்களுக்கும்

தமிழுக்கும் உள்ள தொடர்பை எனது ஆய்வு நிலைத்தளத்தி லிருந்து வற்புறுத்தவே விரும்புகிறேன்.

இவர்களின் தமிழ்ப் பங்களிப்புகள் பற்றிய பூரண அறிவு இல்லாமல் விளக்கம் இல்லாமல் தமிழ் மொழி இலக்கியத்தின் விரிவு பற்றி நாம் எதுவும் பேசி விட முடியாது. தமிழின் பலம் இதற்குள் இருக்கிறது.

இவை யவாற்றுக்கும் மேலாகத் தமிழின் பெயரால் இவர்களுக் கிடையே உள்ள ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நான் பண்பாட்டுத் தளத்தில் நின்று வற்புறுத்துகிறேன்.

தமிழ் என்பது ஒரு சமயத்தின் தனி உடைமை அன்று. வேறுபடும் மதப் பண்பாடுகளைத் தமிழ் எவ்வாறு அவை ஒவ்வொன்றினதும் தனித்துவம் ஊறுபடுத்தப்படாது, வெளிக் கொணர உதவுகிறது என்பது மிக முக்கியமான விடயம் என்பது என் கருத்து.

இவற்றைப் பற்றிப் பேசுகின்ற பொழுது நான் எனது பண்பாட்டுத் தளத்தை மறந்து பேசுவதில்லை; பேசவும் முடியாது.

நான் இவ்வாறு பேசுவது ''த (எ)ன்னை'' நோக்கியவனாகவும், ஆதரவு தேடுவதாகவும் அமைவதாகக் கூறுகிறீர்கள்.

நான் என்னிலிருந்து தான் பேச முடியும் என்னை நோக்கிப் பேச முடியாது. அது தொடர்பாடல் ஆகாது. என்னை நோக்கியது என்பதற்கு ''இலாபம் கருதி'' என்று நீங்கள் கருதினால் தயவு செய்து நம்புங்கள், நான் இலாபம் கருதி எனது அறிவுத் தொழிற்பாடு எதனையும் செய்யவில்லை. அப்படிச் செய் திருப்பின் நான் இந்த 66 வயது காலத்தில் பல நன்மைகளைப் பெற்றிருப்பேன்.

இவற்றைப் பேசுவதில் எனக்கு ஒரு ஆத்ம திருப்தி உண்டு. நான் அதற்காகப் பேசுகின்றேன்; எழுதுகிறேன். அந்த ஆத்மதிருப்திக்குள் சொந்த இலாபக் கணக்கு வந்ததில்லை.

நான் ஆதரவு தேடுவதற்காகப் பேசுகிறேன் என்கிறீர்கள். யாருடைய ஆதரவு? எதற்காக இந்த ஆதரவு? இந்த ஆதரவைக் கொண்டு நான் எதை எனக்காகச் செய்துள்ளேன்?

பண்டிதர் சொல்லுவதிலேயே ஒரு முரண்பாடு இருக்கிறதே. நான் ஆதரவு தேடுவது உண்மை என்றால் இருக்கின்ற ஆதரவுகளை ஏன் இழக்க வேண்டும்? என்னுடைய கருத்துக்களால் நான் தேடிய பகைமைகள்தான் அதிகம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அறிவு தரும் திருப்தி முக்கிய மாகிறது. அது தன்னுள் தான் முடிந்த முடிவான அறிவல்ல. மனிதர்களுக்கு விமோசனம் தருகிற அறிவாக, ஒடுக்கு முறைகளுக்குக்கெதிரான அறிவாக, அடையாளங்களைத் தகர்க்கும் முயற்சிக்கெதிரான அறிவாக இருத்தல் வேண்டும்.

இந்த நோக்கு மற்றவர்களுக்கும் ஒப்ப முடிய வேண்டும் என்பது என் கருத்தல்ல. கருத்துக்கள் மாறுபடலாம். அவற்றை கருத்து நிலையில் நின்று விவாதிப்போம். கருத்தின் நிலைக்கு அப்பாலே போய் தனிப்பட்ட காழ்ப்புகளின் வெளிப்பாடாக மாறக் கூடாது. அப்பொழுது எங்குமே சிவலிங்கங்கள் இருக்க முடியாது. வெறும் செப்புகள்தான் உண்டு. என்றுமே என்னைச் செப்பாகவே கருதுபவன் நான்.

நான் அரசியல்வாதியல்லன். எனக்கு ''ஆதரவு'' தேவை யில்லை. ஆனால், நான் ஒரு புலமை விளக்கத்தைக் கோரு கிறேன். அது அறிவுத் தொழிலாளி ஒவ்வொருவனதும் வேண்டு கோளாகும்.

இவ்வாறு நாம் விவாதிக்கும் பொழுது சிலரிடமுள்ள ஒரு எடுகோள் புலனாகின்றது. அது அறிவு என்ன என்பது பற்றியது. கருத்து நிலை அறிவையும் (Knowledge), கருத்து நிலையையும் (Ideology) ஒன்றாகக் கருதுதல் கூடாது. கருத்து நிலை, அறிவின் சேகரிப்புக்கான, அறிவின் சேகரத்துக்கான, அறிவின் பயன் பாட்டுக்கான வாய்க்கால்; வடிகால். அறிவுக்கும் கருத்து நிலைக்கும் ஊடாட்டம் உண்டு. (இந்த கருத்து நிலைக்குச் சில தளங்கள் உண்டு நான் அவை பற்றி இங்கு விவரிக்க விரும்பவில்லை).

20-ஆம் நூற்றாண்டின் பின்கூற்றில் சமூக விஞ்ஞானத்துறை அறிவின் பரிமாணங்கள் பெரிதும் விரிவடைந்துள்ளன. அறிவுப் புரட்சியொன்று ஏற்பட்டுள்ளது. அது சிந்தனைகளின் தளங்களை மாற்றியுள்ளது. இந்த நிலைமையையும், அதற்கான காரணி களையும் நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும். உலக அறிவு வளர்ச்சியை கொச்சைப்படுத்தக் கூடாது. இந்த மாறிவரும் அறிவுப் பின்புலத்தில் தமிழியலை நோக்கல் அவசியம். தமிழியல் உலக அறிவுச் செல் நெறிகளுக்கு இயைந்ததாய் அவற்றிலிருந்து ஊட்டம் பெறுவதாய் அவற்றிற்கு ஊட்டம் வழங்குவதாய் அமைய வேண்டும்.

அது நிற்க, இறுதியாக, பெண்ணிலை வாதம் பற்றி நான் சொன்ன கருத்துக்கு வருவோம்.

பண்டிதர் அவர்கள் ''ஆண்களே பெண்களை அடிமைப் படுத்தியதாய்'' பேசியிருக்கிறீர்கள் என்று கூறி ''அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவற்றைப் பெண்களிடம் புகுத்தியவர்கள் ஆண்களே என்னும் தங்கள் கூற்றிற்கு ஆதாரம் ஏதும் உண்டா? அல்லது கற்பனையே சான்றா?'' என்று கேட்கின்றார்.

அதுதான் பெண்ணிலை வாதத்தின் எடுகோள்களில் ஒன்று. அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஆணாதிக்கச் சமுதாயமும் பெண்களைக் கீழ் நிலைப்படுத்துவதற்கான பண்பாட்டு நடைமுறைகளை ''அற''க் கருத்துக்களாக உருவாக்கி யுள்ளது. இந்தியப் பண்பாட்டில் இது எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பது பற்றி விரிவான ஆய்வுகள் உள்ளன. அந்த மரபில் வருவதுதான் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்பன. மடம், பயிர்ப்பு என்பன பெண்ணை அறிவு குறைந்தவர்களாகக் காட்டுபவை.

இதற்கான ஆதாரம் எது என்கிறார் பண்டிதர். சில ஆண்கள் சேர்ந்து ''நாம் இப்படி விதிக்கிறோம்'' என்று கூறுவதில்லை. இதற்கான சான்றை தமிழ் மரபில் ஆணாதிக்கம் தன்னை எவ்வாறு நியாயப்படுத்தி வந்துள்ளது; பெண்ணை, எவ்வாறு கீழ்நிலைப்படுத்தி வந்துள்ளது என்பவற்றின் ஊடே காணல் வேண்டும். இது எப்பொழுது ஒரு இலக்கிய நியமமாக வெளிப் படுகின்றது என்பதனைப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் புரியும், ''அதிகாரம்'' (Power) எவ்வாறு பண்பாட்டில் நியமமாக மாறுகின்றது என்பது. கிறாம்ஸ்சி, ஃபூக்க என்பவர்கள் இந்த மேலாண்மை அதிகாரம் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

தொல்காப்பியர் பெண்களுக்குரிய பண்புகள் என்று கூறுவதை நன்கு அவதானித்தல் வேண்டும்.

அச்சமும், நாணும், மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரியவென்ப - (களவியல் - 99)

இதற்கு முந்திய சூத்திரத்தில்

பெருமையும் உரனும் ஆடூஉ மேன - (98)

என்றாயிற்று.

இது அகத்திணையியலிற் சொல்லப்படாது களவியலில் சொல்லப்படுவதையும் நோக்கல் வேண்டும்.

தொல்காப்பியர் பயிர்ப்பைச் சொல்லவில்லை. அது பின்னர் சேர்க்கப்பட்டது போலும்.

தொல்காப்பியர் கூறும் முறைமையே இதுவொரு நியமமாகிவிட்டது என்பதைக் காட்டுகிறது.

தொல்காப்பியத்தின் இந்தக் குறிப்பைச் சங்க இலக்கியங்களில் பெண்கள் மீது (குறிப்பாக விதவைகள் மீது) திணிக்கப் பெறும் நியமங்களோடு இணைத்து நோக்கும்போது சங்க இலக்கிய காலத்திற்கு முன்னரே தமிழ் நாட்டிலே ஆணாதிக்கம் நிலை நிறுத்தப் பெற்றுவிட்டது என்பது புலனாகின்றது. இது பற்றி எனது "முல்லை சான்ற கற்பு" எனும் கட்டுரையிலும் வற்புறுத்தியுள்ளேன்.

இதிலுள்ள சுவாரசியமான அம்சம் யாதெனில் பின்னர் இவையே அழகியல் நியமங்களாகவும் மாறுகின்றன.

இது தமிழுக்கு மாத்திரம் உரிய தொன்றல்ல. இந்தியப் பின்புலத்தில் வைத்துப் பார்த்தல் வேண்டும்.

வேண்டுமானால் இவ்விடயம் பற்றி ஒரு தனி விவாதத்தை நாம் இருவரும் மேற்கொள்ளலாம். நான் தயார்.

ஆனால், ஒரு வேண்டுகோள். எங்கள் விவாத நோக்கம் முழுமையுடையதாகவும் கிண்டல் கேலியற்றதாகவும் விடயப் பிறழ்வு அற்றதாகவும் அமைதல் வேண்டும். விவாதம் எழுத்திலேயே அமையட்டும்.

*ஆனால், இந்தப் பகிரங்கப் பதிலில் நான் பண்டிதர் அவர்கள் என் ஆளுமை பற்றிக் கூறியவற்றுக்குப் பதிலளிப்பதிலேயே முனைப்புக் காட்டியுள்ளேன்.*

*உண்மையில் இது ஒரு ''பதில்'' அன்று. இது என் நிலைப்பாடு ஆகும்.*

## பேராசிரியர் சிவத்தம்பியின்
## பதிற் கடிதத்துக்கு,
## பழம்பண்டிதரின்
## பதிற் கடிதம்

(09.08.1998 - தினக்குரல்)

*மதிப்பிற்குரிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கட்கு,*
*வணக்கம்.*
*நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.*
*தங்களுக்கு நான் எழுதிய கடிதத்திற்கான பதில் கண்டேன்.*
*மகிழ்ச்சி.*
*நெற்றிக்கு நேரே நான்நீட்டிய வினாக்களுக்கு,*
*பதில் கூறியிருந்தீர்கள்.*
*பதிலின் தெளிவும், தர்க்கமும், உண்மையும்,*
*மனதுள் மேலும் கேள்விகளை எழுப்பினாலும்,*
*அதைவிடுத்து,*
*தங்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.*
*நம் நாட்டில் அரசியலில் மட்டுமன்றி அறிவுலகிலும்,*
*தம் பதவியாலும் தகுதியாலும் ஆணவம் கொண்டு,*
*எம்மைக் கேள்வி கேட்பார் யார்?*
*எனத் ''திமிறித்'' திரியும் பெரிய(?) மனிதர்களே அதிகம்.*
*அவர்தம் திமிர்த்தனத்தை,*

தம் சுயதேவை கருதி அங்கீகரிக்கும்,
''ஆமாம் சாமிகளும்'' இன்று பரவலாய் எங்கும்.
கேட்பார் எவருமில்லை எனும் துணிவில்,
காலத்துக்குக் காலம்,
தாம் விரும்பியபடி கொள்கைகளை மாற்றி,
எதையும் பேசலாம், எதையும் எழுதலாம் எனும்,
கீழ்மையுடன் அறிஞர்கள்.
மக்களின் சுயநலத்தையும், மறதியையும்
தம் வாழ்வின் முதலாக்கி,
அறிஞர்கள் வாழத்தலைப்பட்டதால்,
நம் அறிவுலகில் ''மாசு'' மண்டிப்போயிற்று.
பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம்வரை,
கேள்வி கேட்பவன் துரோகியாகக் கணிக்கப்பட்டான்.
''இவரிடமும் கேள்வி கேட்பதா?'' என,
பொய்ப்பதற்றம் காட்டும் போலிகள் அதிகரித்ததால்,
நம் அறிஞர்களும் ''ஆதீனகர்த்தர்கள்'' ஆயினர்.
கல்வியுலகிலும் கேள்வி இன்றி ஒத்துக் கொள்ளும்,
''மட(ச்)சம்பிரதாயம்'' உருவாகி நிலைத்தது.
''நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே'' என,
இறைவனுடனேயே பேச அனுமதிக்கும்,
நம் தமிழ்ப் பாரம்பரியப் புலமை மரபு அற்றுப் போனது.
எனக்கு அன்று தொட்டு,
இந்நிலைப்பாட்டில் உடன்பாடு இல்லை.
என்று சமூகத்துக்கு ஒருவன் செய்தி சொல்லத்
தொடங்கி விட்டானோ,
அந்த நிமிடமே அவனிடம் கேள்வி கேட்கும் உரிமை,
சமூகத்தின் ஒரு ''சாதாரணனுக்கும்'' வந்து விடுகின்றது.

இது என் திண்ணமான எண்ணம்.
எனது இவ்வடிப்படை எண்ணத்தின் வெளிப்பாடே,
தங்களுக்கு நான் வரைந்த கடிதம்.
தனிப்பட்ட முறையில் என்னிடம்,
''பேராசிரியருக்கா கடிதம்?'' எனக்கேட்டு,
பதறிக் கையுதறியோர் பலர்.
''உமக்கும் பேராசிரியருக்கும் பகை போலும்'' என,
புதினம் விசாரித்தனர் வேறு சிலர்.
உங்கள் மேலும் என் மேலும் உள்ள,
தனிப்பட்ட ''பகை'', ''அபிமானங்களை''
என் கடிதத்தில் ஏற்றி,
பலரும் பலவாய் விமர்சித்தனர்.
இந்நிலையில்,
நானேகூட இக்கடிதம்பற்றிய தங்களின் பிரதிபலிப்பை,
சற்று ஆவலுடன் எதிர்பார்த்தேன்.
என் மதிப்பில் இறங்காமல்,
அறிவுலகப் பிரஜையாய்,
என் கடிதத்தை சரியான முறையில் எதிர் கொண்டுள்ளீர்கள்.
முதற்கண் அதற்காக என் நன்றிகள்.
''எந்த ஒரு புலமையாளனுக்கும்,
தனது புலமை நிலைப்பாடுபற்றிய,
பதில் கூறும் கடப்பாடு ஒன்று உண்டு'' எனும்,
தங்கள் கூற்றால் மகிழ்கிறேன்.
தங்களின் இச் செயல்,
அறிவுலகத்தின் ''அந்தகத்'' தனத்தை,
இனியாகிலும் நீக்கட்டும்.
தங்கள் பதில்களை ஒவ்வொன்றாய் ஆராய்ந்து பதில் தர,

இப்போதும் என்னால் முடியும்.
எனினும் அங்ஙனமாய்ச் செய்து,
சமூகத்திற்கு அறிவுலகக் கடப்பாட்டை விளக்கி நிற்கும்,
தங்கள் பண்பை ''கொச்சைப்'' படுத்த நான் விரும்பவில்லை.
என் கேள்விகளுக்குப்
பதிலுரைத்துக் கடிதம் எழுதியதன் மூலம்,
அறிவுலகுக்குத் தாங்கள் காட்டியிருக்கும்
முன்னுதாரணத்தை மதிக்கிறேன்.
''பாவம், பண்டிதர் பின் வாங்கிவிட்டார்'' என,
பலரும் எனக்கு ''வால்முறுக்க'' முயலலாம்.
அதுபற்றி எனக்குக் கவலை இல்லை.
தன்மானத்திற்காக எழுதத் தொடங்கினால்,
அறிவுலகத்தில்,
ஒரு பிழையான நெறிக்கு,
நானே வித்திட்டவனாவேன் என்பதறிவேன்.
சமூக உயர்வே என் எழுத்தின் நோக்கம்.
அத் தடத்திலிருந்து எதற்காகவும், ஏன்? எனக்காகவும்கூட,
என்றும் நான் மாறப்போவதில்லை.
''தடைதாண்டி'' ஓடுவதல்ல என் நோக்கம்.
''குறி சார'' ஓடவே நான் விரும்புகிறேன்.
தடை தாண்டி ஓட முற்பட்டால்,
தடைகள் வகையின்றி நீளும்.
தாண்டத் தாண்ட வித்தைச் செருக்கேறும்.
கை தட்டுக்களையே கல்வியின் பயனாய் கருதத் தோன்றும்.
பின் அதுவே வழக்கமாகி, வாழ்க்கையாகி,
நோக்கம் மறைப்பிக்கும்,
என்பதை நன்கறிவேன்.

நான் சாட்டிய குற்றங்களுக்கு,
தங்கள் நிலை நின்று பதிலளிதிருக்கிறீர்கள்.
தங்கள் பதில்கள் பலவற்றில் எனக்கு உடன்பாடில்லை.
அது வேறு விடயம்.
நம் இருவரையும்விடச் சமூகம் பெரியது; பொறுப்பானது.
என் கேள்விகளையும் அதற்கான தங்கள் பதில்களையும்,
அது சரியாக எடை போடும்.
அதன் கணிப்பில் நீங்கள் வென்றால்
நிச்சயம் நான் மகிழ்வேன்.
அறிவுலகத்தில் தாங்கள் பதிக்க இருக்கும்,
''தடங்களை'' தொடர்ந்து அவதானிப்பேன்.
தேவையேற்படின் விமர்சனத்துடன்கூடிய,
என் வேறு கடிதங்களும் வெளிவரலாம்.
இது அச்சுறுத்தல் அல்ல அறிவுறுத்தல்.
தங்களுக்கு,
நீண்ட ஆயுளையும் நிறைந்த அறிவுத்திறனையும்,
தொடர்ந்து தந்து,
நம் தமிழினத்தை உய்விக்க,
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
அன்புடன்கூடிய அறிவுமோதலை மேலும் தொடர்வோம்.
அது அனைவரது விருப்பமுமாம்.
நன்றி.
வணக்கம்.

அன்புடன்,
பண்டிதன்.



# 34

## யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பர்கள்

*இவர்கள் பலகாலமாய் யாழ் மண்ணில் வாழ்ந்தவர்கள்.*
*அம்மண்ணையே தம் தாய்மண்ணாகக் கொண்டவர்கள்.*
*தமிழருக்கும் சிங்களவருக்குமான இனப் போராட்டத்தில்,*
*தாம் இஸ்லாமியர் எனத் தனித்து நின்றவர்கள்.*
*யாழ்ப்பாணம் புலிகளின் நிர்வாகத்தில் வந்த*
*சிலகாலத்தின்பின்,*

*அரச சார்பாய்,*
*போராட்டத்திற்கு எதிராய்ச் செயற்பட முனைகிறார்கள்*
*எனக்குற்றம் சாட்டப்பட்டு,*
*வடக்கில் வாழ்ந்த அத்தனை முஸ்லிம்களும்,*
*ஒரே இரவில் தென்பகுதிக்கு அனுப்பப்பட்டனர்.*
*இது நடந்தது 1990ஆம் ஆண்டில்.*
*பின்னர் 1995இல் தமிழர்களும்,*
*தாய்மண்விட்டு இடம்பெயரும் நிலை ஏற்பட்டது.*
*தென்பகுதி வந்த வடக்கு இஸ்லாமியர்கள்,*
*தென்பகுதி இஸ்லாமியத் தலைவர்களால்,*
*யாழ்ப்பாண முஸ்லிம்கள்எனப் பார்க்கப்பட்டார்கள்.*
*1996இல் அரசபடையின் கட்டுப்பாட்டுக்குள்*
*யாழ்ப்பாணம் மீண்டும் வந்தபோது,*
*அரசு சார்ந்த சில அரசியல்வாதிகள்*
*இவர்களை மீண்டும் யாழ்ப்பாணத்திற்*
*குடியேற அழைத்தனர்.*
*ஆனால் இடம்பெயர்ந்த இஸ்லாமியர்கள்,*
*புலிகளின் அழைப்பு இல்லாமல்,*
*மீண்டும் குடிவரோம் என மறுத்து நின்றனர்.*
*அக்காலகட்டத்தில் தன் பழைய,*
*யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பர்களை விளித்து,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(19.07.1998 - தினக்குரல்)

## யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பனுக்கு...

அன்புச் சோதரருக்கு!
வணக்கம்.
உங்கள் நலம் வேண்டி அன்றாடம் பிரார்த்தித்தபடி நான்.
எம் தாய் மண்ணில்,
ஒருமித்து நாம் வாழ்ந்த நாட்களை,
எண்ணிப் பார்க்கிறேன்.
எத்தனை மகிழ்ச்சியான நாட்கள் அவை.
பொங்கல் திருநாளில்,
எங்கள் வீட்டுச் சக்கரைப் பொங்கலை நீங்கள் ருசி பார்த்ததும்,
''ரம்சானுக்கு'' உங்கள் வீட்டில்,
மணக்க மணக்க நான் ''புரியாணி'' உண்டதும்.....,
நேற்றுப்போல் இருக்கிறது.
எனக்கும், உங்களுக்கும் இருந்த நெருக்கம்,
எம் இரு இனங்களுக்கும் இடையில்,
இல்லாமல் போனது விதியின் பிழை.
இன்று,
நீங்கள் எங்கோ! நாங்கள் எங்கோ!.
''பதி எழு அறியாப் பழங்குடியாய்'',
நீங்களும், நாங்களும் வாழ்ந்த,
மண்ணும், மனையும்,
இன்று இடிந்து, சிதைந்து.....,
பேய் குடிகொண்டாற்போல் பேதலித்துக் கிடக்கின்றன.
எங்கள்மேல் உங்களுக்குக் கோபமாயிருக்கும்.
ஒரே இரவில்,

நீங்கள் ஊர்விட்டுத் துரத்தப்பட்டபோது,
துயர்துடைக்க எங்கள் கரங்கள் நீளும் என,
எதிர்பார்த்திருப்பீர்கள்.
வாராத எங்கள் கைகள்மேல் உங்களுக்கு,
வற்றாத கோபமிருக்கும்.
சோதரரே!,
அன்றைய சூழ்நிலையில் இருந்த அரசியற் குழப்பத்தில்,
என்ன நடக்கின்றது என்று,
ஏதும் தெரியாத நிலையில் நாங்கள்.
மௌனமாய் உங்களுக்காய்க் கண்ணீர் வடித்தோம்.
மானிப்பாய் ரோட்டில்,
''மசூதியைத்'' தாண்டும்போது,
வழமையில் குஞ்சும், குருணியுமாய் நிரம்பிக் கிடக்கும்,
உங்கள் குடியிருப்புகள்,
சுடலையாய் வெறிச்சோடிக் கிடப்பது கண்டு,
வெதும்பியிருக்கிறேன்.
ஏன் பிழை நடந்தது?,
எங்கு பிழை நடந்தது?,
ஏதும் தெரியவில்லை.
யார் குற்றம்? என்பதே அனைவரினதும் கேள்வி.
இன்றைய சூழ்நிலையை வாய்ப்பாய்க் கொண்டு,
உங்களை வெளியேற்றியது குற்றமென எழுதி,
உங்கள் ஆதரவைத் திரட்ட எனக்கு விருப்பமில்லை.
ஆதரவு திரட்ட நான் அரசியல்வாதியுமல்லன்.
ஆழச் சிந்தித்தால்....,
உங்கள் மேலும் குற்றமிருப்பதாய்த்தான்,
எனக்குத் தோன்றுகிறது.

''மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த'' கதையாய்....,
நொந்து கிடக்கும் உங்களை,
மேலும் நோகச்செய்ய எழுதுவதாய் நினைக்க வேண்டாம்.
நம்மை நாமே சோதித்துக்கொள்ள,
துன்பம் ஒரு தூண்டுகோலாய் அமைவதால்,
''கேட்டிலும் உண்டு ஓர் உறுதி'' என,
நினைப்பவன் நான்.
தலைமுறை தலைமுறையாய்,
நம்மண்ணில் நீங்கள் வாழ்ந்தபோதும்,
வாழ்ந்த மண்ணோடும் மக்களோடும்,
இரண்டறக் கலக்காதது உங்களின் முதற்குற்றம்.
தனித்துவம் பேணுவதாய் நினைத்து,
''தனித்தே'' வாழ்ந்தீர்கள்.
தமிழ் மக்களுடனான உங்கள் வாழ்வு,
எப்போதும்,
''தாமரையிலைத் தண்ணீராய்த்தான்'' இருந்தது.
இந்துக்களும், கிறிஸ்தவர்களும்,
தமிழர் என்ற அடையாளத்தில் ஒன்றிணைந்தபோது,
நீங்கள் அதை ஏற்காது,
உங்களை இஸ்லாமியர் என,
இனங்காட்டவே விரும்பினீர்கள்.
ஒற்றுமையின் அவசியமுணராத,
உங்களின் அவ்வாழ்வுமுறை,
உங்களைச் சுயநலமிகளாய் மற்றவர்க்குக் காட்டிற்று.
பெரும்பான்மை இனத்துக்கும், சிறுபான்மை இனத்துக்கும்,
மோதல் வந்தபோது,
அவ்விரு பகுதியினருக்கும்,

உங்கள் ஆதரவு தேவையான நிலையில்....,
மிகச் சிறுபான்மையாயிருந்த நீங்கள்,
இதுதான் எங்கள் நிலைப்பாடென,
தெளிவான முடிவெடுக்காதது,
இரண்டாவது குற்றம்.
உங்கள் தலைவர் சிலர்,
அச்சூழ்நிலையைச் சாதகமாய்ப் பயன்படுத்துவதையே,
இராஜதந்திரமாய்க் கருதினர்.
உலகம் முழுதும் விரிந்துள்ள,
''இஸ்லாமிய பலம்'',
தம்மைக் காக்கும் எனும் தைரியம் அவர்களுக்கு.
எல்லோரும்,
எப்போதும்,
எமக்குப் பயந்துதான் ஆகவேண்டும் என,
தப்புக்கணக்குப் போட்டனர்.
உங்களையும் அங்ஙனமே நம்பவைத்தனர்.
ஓரளவு அவர்களோடு நீங்களும் உடன்பட்டது உண்மையே.
மோதிக் கொண்ட இருபகுதியினரும்,
''மூன்றாம் பகை'' தேட விரும்பாததால்,
உங்கள் கோரிக்கைகள் அனைத்தும்,
இருபகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
இலங்கை அரசிடம் மட்டுமன்றி,
ஒரு காலத்தில்,
இயக்கங்களிடமும் உங்களுக்குத் தனிச் செல்வாக்கு.
அப்போதே நான் நினைத்தேன்,
இது ஆபத்தின் ஆரம்பமென்று.
தன் சொந்த வீட்டிலேயே,

ஒருவன் விருந்தினனாய் உபசரிக்கப்பட்டால்,
அது கவலைக்குரிய விடயம் என்னும் உண்மை,
ஏனோ உங்களுக்குத் தெரியாமற் போயிற்று.
''இஸ்லாமியராய் எங்களை இனங்காட்டுவதுதான்,
நம் மதக்கொள்கை'' என,
உங்கள் தலைவர்கள் ஒருவேளை சொல்லக்கூடும்.
அருகிலிருக்கும் தமிழ்நாட்டில்,
சமயத்தில் இஸ்லாமியர்களாகவும்,
பண்பாட்டில் தமிழர்களாகவும்,
உங்கள் இனத்தவர் வாழும் வாழ்வுக்கு,
அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்?.
83 கலவரத்தின்போது,
ஈழத்தமிழருக்காக,
தமிழ்நாட்டில் தீக்குளித்து முதல் உயிர் நீத்த,
ஒப்பற்ற சகோதரன் ஒரு இஸ்லாமியனே!.
எங்கோ இருந்த அவன்,
எங்களுக்காக உயிர் துறக்க,
காலாகாலமாய் எங்களோடு இருந்த நீங்கள்,
எங்கள் பிரச்சினைகளை,
பார்வையாளர்களாய் மட்டுமே பார்த்திருந்தீர்கள்.
யாழில் குண்டுபோட ''பொம்மர்கள்'' வந்தபோது,
முஸ்லிம் பகுதிக்குள் ஓடிவிட்டால் தப்பலாம் என,
நாம் நினைக்கும் அளவிலேதான்,
உங்கள் வாழ்வு இருந்தது.
தமிழர்மேல் குண்டுமாரி பொழிய வந்த ''பொம்மர்களும்'',
உங்களுக்குத் தலைவணங்கின.
அயல் பிரிந்து, தனித்து நிற்கும், ஆபத்துணராமல்,

''ஆகா! யாம் பெரியோம்'' என அகமகிழ்ந்தீர்கள்.
தமிழர் தாக்கப்பட்டபோதும்,
தேசிய அரசியலையும்,
தேசிய அரசியல்வாதிகளையும்,
திருப்திப்படுத்துவதே,
உங்கள் தலைவர்களின் வேலையாய் இருந்தது.
உங்கள் அரசியல் அவசரமுணர்ந்து,
''மித்திர பேத'' உத்தியில்,
பேரினவாத அரசுகள்,
நீங்கள் கேட்டதையெல்லாம் அள்ளித்தந்தன.
இராஜதந்திரம் வென்றதாய்,
உங்கள் தலைவர்கள் மகிழ்ந்தனர்.
ஐயோ! என்றதும்,
ஓடிவர வேண்டியவன் அயலவன்தான் எனும்,
உண்மையுணரத் தவறினீர்கள்.
இந்த நிலைப்பாடு,
உணர்வு நிலையில் எங்களைவிட்டு உங்களை,
மனத்தளவில்,
வெகுதூரம் கொண்டுபோயிற்று.
துரதிஷ்டமாய்,
அதுவே பின் இடத்தளவிலும் நிகழ்ந்துபோயிற்று.
உங்கள் முன்நடவடிக்கைகள் காரணமாக,
நீங்கள் இடம்பெயர்ந்தபோது,
உங்களைப்பற்றிப் பரவிய ஐயந்தரும் செய்திகளை,
நம்புவதா? வேண்டாமா? என,
நாம் திகைத்துப்போனோம்.
நீங்கள் துரத்தப்பட்டபோது,

''நிறுத்துங்கள், அவர்கள் எங்கள் சோதரர்கள்'' என,
சொல்லும் திறனற்றுப்போனோம்.
''நெட்டை மரங்களென'' நின்று புலம்புவதைத்தவிர,
எமக்கு வேறு வழி இல்லாமற்போயிற்று.
பின்னர் ஏதேதோ நடந்து முடிந்துவிட்டது.
இன்று நாம் அனைவரும் எங்கெங்கோ ஏதிலிகளாய்.
தேசியம் உங்களைக் காக்கவில்லை.
''உலக பலம்'' உங்கள் துயர் ஓட்டவில்லை.
''யாழ்ப்பாண முஸ்லிம்கள்'' என,
உங்களவர்களாலேயே பேதம் காட்டப்படுவதாய் அறிந்து,
துடித்துப்போனேன்.
சோதரரே! கவலைப்படாதீர்!
நாம் அண்ணன் தம்பிகள்.
நமக்குள் அடித்துக் கொள்வோம்.
வேறு யாரும் உங்களையடிக்க விடமாட்டோம்.
நடந்தவையெல்லாம் காலம் தந்த பாடங்கள்.
அனைவரும் படித்துத் தேறிவிட்டோம்.
மீண்டும் காலம் வரும்.
அதுவரை பொறுத்திருப்போம்.
இன்றைய சூழ்நிலையில்,
''யாழ் மண்ணில்,
இடம் பிடிப்போம் வருக!'' என,
அழைக்கும் வஞ்சகக் குரல்களை,
நிராகரியுங்கள்.
வேண்டாம் எனச் சொன்ன கைகளெல்லாம்,
உங்களை என்றோ ஒரு நாள்,
வீறுடன் அணைத்துக் கொள்ளும்.

அது நிச்சயம்.
தாய்மண்ணில்,
நாம் தலைநிமிர்ந்து, கைகோர்த்து வாழும் காலம்,
அதிக தூரத்தில் இல்லை.
அப்போது யாழ்ப்பாணத்தில்....,
''சோனகத்தெரு'' என,
ஒரு தனித்தெரு இல்லாமல்,
எல்லாத் தெருக்களிலும்,
எம்மோடு நீங்கள் கலந்திருக்க வேண்டும்.
இது என் விருப்பம்..
நிகழட்டும்.

''இன்ஷா அல்லாஹ்''

அன்புடன்,
பண்டிதன்.

## பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதத்திற்கு அக்பர் ஜின்னாவின் பதில்

(02.08.1998 - தினக்குரல்)

யாழ். இஸ்லாமிய நண்பனுக்குப் பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதம். ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் வந்த இத் தலைப்புள்ள பிரசுரம் உண்மையில் ஆரம்பத்தில் மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது தென்பட்டது.

நலம் வேண்டிப் பிரார்த்தித்த பண்டிதர் பொங்கலையும், ரம்ஸான் பெருநாளையும் அவை தரும் விருந்துகளையும் எடுத்துக்காட்டியது, பழைய நினைவுகளையும் மீட்டச் செய்தது. விதியின் சதிதான் நெருக்கத்தின் இறப்பு. இது யதார்த்த ரீதியாக உண்மை. பரம்பரை பரம்பரையாக நாம் வாழ்ந்த மண். அம் மண்ணில் உருவாகிய எமது வீடு வாசல்கள், கல்விக் கூடங்கள், வணக்கஸ்தலங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இடிந்து, சிதைந்து, அழிந்து ஆளரவமற்றுப் போனது இறைவன் வகுத்த திட்டம்.

நாம் யார் மேலும் கோபப்பட நியாயமில்லை. நாம் செய்த இறைத்துரோகம். இதைப் பண்டிதர் நன்குணர வேண்டும். நாங்கள் யார் மீதும் கோபப்படவில்லை. இரவில் ஊர்விட்டுப் புறப்பட்டதாகப் பண்டிதர் எழுதியுள்ளீர்கள் தவறு.

பகல் நேரத்தில் இருமணி நேர அவகாசத்தில் அனைத்தையும் இழந்த நிலையில் விரட்டப்பட்டோம். எம்மண்ணிலிருந்து நாம் விரட்டப்படப்போவதை எவரும் எதிர்பார்க்கவில்லை. அன்று அங்குள்ள சூழ்நிலையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பது தமிழ்ச் சமூகத்துக்குப் புரியவில்லை. திகைத்தவர் பலர். அழுதனர் பலர். துயர் துடைக்க அவர்களால் முடியவில்லை. ஏன் பிழை நடந்தது? எமக்கே தெரியவில்லை. எங்கு பிழை நடந்தது? அதுவும் தெரியவில்லை.

ஏன் விரட்டப்படுகின்றார்கள். தெரியாமல் திணறிக் கொண்டிருந்தனர் தமிழ் மக்கள். சந்தேகங்கள் பல எழலாம். அச் சந்தேகங்கள் யதார்த்த நிலையில் மனித நேயத்தோடு இருக்க வேண்டும்.

ஆனால், பண்டிதர் உமக்கு எம்மீது சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுகின்றீர்கள். வருடங்கள் பல கடந்துமா இப்போது இந்தச் சந்தேகம்! ஏன் ஏற்பட்டது? மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்ததைப் போல், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் அல்லவா உங்களது விளக்கம் அமைந்துவிட்டது. உண்மையில் உமது எழுத்துகள் எம்மை நோவடையச் செய்துவிட்டன.

எம்மீது குற்றம் சுமத்த நீ யார்? வாழ்ந்த மண்ணோடும், மக்களோடும் இரண்டறக் கலக்காதது முதல் குற்றமாக உமக்குத் தென்படுமானால், எம்மைப்பற்றி எமது பூர்வீகத்தைப் பற்றிப் பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே உமது சமூகம், உமது சமூகத்தோடு எம்மை இரண்டறக் கலக்க விடாமல் செய்ததைப் பழம் பண்டிதர் நீர் ஏன் அறியவில்லை. உசனில் இருந்து ஆரம்பித்த விரட்டுதல் இப்போதைய சோனகத் தெருவரை நடந்த நிகழ்வுகளை சற்று எண்ணிப்பாரும்.

எமது தாய் மொழி தமிழ். தமிழ் எங்கள் உயிர்மூச்சு. தமிழ் மண்ணை நேசித்த நாம் காலத்துக்கக் காலம் விரட்டப்பட்டோம். அநியாயங்கள் பலவற்றுக்கு ஆளானோம்.

சிரட்டையில் சோனகனுக்குத் தண்ணீர் தந்த காலம் ஒன்றுண்டு. வீட்டினுள் விடுவதற்கே விரும்பாத காலம் இருந்ததுண்டு.

தமிழன்னை மும்மதங்களையும் தன்னுள் கொண்டவள். தமிழ் பேசும் இஸ்லாமிய மக்களை எப்படி நீங்கள் நடத்தினீர்கள்? எமது தனித்துவம் பற்றிப் பேச உமக்கு அருகதையில்லை. எம்மைப் பற்றித் தெரியுமா? எமது மதத்தைப் பற்றித் தெரியுமா? எமது மத அனுஷ்டான முறைகளைப் பற்றித் தெரியுமா? பண்டிதர் இவைகளைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்தீரா?

ஐயா! பண்டிதரே! எப்படியும் வாழமுடியாது. இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரையறைக்குள் உட்பட்டவர்கள் நாங்கள். உம்முடைய வணக்க வழிபாடுகளுக்கும் தமிழ் பேசும் கிறிஸ்தவ மக்கள் வழிபாட்டுக்கும் எமது வணக்க வழிபாடுகளுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கின்றது என்பதை நீர் அறியாதவரல்ல.

நாம் ஏகதேவக் கொள்கையாளர்கள். விக்கிரக ஆராதனைக் காரர்களல்ல. எமது வணக்க வழிபாடுகள்தாம் எம்மைத் தனிமைப் படுத்தின என்பது மறுக்க முடியாத உண்மை. நீர் கூறுவது போலல்ல. தினம் ஐந்து நேரம் தொழுவது அவையும் கூட்டுத் தொழுகை. வாரம் வெள்ளி தோறும் ஜும் ஆ தொழுகை. இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடுகளை நிறைவேற்ற கூட்டமாக வாழ வேண்டிய சூழல்.

இச்சூழலை தனித்துவமான தன்மை எனக்கொள்ளலாம். இத்தனித்துவ தன்மையை பிரிந்து வாழல் இரண்டறக் கலக்காமை என அர்த்தம் கொள்வது. நீர் அப்படி அர்த்தம் கொண்டது இமாலயப் பிழை. தனித்துவம் கொண்ட எங்களை நீர் சுயநலவாதிகள் எனச் சாடியிருக்கின்றீர்கள்.

எமது நடை உடை பாவனை அனைத்தும் உங்களைவிட மாறுபட்டதாக அமைந்துள்ளதும் ஒரு தனித்துவமாகும். தனித்துவம் என்ற வார்த்தைக்குப் பல அர்த்தங்கள் உண்டு. பழம் பண்டிதர் நீர் ஒரு அர்த்தத்தோடு உமது எழுத்துக்களை வடித்துவிட்டீர்.

எழுத்தில் வடித்துவிடலாம். பத்திரிகையில் வெளிவரச் செய்யலாம். இந்த ஞாயிறு பத்திரிகை உலகம் பூராவும் மூலை முடுக்குகளெல்லாம் போய்ச் சேர்வதை ஏன் பண்டிதர் நீர் அறியவில்லை?

படிப்பவர்கள் படித்தவர்கள் என்ன நினைப்பார்கள்! இது இனவாதத்தை விதைக்கும் பாரிய முயற்சியல்லவா? நாம் சுய நலக்காரர்களல்ல. நீர் இப்படிக் குறிப்பிட்டுள்ளீர். ''பெரும் பான்மை இனம் சிறுபான்மையினத்தாரோடு மோதல் ஏற்படுத்திய போது (அவ்விருபகுதியினருக்கும் எமது ஆதரவு தேவையான போது) மிகச் சிறுபான்மையினராகிய நீங்கள்'' என்று. இந்தப் பகிரங்கக் கடிதத்தில் எம்மை விளித்துக் கூறியிருப்பது எம்மைப் பிரித்துக் காட்டிவிட்டது.

நாம் என்றும் தமிழ் இனம். எமது உடல் தமிழ் மண்ணுக்கு உரமாவதையே விரும்புகின்றோம். எம்மைத் தமிழ் இனத்தி லிருந்து பிரித்துவிட்டீர். தமிழ்த் தாய்க்கு, படுதுரோகம் செய்து விட்டீர். ஆக நீர் ஒரு இனவாதி. துல்லியமாகக் காட்டிவிட்டீர். ஒரு

முஸ்லிம், தான் ஒரு உண்மையான முஸ்லிம் என இனங் காட்டவே விரும்புவான். உண்மை முஸ்லிம்தான் அல்லாஹ் வினால் விரும்பப்படும் ஒரு அடியான்.

போதாக்குறைக்கு உமது நயவஞ்சக விஷம் பொருந்திய கரங்கள் எமது மார்க்கத்திலும் கைவைத்து விட்டன. இஸ்லாமிய வாழ்க்கை முறையை நீர் சுயநலமிக்கதாகச் சித்தரித்தும் இருக்கின்றீர். இஸ்லாமிய வாழ்க்கை முறை "குர்ஆன்" கூறும் வாழ்க்கை முறை. நீர் அதன்மீது கைவைத்து விட்டீர். பெரும் பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டபோது தெளிவான முடிவு எடுக்காதது நாம் செய்த இரண்டா வது குற்றம் என்றால், அந்தத் தெளிவான முடிவு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுப்படுத்தத் தவறிவிட்டீர்.

எமது நிலை உமக்குத் தெரியுமா? இரண்டும் கெட்டான் நிலை. மூஞ்சூறைப் பிடித்த பாம்பின் நிலை. தரப்படுத் தலுக்குப்பின் மாணவர் போராட்டம் பல்வேறு பரிணாமங்களில் வளர்ச்சியடைந்தபோது நாம் ஒதுக்கப்பட்டோம். சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்டோம். பார்வையாளர்களாக ஆக்கப் பட்டோமே தவிர, பங்குதாரர்களாய் ஆக்கப்படவில்லை.

"இவன் காட்டிக் கொடுக்கும் சாதி" இப்படிச் சொல்லப் பட்டோம். இம்மண்ணை நேசித்தோம். இம்மண்ணின் மைந்தர் களை நேசித்தோம். ஆதரவளித்தோம். அரவணைத்தோம். அள்ளிக் கொடுத்தோம். அவர்களை ஆதரித்தது தவறா? அள்ளிக் கொடுத்தது தவறா? அவர்கள் மூலம் ஆபத்துவரும் என கிஞ்சித்தும் நாம் எதிர்பார்க்கவில்லை.

எமது மார்க்கத்தின் மீதும் கைவைக்கத் தவறவில்லை. அல்குர் ஆன் எமது மறை. அதன் வசனங்கள் அனைத்தும் இறை

வசனங்கள். எங்கள் எண்ணம், எங்கள் செயல், எங்கள் நடையுடை பாவனை அனைத்தும் எமது மதக் கொள்கைகளாகும்.

ஒரு முஸ்லிம் உண்மை முஸ்லிமாக வாழ வேண்டும். இது எங்கள் தலைவர்களின் தனிப்பட்ட சொல்லல்ல. அருகிலுள்ள தமிழ் நாட்டைப் பற்றி உவமைப்படுத்தியுள்ளீர். அங்கு வாழும் முஸ்லிம்களை உவமையாகக் கூறியுள்ளீர். அங்கு வாழும் முஸ்லிம்களுக்கும், இங்கு வாழும் எமக்கும் இறை நம்பிக்கையில் இஸ்லாம் காட்டும் வாழ்க்கை வழிமுறைகளில் வணக்க வழிபாடுகளில் எவ்வித மாற்றத்தையும் காணமாட்டீர்.

தமிழ்ப் பண்பாடு வேறு, இஸ்லாமியப் பண்பாடு வேறு. நடையுடை பாவனையில் அங்குள்ள தமிழ்ப் பண்பாட்டை அங்குள்ள முஸ்லிம்கள் கொண்டிருந்தாலும் நாம் முஸ்லிம் என்று சொல்லிக் கொள்வதில் மார்க்கத்துக்கு, சமூகத்துக்கு இடுக்கண்கள் ஏற்படும் போது கொதித்தெழும்பும் ஒரு சமுதாயம் முஸ்லிம் சமுதாயம்.

தமிழ் நாட்டில் சமீப காலத்தில் நடந்து முடிந்துள்ள முஸ்லிம் விரோத இனக்கலவரங்களை மறந்துவிட்டீர்கள் போலும். பழனி பாவாவை கொன்ற கூட்டம் எது? கோயம்புத்தூரில் படு கொலைகளைப் புரிந்து வெறியாட்டம் ஆடியகூட்டம் எது? பாபரி மஸ்ஜித் தகர்ப்பு இவையனைத்துக்கும் மூலகாரணம் என்பதை ஏன் மறந்தீர்? அங்குள்ள முஸ்லிம்கள் ஆயுதம் தூக்குவதற்கு யார் காரணம்.

83-இல் கலவரத்தின்போது ஈழத் தமிழருக்காக ஒரு முஸ்லிம் அங்கு தீக்குளித்தான் என, சுட்டிக்காட்டியுள்ளீர். இஸ்லாத்தில் தற்கொலை தடுக்கப்பட்ட ஒன்றாகும்! அவனைப் பெருமைப்

படுத்தியுள்ளீர். எம்மை சிறுமைப்படுத்தியதுமல்லாமல் பார்வை யாளர்களாகக் காட்டியுள்ளீர்கள்.

ஏன் நாங்கள் பார்வையாளர்களாக ஆக்கப்பட்டோம் என்பதை ஏன் நீர் சிந்தித்துப் பார்க்க வில்லை. எம்மை உமது இனம் தன்னோடு அரவணைத்துக் கொள்ளவில்லை என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும். தென்னிலங்கை அரசியல் வாதிகளை நாம் சார்ந்திருக்கவில்லை. அப்படி ஒரு சிலர் சொந்தலாபம் கருதிச் சார்ந்தவர்களாய் இருந்தபோது எம்மால் வெறுகப்பட்ட உண்மையை நீர் அறிவீரா? நாங்கள் அரசியல் தலைவர்கள் எவரையும் நம்புவதில்லை. ஓடி வரவேண்டியவன் அயலவன்தான். எமக்குத் தெரியும். எந்த மண்ணில் உதித் தோமோ அந்த மண்ணைவிட்டு 'இந்த மண்ணுக்கு நீ உரிமையற்றவன்' எனச் சொல்லப்பட்டு உடுத்த உடையோடு தேடியவை அனைத்தையும் இழந்த நிலையில் நாய்களைப் போல், ஆடுமாடுகள் போல் ஓரிடத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு எதிர்காலமே சூன்யமாக நாதியற்ற நிலையில் நாம் பட்டப்பகலில் விரட்டியடிக்கப்பட்டவேளை, ஐயா பண்டிதரே நீர் பார்த்துக் கொண்டிருந்தீர். உமது மனித நேயம் செத்திருந்தது.

ஏன் இந்த அநியாயம் என்று ஒருவராவது கேட்டீர்களா? நாங்களல்லவா உங்களை விட்டும் மனத்தளவில் வெகுதூரம் சென்றுவிட்டோம்.

எங்களைப்பற்றி, தவறான செய்திகள் எங்களை விரட்டுதலை நியாயப்படுத்த சொல்லப்பட்டபோது நம்பிய முதல் மனிதன் ஏன் நீங்களாக இருக்கக்கூடாது. கொஞ்ச நஞ்சமா, எத்தனை வருடங்கள் எமக்கு இந்த நிலை. அடிவானத்துக்கு அப்பால் எமது விடிவை எதிர்பார்த்து தினம் தினம் காத்திருக்கின்றோம்.

நம்பிக்கையோடு காத்திருந்தவர்கள் பலர் மண்ணறைக்கே சென்றுவிட்டார்கள். ஏதேதோ நடந்து விட்டன.

யாழ் மண்ணில் அன்று கிணற்றுத்தவளையாக இருந்த நாம் இன்று பிரகாசமான உலகத்தைப் பார்க்க முடிகின்றது. விரட்டியவர்கள் தங்கள் செயலுக்கு வருந்துவது தெரியும். நிச்சயம் ஒரு நாள் அவர்கள் எம்மை இருகரம் கொண்டு வரவேற்கத்தான் போகின்றார்கள்.

விரட்டப்படுவதற்கு முன் எப்படி வாழ்ந்தோமோ அதே நிலையில் நிச்சயம் வாழத்தான் போகின்றோம். எம்மால் தனித்து வாழமுடியாது. சேர்ந்துதான் வாழ முடியும். இதை பழம் பண்டிதர் உயிருடன் - ''இன்ஷா அல்லாஹ்'' - இருந்தால் காணத்தான் போகின்றார். முஸ்லிம் இனம் ஒரு தமிழ் இனம். அது தனித்துவமான இனம்.

## நண்பன் அக்பர் ஜின்னா அவர்கட்கு, பழம் பண்டிதரின் பதிற் கடிதம்.

(09.08.1998 - தினக்குரல்)

*வணக்கம்,*
*நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்,*
*''இஸ்லாமிய நண்பனுக்கான'' என் கடிதம்பற்றிய,*
*தங்கள் விமர்சனம் கண்டேன்.*
*கட்டுரையின் ஒவ்வொரு சொல்லிலும்,*
*பொதிந்திருந்த கோப உணர்வு,*
*தங்கள் மனப்புண்ணைத் தெளிவாய் வெளிப்படுத்திற்று.*
*வருந்துகிறேன்.*
*நிச்சயம் தங்களை நோகச் செய்வது என் நோக்கமல்ல.*
*நேர்மையாக எனக்கே பதில் வரைந்த,*
*தங்கள் நிமிர்வைப் பாராட்டுகிறேன்.*
*வேறு சில கடிதங்கள்,*
*முகவரி மாறிச் சென்றிருப்பதாய் அறிகின்றேன்.*
*அவற்றுக்கு நான் பதில் வரைதல் அவசியமன்று.*
*தங்களுக்குப் பதில் வரைதல் என் கடமை என்றுணர்வதால்,*
*இக்கடிதம்.*
*அறிவு சார்ந்து ஒரு பிரச்சினையை ஆராயும்போது,*
*உணர்ச்சிக்கு இடம் கொடுப்பதில் எனக்கு ஒப்புதல் இல்லை.*

பண்டிதரை இனம் காண்பதும்,
பண்டிதரைப் பழி சொல்வதுமே,
பதில் வரைந்த பலரதும் நோக்கமாக இருந்தது.
அது அறிவு சார்ந்த அணுகுமுறையன்று.
இனி தங்கள் விமர்சனத்திற்கு வருவோம்.
உங்கள் கடிதத்தில் நிறைய முரண்பாடுகள்.
உதாரணத்திற்கு ஒரு சில.
''மிகச் சிறுபான்மையினராகிய நீங்கள் என விளித்ததன் மூலம்
எம்மை தமிழினத்திலிருந்து பிரித்து விட்டீர்.
தமிழ்த்தாய்க்குத் துரோகம் செய்துவிட்டீர்.
எனவே நீர் ஓர் இனவாதி.'' என,
என் மேல் குற்றம் சாட்டிய நீங்கள் பின்,
''உமது சமூகம் எம்மை உங்கள் சமூகத்தோடு
கலக்கவிடவில்லை'' என்றும்,
''உசனிலிருந்து சோனகத்தெருவரை நடந்தவற்றை
எண்ணிப்பாரும்'' என்றும்,
எழுதி,
தமிழினத்திலிருந்து நீங்கள் முன்னமே பிரிந்திருந்ததை,
சான்றோடு நிரூபித்துள்ளீர்கள்.
''நாம் என்றும் எமது உடல்
தமிழ் மண்ணுக்கு உரமாவதையே விரும்புகிறோம்''
என்று எழுதிய நீங்கள்,
தமிழ்ப்பண்பாடு வேறு இஸ்லாமியப் பண்பாடு வேறு என்று,
பிறிதொரு இடத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள்.
அதுகிடக்க,
வேண்டுமென்றே என் கடிதத்திற்கு,
இனவாத சாயம் பூச முயன்றுள்ளீர்கள்.

என் கடிதத்தைப் படித்த எந்த ஒரு நடுநிலையாளனும்,
அங்ஙனம் நினைக்க வாய்ப்பில்லை.
''அணி செய் காவியம் ஆயிரம் கற்கினும்,
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்''
எனும் பாரதி கவிதை நினைவில் தோன்றுகின்றது.
ஒரு வேளை என் சொற்கள்,
தங்கள் ''கோபக் கண்களுக்கு''
அங்ஙனம் பொருள் தந்திருந்தால்,
மீண்டும் தெளிவாக நான் சொல்ல விரும்புவது,
சர்வநிச்சயமாய் நான் இஸ்லாமியர்களைச்
சகோதரர்களாகவே மதிக்கின்றேன்.
உங்களை வெளியேற்றியது சரிதான் என்பது,
என்றும் என் கருத்தல்ல.
ஒரே நிலப்பரப்பில் நாம் ஒன்றுபடாமல் வாழ்ந்தது,
சத்தியமான உண்மையே.
நம் வாழ்வின் இடைவெளி நீங்கி,
நம் தாய் மண்ணில் மீண்டும் ஒன்று கூடுவோம்.
அப்போது முன்பிருந்த பேதங்கள்,
நமக்குள் மறைந்து போகட்டும்.
இதற்கு மேலும்,
நான் சொல்ல வந்ததை நீங்கள் உணர மறுத்தால்,
வருந்துவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.
முக்கியமாய் ஒன்றை
நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.
எனது கடிதம் உங்களை நோகச் செய்வதற்காய் மட்டுமல்ல,
வேறு எவரையும் மகிழச் செய்வதற்காயும் எழுதப்படவில்லை.

நாம் ஒன்று படாமல் வாழ்ந்ததற்கு,
நீங்கள் எம்மைவிட்டு மனதளவில் பிரியக்
காரணமாய் இருந்த,
எம்மவரின் முன் நடவடிக்கைகளுக்காக வெட்கப்படுகிறேன்.
வருந்துகிறேன்.
ஆனால் ஒன்று!
பிழைக்குப் பிழையே பதிலாகாது.
இது அனைவருக்குமாய் நான் உரைப்பது.
எனவே பிழைகளைத் திருத்த முனைவோம்.
உணர்ச்சிகளைத் தூண்டி,
வார்த்தைகளை அள்ளிக் கொட்டுவதால்,
ஆகப்போவது எதுவுமில்லை.
மீண்டும் சொல்கிறேன், உங்கள் மதத்தையோ, உங்களையோ,
கொச்சைப்படுத்துவது நிச்சயம் என் நோக்கமல்ல.
அப்படிக் கொச்சைப்படுத்தும் அளவிற்கு,
நான் அறிவீனன் அல்லன்.
அண்மைக்காலப் பேரினவாத அரசியல் ஓட்டத்தை
அவதானிப்பதால்,
நாம் அனைவரும் ஒன்றிணைவதன் அவசியம் உணர்ந்து,
நான் எழுதியவற்றை ஏற்கவும்.
அவ் இணைவுக்கு ஆவன செய்யவும்
அனைவரையும் வேண்டிநிற்கிறேன்.
என் கடிதம்பற்றிக் கருத்துரைத்த அனைவருக்குமாய்,
நான் சொல்ல விரும்புவது,
ஒரு ஜனநாயக நாட்டில்,
''பொறுப்புணர்ச்சியோடு'' கருத்துரைக்கும் சுதந்திரம்

அனைவர்க்கும் உண்டு.
அப்பொறுப்புணர்ச்சி,
என் கடிதங்களில் எப்போதும் இருக்க வேண்டும் என,
விரும்புபவன் நான்.
சுட்டிக்காட்டப்படும் குற்றங்கள் என் கருத்திலிருப்பின்,
அதனை ஒத்துக்கொள்ள என்றும் தயங்கேன்.
எனவே தெளிவுடன் என் ''கருத்துக்களை''
நேர்மையாய்ச் சந்திப்பதே,
ஆரோக்கியமான நடைமுறை.
அதைவிடுத்து எழுதுபவனைக் குற்றம் சாட்டுவதால்,
கருத்துக்கள் மடியப்போவதில்லை.
இவ்வுண்மை உணர மீண்டும் அனைவரையும்
வேண்டிநிற்கிறேன்.
தங்கள் கோபத்தின் உள்ளோட்டமாய் இருக்கும்,
''உணர்வுச் சிதைவுகளை'' நன்கு உணர்கின்றேன்.
அதற்காக வருந்துகிறேன்.
''நாம் என்றும் தமிழினம்.
எமது உடல் தமிழ் மண்ணிற்கு உரமாவதையே
விரும்புகிறோம்.'' என,
துணிவுடன் பேசும் தங்கள் உண்மையும்,
தமிழ்ப்பற்றும் கண்டு,
நெகிழ்கிறேன்.
இவ்வுணர்வொன்றே நான் வேண்டிநிற்பதும்.
நாம் மீண்டும் நம் தாய் மண்ணில்,
புதுவாழ்வு தொடங்கும் அப்பொற்காலத்தை
உயிருடன் இருந்து (''இன்ஷாஅல்லாஹ்'')

காண விரும்புகிறேன்.
நல்லவை விரைவில் நடக்கட்டும்.
நன்றி.
வணக்கம்.

அன்புடன்,
பண்டிதன்.





# 35

## நல்லூர்க் கந்தன்

*யாழ்ப்பாணத்திலேயே ஏன்? இலங்கையிலேயே,*
*மிகப்புகழ் கொண்ட தெய்வம் இவன்.*
*நல்லூர் எனும் ஊரில் வீற்றிருக்கும் இம்முருகன்,*
*ஈழத்து இந்துக்களின் கண்கண்ட தெய்வம்.*
*நல்லூர்க் கோயிற் திருவிழா ஈழத்தமிழ் மக்களின்,*

தேசியத் திருவிழா.
மதங்கடந்து மக்கள் ஆயிரமாய்க்கூடும் அற்புத நிகழ்வு அது.
இவன் கோயில் கொடியேறினால்,
யாழ்ப்பாணத்தின் புகழ் பெற்ற மீன் சந்தையான
சின்னக்கடை,
ஆளின்றி வெறிச்சோடும்.
அந்த அளவுக்கு அத்தனை பேர் வீடுகளும் விரதமயமாகும்.
காலையில் பக்திமயமாய் பிரதிட்டை செய்யும்
இளைஞர் கூட்டம்,
மாலையில் மகிழ்வுக்காயும் அங்கு கூடும்.
'லிங்கம் கூல்பார்' எனும் புகழ்பெற்ற ஐஸ்கிரீம் கடை,
ஆட்கள் நிறைந்து அலைமோதும்.
நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தின் பிரசங்கம் கேட்க,
பெருங்கூட்டம் கூடும்.
கொழும்பிலிருந்து யாழ் வரும் 'யாழ்தேவி' எனும் ரயிலில்,
கூட்டம் வழியும்.
இவையெல்லாம் அன்றை நல்லூர்த்திருவிழா அமைப்பு.
அவை நினைந்து,
இன்று நடக்கும் நல்லூர்த் திருவிழாவை ஒட்டி,
கந்தபுராணத்தையும் ஈழத்தமிழர் இன்னலையும்,
சிலேடையாய்ச் சொல்லி,
நல்லூர்க் கந்தனுக்கு,
பழம்பண்டிதரால் வரையப்பட்ட பகிரங்கக் கடிதம்.

(23.08.1998 - தினக்குரல்)

## நல்லூர் கந்தனுக்கு...

என்னை வாழ வைக்கும் நல்லூர்க்கந்தா,
அன்றாடம் நான் போற்றும்,
உன் திருவடியை வணங்கி மகிழ்கிறேன்.
எம் இனத்தின் நலனுக்காய்,
என்றும் உன்னைப் பிரார்த்தித்தபடி நான்.
நீ அழிவுத் தெய்வத்தின் அம்சமாய்,
அமரர் இடர் நீக்க,
விண்ணில் சிவனின் கண்ணில் தோன்றினாய்.
அமரர்தம் அமைதிவாழ்வு கண்ட அழுக்காறால்,
அவர்தம் - வாழும் நிலம் பறித்து,
வாழ்வின் தரம் சிதைத்து,
அமைதிகெடுத்த அசுரரை அழிப்பதற்காய்,
உன் அவதாரம் அன்று நிகழ்ந்தது.
பெரும்பான்மைப் பலத்தால்,
அமரர்தம் அடிப்படை வாழ்வுரிமையையும்,
மறுத்து நின்றான் சூரன்.
அவன் பலத்தின் முன்,
நின்று பிடிக்க முடியாமல்,
தேவர்கோன் தலைமறைவாகும் நிலை.
''அவன் பலம் என்பது'',
அச் சூரனின் சொந்தப்பலமல்ல.
அவன் மற்றவரிடம் வேண்டிப்பெற்ற வரபலம்.
இந்திரனைப் பிடிக்க முடியாத ஏக்கத்திலே,
சூரன் கோபம்,
தேவர் பக்கம் திரும்பியது.

*தரணி போற்ற வாழ்ந்த,*
*அந்தத் தக்கோர் வாழ்வைத் தரந்தாழ்த்தினான் அவன்.*
*ஓடிய தேவர் பக்கமே உலகத்தார் அன்பு.*
*தன் வாழ்வும் வெற்றியும் நிலைத்ததல்ல*
*எனும், உண்மை,*
*உணர்வைத் தைக்க,*
*சூரன் கண்களில்,*
*தேவரெல்லாந் திருடராய்ப்பட்டனர்.*
*முறைதவறித் தேவர்தமைச் சிறைப் பிடித்தான்.*
*சூரன் சிறையில் தேவர் நிறைய,*
*அசுரர் விதியில் பாவம் நிறைந்தது.*
*சூரனைச் சூழ இருந்தவரெல்லாம்,*
*அவன் பாவச்செயல்களுக்குப் பலமூட்டியபடியே.........,*
*கருணை செய்ய வேண்டிய,*
*அசுரர்குலப் பெண்ணொருத்தியும்,*
*தேவர்க்கு,*
*மறம் செய்து மாண்பிழந்தாள்.*
*புவனமும், போகமும் இழந்து வாடிய தேவர்கள்,*
*''அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர்''*
*ஆறாய் ஓடும் நிலை கண்டு,*
*''புலித்தோலை அரைக்கசைத்த'' பெம்மானின் கருணை,*
*பிரவாகமாய் ஊற்றெடுக்க,*
*அவன்,*
*தவம் குலைந்து,*
*தணல் பறக்க,*
*நெற்றிகண் திறந்தான்.*
*திறந்ததோ ஒரு கண்.*

பறந்ததோ பல பொறி.
சரவணப் பொய்கையில்,
பாலகனாய் நீ படுத்திருக்க,
''இவனா அச் சூரனை அழிப்பான்?'' என,
எக்களித்தோர் பலர்.
நீண்ட காலமாய்,
தேவர்க்கு வழிகாட்டியவர் எனும் ஆணவத்தால்,
உனை மதிக்க மறந்து,
குட்டுப்பட்ட பிரமன் ஒரு பக்கம்.
''ஓம்'' என்னும் மந்திரத்தின் உட்பொருளை,
தந்தைக்கு ஓதி,
''தகப்பன் சுவாமி''யாய்,
உலகுக்கு,
இளைஞர்தம் எழுச்சி உரைத்தாய்.
உன் எழுச்சி கண்டு
இளைஞரெல்லாம் (நவசக்திவீரர்) பின்திரள,
தேவர்தம் வாழ்வும், நம்பிக்கையும்,
மீண்டும் துளிர்விட்டது.
''உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலோம்,
பின்னை ஒருவரை யாம் பின்செல்லோம்'' என,
அத்தனை தேவரும் உன் அடிபற்றி நின்றனர்.
போருக்குப் புறப்பட்ட உன்னை,
''அக்கினிக்குஞ்சென்று'' அறியாத சூரன்,
''பாலன்'' எனப் பரிகசித்தான்.
சிவன் ஆயுதந்தர,
தேவர் வாகனந்தர,
போர்க்களத்தில் உன் பலம் பொலிந்தது.

போரின் ஒரு நிலையில்,
சூரனே,
''சூழுதல் வேண்டும்,
தாள்கள் தொழுதிட வேண்டும்,
அங்கை தாழுதல் வேண்டும்,
சென்னி துதித்திடல் வேண்டும்,
தீமையகன்று நான் இவருக்கு ஆளாகி,
வாழுதல் வேண்டும்'',
என்றெல்லாம்,
நினைக்கும் நிலை வந்தது.
எனினும்,
''தடுத்தது மானம் ஒன்றே'' என,
தன்மானங்கருதி,
தருக்குற்று,
தன் இனம் அழித்தான்.
நீயோ,
''குன்றம் எறிந்து,
குரைகடலில் சூர் தடிந்து,
அன்றங்கு அமரர் இடர் தீர்த்து'',
அருள் செய்தாய்.
முடிவில்,
விட்டுக்கொடேன் என்று வீம்பு செய்த சூரன்
உன் வீரத்தால்,
தானாக,
இரண்டாய் பிரிந்து தாள் பணிந்தான்.
கந்தபுராணக் கதை இது.
வேலேந்தி,

விண்ணிற் புதுமை செய்த கந்தவேளே!
நீ நம்,
மண்ணில் புதுமை செய்யும் நாளுக்காய்,
காத்திருக்கின்றோம்.
''நல்லூர்க்கந்தன் தேரேறினான்'' எனும் செய்தி,
''அன்றைய அமரராய்'' அல்லற்படும்,
ஈழத் தமிழருக்கோர் எழுச்சிச் செய்தி,
நல்லூரானே நமக்குத் துணை என,
வாழ்ந்த ஈழத்தமிழரெல்லாம்,
உன் தரிசனம் காணும் தகுதிகூட இழந்து,
உலகெல்லாம் ஓடி உருக்குலைந்து,
உழலும் உண்மை,
உன் பன்னிரு விழிகளிலுமா படவில்லை?.
எம் அன்றைய வாழ்வை நினைத்துப் பார்க்கிறேன்...
நல்லூரா!,
நம் மண்ணினில் உந்தன் கொடியேற,
முண்டி, முன்னேறும் பக்தர் கூட்டத்தால்,
அத்தனை வீதிகளும் உன் ஆலயம் நோக்கும்.
''சின்னக்கடை'' தன் வண்ணம் இழக்கும்.
கேட்பாரின்றிக் கிடந்த,
கீரையும், கத்தரியும்,
நீட்டி, நிமிர்ந்து, நின்று விலை பேசும்.
சமையலறையில் சட்டிகள் மாறும்.
சரக்கு விலையேறும்.
வீதிகள் எங்கணும் விதைத்தாற்போல் கச்சானின்(வேர்க்கடலை),
கோதுகள் குடியிருக்கும்.
மாலையிலே அழகூட்டி மனதுக்கு இனிய தம்,

KOHA JPL

வாலைக்குமரியரின் வரம்வேண்டித் திரிகின்ற,
காளையரும் காலையிலே கந்தா எனக் கதறி,
ஓலமிட்டு உருண்டுவரும்.....,
''பிரதிட்டை'' கண்டு பிரமித்துப் போவோம் நாம்.
உருண்டு வரும் பிள்ளைகளின் உயர்வுக்காய்,
கண்கசிய ''அடியழித்து'' வணங்கி வரும்,
அன்னையர்கள் எத்தனை பேர்?.
காப்பு, கடலை, காற்றூதும் றபர்ப்பந்து (பலூன்),
சோப்பு, லிங்கத்தின் சுவையான ''பனிப்பாகு'' (ஐஸ்கிரீம்),
என்றிவையே வாழ்வாக,
சில நாட்கள்.....
எம்மை மறப்போம் நாம்.
வேப்ப மரத்தின்கீழ் வேலை முடித்திருந்து,
ஆப்படித்தாற்போல ''ஆ'' வென்று வாய் திறந்து,
''மணிஐயர்'' தாம் சொல்லும் ''மாபாரதம்'' கேட்போம்.
ஆள்நிறைந்து வழிய ஆடியசைந்தபடி,
'யாழ்தேவி' வரும் அழகை யார்தான் ரசியாதார்?
நல்லூர்க் கந்தா!,
மற்றைய தேரெல்லாம் மண்ணில் உருள,
உந்தன் ஆலயத்தில் ஓர் புதுமை.
ஆடிவரும் தேரோ, அன்பர் தலையினிலே,
ஓடிவருமாப்போல் ஓர் உள்ளுணர்வு.
பச்சை சாத்தி நீ பவனி வரும் காட்சியிலே,
இச்சை தீர்த்தார் எவருமிலர்.
''அந்த வாழ்வு இனி வருமா'' என்றே அன்றாடம்,
நொந்து நோவுற்றோம்.
தாயோரிடத்தில், தந்தையோ வேறிடத்தில்,

*சேயோ மற்றோரிடமாய்ச் சிதைந்து வாழ்கின்றோம்.*
*தேரேறிக் காட்சி தந்த தெய்வமே!,*
*எங்கள்,*
*முன்னைப் பழம்வாழ்வு மீண்டும் முகிழ்க்குமா?*
*சூரர் அழிவாரா? சுகம் வருமா?*
*கந்தபுராணக் கதை நம் தாய்மண்ணில்,*
*மீண்டும் நடந்திடுமா? மீட்சி பிறந்திடுமா?*
*இப்படியாக எத்தனையோ கேள்விகள் எம் மனத்தில்.*
*''செறுநர்த் தேய்த்து,*
*செல்சமம் முருக்கி,*
*கருவுகொள் நெஞ்சமொடு'',*
*நீ களம் வேட்கும் காட்சிக்காய்,*
*காத்திருக்கிறோம்.*
*''சுற்றி நில்லாதே போ, பகையே!,*
*துள்ளி வருகுது வேல்'' என்னும்,*
*பாரதி கவிதையில்,*
*நம்பிக்கை வைத்தபடி நம் வாழ்வு.*
*ஓடும் உன் தேர்,*
*வீதியை வலம் வருவதோடு,*
*நம் விதியையும் வலம் வரட்டும்.*

*பக்தியுடன்,*
*பண்டிதன்.*



# 36

## சுவாமி ஆத்மகணானந்தஜி

*இவர் இராமகிருஷ்ணமிஷன்*
*இலங்கைக் கிளையின் தலைவர்.*
*தன் தூயதுறவாலும் தொண்டாலும்,*

KOHA JPL



இலங்கை மக்களைக் கவர்ந்தவர்.
கால்நூற்றாண்டுக்குமேல் தொண்டாற்றும் இத்துறவியை,
போரால் நலிந்து கிடக்கும் யாழ் மண்ணுக்கு,
விஜயம் செய்யவேண்டி,
பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.

(30.08.1998 - தினக்குரல்)

## இராமகிருஷ்ணமிஷன்
## இலங்கைக் கிளைத்தலைவர்
## சுவாமி ஆத்மகணானந்தஜி அவர்கட்கு....

*சுவாமிகள் திருவடிகளுக்கு,*
*வணக்கம்.*
*அனைவருக்குமாக ஆசி வேண்டிப் பணிகின்றேன்.*
*இராமகிருஷ்ண மிஷனின் அருட்பணி,*
*நூறாண்டுகள் நிறைவடைவதை அறிந்து,*
*ஆனந்தமுறுகிறேன்.*
*அவ்வரும்பணியில் கால்நூற்றாண்டுக்கும் அதிகமாய்,*
*கலந்து தொண்டாற்றும்,*
*தங்கள் பதம் பணிவதால் பாக்கியமுறுகிறேன்.*
*அன்று ஓர் அரும் துறவியின் அகத்தில் எழுந்த சிந்தனை,*
*இன்று,*
*அகிலமெல்லாம் விரிந்தபடி.*
*இன்று 135 கிளைகளைக் கொண்ட,*
*இராமகிருஷ்ணமிஷன் எனும் பெரு விருட்சம்,*
*உலகெல்லாம் பரந்து நிழல் செய்கிறது.*
*கடந்த ஆண்டில் மாத்திரம்,*
*கல்விக்காக 50 கோடி ரூபாயும்,*
*மருத்துவத் தொண்டிற்காக 15 கோடி ரூபாவும்,*
*இராமகிருஷ்ணமிஷனால்,*
*உலகளாவி செலவிடப்பட்டமையை அறியும்போது,*
*இத்தனை வளர்ச்சியும் எங்ஙனமாய்ச் சாத்தியமாயிற்று?*
*எனும் கேள்வி எவர் மனத்திலும் எழுவது இயற்கை.*
*மழையிற் பூத்த காளான்களாய்,*

*மேற்குநாட்டாரின் ஆன்மீக வறுமையில் முளைத்தெழுந்து,*
*உலகெலாம் மயக்கி நிற்கும்,*
*ஆன்மிகப் போலி மன்றங்கள் போலல்லாது,*
*சித்தோ, சிங்காரமோ,*
*மந்திரமோ, தந்திரமோ இன்றி,*
*தனிமனித ஆத்மசக்தியின் விளைவாய் விரிந்தது.*
*இராமகிருஷ்ணமிஷனின் ஆத்மிகப் பணி.*
*மகாபுருஷராய் இம்மணணில் உதித்த,*
*பகவான் இராமகிருஷ்ணரின் ஆத்ம சக்தி,*
*அவர்தம் தவத்தால் பெரும் ஜோதியாய்க்கிளம்பியது.*
*அச்சோதியில் மூழ்கி,*
*அருட்கடலாய் இவ்வகிலம் நோக்கிப் பாய்ந்தது.*
*விவேகானந்த வெள்ளம்.*
*தன் தாய்மொழியைத்தானும் சரியாய் அறியாத பகவானுக்கு,*
*கல்விக்கரை கண்ட கடலான விவேகானந்தர்,*
*சீடரானார்.*
*நூலறிவால் நிறைந்தவர்,*
*வாலறிவன் வலிமை கண்டு வயமிழந்தார்.*
*அனுபவம் அறிவை வென்றது.*
*முதிர்ந்த தணலில்,*
*இளம் விறகு பற்றிக் கொண்டு,*
*பாரெல்லாம் ஒளி செய்தது.*
*சிக்காக்கோ உலக மாநாட்டில்,*
*"சகோதர, சகோதரிகளே!" எனும்*
*விவேகானந்தரின் விளிப்பில்,*
*சகலரும் ஈர்க்கப்பட,....*
*இந்துமதம் மீண்டும் ஒரு முறை புதுப்பிக்கப்பட்டது.*

அகிலம் முழுவதும் அருள் செய்ய ஓர் அமைப்பு எனும்,
குருவின் விருப்பு,
அவர் மறைவின் பின் நெருப்பாய் சீடரைப் பற்றிக்கொள்ள....
உலகம் போற்றும் இன்றைய இராமகிருஷ்ணமிஷன் எனும்,
பெருநிலையத்தின் அத்திவாரம்,
விவேகானந்தரின் அகத்துள் இடப்பட்டது.
தனக்கெனச் சொந்தமாய்
ஓர் ஆச்சிரமந்தானும் அமைத்துக் கொள்ளாத,
உண்மைத் துறவி மறைய,
அவரிடம் துறவேற்ற சீடர்கள்,
இருப்பதற்கும் இடமில்லாத நிலை.
''பரா''நகரில் யாரும் அணுகநினையாப் பேய்வீடு ஒன்று,
அத்துறவிகளின் பெருநிலையமாயிற்று.
அகப்பேயை அடக்கிய அவ்வருளாளர்களை,
புறப்பேய்கள் என் செய்யும்?
துறந்தார் தம் சங்கமம் தொடக்கப்பட்டது.
''கௌபீனம்'' தவிர வேறு உடைகூட இல்லாத,
முழுத்துறவு.
கேட்டு மறுத்தார்களோ?
கேட்க மறுத்தார்களோ?
வறுமையே மடத்தின் தகுதியாயிற்று.
வெளிச்செல்ல ஒரே ஒரு தக்க உடை.
வெளிச்செல்வாருக்கு உரித்தாகி,
மீண்டும் பொதுவாகி...
இங்ஙனமாய்,
பல துறவிகளாலும் பூணப்பட்டு,
பாக்கியம் பெற்றது அப்பழந்துணி.

*தியானத்தில் தன்னை மறந்த விவேகானந்தரோ,*
*வேறுலகில்.*
*விவேகானந்தரால்,*
*குருவின் நாமத்தை தீட்சாநாமமாய்ப் பெற்ற*
*இராமகிருஷ்ணாநந்தர்.*
*தாயாய் அனைவரையும் தாங்கினார்.*
*கங்கையின் ஒரு கரையில்,*
*இங்ஙனமாய்த் துறவிகள் செய்த தவம்,*
*மறுகரையில்,*
*''பேலூர்'' இராமகிருஷ்ணமிஷன்*
*தலைமை நிலையத்தை உருவாக்க,*
*அங்கிருந்து,*
*அவ்வருள் நிலையம் உலகெல்லாம் பரவியது.*
*தனிமனித ஆத்மவளர்ச்சி, சமூகத்தொண்டு எனும்,*
*விவேகானந்தரின் இரு கொள்கைகளையும்,*
*பிரமாணமாய்க் கொண்டியங்கத் தொடங்கியது மடம்.*
*இன்று உலகெல்லாம்,*
*துறவிகளின் உண்மைத்தொண்டின்,*
*தலைமை நிலையமாய் இராமகிருஷ்ணமிஷன்.*
*எம் மதத்தவரும் இணையலாம்.*
*தம்மதத்தில் நின்றபடி தொண்டாற்றலாம்.*
*எனும் உயர்ந்த கொள்கை மிஷனின் தூய்மைக்குச் சான்று.*
*விவேகானந்தர் என்னும் வீரத்துறவியின்,*
*பாதம் பட்ட பாக்கியத்தால்,*
*நம் இலங்கையிலும் அவ் ஏற்றமிகு நிலையம் எழுச்சியுற்றது.*
*கொழும்பிலும், மட்டக்களப்பிலும் நிலைபெற்ற,*
*இராமகிருஷ்ணமிஷனால் வாழ்ந்தவர் பலர்.*

இன்று இந்நிலையத்தைத்,
தலைமையேற்று வழிநடத்தும் தங்கள்மேல்.
அனைவர்க்கும் அளவற்ற பக்தி.
தங்கள் முகத்தின் சாந்தமும் அருளொளியும் கண்டு,
சிலிர்ப்புறுவேன்.
பத்தாண்டுப் பயிற்சியின் பின்,
விரும்பித் துறவேற்ற,
தங்கள் அகவொளியே,
முகவொளியாய் ஒளிரும் உண்மை அறிவேன்.
செயலில், பார்வையில், வார்த்தையில் என,
அத்தனையிலும் சாந்தம் தோய்ந்த அற்புதம் அறிய,
ஆவலுறும் என் அகம்.
தலைநகரில்
ஒரு தலைமை நிலையத்தின் தலைவராக இருந்தும்,
உலகியலில் ஒட்டாத உங்கள் பண்பு
எனக்கு நிரம்பப்பிடிக்கும்.
உலகியல் சார்ந்த,
தங்கள் செயல்களில் செயலின்மை கண்டு வியந்திருக்கிறேன்.
எங்கோ பிறந்த தாங்கள்,
எம் மண்ணுக்கும், மக்களுக்கும் ஆற்றும்
உண்மைத் தொண்டில்,
வள்ளுவன் காட்டும் "அருளுடைமை" கண்டு
ஆனந்தமுறுவேன்.
சுவாமி!,
தங்கள் திருவடிகளுக்கு ஒரு விண்ணப்பம்.
பொய்த் துறவிகளால்.
அரசியல் பிழைத்து அழிவுற்றுப்போன இந்த நாடு

விசேட சேகரிப்பு பகு

தங்களைப்போன்ற உண்மைத்துறவிகளின் திருவடிபட்டே,
மீண்டும் துளிர்க்கும்.
இது என் அசையாத நம்பிக்கை.
இன்று வடக்கில் வாழும் தமிழ் மக்கள்
வறுமையிலும், துன்பத்திலும்.
தனித்துக்கிடக்கும் அவர்களுக்கு,
தங்களைப்போன்ற மகான்களின் ஆசி வேண்டும்.
அருளே வாழ்வாய் இருக்கும் தாங்கள்,
எம் மண்ணை மிதித்தால்,
வளமான நம் முன்னையவாழ்வு,
மீண்டும் திரும்பும் என நம்புகிறேன்.
வடக்குக்குத் தங்கள் விஜயம் நிகழவேண்டும்.
இது என் விருப்பும் வேண்டுதலுமாம்.
விரைவில் இவ்வேண்டுதலை ஏற்க விண்ணப்பிக்கின்றேன்.
இவ் ஏழைப் பண்டிதனின் வேண்டுதலை ஏற்று
அருள்செய்வீர்களா?

நம்பிக்கையுடன்,
பண்டிதன்.



# 37

## முத்தையா முரளிதரன்

*இவன் இலங்கைக் கிரிக்கெட் அணியின் சாதனை வீரன்.*
*ஒரு காலத்தில் வெள்ளைக் காரர்களால்,*
*மலையகப் பகுதிகளுக்கு,*
*கூலியாட்களாய் அழைத்துவரப்பட்ட,*
*இந்தியத் தமிழர்களின் மரபில் வந்தவன்.*

*தன் வீரியமிகுந்த ஆற்றலால்,*
*இலங்கைக் கிரிக்கெட் அணியுட் புகுந்தவன்.*
*இவன் பந்தை எறிகிறான் என,*
*அவுஸ்திரேலிய மத்தியஸ்தர் ஆட்சேபனை தெரிவிக்க,*
*உலக அளவில் சர்ச்சை நடந்து,*
*பின் இவன் பந்துவீச்சு அங்கீகரிக்கப்பட்டது.*
*இலங்கையுடனான விளையாட்டுத்தொடரை,*
*பலகாலம் தள்ளி வைத்த பிரித்தானியா,*
*நீண்ட நாட்களின்பின் விளையாட அழைக்க,*
*31 ஆகஸ்ட் 1998 இல் "ஓவல்" மைதானத்தில் நடந்த,*
*இங்கிலாந்திற்கு எதிரான போட்டியில்,*
*16 விக்கெட்டுகளை வீழ்த்திச் சாதனை செய்தான்.*
*அவன் வெற்றியைப் பாராட்டி*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(13.09.1998 - தினக்குரல்)

## கிரிக்கெட் விளையாட்டு வீரன் முத்தையா முரளிதரனுக்கு...

அன்புத் தம்பி முரளிதரனுக்கு,
வணக்கம்.
நலமுறுக.
உன் உலக சாதனையால்,
உவகையுற்ற உள்ளத்தோடு,
இன்று அத்தனை தமிழ் நெஞ்சங்களும்.
அவர்கள் சார்பில்,
உனக்கு என் அன்பு வாழ்த்துக்கள்.
ஆங்கில மண்ணில்,
நீ நிகழ்த்திய அருஞ்சாதனை,
இன்று உலகின் கண்களை,
இலங்கை நோக்கித் திருப்பியிருக்கிறது.
மரணவீதத்தின் அதிகரிப்பால் மாத்திரம்,
சாதனை புரிந்து வந்த நம்மண்ணை,
மகிழ்ச்சியுடன் கூடிய ஒருசாதனைக்கு ஆளாக்கியிருக்கிறாய்.
கல்லூரி மட்டத்தில் நீ சாதனை செய்தபோது,
'கவுண்டியில்' இடம் பெறும் உன் கனவை வெளிப்படுத்தியது,
இன்றும் ஞாபகமாய் இருக்கிறது.
எல்லோர் மனதிலும்,
கனவுகள் மலைபோல் குவிந்துதான் கிடக்கின்றன.
கனவை நனவாக்கும் ஆற்றல்,
உன்போல் ஒரு சிலருக்கே.
மலையிற் பிறந்த மாண்பு போலும்,
மலைபோல் புகழுயர்த்தி நிற்கிறாய்.

'கண்டியில்' தொடங்கிய,
உன் விளையாட்டுப் பயணம்,
'கவுண்டியில்' அங்கீகரிக்கப்பட்டது கண்டு,
களிப்புறுகின்றேன்.
இன்று உலகின் புகழ் உச்சியில் நீ.
அவ்விடம் தொட எத்துணை இடர் கடந்தாய்.
பாடசாலைப் பருவத்திலேயே,
பலம் காட்டிப் பலரையும் ஈர்த்தாய்.
அப்போதே,
மைதானத்தில் உன் கைப்பந்தின் மாயாஜாலம் கண்டு
மயங்காதார் இலர்.
''இலங்கையின் எதிர்கால வெற்றி,
இவன் விரல் நுனிகளிலேயே'' என,
விமர்சகர் வியந்து விளம்பிய பின்னும்,
தேசிய அணிக்கு அங்கீகரிக்கப்படாமல் விலக்கப்பட்டாய்.
தமிழருக்கு,
பதினொன்றில் ஒன்றையேனும் தரவிரும்பாத,
பரந்த மனது அணிசேர்த்தார்க்கு.
தமிழனாய்ப் பிறந்ததால் வந்த தகுதி?
ஆற்றலை அங்கீகரிக்கும் அணித்தலைவன்,
''அர்ஜுனாவின்'' அங்கீகரிப்பால்,
அரசியல் கடந்து உன் ஆற்றல் அணியுட் புகுந்தது.
உலகப்புகழ் பெற்ற இன்றைய சாதனையை விட,
அணியுட் புகுந்த உன் அன்றைய சாதனை பெரிது.
மலை நாட்டில் மையங்கொண்டிருந்த புயல்,
வெளிநாட்டு 'விக்கட்டுகளை' வீழ்த்த விரைந்தது.
எல்லை கடந்தது அப்புயல் மட்டுமல்ல,

நம் நாட்டின் புகழுமாம்.
இனி "இவனுக்கு இன்னல் இல்லை.
ஏற்றம்தான்" என இறும்பூதெய்தினோம்.
அவுஸ்திரேலிய மத்தியஸ்தர் அனலாய்த் தடையிட்டார்.
'பந்தை எறிகிறாய்' என்று உன்மேல் பழி.
சில காலம் ஒதுக்கி வைக்கப்பட்டாய்.
அந்நேரத்தில் உன் அணித்தலைவன் காட்டிய,
அன்பும், ஆதரவும்,
தேசத்தின் அரசியல் தலைவர்களுக்கு,
பாடமாய் அமைய வேண்டியன.
பல சிந்தனைகளின் பின்,
உன் பலம் அங்கீகரிக்கப்பட்டது.
உலகக்கிண்ணப் போட்டியில்,
உன்மேல் பழி சொன்ன அவுஸ்ரேலியாவை,
ஒற்றுமை கொண்ட உங்கள் அணி,
வெற்றி கொண்டபோது,
உவகை கொண்டேன்.
இன்றும் உன் பலம் குறைக்க,
அதே பழியைப் பகடையாய்ப் பயன்படுத்தும் பரிதாபத்தில்,
பிரித்தானியப் பயிற்சியாளர்.
இலங்கை இரத்தினம் ஒன்று,
வெளிநாடுகளில் பலமுறை பட்டை தீட்டப்பட்டது.
உலக அரங்கில்,
இலங்கை கிரிக்கெட் அணியா?
எனக் கேலி பேசியவர்கள் எல்லாம்,
இன்று உங்களைக் கண்டு கிலிகொள்ளும் நிலையில்.
அண்மைக்காலத் தொடர்த் தோல்விகளால்.

உங்கள் வெற்றியின் இறங்குமுகம்கண்டு,
ஏங்கிய நிலையில் இலங்கை ரசிகர்கள்.
புகழ் மீட்க வேண்டிய பொறுப்போடு,
உங்கள் பிரித்தானியப் பயணம் தொடங்கியது.
''கிரிக்கெட் விளையாட்டின் தாயகம்'' என்னும்
தலைக்கனம் அவர்களுக்கு.
தம்மால் ஆளப்பட்ட ஒரு சிறு நாட்டுக்கு ஈடாவதா?
கௌரவப்பிரச்சினையால்,
இம் மோதல் நீண்ட நாளாய்த் தள்ளிப்போடப்பட்டது.
வாய்ப்புக் கிடைத்ததும்.....,
வலிமை காட்டி நிமிர்ந்திருக்கிறீர்கள்.
குறிப்பாக,
உன் பந்து வீச்சால் பதறிப்போய்,
வெள்ளை வீரர்கள் வீழ்ந்து போயினர்.
தொடக்க நிலையில் உங்கள் தோல்விகளுக்கு,
காலநிலைக் காரணங்கள் காட்டி,
சமாதானம் தேடிய நாங்களும்,
''வெளிநாட்டுக் களங்களில் விளையாடும் விவேகமில்லை''
என்ற விமர்சகர்களும்......
தொடர்ந்த உங்கள் விளையாட்டின் வெற்றிகண்டு,
வியந்தது உண்மை.
உன் பலம் இலங்கைக்கு வெற்றிப் 'பழம்' சேர்த்தது.
உன்மேல் பழி சொன்ன பயிற்றுநர் 'லாயிட்',
பாவம் இன்று பலரது பழி தாங்கும் நிலையில்.
கிரிக்கெட்டின் 'மக்கா' எனப்படும் லோட்ஸ் மைதானத்தில்,
உன் விரல்கள் விந்தை செய்தன.
'எமிரேட்ஸ்' கிண்ணம் எங்களுக்கானது.
தொடர்ந்து,

*'ஓவல்' மைதானத்தில் உன் சாதனையால்,*
*உலகத்தின் விழிகள் வியப்பால் விரிந்தன.*
*படபடவெனச் சரிந்தன பதினாறு 'விக்கெட்டுக்கள்.'*
*பதினாறும் பெற்ற உன் பேறு கண்டு,*
*பரவசத்தால் சிலிர்த்துப் போனேன்.*
*உன் ஏற்றங் கண்டு,*
*இங்கிலாந்தார் எழுந்து நின்று மரியாதை செய்தனர்.*
*'வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன்தான்'.*
*வருங்காலத்தில்*
*மூன்று 'ரெஸ்ற்' போட்டித் தொடர்களில் விளையாட,*
*உங்களுக்கு அழைப்பு.*
*பிரித்தானிய மனநிலையில் பெருத்த மாற்றம்.*
*உன்னதப் பந்து வீச்சுப் பெறுபேற்றில்,*
*உன் பெயரை,*
*உலகம் ஐந்தாம் இடத்தில் எழுதிக் கொண்டது.*
*'சியெற்' தரப்படுத்தலில்,*
*உனக்குத் தலைமையிடம்.*
*உலகின் உன்னத வீரர்களை ஒன்று சேர்க்கும்,*
*'லங்காஷெயர்',*
*இன்று உன் வருகையால் மகிழும் நிலையில்.*
*'கவுண்டியில்' விளையாடும் உன் கனவு,*
*நனவாயிற்று.*
*'கவுண்டிக்கு',*
*இலங்கையிலிருந்து அழைக்கப்பட்ட,*
*முதலாவது பந்து வீச்சாளன் என்ற பெருமை,*
*இன்று உனக்கு.*
*தமிழனுக்கு என்றும் உரைக்கலாம்.*

ஆனால் விளையாட்டிலும் அரசியல் புகுத்த
எனக்கு விருப்பமில்லை.
எமது இளைஞர்களின் இலட்சியப் பாதையில்,
பாடமாய்ப் பதிய வேண்டியவன் நீ.
தோல்விகளுக்கான காரணந்தேடி,
துவண்டு போகாமல்,
வெற்றிக்கான விவேகத்துடன்,
வீறு கொண்டு எழுந்திருக்கிறாய்.
''முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்'',
எனும் வள்ளுவன் வாக்கு,
உன்னால் மீண்டுமொரு தரம் விளக்கவுரை காண்கின்றது.
உன் வெற்றியின் பின்னணியில் எத்தனை பாடங்கள்.
ஒரு காலத்தில்,
வெள்ளைக்காரர்களால் 'வெற்றுக் கூலிகளாய்',
இம் மண்ணுக்குக் கொண்டு வரப்பட்டோர் மத்தியில் தோன்றி,
இன்று,
அவ்வெள்ளைக்காரர்களை வெள்ளைக்காரத்தேசத்திலேயே,
வென்று காட்டியிருக்கிறாய்.
எழுந்து நின்று வெள்ளையர்கள் செய்த மரியாதை,
உனக்கு மாத்திரமல்ல,
உன் இனத்திற்கும், ஈழத்தமிழருக்கும், இத்தேசத்துக்குமாம்.
தாழ்ந்து கிடந்த எம் தலைகள் எல்லாம்,
உன்னால் நிமிர்ந்தன.
உன் வெற்றி,
நம் இனத்தின் வெற்றி.
நம் நாட்டின் வெற்றி.
கொண்டாட்டங்கள் காணாது குமைகிறேன்.

தமிழரின் வெற்றியையும் கொண்டாடும் தரத்தில்,
நம் அரசு இருந்திருந்தால்,
இந் நாட்டுக்கு இந்த இழிநிலை வந்திருக்குமா?
உன் வெற்றியை,
அவர்கள் கொண்டாடுவார்கள் என எதிர்பார்த்தால்,
அது நம் அறியாமை.
நம் தமிழினம் உன் வெற்றி கண்டு,
தோள் தட்டி எழ வேண்டாமா?
பொதுச்சேவையில் ஈடுபட்டு நிற்கும்,
தமிழ்ச் சங்கங்களெல்லாம்,
ஒன்றாய் இணைந்து உன் முதுகில் தட்டித்தரட்டும்.
அவ்வாதரவு கண்டு,
உன் அருஞ்சாதனைகள் தொடருமென,
நம்புகிறேன்.
என் நம்பிக்கையின் வெற்றி,
உன் சுழலும் கைகளில்.
உயர்க.

அன்புடன்,
பண்டிதன்.



# 38

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த

*இவர் முன்னைநாள் இராணுவ அதிகாரி.*
*பொதுஜன ஐக்கிய முன்னணி வென்ற பின்,*
*ஜனாதிபதி சந்திரிக்காவால்,*
*பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகவும்,*

*மின்சக்தி எரிபொருள் அமைச்சராகவும்,*
*அறிவிக்கப்பட்டவர்.*
*புலிகளினுடனான பேச்சுவார்த்தை முறிந்து போக,*
*போர் தொடங்கி,*
*புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த,*
*யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியவர்.*
*அதனால் சிங்கள மக்களின்*
*கதாநாயகர் ஆனார் இவர்.*
*இவ்வாண்டில்*
*இவரது இரண்டாம் திருமணமும் நடந்தேறியது.*
*கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான,*
*தரைப்பாதையைத் திறப்பதற்காய்,*
*இவர் தொடங்கிய ''வெற்றி நிச்சயம்'' எனும்,*
*போர் நடவடிக்கையின்போது,*
*புலிகள் இடைபுகுந்து தாக்க,*
*படையினர் பேரழிவு கண்டனர்.*
*அழிவின் பின்னும்,*
*போர் தொடரும் என அறிவித்த அமைச்சருக்கு,*
*புத்தி சொல்லி,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

( அரச கெடுபிடிகள் தந்த அச்சத்தால்
இக்கடிதம் பத்திரிகையில் வெளியிடப்படவில்லை.)

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சருக்கு, பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதம்

*கௌரவ பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்*
*அனுருத்தரத்வத்தை அவர்களுக்கு,*
*வணக்கம்.*
*நலமுறுக.*
*நாம் நலம் என எழுத முடியவில்லை.*
*அறுபதைத் தொடுகிறீர்களாமே?*
*பிறந்தநாள் வாழ்த்துக்கள்!*
*இன்று இந்த நாட்டின் மாபெரும் சக்தி உங்கள் கையிற்தான்.*
*நான் மேற்குறிப்பிட்டது,*
*தாங்கள் அமைச்சுப் பொறுப்பேற்றிருக்கும்,*
*மின்சக்தி, எரிபொருள் சக்திகளையல்ல.*
*பாதுகாப்பைப் பொறுப்பேற்று,*
*போரை நடத்திச் செல்லும் உங்கள் சக்தியையே.*
*1994இல் நடந்த தேர்தலில்,*
*"தமிழர்க்குப் பிரச்சனை இருக்கிறது,*
*அதைப் பேசித் தீர்க்க அனுமதி தாருங்கள்" என,*
*சிங்கள மக்கள் முன் துணிந்து கூறி,*
*அவர்கள் தந்த அனுமதியைப் பெருவெற்றியாய்ப் பெற்ற,*
*ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார்,*
*அமைச்சரவையை அறிவித்தபோது,*
*பலர் பார்வையும்,*
*பிரதிப் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற*
*உங்கள் மேலேயே விழுந்தது.*
*அதற்கான காரணங்கள் இரண்டு.*

இராணுவ அதிகாரியான நீங்கள் அரசியலுக்குப் புதியவர்.
இராணுவ அதிகாரியான இவர்,
சமாதான முயற்சிக்குப் பொருத்தமானவரா?
அரசியல் வாதிகளால் முடியாத எதை,
இவர் சாதிக்கப் போகிறார்?
இந்தக் கேள்விகள்,
ஒரு புறம்.
இந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பினை,
முன்னர் ஏற்றுக் கொண்டவர்களுக்கு,
இந்நாட்டில் ஏற்பட்ட கதி தெரிந்ததால்,
குறிப்பாய் விழுந்த பரிதாபப் பார்வை மற்றொருபுறம்.
ஆனால் நீங்களோ,
இவை எதைப்பற்றிய கவலையும் இல்லாமல்,
மிகத்துணிவுடன் காரியத்தில் இறங்கினீர்கள்.
பலமுகப்பட்டிருந்த இராணுவத்தை ஒருமைப்படுத்தி,
கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தீர்கள்.
இராணுவத்துள் இருந்த முணுமுணுப்பையும் மீறி,
புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க,
நீங்கள் அனுமதித்தது,
தூதுக்குழுவை வடக்குக்கு அனுப்பி,
புலிகளுடன் புலிக்கொடியின் கீழேயே இருந்து பேச
அனுமதி தந்தது,
தடைசெய்யப்பட்ட பலபொருட்களை,
உடனடியாக வடக்கிற்கு அனுப்ப அனுமதித்தது போன்ற,
தங்களின் துணிந்த செயல்களில்,
நெறிப்படுத்தப்பட்ட இராணுவமிடுக்குத் தெரிந்ததும்,
தங்கள் நிதானமான அத்துணிவு கண்டு,
அனைவரும் ஆச்சரியப்பட்டதும்,

மறுக்கமுடியாத உண்மைகள்.
ஏன்? உண்மையைச் சொல்லப்போனால்,
தமிழர்களேகூடச் சற்று மரியாதை கலந்த ஆச்சரியத்துடன்,
உங்களை நோக்கினர்.
ஆனால்,
அத்தனையும் சில மாதங்களுக்குள்,
பொய்யாய்ப் பழங்கதையாய்ப்போனது.
அது இந்நாட்டின் தலைவிதிபோலும்.
பெரு இடி, மின்னலுக்குப் பின்,
சிறு மழை ஒன்று பெய்தது போல,
ஜனாதிபதியின்
ஆரவாரமான சமாதான அறிவிப்புக்களெல்லாம்,
ஓரிருமாத சமாதான முயற்சிகளுடன் முடிந்துபோனது.
போரென்பது முடிவான பின்பு,
உங்கள் நடவடிக்கைகள் அத்தனையும்
முற்றாய் மாறிப்போயின.
வடபகுதியைப் புலிகளிடமிருந்து மீட்கிறோம் என்று,
நீங்கள் தொடங்கிய போரில்,
இந்த இந்த இடத்தில் ஒதுங்குங்கள் என்ற
அறிவித்தல்கூட இன்றி,
திடீரென மக்கள் வாழும் பிரதேசங்களில் வீழ்ந்த,
எறிகணைகளும், விமானக்குண்டுகளும்,
முதன்முதலாக உங்கள் இராணுவ முகத்தையும்,
இரும்புக்கரத்தையும் இனங்காட்டின.
போர் நடவடிக்கைகள் கடுமையாய் இருந்தபோதும்,
அந்த நடவடிக்கையிலும்கூட,
நெறிப்படுத்தப்பட்ட உங்கள் இராணுவ மிடுக்கு
வெளிப்பட்டதை,

யாரும் மறுக்கமுடியாது.
முன்னைய பாதுகாப்பமைச்சர்கள் போலல்லாது,
குழப்பமின்றிப் போரை முன்னெடுத்தீர்கள்.
கடுமையான போர்க்களங்களிற்கூட,
படைவீரர்களோடு போய்நின்று காட்சிகொடுத்தீர்கள்.
ஜனாதிபதியும், அமைச்சர் பீரிசும், அமைச்சர் கதிர்காமரும்,
உலகின் அபிப்பிராயத்தை,
உங்கள் போருக்குச் சார்பாகத் திருப்ப முனைய,
எதைப்பற்றியும், யாரைப்பற்றியும் கவலைப்படாமல்,
நீங்கள் நடத்திய போர்,
நீதியானதோ இல்லையோ?
மற்றவர்களை
ஆச்சரியப்பட வைத்ததுமட்டும் உண்மை.
"சூரியக்கதிர்" எனும் பெயரில் நீங்கள் நடத்திய,
போர் நடவடிக்கைகளால்,
சிங்கள மக்கள் மத்தியில்,
குறுகிய காலத்துள் ஒரு கதாநாயகனாய் உயர்த்தப்பட்டீர்கள்.
அக்கதாநாயகத் தன்மையால்,
உங்கள் தனிவாழ்விலும்,
வசந்தம் வீசத்தொடங்கியது ஒரு தனிக் கதை.
புலிகள் பின்வாங்கிச் செல்ல,
அவர்கள் கைவிட்ட யாழ் பிரதேசத்தை,
உங்கள் இராணுவம் மிக வேகமாக வசப்படுத்தியது.
பெரும்போர் நடத்திய பெருமையைத் தெற்கில் பெற்றீர்கள்.
அவ்வெற்றிக் களிப்பால்,
நீங்கள் சற்று நிதானமிழந்தது உண்மை.
ஆளில்லாத யாழ்ப்பாணத்தில்,
கொடியேற்றிக் கொண்டாட்டம் செய்து,

தமிழ் மக்கள் மனதில் அதிர்ச்சியை உண்டாக்கி,
அவர்கள் மதிப்பில் இறங்கிப் போனது.
உங்கள் அமைச்சர் வாழ்வில் ஏற்பட்ட முதற்சறுக்கல்.
ஓரிருவருடங்களுக்குள் நீங்கள் செய்த,
இத்தனை சாதனைகளுக்கும்,
அரசியல் அவதானிகள் பல காரணங்களைச் சொல்லலாம்.
ஆனால்,
பழமையில் ஊறிய பண்டிதனான நான்,
இவற்றுக்கு உங்கள் கிரகபலனும்,
அதிர்ஷ்டமுமே காரணமென நம்பினேன்.
இலட்சக்கணக்கான செலவுடன் கூடிய,
தங்கள் இந்திய ஆலய யாத்திரைகள்,
உங்கள் நம்பிக்கையும் அதுவேயென்று உணர்த்திற்று.
இவ்வளவுமேன்?
பழுதடைந்த உலங்கு வானூர்தியில் (ஹெலிகாப்டர்),
தளபதிகளுடன்,
புலிகளின் எல்லைக்குள் இறங்கிய நீங்கள்
மீண்டபோது,
அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்தான் என்பது,
நூறுவீதம் உறுதியாயிற்று.
இக்கடிதம் எழுதும் நோக்கத்தைச் சொல்லாமலேயே,
நீண்டதூரம் வந்துவிட்டேன்.
இப்பொழுது அதைச் சொல்கிறேன்.
உங்களை இவ்வளவு உயரத்திற்குக் கொண்டு சென்ற,
அவ்வதிர்ஷ்டக் காற்றுத் திசை திரும்புவதாய்த் தெரிகிறது.
எனது அவ்வுள்ளுணர்வைத்
தங்களுக்கெடுத்துக்காட்டவே இக்கடிதம்.
வடபகுதிக்கான தரைப்பாதையைத் திறப்பதற்காக,

போரைத் தொடங்கிய நீங்கள்,
அப்போருக்கு ''வெற்றி நிச்சயம்'' எனப் பெயரிட்டது,
தங்கள் தற்போதைய நிதானமற்ற போக்கை
வெளிப்படுத்தியது.
எனது நண்பர் ஒருவர்,
''பலரது உயிரையும் பணயம் வைத்து நடக்கும்போருக்கு,
இவர்கள் வைத்திருக்கும் பெயரிலிருந்தே,
இவர்களது ஆணவப்போக்கு தெரிகின்றதல்லவா?
நமக்குமேல் ஒரு தெய்வம் இருப்பதைத் தெரியாமல்
பெயரிட்டிருக்கிறார்கள்'' என்று,
என்னோடு குறை கூறியபோதும்,
நான் அதைப் பெரிதாய் எடுக்கவில்லை.
ஆனால் அவர் சொன்னது உண்மையோ? என்று,
இன்று சிந்திக்க வேண்டியுள்ளது.
ஒரு தரமல்ல இரண்டுதரம்,
ஒரே பாணியில் புலிகள் இடை புகுந்து தாக்கியதில்,
பேரழிவு நிகழ்ந்திருக்கிறது.
தாக்குதல் ஒரே பாணியில் அமைந்திருந்தும்,
முன்னனுபவம் கொண்டு,
அத்தாக்குதலைப் படையினரால்
வெற்றிகொள்ள முடியவில்லை.
உயிரழிவின் தொகை பலவாகப் பேசப்பட்டது.
உண்மை எதுவோ?
பாராளுமன்றத்தில் தாங்களே,
359 வீரர்களும் 18 அதிகாரிகளும்,
இறந்துவிட்டதாய் அறிவித்திருக்கிறீர்கள்.
இதுவும் குறைந்த தொகையல்லவே!
ஊனமுற்றோர் தொகை

நிச்சயம் இதைவிட அதிகமாய் இருக்கும்.
ஓடிய படையினரைப் பிடிப்பதே
பெரும்பாடாயிருக்கும் இந் நிலையில்,
இவ்விழப்புக்கள் பாரியதே.
இவ்வளவு இழப்புக்களோடு,
அப்பாதையை நீங்கள் திறந்தாலும்,
பாதுகாப்பாக அப்பாதையைப் பயன்படுத்தவும்,
இடையிடையே ஏற்படக்கூடிய தாக்குதல்களைச் சமாளிக்கவும்,
போதிய படைவீரர் தொகையுண்டா?
இக்கேள்விக்குப் பதிலிருப்பதாய்த் தெரியவில்லை.
புலிகளில் இவ்வளவுபேர் இறந்தார்களென்று,
பெருந்தொகையைக் கணக்குக் காட்டுவதால் மாத்திரம்,
இக்கேள்விக்குப் பதில் கிடைக்கப் போவதில்லை.
அரசியல் அனுபவமில்லாத,
இப்பண்டிதனுக்கே இது விளங்கும்போது,
உங்களுக்கு இது விளங்காது என நினைப்பது எங்ஙனம்?
வெற்றி நிச்சயம்தானா?
எனக்கேள்வி எழும்பியிருக்கும் இவ்வேளையில்,
''வெற்றிநிச்சயம்'' நடவடிக்கை தொடரும் என,
தொடர்ந்து அறிவிக்கின்றீர்கள்.
பிரச்சினை உங்களுக்கு விளங்காமலிருக்க நியாயமில்லை.
முன் வைத்த காலைப் பின் வைப்பதா என,
உங்கள் மானம் தடுக்கிறது.
''தடுத்தது மானம் ஒன்றே''
என நினைத்ததால் வீழ்ந்த சூரபத்மனையும்,
''நான் என் தனியாண்மை பேரேன்'' எனப்
பிடிவாதம் பிடித்து வீழ்ந்த இராவணனையும்,
தமிழைப் படித்து நாங்கள் அறிந்திருக்கிறோம்.

அதனாற்தான் பயமாயிருக்கிறது.
காமம், வெகுளி, லோபம், மானம், உவகை, மதம் எனும்,
ஆறு குற்றங்களையும்,
வெற்றியை நாடும் அரசன் தன்கண் நிகழவிடக்கூடாது
என்கிறார் வள்ளுவர்.,
மானம் அரசனுக்கு குற்றமா?
குறளைப் படித்தபோது நானே குழம்பியிருக்கிறேன்.
பரிமேலழகர் அக்குழப்பத்தை நீக்கினார்.
'நீக்கவேண்டிச் சொன்னது மாட்சியான மானத்தையல்ல,
மாண்பிறந்த மானத்தையே'
என்றெடுத்துக் காட்டிய அவர்,
மாண்பிறந்த மானமென்றால்
என்னவென்றும் தெளிவாய்ச் சொல்கிறார்.
'தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் எனச் சொல்லும்
பிடிவாதமே' மாண்பிறந்த மானமாம்.
தனி மனிதனின் பிழையான பிடிவாதம்
அவனை மட்டுமே அழிக்கும்.
அரசனின் பிடிவாதமோ (அமைச்சரதும்தான்)
நாட்டையே அழித்துவிடும்.
அதனாற்தான்,
உங்கள் பிழையான பிடிவாதங் கண்டு அஞ்சுகிறேன்.
தமிழர்கள் மட்டுமல்ல,
சிங்களவர்களும் முஸ்லீம்களும்கூட,
சமாதானத்தையும், அமைதியையுமே,
இன்று ஏக்கத்துடன் நாடி நிற்கின்றனர்.
பாராளுமன்றத்திலும்,
போர் நிறுத்தப்பட்டு
சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும் என,

பெரும்பான்மையான உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றனர்.
ஏன் நீங்களேகூட,
போர் நடவடிக்கைகள் ஆரம்பித்த பின்னும்,
பேச்சுவார்த்தைக்கதவுகள் திறந்திருக்கின்றனவென்றும்,
போரினால் அல்ல பேச்சுவார்த்தையினாலேயே,
இந்நாட்டுப் பிரச்சினை தீருமென்றும்,
பலதரம் பகிரங்கமாகவே குறிப்பிட்டிருக்கிறீர்கள்.
பல வெளிநாடுகளும்,
பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பதற்கு,
துணைசெய்யத் தயாராய் இருப்பதாய்ப்
பத்திரிகைகள் கூறுகின்றன.
இந்நிலையில் வீணான பிடிவாத்தை விட்டு,
போரை நிறுத்தி,
சமாதானத்திற்கான பேச்சுவார்த்தை முயற்சிகளை,
நீங்கள் முன்னெடுத்தால் என்ன?
இந்நாட்டு மக்களில் ஒருவனாய்,
இக்கேள்வியை உங்கள் முன்வைக்கிறேன்.
ஒன்று நிச்சயம்.
தங்கள் முடிவிலேயே இந்நாட்டின் தலைவிதி தங்கியுள்ளது.
வேறென்ன?
விடைபெறுகிறேன்.
வணக்கம்.

இங்ஙனம்,
பண்டிதன்.



# 39

## தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா

*முன்னாள் நடிகையான இவர்,*
*மறைந்த தமிழக முதலமைச்சர்,*
*எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களால்,*
*அரசியலுக்கு அறிமுகம் செய்யப்பட்டவர்.*

*எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவின் பின்,*
*பல எதிர்ப்புகளின் மத்தியில்,*
*அ.தி.மு.க. கட்சியின் தலைமை ஏற்று,*
*பின் தமிழகத்தின் முதலமைச்சர் ஆனவர்.*
*ஆட்சிக் காலத்தில் இவரின் ஆணவ ஆடம்பரப் போக்குகள்,*
*பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.*
*சர்வாதிகாரமிக்க ஓர் அரசிபோல் நடந்து கொண்டார்.*
*இவரை இயக்குபவர் என்று பலராலும் ஐயுறப்பட்ட,*
*தோழி சசிகலாவை,*
*உடன்பிறவாச் சகோதரியென அறிவித்தவர்.*
*அவரது பெறாமகனை தன் வளர்ப்புமகனாய் அங்கீகரித்து,*
*உலகமே வியக்கும் வண்ணம்,*
*கோடிக்கணக்கான செலவில் திருமணம் நடாத்தியவர்.*
*1996இல் இவரைத் தோல்வியுறச் செய்து,*
*மீண்டும் தி.மு.க. வெற்றி பெற்றது.*
*முதலமைச்சர் கருணாநிதி இவர் குற்றங்களை,*
*திட்டமிட்டுப் பெரிது படுத்தினார்.*
*இவர் அரசியல் வாழ்வு முடிந்தது என நினைத்த வேளை,*
*1998இல் நடந்த இந்தியாவின் பாராளுமன்றத் தேர்தலில்,*
*அற்புதமாய் அரசியல் வியூகம் அமைத்து,*
*பாரதிய ஜனதாக் கட்சியுடன் இணைந்து,*
*தமிழகத்தில் 18 ஆசனங்களைத் தனித்து வெற்றி பெற்று,*
*அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார்.*
*வெற்றி பெற்றதுமே,*
*தி.மு.க. ஆட்சியைக் கலைக்கக் கோரியும்,*
*முக்கிய அமைச்சுக்கள் சிலவற்றைக் கோரியும்,*
*தன்மேலான ஊழல் வழக்குகளை வாபஸ் பெறக்கோரியும்,*

*நிபந்தனை விதித்து,*
*மீண்டும் தன் அதிகாரத்தைக் காட்டினார்.*
*அவரது ஆச்சரியமான வெற்றி கண்டு,*
*பழம்பண்டிதர் எழுதிய பகிரங்கக் கடிதம்.*

(08.03.1998 - தினக்குரல்)

## தமிழக முன்னாள் முதலமைச்சர், செல்வி. ஜெயலலிதா அவர்களுக்கு...

*மாண்புமிகு முன்னாள் முதல்வர்,*
*செல்வி(?) ஜெயலலிதா அவர்களுக்கு.*
*வணக்கம்.*
*நலமுறுக.*
*வெற்றிக்களிப்பில் மிதப்பீர்கள்.*
*வெற்றி என்றால் சாதாரண வெற்றியா?,*
*சரித்திர வெற்றியாயிற்றே!*
*உங்களை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.*
*சினிமாவில் அறிமுகமாகி,*
*புகழின் சிகரம் தொட்டு,*
*பின் சிலகாலம் தலைமறைவாகி,*
*மீண்டும் எம்.ஜி.ஆரின் அரசியலில் புகுந்து,*
*முன்பு போலவே உயர்ந்து,*
*பின் தாழ்ந்து,*
*மீண்டும் துளிர்க்க ஆரம்பித்திருக்கிறீர்கள்.*
*சகட யோகக்காரர்போலும்.*
*உங்கள் காந்த சக்தியால்,*
*எம்.ஜி.ஆர் உங்கள் கைப்பிடிக்குள் அகப்பட்டார்.*
*சினிமாவில் மட்டுமல்ல, அரசியலிலும்.*
*மக்களின் ஆதரவு எம்.ஜி.ஆரை உயர்த்த,*
*எம்.ஜி.ஆரின் ஆதரவு உங்களை உயர்த்தியது.*
*ஆணவத்தின் உச்சிக்கே சென்றீர்கள்.*
*மூத்த அமைச்சர்கள் எல்லாம்,*
*உங்கள் கால் தொட்டு எழுந்தனர்.*
*எழ வைத்தீர்கள்.*
*மாரியம்மனாயும், மேரியம்மனாயும்,*
*உங்களை உருவகப்படுத்துவதில்,*

உங்களுக்கோர் மகிழ்ச்சி.
ஆட்சிக்காலத்தில்,
உங்கள் புகழ் உயர்ந்ததோ இல்லையோ,
உங்கள் ''கட் - அவுட்டுகள்'' வானளாவி உயர்ந்தன.
வளர்ப்பு மகன் என்றும்,
உடன்பிறவாச் சகோதரி என்றும்,
நீங்கள் நடத்திய கூத்துக்கள் கொஞ்ச நஞ்சமல்ல.
வளர்ப்பு மகன் திருமணத்தை,
ஓர் அரச வைபவமாக்கியதும்,
மாளிகைகள், உடைகள், சேலைகள், நகைகள்,
செருப்புக்கள் என,
வரையறையின்றி நீங்கள் சொத்துக்கள் குவித்ததுமான செயல்கள்,
தமிழ் நாட்டில் நடப்பது ஜனநாயக ஆட்சிதானா? என,
ஐயுற வைத்தன.
இத்தனைக்கும்,
முதலமைச்சர் பதவிக்காக நீங்கள் வாங்கிய சம்பளம்,
ஒரு ரூபாய் மட்டுமே.
உங்களது ஒரு ரூபாயின் பெறுமதி கண்டு,
உலகமே வியந்தது.
நீங்கள் ஒரு மன நோயாளி என்றும்,
உங்கள் செயல்களின் அடிப்படை தாழ்வுச்சிக்கலே என்றும்,
பேசப்பட்டது.
உங்கள் வாழ்வு இரகசியமானது.
பழைய கணவன், பழைய குழந்தை....,
என்றெல்லாம் பலப்பல செய்திகள்.
''எம்.ஜி. ஆரோடு உடன் கட்டை ஏறுவேன்'' என்றீர்கள்.
''அவரே என் தலைவர்'' என்றீர்கள்.
எல்லாமே இரட்டை அர்த்தங்களுடன் கூடிய அறிக்கைகள்.
எம்.ஜி. ஆருடனான உங்கள் உறவு,
''பகிரங்க இரகசியம்''.

அன்று தொட்டு இன்றுவரை,
வெளிப்படுத்த முடியாத உங்கள் வாழ்க்கை முறை,
உங்கள் மனநிலைக்குக் காரணமாய் இருக்கலாம்.
கடந்த உங்கள் ஆட்சிக் காலத்தின்,
அட்டூழியங்களுக்கு அளவில்லை.
உங்களால் கருணாநிதி நல்லவரானார்.
''பணம் பத்தும் செய்யும்'' என்பதே,
உங்கள் தாரக மந்திரம்.
சிரிக்காத ''நரசிங்கமே'' உங்கள் மந்திரத்தால் வீழ்ந்தது.
மாநிலத்தில் மட்டுமல்ல மத்தியிலும்,
உங்கள் (பண)பலம் செல்லுபடியானது.
எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல,
கற்றோர், செல்வர் முதற் கடைசிப் பாமரன்வரை,
உங்களை வெறுக்கத் தலைப்பட்டனர்.
காங்கிரஸ் உங்களுடன் கூட்டுவைத்ததற்காய்,
மூப்பனார் போன்ற மூத்த தலைவர்கள் தனிக்கட்சி அமைத்து,
கருணாநிதியுடன் கூட்டுச்சேர,
''ரஜனி'' ஆதரவளிக்க,
அனைவரும் எதிர்பார்த்த,
உங்கள் ''மகத்தான'' வீழ்ச்சி நடைபெற்றது.
உங்களை அறவே ஒழிப்பதெனக் கருணாநிதி முடிவுசெய்தார்.
அவருக்குச் சொல்லித்தரவா வேண்டும்?
அவரின் திட்டமிட்ட பிரச்சாரம்,
''பூலான் தேவியை''விட மோசமாய் உங்களை
வெளிப்படுத்திற்று.
உங்கள் ஆணவத்தால்,
அனைவரும் உங்கள் பகைவர்களாக,
பத்திரிகைகள், சஞ்சிகைகள், பிரமுகர்கள் என,
அனைவருமே உங்கள் எதிரணியில்.
உங்கள் சரித்திரம் முடிந்ததென,

சத்தியம் செய்யும் வேளையில்,
மீண்டும் தேர்தல்.
ஓய்ந்து கிடந்த நீங்கள் உயிர்த்தெழுந்தீர்கள்.
உங்கள் பரம வைரிகளான,
சுப்பிரமணிய சுவாமி,
வை.கோபாலசாமி,
டாக்டர். ராமதாஸ் ஆகியோரை,
வளைத்துக் கொண்டீர்கள்.
அதுவே உங்கள் முதல் வெற்றியாயிற்று.
பாரதீய ஜனதாவுடனான கூட்டு,
உங்கள் இராஜதந்திரத்தின் அடுத்த வெற்றி.
இவற்றின் பின்னால்,
ஆட்சிக்காலத்தில் கொட்டிக்குவித்த,
உங்கள் பண பலம் வேறு.
எனினும்,
தி.மு.க, த.மா.கா. கூட்டும்,
ஆட்சியில் அமர்ந்திருக்கும் அவர்கள் அதிகாரமும்,
அனைத்துச் செய்தி ஊடகங்களும்
உங்களை எதிர்த்துச் செய்த பிரசாரமும்,
கடைசி நிமிடத்தில் வெளிவந்த
ரஜனியின் காரமான அறிக்கையும்,
உங்கள் தோல்விக்கு கட்டியம் கூறின.
அதுவுமன்றி,
பத்திரிகைகளின் கருத்துக் கணிப்புகள்,
ஒன்று தவறாமல் உங்கள் தோல்வியை உறுதிப்படுத்தின.
நீங்களேகூட வாக்களியாமல்,
''வென்றால் வருவேன்'' என்று தோழியிடம் சரணடைந்தீர்கள்.
இந்நிலையில்,
தேர்தல் முடிவுகள்,
அனைவரையும் திகைக்க வைத்திருக்கிறது.

77265·c

KOHA JPL

உங்கள் வெற்றிக்கு விளக்கம் சொல்ல முடியாமல்,
பத்திரிகைகள் வியந்து நிற்கின்றன.
பாவம்,
காரணம் தேடிக் கருணாநிதி களைத்துப் போனார்.
தமிழக வாக்காளர்கள்,
எதை வைத்து தீர்ப்பளித்தார்கள் என்று,
எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.
அவர்களின் தடுமாற்றமோ? தெளிவோ?,
நீங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள்.
இதுதான் நான் முதல் சொன்ன,
உங்கள் "சகடயோகம்".
மீண்டும் புகழின் உச்சியில் இன்று நீங்கள்.
இச்சந்தர்ப்பத்தையாவது சரிவரப் பயன்படுத்துவீர்களா?
வெற்றியின் பின்,
பா.ஜ.க. வுடனான உங்கள் பேச்சு பயமுறுத்துகின்றது.
"கிழவியும் சாக வருத்தமும் மாறும்" என்ற நிலைதானோ?.
"உயிருள்ளவரை மக்களுக்காக உழைப்பேன்" என,
உரைத்திருக்கிறீர்கள்,
முயலுங்கள்.
அதிர்ஷ்டம் எப்போதும் கைகொடுக்கும் என நினைப்பது,
அசட்டுத்தனம்.
அட்டூழியங்களின் "அடிமைப்பெண்" இவள் என்னும்,
பெயர் மாற வேண்டும்.
"எங்கிருந்தோவந்தாள்" எனப் பேசியவர்கள் மனதில்,
"சவாலே சமாளி" என முயன்று,
"ஒளிவிளக்காய்" உயர்வீர்களா?
மாற்றத்துடன் கூடிய உங்கள் தலைமை நோக்கி,
இன்று அனைவரும்.
வெல்க.

இங்ஙனம்,
பண்டிதன்.

77265.c

# பழம்பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள்

கம்பவாரிதி

## இலங்கை ஜெயராஜ்



நர்மதா வெளியீடு